
# இலங்கை வானொலியின் தமிழ் நாடக வரலாறு



G.P.வேதநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலி - தமிழ் நாடகத் தயாரிப்பாளர்கள்






tion.

# இலங்கை வானொலி - சிறுவர் மலர்/ இளைஞர் மன்றம்/ கிராம சஞ்சிகை மாதர் பகுதி - இன்ன பிற சஞ்சிகை நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள்


கா.சிவத்தம்பி


பீ.ஸ்.சரவணமுத்து


வ. இராசையா


S குஞ்சிதபாதம்


வி.ஏ.கபூர்


C.V. ராஜசுந்தரம்


V.N. பாலசுப்ரமணியம்


பொன்மணி குலசிங்கம்


இரா.பத்மநாதன்


V.A. திருஞானம்


S. நடராஜா


S நடராஜ ஐயர்


சில்லையூர் செல்வராஜன்


காவலூர் ராஜதுரை


டேவிட் ராஜேந்திரன்


சரா இம்மானுவேல்


அரச ஐயாத்துரை


P. குமாரலிங்கம்


கே ஸ்ரீஸ்கந்தராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலி - தமிழ் நாடக எழுத்தாளர்கள்


இலங்கையர்கோன்


பேராசிரியர்
க.கணபதிப்பிள்ளை


க. கைலாசபதி


நாவற்குழியூர் KS நடராஜா


பாலாம்பிகை நடராஜா


வ.அ. இராசரத்தினம்


எஸ். பொன்னுத்துரை


சு.வே


இளங்கீரன் சுபைர்


அகஸ்தியர்


க.சொக்கலிங்கம்


S. முத்துமீரான்


இரசிகமணி
கனக செந்திநாதன்


இ.முருகையன்


கவிஞர் 'அம்பி'


நீலாவணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலி - தமிழ் நாடக எழுத்தாளர்கள்


C. சண்முகம்


M அஷ்ரஃப்கான்


அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை


தமிழ்மணி அகழங்கன்

தெளிவத்தை ஜோசப்



செங்கை ஆழியான்




தெணியான்


பாலமனோகரன்


இந்து மகேஷ்


நெல்லை க.பேரன்


சிதம்பர திருச்செந்திநாதன்


சோ.ராமேஸ்வரன்


பேராதனை A.A. ஜுனைதீன்


T. பாக்கியநாயகம்


முல்லைமணி


கோவிலூர் செல்வராஜன்


ஆனந்தராணி நாகேந்திரன்


அருண் விஜயராணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலி - தமிழ் நாடக எழுத்தாளர்கள் & நடிகர்கள்


சில்லையூர் செல்வராஜன்


SS கணேசபிள்ளை


சின்னையா சிவநேசன்


மாஸ்டர் சிவலிங்கம்


G.P. வேதநாயகம்


'முகத்தார்' எஸ்.ஜேசுரட்ணம்


K.S. பாலச்சந்திரன்


அருணா செல்லத்துரை


S. ராமதாஸ்


மஹதி ஹசன் இப்ராஹிம்


ராஜா கணேசன்


ஸ்ரீதர் பிச்சையப்பா


சுமதி பாலஸ்ரீதரன்


நாகேசு தர்மலிங்கம்


பிலிப்ஸ் ஜெகநாதன்


S அம்பலவாணர்


முருகேசு ரவீந்திரன்


'சோக்கல்லோ' சண்முகம்


S. செல்வசேகரம்


K. சந்திரசேகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலித் தமிழ் நாடகக் கலைஞர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலித் தமிழ் நாடகக் கலைஞர்கள்


C. நடராஜசிவம்


B.H. அப்துல் ஹமீட்


T. ராஜகோபால்


G போல் அன்ரனி


S. கணேஸ்வரன்


பாவசிங்கம் பிரபாகரன்


S சிவசண்முகநாதன்


பெ.சீதாராமன்


ஜவஹர் பெர்னாண்டோ


தம்பியையா தேவதாஸ்


V.N.மதியழகன்


S.எழில்வேந்தன்


இளையதம்பி தயானந்தா


ஜேகிறிஷ் குரூஸ்


விமல்ராஜ் பாக்கியநாயகம்


ராஜபுத்திரன் யோகராஜன்


சிவராஜா தக்கீஷன்


ராக்கஸ் திருச்செல்வம்


ஜெயரஞ்சன் யோகராஜன்


முத்தையா ஜெகன்மோகன்


S. சக்தீதரன்


ஐங்கரன் கஜமுகன்


அபர்ணா சுதன்


A.R. வாமலோசனன்


A.R. திருச்செந்தூரன்


A.R. நந்திராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலித் தமிழ் நாடகக் கலைஞர்கள்



ராஜேஸ்வரி பிச்சாண்டி
விசாலாட்சி குகதாசன்
செல்வம் பெர்னாண்டோ
யோகா தில்லைநாதன்
ஆனந்தி சூரியப்பிரகாசம்
ஆனந்தராணி பாலேந்திரா
கமலினி செல்வராஜன்
சுப்புலக்ஷ்மி காசிநாதன்
சந்திரப்பிரபா மாதவன்
வனஜா ஸ்ரீனிவாசன்
A.M.C. ஜெகசோதி
சசி பரம்
மணிமேகலை ராமநாதன்
ஜெயந்தி அப்புக்குட்டி
மகேஸ்வரி ரத்தினம்
சற்சொரூபவதி நாதன்
கலிஸ்ரா லூக்கஸ்
நாகபூஷணி கருப்பையா
புஷ்பராணி சிவலிங்கம்
புவனலோஜினி வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலி - தமிழ் நாடகக் கலைஞர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலி - தமிழ் நாடக எழுத்தாளர்கள்


நவாலியூர் சோ. நடராசன்


A.T. பொன்னுத்துரை


சித்தி அமரசிங்கம்


பௌசுல் அமீர்


எம். ஏ. முஹம்மத்


திக்குவல்லைக் கமால்


ஆர். என். லைக்குத்தீன் காதிரி


M.N. அப்துல் அஸீஸ்


எம்.எம். ஸப்வான்


விசு கருணாநிதி


'மஹாகவி'
து. உருத்திரமூர்த்தி


மாவை–வரோதயன்


கே. கோவிந்தராஜ்


க. பாலேந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'தணியாத தாகம்' - நாடகக் கலைஞர்கள் பணிப்பாளர் K.S. நடராஜாவுடன்

நிலை=V.N.மதியழகன்/R.S.சோதிநாதன்/K.M.வாசகர்/S.செல்வசேகரன்/K.S.பாலச்சந்திரன்/P.N.R.அமிர்தவாசகம்/K.மார்க்கண்டு/M.K.ராகுலன்/K.சந்திரசேகரன்/S.ஜேசுரட்னம்/T.மயில்வாகனம்/S.எழில்வேந்தன்/S.சிவசுந்தரம்/S.K.தர்மலிங்கம்
இருக்கை - சசி பரம்/ யோகா தில்லைநாதன்/ சந்திரப்பிரபா மாதவன்/பணிப்பாளர் K.S. நடராஜா/ விஜயாள் பீட்டர்/ஷாமினி ஜெயசிங்கம்/செல்வநாயகி தியாகராஜா/ மொறீன் கனகராயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலியின் தமிழ் நாடக வரலாறு

[1951 - 2001 வரையான முதல் 50 ஆண்டு காலம்]

ஆக்கியோன்

பல்கலை வித்தகர் **G. P. வேதநாயகம்**

கவிதாலயா வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | **இலங்கை வானொலியின் தமிழ் நாடக வரலாறு** |
| ஆசிரியர் | : | பல்கலை வித்தகர் **G.P.வேதநாயகம்** |
| மொழி | : | தமிழ் |
| வகை | : | வரலாற்று ஆய்வு |
| பதிப்பு ஆண்டு | : | 2020 |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| வடிவமைப்பு | : | வேதா |
| அட்டையமைப்பு | : | தீபன் |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ டிஜிட்டல், காலி வீதி, வெள்ளவத்தை. |
| விலை | : | ரூபா 500 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



'கலாஜோதி' சானா
எஸ்.சண்முகநாதன்

இலங்கை வானொலியின்

தமிழ் நாடகப் பிதாமகரும்

எனது வானொலி நாடகக் குருவுமான

'கலாஜோதி' சானா **எஸ்.சண்முகநாதன்**

அவர்களின் பாதக் கமலங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

இலங்கையின் தமிழ் வானொலி நாடகத்துறையில் அரை நூற்றாண்டுக்கும் மேலான அனுபவம் வாய்ந்த மூத்த எழுத்தாளர், நடிகர் அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய 'மறைமுதல்வன்' G.P.வேதநாயகம் அவர்கள் தன்னுடைய அனுபவ ஆற்றலினாலும் அரிய தேடலினாலும் உருவாக்கியுள்ள இந்த வரலாற்றுப் பதிவில் மதிப்புரை வழங்குபவனாக நானும் சேர்ந்ததில் மிகப்பெருமையடைகிறேன்.

எங்கள் சிரேஷ்டர்களில் ஒருவரான திரு.வேதநாயகம் அவர்கள் தனது குருநாதரான எங்கள் தாத்தா சானா சண்முகநாதன் அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ள இந்நூலில், தனது குருநாதரின் சார்பாக என்னையும் அழைத்திருப்பதாக எண்ணி அகமகிழ்கிறேன்.

தாத்தா வழியில் அம்மா, நான், சகோதரன் செந்தூரன் என்று நால்வர் இந்நூலாசிரியருடனும் அவரெழுதிய நாடகங்களிலும் நடித்திருக்கும் வாய்ப்பை பெற்றிருக்கிறோம் என்பது பெருமை.

பின்னாளில் இவரது ஆற்றலையும் அனுபவத்தையும், சூரியன் வானொலியில் நாங்கள் ஆரம்பித்து பிரதீப்பின் தயாரிப்பில் சில ஆண்டுகள் வெற்றிகரமாகக் கொண்டு சென்ற 'அரங்கம்' நாடக நிகழ்ச்சிக்குப் பிரதி எழுத்தாளராகவும் நடிகராகவும் பயன்படுத்திக் கொள்ளும் வரமும் வாய்ப்பும் கிட்டியது. எமக்கு இவரது வழிகாட்டல் தந்த துணை பெரியது.

எம் நாட்டில் தமிழ் ஊடகங்களுக்கும் புதிதாக இத்துறையில் வருவோருக்கும் தகுந்த வழிகாட்டி, கைநூல்கள் இல்லாதிருப்பதையும் எங்கள் மொழியின் சிரேஷ்ட விற்பன்னர்களும் வல்லுனர்களும் தங்கள் அனுபவங்களைப் பதிவுகளாகத் தராமலிருப்பதையும் பற்றி அடிக்கடி நான் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். தமிழ் வானொலி நாடகக் கலை அருகிவருகிறது என்று கவலையும் அச்சமும் வெளியிடப் பட்டு வரும் இக்காலகட்டத்தில் இந்நூல் அத்தியாவசியமான ஓர் ஆவணம்.

இலங்கை வானொலியில் பணிப்பாளர்களாக, தயாரிப்பாளர்களாக நீண்டகாலம் பணியாற்றிய அனுபவஸ்தர்கள் செய்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய ஒரு பாரிய கடமையை, நல்ல வேளையாக இத்தனை ஆண்டுகள் கடந்த பின்னராவது மறைமுதல்வன் மேற்கொண்டிருக்கிறார்.

இலங்கை வானொலித் தமிழ் நாடக உலகின் கடந்த கால வரலாற்றை மிக நுணுக்கமாக ஆராய்ந்து தகவல்கள் ஏதும் விட்டுப் போகாமல் எழுத்தாளர்கள், கலைஞர்கள், நாடகத் தயாரிப்பாளர்கள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பதிவு செய்துள்ளார். இளைய சந்ததியினரான எம்மைப் போன்றவர்கள் பலரும் அறியாத பல விஷயங்களை அறியத்தந்து வியப்பில் ஆழ்த்தியுள்ளார். எழுத்தாளர்களினதும் கலைஞர்களினதும் காணக் கிடைக்காத அரிய நிழற்படங்களைத் தேடிச் சேகரித்து அவர் இந்நூலில் ஒன்று சேரத் தந்துள்ளமை ஒன்றும் சாமான்யமான காரியமல்ல.

நூலாசிரியரே தமது முகநூலில் ஒரு போது குறிப்பிட்டது போல, இ.ஒ.கூ.தாபனத் தமிழ்ச் சேவையினரின் நூலாக்கக் குழுவினர் 11 பேர் சேர்ந்து 2000 இல் வெளியிட்ட பவள விழா மலரானது, 'பல எலி கூடினால் மண்ணெடாது' என்பதற்கொப்ப, பல நாடகக் கலைஞர்களையோ, தயாரிப்பாளர்களையோ, எழுத்தாளர்களையோ கண்டுகொள்ளாது அதன் இயலாமையை வெளிச்சம் போட்டுக் காட்டி நிற்கும்போது, பல பேர் கூடி இழுக்கவேண்டிய தேரைத் தனி ஒருவராக வெற்றிகரமாக இழுத்து வந்து சேர்த்துள்ள ஆசிரியரின் சாதனை வியக்கவைக்கிறது; பெருமிதம் கொள்ளச்செய்கிறது.

மேடை நாடகங்கள் பற்றிய, அதிலும் குறிப்பாக நவீன நாடகங்கள் பற்றிய பல்கலைக் கழகம் சார்ந்த நூலாசிரியர்கள் சிலரின் ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. வானொலி எழுத்தாளர்கள் சிலரது அனு பவப் பதிவுகளும் நூல்களாக வெளிவந்துள்ளன. ஆயினும் வானொலி நாடகங்கள் பற்றிய பரந்துபட்ட ஆய்வு நூலாக முதன் முதலாக வெளி வந்துள்ள நூலிதென்பதும் இதன் சிறப்புகளுள் முதன்மையானது..

ஆய்வு நூல் எழுதுபவர்கள் சில வேளைகளில் அறிந்தோ அறியாமலோ ஒரு பக்கச் சார்பாக எழுதி விடுவதுண்டு. போட்டி பொறாமை பொச்சரிப்புக் காரணமாகச் சிலரது பெயர்களை இருட்டடிப்புச் செய்து விடுவதுண்டு. அவ்வாறில்லாமல் இந்நூலை நடுநிலை கோணாது, இன்னார் இனியாரெனப் பாராது, தானறிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகளை உள்ளபடியே பதிவுசெய்துள்ள ஆசிரியரின் நேர்மையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

சமீபகாலத்தில் வெளிவரும் நூல்கள் பலவற்றிலும் எழுத்துப் பிழைகளும் இலக்கணப் பிழைகளும் மலிந்து காணப்படுகின்றன. அவ்வாறான வழுக்களைத் தவிர்த்து மிகுந்த செய்நேர்த்தியுடன் இந் நூலானது வடிவமைக்கப்பட்டுள்ளமையையும் காணமுடிகிறது. ஒரு நடிகராக, நாடக எழுத்தாளராக ஒலிபரப்பாளராக நாமறிந்த G.P.வேதநாயகம் அவர்களின் மற்றொரு பரிமாணத்தை இந்நூல் மூலம் தரிசிக்க முடிகிறது.

சானா காலம் முதல் அதன் பின்னரான 50 ஆண்டு கால வானொலி நாடக உலகின் அத்தனை விடயங்களையும், கலைஞர்களையும், கால மாற்றங்களின் விளைவுகள் இலங்கையின் தமிழ் வானொலி நாடகத்துறையில் ஏற்படுத்திய மாற்றங்களையும் கூடவே பயணித்து அறிந்தவர் என்ற அடிப்படையில் அன்புக்குரிய திரு.G.P.வேதநாயகம் அவர்கள் இது பற்றி எழுதுவது மிகப் பொருத்தமும் பொறுப்புணர்வும் கண்ட ஒரு காலத்தின் கடமை.

இவரது தேடலும் உழைப்பும் எமக்கும் எதிர்கால சந்ததிக்கும் மிகப் பெரிய பொக்கிஷத்தைத் தந்துள்ளன.

வணக்கத்துடன் வரவேற்கிறேன்.

**A.R.V.லோஷன் (இரகுபதி பாலஸ்ரீதரன் வாமலோசனன்)**
**A.R.V.Loshan**

**பணிப்பாளர் - சூரியன் FM**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஈழத் தமிழர்களின் கலை இரசனையைத் திருப்திப்படுத்துவதற்கான சகல கலைகளும் பெரும்பாலும் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டிலிருந்தே கிடைத்துக்கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டுக்கருகே ஒப்பீட்டளவில் ஒரு சிறு தொகையினராக வாழும் ஈழத் தமிழர்கள், கலைகளைத் தொழிலாகக் கொண்டு பொருளீட்ட முடியாதென்பதால் கலைகளின்பால் அவர்களது நாட்டம் ரசிப்பதோடு மட்டும் நின்றுவிடுகிறது. கலைகளில் ஈடுபாடு காட்டுவது அங்கே வாழ்க்கைக்குப் பயனற்ற ஒரு செயலாகக் கருதப்படுகிறது. இருந்த போதிலும் தமது சக்திக்கேற்ற வகையில் ஈழத்தில் ஆங்காங்கே கலையாற்றுகை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை 'ஏழைக்கேற்ற எள்ளுருண்டை' போல மிகச் சிறியளவில் மேற்கொள்ளப்பட்டு, ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே நிகழ்த்தப்பட்டன.

இந்த நிலையில்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நவீன தொடர்புச் சாதனமாகிய வானொலி இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்ட ஒலிபரப்புச் சாதனங்களைக் கொண்டு, *1923* ஆம் ஆண்டு முதன்முதலாக இசைத் தட்டுகளில் பதியப்பட்ட இசை ஒலிபரப்பப்பட்டது. பின்னர் *1924* ஆம் ஆண்டு ஜூலை மாதம் கிரமமான ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டு, அதன் பின்னர் 'ரேடியோ, கொழும்பு' என்ற முதல் வானொலி நிலையம் *1925* ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் *16* ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது பின்னர் இலங்கை வானொலியாக, அதைத் தொடர்ந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனமாக மாற்றங்களுக்குட்பட்டுத் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் அவ்வானொலி நிலையம் இன்னும் நான்கு ஆண்டுகளில் நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்யப்போகின்றது.

இந்த வானொலி ஒரு தகவல் சாதனமாகவும் மக்கள் கேட்டு மகிழ்ந்து, பொழுதுபோக்கும் கலைச் சாதனமாகவும் இலங்கை மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகத் திகழ்கிறது. இன்று பண்பலை வானொலிகள், தொலைக்காட்சிகள் மற்றும் சமூக வலைத்தளங்களின் பெருக்கம் காரணமாக அதன் புகழ், ஆதிக்கம் ஆகியன சற்றுப் பின்தள்ளப்பட்டுவிட்டாலும் இலங்கை மக்களின் கலை, இலக்கிய, அரசியல், சமூகத் தளங்களில் இலங்கை வானொலி வகித்த பங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக, கலைத்துறை சார்ந்த சகல தேவைகளுக்கும் இந்தியாவை எதிர்பார்த்திருந்த ஈழத் தமிழர்களின் பல்வேறு கலைத்துறை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக விளங்கி அவர்களுக்கான கௌரவத்தின் அடையாளமாகத் திகழ்ந்தது இலங்கை வானொலி. ஒலிபரப்புக் கலை ஈழத் தமிழர்களுக்கு, தனித்துவத்தையும் புகழையும் கௌரவத்தையும் தேடிக் கொடுத்தது. நாம் சினிமா, இசை, நடனம் என்று சகலவற்றுக்கும் இந்தியாவை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க, முழு இந்தியாவும் குறிப்பாக, தமிழ் நாடு முழுவதும் இலங்கை வானொலியை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது. இலங்கை வானொலியின் ஆசிய சேவை சகல இந்திய மக்களிடையேயும் புகழ் பெற்ற வானொலிச் சேவையாக விளங்கியது. அதேவேளை இலங்கை வானொலியின் தேசிய சேவை இலங்கை மக்களிலிருந்து நடிகர்களை, பாடகர்களை, இசையமைப்பாளர்களை, எழுத்தாளர்களை, அறிஞர்களை இனங்கண்டு மக்களிடையே அறிமுகப்படுத்தியது.

இலங்கை வானொலியின் சேவைகளை ஊன்றி நோக்கினால் அது இலங்கை, இந்திய மக்களிடையே அடைந்த புகழுக்குச் சமமாக அல்லது அதற்கும் மேலாகப் போற்றப்பட வேண்டிய அளவுக்கு இலங்கை மக்களுக்கு குறிப்பாக ஈழத் தமிழர்களுக்கு ஒப்புவமையற்ற சேவையாற்றியிருக்கிறது என்பது புலப்படும்.

இலங்கை வானொலி புகழ் பெற்றதற்கான மூல காரணத்தை நோக்குவோமானால், அது இந்தியத் திரைப்படப் பாடல்களை அதிகளவில் ஒலிபரப்பியமையே என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். தமிழ் நாட்டில் பலரும் இலங்கை வானொலியை நினைவு கூரும்போது அதில் தாம் சினிமாப் பாடல்களைக் கேட்டு வளர்ந்ததையே பிரதானமாகக் கூறுவதைப் பார்க்கலாம். இந்திய வானொலியில் அப்போது சினிமாப் பாடல்கள் அதிகளவில் ஒலிபரப்பாவதில்லை. இப்படிக் கூறுவதால் வர்த்தக சேவையில் கடமை புரிந்து புகழடைந்த அறிவிப்பாளர்களைக் குறைத்து மதிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அவர்கள் தம் குரல் வளத்தாலும் தமிழ் வளத்தாலும் ஜனரஞ்சகமான படைப்பாற்றலாலும் சினிமாப் பாடல் நிகழ்ச்சிகளை வகை வகையாகத் தயாரித்து வழங்கிய திறமையை நாம் சற்றும் குறைத்து மதிப்பிட முடியாது.

அதேவேளை ஒரு நாட்டின் தேசிய வானொலியாக இலங்கை வானொலி இலங்கை மக்களுக்கு ஆற்றிய சேவை போற்றப்பட வேண்டியது. குறிப்பாக, இலங்கைத் தமிழ்க் கலைஞர்கள் நாடறிந்த கலைஞர்களாக உயர்வு பெற்றமைக்கு, இலங்கை வானொலியில் ஒலிபரப்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வானொலி நாடகங்களுக்கு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பங்குண்டு. அந்த வகையில் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் வானொலி நாடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

கூத்து, நாடகம் முதலியவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தத்தமது ஊர்களில் அவற்றில் ஈடுபட்டு, ஒரு குறுகிய வட்டத்திற்குள் மாத்திரம் அறியப் பட்டவர்களாக இருந்த நேரத்தில், வானொலி நாடகமென்ற நவீன கலை அறிமுகமாகி, அதில் நடித்ததன் மூலம் நாடறிந்த நடிகர்களானார்கள். அங்கு வெளியான சில பத்திரிகைகளில் மட்டுமே சந்தர்ப்பம் கிடைத்துக் கதைகள் எழுதி ஒரு குறுகிய வாசகர் வட்டத்திற்குள் மாத்திரம் அறியப்பட்ட எழுத்தாளர்கள், வானொலி நாடக எழுத்தாளர்களாகப் பரந்த மக்கள் கூட்டத்திற்கு அறிமுகமா னார்கள். வானொலி நாடகத் தயாரிப்பாளர்கள் மற்றைய நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களைவிட மக்களின் கவனத்தை அதிகமாகப் பெறறார் கள். நாடக எழுத்தாளர்கள், நடிகர்கள் மட்டுமல்ல கர்நாடக இசைக் கலைஞர்கள், மெல்லிசைப் பாடகர்கள், கவிஞர்கள், இசையமைப் பாளர்களென்று ஈழத்துக்கான தனித்துவமான கலைஞர்களை வளர்த் தது இலங்கை வானொலி.

நூறு ஆண்டுகளை நிறைவு செய்ய நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த வானொலித் துறையில் எத்தனையோ பேர் இதுவரை காலமும் ஈடுபட்டுத் தமது காலங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை செய்து, பரந்தளவில் மக்களால் அறியப்பட்டவர்களாகவும் சிலர் புகழ் பெற்றவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள் சிறந்து விளங்கிய துறைகள் பற்றிய பதிவுகள் மிகக் குறைவாகவே இருக்கின்ற போதிலும் வானொலித் துறை பற்றிய பதிவுகள் ஓரளவு வெளிவந்திருக்கின்றன என்று கூறலாம்.

ஒலிபரப்புக் கலையின் சகல அம்சங்களும் பற்றிய பூரண நூலா கவும், ஒலிபரப்பு நிகழ்ச்சித் தயாரிப்புப் பற்றிய பயிற்சி நூலாகவும், வானொலியில் செய்தி முதல் பல்வேறு நிகழ்ச்சிகள் தயாரிப்பது பற்றிய நூல்களாகவும், ஒலிபரப்புத்துறையில் அனுபவங் கொண்ட பலரது அனுபவப் பகிர்வுகளாகவும், சில நாடக எழுத்தாளர்களது வானொலி நாடகங்களின் தொகுப்பாகவும் பல நூல்கள் இதுவரை வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த நூல்கள் பற்றிய விபரங்களை *G.P.* வேதநாயகம் இந்நூலின் இறுதியில் பட்டியலிட்டிருக்கிறார்.

ஆயினும் மக்களால் மிகவும் விரும்பி இரசிக்கப்பட்ட இலங்கையின் தமிழ் நாடகத்துறை பற்றி ஆங்காங்கே கட்டுரை வடிவில் வெளிவந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில குறிப்புகளைத் தவிரப் பூரணமான விபரங்களைக் கொண்ட நூல் எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

இந்நிலையிலே *G.P.*வேதநாயகம் அவர்களின் வானொலி நாடகத் தயாரிப்பாளர்கள், எழுத்தாளர்கள், நடிகர்கள் பற்றிய விபரங்களைக் கொண்ட இந்த நூலை மிக முக்கியமானதொன்றாக நான் கருதுகிறேன். மேலை நாட்டவர்களைப் போல வரலாற்றைப் பேணும் கலாசாரம் எமக்குக் கிடையாது. பதிவுகள் பேணப்படுவதில்லை. நடப்பவை எல்லாமே அந்தந்த நேரங்களில் மட்டும்தான். பின்னர் அவை பற்றி யாரும் அக்கறை கொள்வதில்லை. சிறிது காலத்திலேயே அவை அடியோடு மறக்கப்பட்டுவிடுகின்றன. இந்த நிலை, சிலருக்குத் தாம் நினைத்தவாறு வரலாற்றைத் திரிக்க வாய்ப்பாக அமைந்து விடுகிறது. குறிப்பாக, உள்நாட்டு யுத்தத்தால் நிலை குலைந்துவிட்ட ஈழத் தமிழர்களுக்குத் தம்மை மீள நிலை நிறுத்துவதே முக்கியமாக இருக்கின்ற நிலையில் எமது பல்துறை வரலாறு பற்றிய அக்கறை அவசியமற்றதாகிப் போய்விட்டது. இதனால் போருக்கு முந்திய பல விபரங்கள் தற்போதைய தலைமுறையினருக்கு முற்றாக அந்நியமாகிவிட்டன. இந்த நிலையில் இலங்கை வானொலித் தமிழ் நாடக வ்ரலாற்றைத் தன்னால் முடிந்தளவில் பதிவிட்டிருக்கும் *G.P.*வேதநாயகம் அவர்களின் பணி மிகவும் பாராட்டுதற்குரியது.

சிறுவயது முதலே ஒலிபரப்புத் துறையோடு நெருக்கமாகியிருந்த *G.P.*வேதநாயகம், எழுபதுகளில் எனது காலத்தில் எனக்குப் பழக்கமானவர். மறைமுதல்வன்' என்ற பெயரில் வானொலி நாடகங்கள் எழுதியவர். எல்லோருடனும் கௌரவமாகவும் நேர்மையுடனும் பழகும் பண்பு கொண்டவர். அவரது சில நாடகங்களை நானும் தயாரித்திருக்கிறேன். எழுபதுகளில் அவர் ஆசிரியத் தொழில் நிமித்தம் மலையகத்தில் பணிபுரிய நேரிட்டதால் அவரை அடிக்கடி வானொலி நிலையத்தில் காண முடியாவிட்டாலும் அவ்வப்போது தனது பங்களிப்பைச் செய்து வந்தார். அவர் இலங்கை வானொலியில் தெரிவு செய்யப்பட்ட வானொலி நாடக நடிகர் மட்டுமல்ல. பகுதி நேர அறிவிப்பாளரும்கூட.

தொண்ணூறுகளில் அவரது ஆசிரிய பணியிலிருந்து ஓய்வு பெற்று ஒலிபரப்புத்துறையில் தீவிரமாக ஈடுபட்ட *G.P.*வேதநாயகம், அந்தக் காலகட்டத்தில் பல நாடகங்களை எழுத, அவற்றை அப்போதைய பல புதிய தயாரிப்பாளர்கள் தயாரித்திருப்பதாக அறிகிறேன். வானொலியுடன் அதிக தொடர்பு கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில்தான் அவருக்கு இந்த நூலில் இடம் பெற்றிருக்கும் விபரங்களைத் திரட்டக் கூடியதாக இருந்திருக்கிறது. அதே நேரம், வானொலியுடனும் வானொலியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கலைஞர் களுடனும் சிறு வயதிலிருந்தே கொண்டிருந்த நெருக்க மான தொடர்பு காரணமாகப் பெற்ற அறிவு அவருக்குப் பின்புலமாக அமைந்து இந்த முக்கிய பணியைச் செய்வதற்கு உதவியிருக்கிறது.

*G.P.*வேதநாயகம் வானொலிக்கெனப் பல நாடகங்களை எழுதிய தோடு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய வானொலி நாடகப்பிரதி எழுத்துப் போட்டியொன்றில் பரிசு பெற்றவர் என்பது குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதொன்றாகும்.

இந்த நூலை எழுதும்போது வரலாறு எழுதும் சிலரைப்போல தமக்கு வேண்டாதவர்களை மறைத்து எழுதாமல் பல விபரங்களையும் திரட் டித் தந்திருக்கிறார். ஏதேனும் தகவல்கள் விடுபட்டிருந்தால் அது அந்தத் தகவல் எழுதும்போது நினைவுக்கு வராததால் ஏற்பட்டிருக்குமேயல் லாது அதில் உள் நோக்கமெதுவும் இருக்காதென்பதை இந்த நூலை வாசிக்கும்போது நான் உணரக்கூடிய விதத்தில் பல தகவல்களைத் தந்திருக்கிறார். இதை வாசித்த போது நான் முற்றாக மறந்திருந்த பலர் எனது ஞாபகத்தில் வந்தனர். இந்த நூல் வானொலி நாடகத்துறை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு முக்கிய உசாத்துணை நூலாக அமையுமென்ற நம்பிக்கை எனக்குண்டு.

சானா அவர்களின் ஆரம்ப காலத்து வானொலி நாடகங்களில் பங்களிப்புச் செய்தவர்களையும் எனது புலம்பெயர்வின் பின்னர் தொண்ணூறுகளில் தெரிவான நாடக நடிகர்கள், எழுத்தாளர்களையும் தவிர ஏனைய அனைவரோடும் எனக்கு நேரடியான பழக்கம் உள்ளது. இந்த நூலை வாசிக்கும்போது எனது பழைய வானொலி நினைவுகளை மீட்டு, ஒவ்வொருவரையும் மனக்கண்ணில் தரிசிக்க முடிந்தது. அந்த வாய்ப்பினை எனக்களித்த *G.P.*வேதநாயகம் அவர்களுக்கு எனது நன்றி யைத் தெரிவிப்பதோடு, அவர் பூரண உடலாரோக்கியத்துடன் எழுத்துத் துறையிலும் நாடகத் துறையிலும் மேலும் பல சேவைகளை ஆற்ற வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் அவருக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

P.விக்னேஸ்வரன்

வானொலி, தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பாளர்

ரூபவாஹினித் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவின் முன்னாள் தலைவர்,

ரொரன்ரோ, கனடா.

நவம்பர் 12, 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

வானொலி நாடக எழுத்துத் துறையைப் பொறுத்தமட்டில் 70 களின் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை சுமார் 50 ஆண்டு காலம் எழுதிவரும் ஒரு நாடக எழுத்தாளன் என்ற மட்டில் வாழுகின்ற வானொலி நாடக எழுத்தாளருள் [அனுபவத்தில்] மூத்த எழுத்தாளனாக என்னைக் கூறிக் கொள்வதில் தவறில்லை என எண்ணுகிறேன்.

எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் இதுவரை [2020] 200 மட்டிலான நாடகங்களை எழுதியிருக்கிறேன். இலங்கை வானொலியினரால் 1969 இல் நடாத்தப்பட்ட முதல் நாடகப்போட்டியிலும் 'தினகரன்' வெளியீடான 'அமுது' சஞ்சிகை 2001 இல் நடாத்திய வானொலி நாடக எழுத்துப் போட்டியிலும் முதற் பரிசுகளைச் சுவீகரித்துள்ளேன்.

சுயதம்பட்டம் அடித்துக்கொள்வதற்காக நான் இவற்றைக் குறிப்பிடவில்லை. 'இலங்கை வானொலியின் தமிழ் நாடக வரலாறு' பற்றிய ஆய்வினை எழுதுதற்கு எனக்குள்ள தகுதி பற்றி எவராவது ஐயமுற்றுக் கேள்வி எழுப்பக்கூடுமாகையால் அதற்கான முன்னெச்சரிக்கைக் குறிப்பு அது.

**'வானொலி நாடகப் பிரதிகளும் சிருஷ்டிகர்த்தாக்களும்'** எனும் தலைப்பில் 'தினக்குரல்' வாரமலருக்கு 24.02.2013 இல் இருந்து-19.05.2013 வரை 13 ஞாயிறுகளில் பிரசுரமான தொடர் கட்டுரைக்கு நான் எழுதிய சிறு சுய அறிமுகத்தைப் பொருத்தம் கருதி இங்கு மீளவும் தந்துள்ளேன்.

இலங்கை வானொலி நாடகங்கள் பற்றி ஆவணப்படுத்தப்படுதல் அவசியம் எனும் ஆதங்கம் எனக்கு நிரம்பவுண்டு. எனது பெயரும் அதில் இடம்பெறும் எனும் சுயநல நோக்கமும் அதில் உள்ளதென்பது மறுக்க முடியாததுதான். ஆயினும் யார் குத்தியாவது அரிசியாக வேண்டும் தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தினக்குரலுக்கு எழுதிய கட்டுரைத் தொடரை நூலுருவாக்க எண்ணிய போதிலும் சிலபல தடங்கல்களால் இதுகாலவரை அது கைகூடவில்லை. இப்போதுதான் அதற்கான காலம் கனிந்துள்ளது. அக் கட்டுரைத் தொடரானது நாடகங்கள் பற்றியும் அவற்றை எழுதிய எழுத் தாளர்கள் பற்றியும் மட்டுமே பிரதானமாக ஆராய்ந்திருந்தது. வானொலி நாடகமெனபது எழுத்துடன் மட்டும் நிறைவு பெற்று விடுவ தல்ல. அவற்றைத் தயாரித்த தயாரிப்பாளர்கள், அவற்றில் பங்குபற்றிய கலைஞர்கள் போன்றோரின் ஈடுபாடும் பங்களிப்பும் கூட அவற்றின் உயர்வுக்குப் பக்கபலமாகத் துணைபுரிவன.

எனவே அவர்களை பற்றிய குறிப்புகளின்றி இவ்வாய்வு முழுமை பெறாது எனக் கருதியதால் என்னால் இயன்றவரை அவர்களைப் பற்றி யும் ஓரளவு தகவல்களைத் திரட்டி 'இலங்கை வானொலிக் கலைஞர்க ளும் தயாரிப்பாளர்களும்' பற்றிப் பகுதி - 2 இல் இணைத்துள்ளேன். அதனால் சில நாடகங்கள் பற்றியும் தயாரிப்பாளர்கள் பற்றியும் தவிர்க்க முடியாது மீளவும் கூற நேரிட்டுள்ளது. கூடுமானவரை கூறியது கூறலைத் தவிர்த்திருக்கிறேன்.

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சில கலைஞர்களும் எழுத்தாளர்க ளும் தற்போது எம்மோடில்லை. ஆயினும் 'காலஞ்சென்ற' எனும் அடை மொழியிட்டு அவர்களை இங்கு நான் குறிப்பிடவில்லை. இந்நூல் வாசிக் கப்படும்போது மேலும் சிலரும் அவ்வடைமொழிக்கு உரித்துடையவர் களாகலாம். சிலர் இருந்தும் இல்லாதவர்களாக அறியப்படாதிருக் கலாம். மேற்குறிப்பிட்ட குழப்பங்களைத் தவிர்ப்பதற்காகவும் 'கலைஞர் கள் மரணிப்பதில்லை; அவர்கள் நம் எண்ணங்களில் சிரஞ்சீவித்துவம் பெற்று வாழ்கிறார்கள்' எனும் நம்பிக்கையாலும் அவ்வாறு குறிப்பிடு வதைத் தவிர்த்துள்ளேன் எனக் கொள்ளலாம்.

இதே போல நடிகர்கள் சிலர் கலைமாணிகளாக, பேராசிரியர்க ளாக, வணக்கத்துக்குரியவர்களாக சமூகத்தில் சில உயர் பீடங்களில் இருக்கலாம். ஆனால் கலைஞர்கள் என்ற அடிப்படையில் யாவரும் சம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவர்களே. அவர்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுக்கோ பேதங்க ளுக்கோ இடமில்லை. அதனால்தான் நாடக முடிவில் பங்குபற்றிய கலை ஞர்கள் பற்றிய அறிவிப்பின்போது திரு, திருமதி, செல்வன், செல்வி எனும் முன்னொட்டுகள் ஏதும் சேர்க்கப்படுவதில்லை. அம்முறை யையே நானும் இங்கு பின்பற்றியுள்ளேன்.

மேடை, தொலைக்காட்சி நாடகங்களில் பிரபல நடிகர்களாக, எழுத்தாளர்களாக மின்னியவர்களுட் சிலர் எமது இலங்கை வானொலித் தமிழ் நாடகங்களுடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்கவில்லை. அவ்வாறே இலங்கை வானொலியில் பல்வேறு துறை களிலும் கடமையாற்றிய சிலரும் நாடகத் துறையுடன் தொடர்புற்று இருக்கவில்லை. அதனால் அத்தகையவர்களைப் பற்றி இந்நூலில் நான் எதுவும் குறிப்பிடவில்லை.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்தமட்டில் அங்கு ஒலிபரப்பாகும் நாடகப் பிரதிகள் எவையும் பேணப்படுவ தில்லை. ஒலிபரப்பான நாடக ஒலிநாடாக்கள் உட்பட அவை பற்றிய தகவல்கள்கூட முற்றாக ஒழிக்க/ஒளிக்கப்பட்டுவிட்டன. ஜோர்ஜினதும் அவருக்குப் பின் தயாரிப்பாளர்களாக வந்தவர்களதும் பதிவுகள் மட்டும் தப்பித் தவறி உயிர் பிழைத்து என் கைக்கெட்டின. ஓய்வு நேரப் பொழுது போக்காக அவற்றைப் பிரதியெடுத்தது இப்போது பலன் தந்துள்ளது.

பல எழுத்தாளர்களையும் பற்றிய தகவல்களையறிய 'நூலகம்' வலைத்தளம் பாரிய அளவில் துணை புரிந்தது. இந்நூல் உருவாவதற்கு தோன்றாத் துணையாகப் பலரும் உதவி புரிந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என் நன்றி. இந்நூலுக்கு உயரிய மதிப்புரை ஒன்றை உவந்தளித்து அணிசெய்த எனது வானொலி நாடக ஆசானின் வழித் தோன்றலும் அவரது வழியில் பயணிக்கும் இளைய தலைமுறை ஒலிபரப்பாளருமான A.R.V.லோஷனுக்கும் காத்திரமான அணிந் துரை ஒன்றைக் குறுகியகால இடைவெளியில் வழங்கிச் சிறப்பித்த என் பெருமதிப்புக்குரிய நண்பர் P.விக்னேஸ்வரனுக்கும் என் நெஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த நன்றிகள். 'நூலகம்' வலைத்தள அமைப்பாளர்களுக்கும், தகவல்கள் பெற உதவிய உசாத்துணை நூலாசிரியர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றிகள். நூலின் முதற்பகுதியில் இடம்பெற்ற கட்டுரை களை வாராவாரம் பிசுரிக்கத் தூண்டுகோலாயிருந்த ஞாயிறு 'தினக் குரல்' ஆசிரியர் பாரதி ராஜநாயகம் அவர்களுக்கும் செய்நேர்த்தியுடன் நூலை அச்சிட்டு வெளிக்கொணர்ந்த ஸ்ரீ டிஜிட்டல் அச்சகத்தாருக்கும் என் நேயம் நிறை நன்றிகள்.

என்றும் அன்புடன்

**G.P. வேதநாயகம்**

மின்னஞ்சல் முகவரி: **gpv1611@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## பகுதி - I

## இலங்கை வானொலி நாடகங்களும் சிருஷ்டிகர்த்தாக்களும்

1. இலங்கை வானொலியும் தமிழ் நாடகங்களும் 01

2. 'கலாஜோதி' சானா சகாப்தம் 07

3. 70 களில் இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள் 14

4. 80 களில் இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள் 21

5. 1990-2001 களில் இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள் 28

6. நாடக அரங்கத்துக்கு அப்பால்.. 37

7. வானொலி எழுத்தாளர்களின் நாடக நூல்கள் 40

## பகுதி - II

## இலங்கை வானொலி நாடகத் தயாரிப்பாளர்களும் நாடகக் கலைஞர்களும்

8. கலாஜோதி' சானா சகாப்தம் -II 52

9. வாசகரின் வசந்த காலமும் நடிகர்களின் பொற்காலமும் 67

10. விக்னேஸ்வரனின் சாதனைக் காலம் 72

11. ஜோர்ஜ் சந்திரசேகரனின் தயாரிப்பில் பன்னிரு ஆண்டுகள் [1982 – 1993] 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. 1994 இல் இருந்து 2001 வரை இலங்கை வானொலி நாடக உலகம் 83

13. சிறுவர் மலரும் கிராம சஞ்சிகையும் 85

14. முஸ்லிம் சேவை நடிகர்களும் நாடக எழுத்தாளர்களும் 90

15. இலங்கை வானொலிக் கலைஞர்களும் நாடக மேடையும் 95

16. இலங்கை வானொலிக் கலைஞர்களும் ஈழத்துத் தமிழ் சினிமாவும் 117

17. இலங்கை வானொலிக் கலைஞர்களும் சின்னத்திரையும் 123

18. நாடகக்கலைஞர்கள் சிலரின் பன்முக ஆளுமைகள் 128

19. பின்னிணைப்பு - சொல்ல மறந்த சில சின்னத் தகவல்கள் 131

20. எழுத்தாளர்களின் வானொலி சம்பந்தமான பிற நூல்கள் 142

21. உசாத்துணை நூல்கள்/ சஞ்சிகைகள்/ பிரசுரங்கள் 144



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலியும் தமிழ் நாடகங்களும்

வானொலி நாடகப் பிரதிகள் பற்றிப் பேசப் புகுமுன் வானொலி நாடக வகைகள் பற்றியும் மேடை நாடகங்களுக்கும் அவற்றுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் பற்றியும் முதலில் சற்றுப் பார்ப்போம். எமது இலங்கை வானொலியைப் பொறுத்தமட்டில் 5 நிமிடத்தில் இருந்து 10 நிமிட, 15 நிமிட, 30 நிமிட, 45 நிமிட, ஒரு மணி நேர நாடகங்கள் எனப் பல்வகைப்பட்ட கால இடைவெளிகளைக் கொண்ட நாடகங்கள் ஒலி பரப்பாகியுள்ளன. அதைவிட 15 நிமிட நேர, 1/2 மணி நேரத் தொடர் நாட கங்களும் 13 வாரங்களோ 26 வாரங்களோ ஒரு வருட காலமோ அதற் கும் கூடுதலாகவோ தொடராக ஒலிபரப்பாகிப் பெரும் வரவேற்பையும் பெற்றதுண்டு.

சிறுவர் மலர், இளைஞர் மன்றம், வளரும் பயிர், நாளைய சந்ததி, வாலிப வட்டம், மாதர் பகுதி, குன்றின் குரல் எனப்படும் மலையக மக்க ளுக்கான நிகழ்ச்சி, மற்றும் கிறீஸ்தவ சமய நிகழ்ச்சி போன்ற சஞ்சிகை நிகழ்ச்சிகளின் இடையிலும் குறு நாடகங்கள் சில இடம்பெற்றன. ஆயி னும் பிரதானமாக சனிக்கிழமைகளில் இரவு 9.30 முதல் 10.00 வரை ஒலி பரப்பான 'நாடக அரங்கு' நாடகங்களே பெரும்பாலான நேயர்களால் ஈர்க்கப்பட்டுப் பேரபிமானம் பெற்றன. வியாழக்கிழமைகளில் இரவு 7.45 முதல் 8.00 வரை 15 நிமிட நேரக் குறுநாடகங்களும் ஒலிபரப்பாயின. சில காலங்களில் அந்நேரத்தில் தொடர் நாடகங்கள் இடம்பெற்றன.

முஸ்லீம் சேவையில் செவ்வாய்க் கிழமைகளில் இரவு 8.30 முதல் 9.00 வரை ஒலிபரப்பாகிவந்த அரை மணி நேர நாடகங்களும் நீண்ட காலமாக நேயர்கள் பலரதும் அபிமானத்துக்குரிய நிகழ்ச்சியாக விளங்கி வந்ததும் உண்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபதுகளின் நடுப் பகுதியில் 'சானா'வால் அறிமுகப்படுத்தப் பட்ட நகைச்சுவைக் குறுநாடகங்களின் தொகுப்பான 'மத்தாப்பு' நேயர் களைச் சிரிப்புக் கடலில் ஆழ்த்திய ஒரு சிறப்பான நிகழ்ச்சி. 'கலக்கப் போவது யாரு?' போன்ற இந்நாளையத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக் குப் பிள்ளையார் சுழியிட்ட அந்நிகழ்ச்சியை [சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னரே] அந்நாளிலேயே வடிவமைத்தவரான 'கலாஜோதி' சானாவின் மேதைமை வியக்கப்பட வேண்டியது. 'மத்தாப்பு' பின்னர் 'கதம்பம்' ஆகப் பெயரளவில் மாறுதலுற்றாலும் 2002 வரை தொடர்ச்சியாக ஒலி பரப்பாகி நகைச்சுவைக் கதம்பமாகத் தனது தனித்துவதைப் பேணி நின்றது.

70 களில் இருந்து வர்த்தக சேவையிலும் பல்வேறு வகையான நாடகங்களும் தொடர் நாடகங்களும் ஒலிபரப்பாகி வருகின்றன. இவற் றிலும் நகைச்சுவை நாடகங்கள் முக்கியத்துவம் பெற்றன.

சிறுவர்களுக்கான நாடகங்கள், இளைஞர்களுக்கான நாடகங்கள், பெண்களை மையப்படுத்தி அவர்களின் பிரச்சனைகளை அலசும் நாட கங்கள், விவசாயத் தகவல்களை உள்ளடக்கிய நாடகங்கள், மலையக மண்வாசனை வீசும் நாடகங்கள் என நிகழ்ச்சிகளுக்கேற்ப நாடகங் களை வகைப்படுத்தினாலும் அவையாவும் பெரும்பாலும் சமூக நாட கங்கள் எனும் பிரிவினுள் அடங்கிவிடும்.

ஆயினும் திகிலை ஏற்படுத்தும் மர்ம நாடகங்கள், குற்றம் இழைத்தவர் அல்லது கொலை செய்தவர் யாரெனத் தேடிக்கண்டு பிடிக் கும் துப்பறியும் நாடகங்கள், நகைச்சுவையைப் பிரதான அம்சமாகக் கொண்ட நையாண்டி நாடகங்கள் போன்றனவும் பாத்திரங்களின் மனப் பிரச்சினைகளை- பிறழ்வுகளை மையப்படுத்திய மனோ தத்து வம் சார்ந்த நாடகங்களும் சமூக நாடகம் எனும் பொதுப் பிரிவினுள் அடங்கிய போதிலும் கருப்பொருள், நகர்த்தப்படும் முறை, பயிலப்படும் மொழிநடை என்பவற்றில் அவை தத்தமக்கெனப் பிரத்தியேகமான பாங்கைக் கொண்டிலங்குவன. சமகால வாழ்வியலைப் பின்னணியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக் கொண்டு புனையப்படும் நாடகங்களில், யதார்த்த வாழ்வில் நாம் சந்திக்கும் மனிதர்களை நினைவுபடுத்தும் சில பாத்திரங்களை இனங் கண்டு அவற்றுடன் ஒன்றித்து விட முடிவதால் வானொலி நாடகங்களும் சாதாரண மக்களின் பிரதான பொழுதுபோக்குச் சாதனமாகிவிட்டது.

இதற்கு மாறாக - புராண, இதிகாச, இலக்கிய, சரித்திர, ராஜா ராணிக் கதாபாத்திரங்களை வைத்துப் பின்னப்படும் நாடகங்கள் கற் பனை சார்ந்தனவாக அமைவதால் அவற்றின் பேச்சு நடையும் யதார்த் தம் மீறியதாக, ஓரளவு இலக்கண மரபின் பாற்பட்டதாக அமைக்கப் பட்டுவருகிறது. சிலபோது கவித்துவதுடன் கூடிய கவிதை நாடகங்களா கவும் ஆக்கப்படுவதுண்டு. வேற்றுக் கிரகவாசிகள் பற்றிய - விண்வெளி சம்பந்தமான விஞ்ஞானப் புனைவு நாடகங்களும் சில மிக அரிதாக ஒலி பரப்பாகியுள்ளன.

ஆரம்பகால நாடக வடிவம் கூத்தாக இருந்தது. மேலைத் தேயத்தவ ரின் பரிச்சயத்தால் அவர்களின் கலை இலக்கிய வகைகள் எமது மொழி யிலும் ஊடுருவின. சிறுகதை, நாவல் போல 'டிராமா' எனப்பட்ட நாடக வடிவமும் தமிழில் உள்வாங்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த கூத்துக் கலைஞர்கள் புதிதாக அறிமுகமான 'டிராமா'வுக்குத் தம்மை இசைவாக் கிக் கொண்டார்கள்.

விஞ்ஞானத்தின் பரிணாம வளர்ச்சி காரணமாக வானொலி, கமரா என்பன கண்டுபிடிக்கப்பட மேடை நாடகங்கள் சினிமாவாகவும் வானொலி நாடகங்களாகவும் வடிவம் கொள்ளலாயின. மேடை நாடகத் தில் இருந்து பிறப்பெடுத்த காரணத்தால் அதன் கூறுகள் அவற்றிலும் ஊடுருவி நிற்கவே செய்தன. ஆயினும் அவ்வவற்றுக்கான தனித்துவ சிறப்புகளும் பலவீனங்களும் கொண்டனவாகவே அவை காணப் பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலி - மேடை - திரை

மேடையோ முப்பரிமாண அமைப்பைக் கொண்டது. கண், காது எனும் இரு புலன்களுக்கும் விருந்து வைத்து மெய்யால் உணரப்படுவது. பார்வையாளர்கள் நடிகர்களுடன் நேரடியாகவே பங்குகொள்வது. குறிப் பிட்ட பாத்திரத்தின் தன்மையை, கனபரிமாணத்தை - அது அரசனோ ஆண்டியோ - கண்கூடாகவே காணவைப்பது. ரசிகனின் கற்பனைச் சித்தரிப்புக்கு அங்கு அவசியமில்லை. பாராட்டோ கண்டனமோ பார்வையாளரின் பிரதிபலிப்பு அங்கு உடனடியாகவே தெரிந்துவிடும். கரகோஷமோ கல்லெறியோ - மேடைக் கலைஞன் எதையுமே நேரடியா கச் சந்திக்க/ அனுபவிக்க வேண்டியவனாக இருப்பான். சந்தோஷமோ துக்கமோ, சிரிப்போ அழுகையோ- அரங்கத்தில் அடுத்திருப்பவர் களின் உணர்வுகள் தொற்றிக் கொள்ளும் சாத்தியக்கூறு மேடை நாட கத்துக்கு அதிகமுண்டு. சினிமாவுக்கும் இது ஓரளவுக்குப் பொருந்தும். ஆயினும் ஆற்றுகையைப் பொறுத்தமட்டில் மேடை அனுபவம் என்பது முற்றிலும் வேறானது.

வானொலி என்பது முற்றுமுழுதாக ஒரு செவிப்புலச் சாதனம். அத னால் அதில் ஒலிபரப்பாகும் நாடகமென்பது நேயர்களின் மனமேடை களில் அரங்கேற்றப்படுவது. அவரவரது வயது, அனுபவம், கற்பனை விரிவு என்பவற்றிற்கேற்பத் தனிப்பட இரசிக்கப்படுவது. வானொலி நாடகத்தைக் கேட்கும் ஒவ்வொருவரும் ஒரேவிதமாக இரசிப்பார்கள் எனக் கூறமுடியாது. பாத்திரங்களையும் நாடகத்தின் நிகழ்விடங்களை யும் நேயர்கள் கற்பனையில் உருவகித்துப் பார்க்கவேண்டிய தேவை யுள்ளது. இது வானொலி நாடகத்தின் ஒரு பலவீனமாக இருப்பினும் இரசி கனின் கற்பனையைத் தூண்டிவிடுகிற காரணத்தால் அதுவே அதன் சிறப்புக்குத் துணை புரிகிறதென்றும் கொள்ளலாம்.

மேடை நாடகத்தை ஒருவர் குறிப்பிட்ட ஓரிடத்தில் அமர்ந்த படியோ நின்றபடியோதான் இரசிக்க முடியும். வானொலி நாடகத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கட்டுப்பாடு கிடையாது. நடந்தபடியோ வாகனத்தை ஓட்டிய படியோ பயணம் செய்தபடியோ சமையல், நெசவு, மீன்பிடி, சுருட்டுச் சுத்துதல் போன்ற இன்னோரன்ன வேலைகளைச் செய்தபடியோ கூடக் கேட்டு ரசிக்கலாம்

மேடைக்கும் சினிமாவுக்கும் குரலமைவு மட்டுமல்லாது உடற் பொருத்தமும் வேண்டப்படுகிறது. வானொலி நாடகத்தைப் பொறுத்த மட்டில் குரல் பொருத்தம் மட்டுமே தேவைப்படுவது. நல்ல சினிமாவானது காட்சிப் படிமங்களால் நகர்த்தப்படுவதாக, மிகக் குறைந்தளவு உரையாடல்கள் கொண்டதாக அமைக்கப்பட வேண்டுமென்பர். ஆனால் எமது தமிழ் சினிமாவோ பெரும்பாலும் நாடகத் தன்மை கொண்டதாக, ஆரம்பம் முதல் இறுதி வரை வசன மழையில் குளித்தெழுவதாகவே இருந்து வந்தது/ வருகிறது. கண்களை மூடிக் கொண்டு காதுகளைத் திறந்து வைத்தாலே காணும். கதை ஓட்டத்தை எவ்வித இடருமின்றிப் புரிந்து கொள்ளலாம். அதனால் தானோ என்னவோ ஒலிச் சித்திரங்களாகத் திரைப்படங்களைக் கேட்டுத் 'தரிசிக்க' முடிந்தது. நாடகத்துக்கும் சினிமாவுக்குமுள்ள வேறுபாடு உணரப்படாத காரணத்தால் நீண்ட காலமாகத் தமிழ் சினிமா 'திரை நாடகமாகவே' பவனி வருகிறது. மேடை நாடகங்களின் சரிவுக்கும் இதுவே மூல காரணமானது.

வானொலி நாடகங்களைப் பொறுத்தமட்டில் ஆரம்பகாலங்களில் இத்தகைய ஏற்ற இறக்கங்களுக்கு இடமிருக்கவில்லை. ஆனால் திரையுடன் ஒப்பிடும்போது அதன் எல்லைகள் மட்டுப்பட்டதாகிப் போயின. சப்த ஜாலங்களையோ இசை நுணுக்கங்களையோ கொண்டு எட்டக் கூடிய எல்லைகளை அது எட்டிவிட்ட பின் புதிதாகப் பரீட்சிப்பதற்கு வானொலி நாடகங்களில் ஏதுமில்லாமற் போனது. அதன் காரணமாகவும், தமிழில் தொலைக்காட்சிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு அதில் நிதமும் எட்டுப் பத்துச் சின்னத்திரைத் தொடர்கள் ஒலி +



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிபரப்பாகத் தொடங்கியமையாலும் வானொலியும் அதன் நாடகங் களும் படிப்படியாகத் தமது மவுசை இழக்க ஆரம்பித்தன.

வானொலிக் கலைஞர்களும் சரி எழுத்தாளர்களும் சரி காற்றலை களிற் கலை படைப்பவர்கள். அதனால் அவர்களின் பெயரும் புகழும் கூடக் காற்றோடு கலந்து மறைந்து விடுகிறது; மறக்கப்பட்டு விடுகிறது. புனைகதை எழுத்தாளர்களைப் போல வானொலி நாடக எழுத்தாளர் களின் குறை நிறைகள் ஆராயப்பட்டு அவர்களுக்கான இடம் அளிக்கப் படுவதில்லை. எனவே அவர்களைப் பற்றி நாளைய சந்ததியினர் தெரிந்துகொள்ள முடியாமலே போய்விடுகிறது. இக்குறையைப் போக்கவேண்டுமெனும் ஆதங்கத்தில் நானறிந்த மட்டிலான சில தகவல் களைத் தொகுத்து இங்கே பதிவு செய்ய விழைகிறேன். அவசியமான இவ்வாவணப்படுத்தலில் சிலபல விடுபடுதல்கள் நிகழ வாய்ப்புண்டு. மேலதிக தகவல்கள் தெரிந்தவர்கள் காலப்போக்கில் இதை மேலும் செழுமைப்படுத்த இது ஓர் அடிப்படை யாக அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கலாஜோதி' சானா சகாப்தம் [1951 – 1973]

இலங்கை வானொலியில் அதாவது அன்றைய ரேடியோ சிலோனில் தமிழ் நாடகங்களின் முதற் தயாரிப்பாளராக, பிதாமகராகத் திகழ்ந்தவர் 'கலாஜோதி' சானா என அறியப்பட்ட S.சண்முகநாதன் அவர்கள். ஒரு நடிகராக, எழுத்தாளராக, ஓவியராக, வானொலி, மேடை நாடக நெறியாளராக, தயாரிப்பாளராக - பல்துறை மேதைமை மிக்கவராக மிளிர்ந்த 'சானா' அவர்கள் 51 இல் இருந்து 71 வரையான காலப் பகுதியில் மிக்க அர்ப்பணிப்புடன் தாமேற்ற நாடகத் தயாரிப்பாளர் பணியைச் செவ்வனே செய்து முடித்தவர்.

ஈழத்துச் சிறுகதைத் துறையின் பிதாமகராகப் போற்றப்படும் சிவஞானசுந்தரம் எனும் ***இலங்கையர்கோனே*** எமது வானொலி நாடக எழுத்தாளர்களுக்கும் பிதாமகராகத் திகழ்கிறார். அவரெழுதிய முதலாவது வானொலி நாடகம் '***கீசக வதம்***' எனும் புராண நாடகம். பல்வேறு வகையான நாடகங்களையும் எழுதிய அவர் யாழ் பிரதேச வழக்கில் மட்டுமல்லாது மலையகப் பிரதேச வழக்கிலும் ஏன் முஸ்லீம் வழக்கிலும் கூட எழுதும் ஆற்றல் பெற்றவராக இருந்தார்.

நகைச்சுவைத் தொடர் நாடகமாக ஒலிபரப்பான அவரது '***லண்டன் கந்தையா***'வில் பல்வேறு பிரதேச வழக்குகளையும் பேசும் பாத்திரங்களைக் கலந்துகட்டி உலவ விட்டார். 'சானா'வைக் கதாநாயகராக மனதில் வரித்துக் கொண்டு அவரெழுதிய 'லண்டன் கந்தையா'வைத் தயாரித்து நடித்து அப்பாத்திரத்துக்கு உயிரூட்டியதால் 'சானா'வும் அதை ரசிகர்களின் மனம் கவரும்படி எழுதியதால் இலங்கையர்கோனும் புகழ்பெற்றனர்.

இலங்கையர்கோனின் ***'விதானையார் வீட்டில்', 'மிஸ்டர் குகதாசன்', 'கொழும்பில் கந்தையா'*** போன்ற தொடர் நாடகங்களும் அன்றைய நேயர்களின் பேரபிமானம் பெற்றவை. ***பேராசிரியர் கணபதிப்பிள்ளை*** அவர்கள் எழுதி நெறிப்படுத்தி, பேராதனைப் பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக் கழகத்தில் மேடையேற்றிய நாடகங்கள் பற்றித் தமிழ் நாடக அபிமானிகள் நன்கறிவர். அவரது '***உடையார் மிடுக்கு*** என்ற நாடகம் ஆரம்பகாலத்தில் தொடராக வந்த நாடகங்களுள் குறிப்பிடத் தக்கது.

தமிழ் நாட்டிலும் ஏன் சிங்கப்பூர், மலேசியாவிலும் கூட பரவலான நேயர்களை ஈர்த்திருந்த 'ரேடியோ சிலோன்' நாடக அரங்கத்துக்கு தமிழகத்தில் இருந்தும் சில எழுத்தாளர்கள் நாடகப் பிரதிகளை எழுதி வந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் திருச்சி சந்தர். அன்றைய காலத் தமிழ்த் திரைப்படங்களில் எழுத்துநடை சார்ந்த ஒரு வகைத் தமிழே பெரும்பாலும் பேசப்பட்டது. பிரதேச வழக்குகளைக் கொச்சைத் தமிழ் எனப் படித்த [பண்டித] வர்க்கத்தினர் இழித்துரைத்து வந்த காரணத்தால் அக்கால எழுத்தாளர்களும் 'நல்ல' தமிழில்தான் நாடகங்களும் எழுதப்பட வேண்டும் எனக்கருதியோ என்னவோ செயற்கையான ஒரு தமிழ் உரையாடல் நடையை வரித்துக் கொண்டிருந்தனர். ***திருச்சி சந்தரும்*** அத்தகைய நடையில் எழுதியவர்தான். அவரது '***வளையாபதி*** எனும் நகைச்சுவை நாடகம் ஒன்று மட்டும் 'ஒலித்தட்டில்' பதியப் பெறும் பாக்கியம் பெற்றதால் பின்னைய காலத்திலும் அடிக்கடி ஒலிபரப்பாகி நினைவிலும் நிலைத்துவிட்டது.

நமக்கான தனித்துவத்துடன் தமிழில் தரமான நாடகங்கள் ஒலிபரப்பாக வேண்டும் எனும் உத்வேகம் கொண்டவராக 'சானா' இருந்துள்ளார் என்பதை அவரது செயற்பாடுகள் உணர்த்துகின்றன. அவரது காலத்தில் பேராசிரியர் ***க.கைலாசபதி*** அவர்கள்கூட சில மொழி பெயர்ப்பு நாடகங்களை எழுதியதாகத் தெரிகிறது. பல நல்ல சிறுகதை எழுத்தாளர்களை அறிமுகஞ் செய்து தட்டிக் கொடுத்த அவர் சிறுகதை ஏதும் எழுதியதாகத் தெரியவில்லை. ஆனால் அவர் நாடகங்கள் எழுதியுள்ளார் என்றால் அதற்கு 'சானா'வின் தூண்டுதலே காரணமாக இருந்திருக்கமுடியும்.

பேராசிரியரைப் போலவே தமிழறிஞர் ***இ. இரத்தினமும்*** மொழி பெயர்ப்பு நாடகங்களிலும் இலக்கிய நாடகங்களிலும் ஈடுபாடுற்றவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக இலங்கியவர். ***பேராசிரியர் கா. சிவத்தம்பி***யும் அந்நாளில் அருந் தலாக எழுதியுள்ளார். ஆயினும் நடிப்பில்தான் அவர் வெற்றிக்கொடி நாட்டினார். அந்நாளில் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக இருந்த ***நாவற்குழியூர் நடராசன்*** நாடறிந்த ஒரு மரபுக் கவிஞர், கவிதை நாட கங்கள் எழுதுவதில் அவரும் முனைப்புக் காட்டியுள்ளார்

ஈழத்துச் சிறுகதை நாவல் கவிதை முதலான நவீன இலக்கியத் துறைகளில் கால் பதித்த பலரையும் வானொலி நாடகத் துறைக்குச் 'சானா' இழுத்து வந்துள்ளார். ***எஸ். பொன்னுத்துரை, வ. அ. இராசரத்தி னம், சு. வேலுப்பிள்ளை, இளங்கீரன் சுபைர், சொக்கன், முல்லை மணி, நந்தி, நடமாடி, கவிஞர்கள் முருகையன், நீலாவணன், சில்லையூர் செல்வராசன், அம்பிகைபாகன், பா. சத்தியசீலன்*** போன்றவர்களும் மலையக எழுத்தாளர்களான ***வீர. பழனிச்சாமி, பி. நல்லுசாமி, இரா, சிவலிங்கம், என். எஸ். எம். ராமையா, தெளிவத்தை ஜோசப், A.P.V. கோமஸ்*** போன்றவர்களும் 'சானா' சகாப் தத்தில் இலங்கை வானொலி நாடகங்களில் பங்களிப்புச் செய்துள் ளார்கள்.

பின்னாளில் இலங்கை வானொலித் தமிழ்க் கல்விச் சேவை யில் இயக்குனராகவும் ஆலோசகராகவும் பணியாற்றிய ***அரச ஐயாத் துரை*** அவர்களும் அந்நாளில் செய்தி வாசிப்பாளராக இருந்து பின்னா ளில் முஸ்லீம் சேவைப் பணிப்பாளராக உயர்ந்த ***எம். ஏ .கபூர்*** அவர்க ளும் கூட 'சானா ' காலத்தில் நாடகங்கள் எழுதியும் நடித்தும் உள்ளார் கள்.

'சானா'வின் காலத்தில் அதிகளவு நாடகப் பிரதிகளை எழுதிக் குவித்தவர் என்று ***பாலாம்பிகை நடராஜா***வைச் சொல்லலாம். '***காலச் சக்கரம்***' அவரது முதல் நாடகம். 'கிருஷ்ணா' எனும் புனைபெயரில் அவரெழுதிய '***டொக்டர் ரஞ்சிதம்***' தொடர் நாடகம் அந்நாளில் மிகப் பிரபலமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாளைய 'குமுதம்' 'கல்கி' வார இதழ்களில் வெளியான ஜன ரஞ்சகமான கதைகளின் பாணியில் மிகை உணர்வுள்ள 'மெலோ டிராமா' வகைத்தான நாடகங்களை 'நல்ல தமிழில்' எழுதியவர் பாலாம் பிகை நடராஜா. 'சிறுவர் மலர்' நிகழ்ச்சியிலும் ***'படே ஜம்பா'*** போன்ற தொடர் நாடகங்களை எழுதிச் சிறுவர் முதல் பெரியவர்கள் வரையான அனைத்துத் தரப்பினரையும் ஒரு சேரக் கவர்ந்து மகிழ்வித்தவர் அவர்.

துறை நீலாவணையைச் சேர்ந்த ***எஸ்.முத்துக்குமாரன்*** 'சானா' வின் காலத்தில் இலக்கிய இதிகாச நாடகங்கள் சிலவற்றை எழுதியுள் ளார் என்பதை 2008 இல் அவரெழுதி வெளியிட்ட 'வீர வில்லாளி' நாடகத் தொகுப்பு நூல் வாயிலாக அறிய முடிகிறது. நிந்தாவூரைச் சேர்ந்த பிரபல சிறுகதை எழுத்தாளரும் சட்டத்தரணியுமான ***எஸ்.முத்துமீரானும்*** சானா காலத்து எழுத்தாளர்களுள் குறிப்பிடத் தக்கவர். அக்கால கட்டத்தில் சமூக நகைச்சுவை நாடகங்களை எழுது வதில் பிரபலமான ஒருவராக ***எஸ்.எம்.நஸ்ருதீன்*** இருந்துள்ளார் என் பதை அந்நாளைய பிரபல நடிகையான விசாலாட்சி குகதாசன்[ ஹமீட்] எழுதிய அவரது வானொலி அனுபவங்கள் பற்றிய நூல் வாயிலாக அறிய முடிகிறது.

***V.N.குகராஜா***வும் ***ஆ.கருணைரத்தினமும்*** சானா காலத்தில் எழுத ஆரம்பித்துத் தொடர்ந்து வாசகர் காலம்வரை சளைக்காது எழுதி யவர்கள். மலையகப் பின்னணியில் எழுதிய ***கு.ராமச்சந்திரன்*** நாடகக் கலைக்குத் தன்னை அர்ப்பணிப்புச் செய்த ஒருவர். ***M.S.றட்ணம், M.S.சிவபாலன்,K.கணபதி, முத்துராஜா, N.N.குமார சிங்கம், இக்னேஷியஸ் மொறாயஸ், K.V.S.மோகன்*** போன்றோரும் சானா காலத்தைய நாடக எழுத்தாளர்களுள் நினைவுகூரப்பட வேண்டியவர் கள்.

நாடறிந்த எழுத்தாளரும் மூத்த பத்திரிகையாளருமான ***அன்னலட்சுமி இராஜதுரை*** அவர்களது நாடகமும் சானாவின் நெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாள்கையில் ஒலிபரப்பானதாகச் சமீபத்தில் வெளியான அவரது 'நினவுப் பெருவெளி' நூல் முகவுரை மூலம் அறிய முடிகிறது.

தொடர் நாடகமுட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுத் தாளர் ***கச்சாயில் இரத்தினம்*** வானொலிக்கு எழுதியதாக அவரது வலைப்பதிவு மூலம் அறிய முடிந்தது. அந்நாளில் அதிக பங்களிப்புச் செய்த நால்வருள் ஒருவராக இவரைப் பற்றிப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் இலங்கை வானொலியின் 50 ஆவது ஆண்டு விழாவின் போது குறிப்பிட்டுள்ளாராம் [கச்சாயில் இரத்தினத்தின் மகள் ***மலரன்னை***யும் 35 க்கும் மேற்பட்ட நாடகங்களை {பின்னாளில்} எழுதிய தாக அதே குறிப்புக் கூறுகிறது]

1964 இல் சிறுகதைத் துறையில் பிரவேசித்தவர் கந்தையா நடேசு என்கிற ***தெணியான்*** 17/11/2011 'தினக்குரல்' ஞாயிறு பதிப்பில் வெளி யான அவரது பேட்டியில் தான் எழுதிய ஐந்து நாடகங்கள் பிரபல நாட கக் கலைஞர் சானாவின் தயாரிப்பில் ஒலிபரப்பப்பட்டன என்றும் அவற் றில் லடிஸ் வீரமணி போன்ற கலைஞர்கள் நடித்தார்கள் என்றும் குறிப் பிட்டுள்ளார்.

ஆயினும் அவர் தாமெழுதிய நாடகங்கள் இன்னின்னவை எனத் தலைப்புச் சுட்டிக் குறிப்பிடவில்லை. தெணியானைப் போலவே அக் கால கட்டத்தில் வானொலி நாடகம் எழுதிய வேறும் சில எழுத்தாளர் களும் இருக்கலாம். தகவலின்மையால் அவர்களது பெயர்கள் தவிர்க்க முடியாது விடுபட்டும் போயிருக்கலாம்.

60 களின் பிற்கூற்றில் எழுத ஆரம்பித்து 70 களில் முன்னணி வானொலி எழுத்தாளர்களாகத் திகழ்ந்த ***'வரணியூரான்' S.S. கணேச பிள்ளை***யும் ***சி. சண்முகமும்*** சானாவின் பட்டறையில் இருந்து பட்டை தீட்டப்பட்டு எழுதப் புறப்பட்டவர்கள் எனக் கூறுதல் மிகையல்ல. இலங் கையர்கோனின் மறைவின் பின் அவரது 'லண்டன் கந்தையா' கதா பாத்திரங்களைக் கொண்டு ***C. சண்முகம் உருவாக்கிய*** *தொடர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'*ஸ்ரீமான் கந்தையா*'. *பாலாம்பிகை நடராஜாவின் 'மனோரஞ்சிதம்' சில்லையூர் செல்வராஜனின் 'சிலம்பின் ஒலி'. ஜோர்ஜ் சந்திரசேகரனின் 'எழுதிச் செல்லும் விதியின் கை'.* *என்பனவும்* எழுத்தாளர் ***சு வே. என்னும் சு.வேலுப்பிள்ளை*** எழுதிக் 'கிராம சஞ்சிகை'யில் ஒலிபரப்பான **'பொன்னச்சிகுளம்'** *மற்றும் கிராமிய நிகழ்ச்சிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய* ***V.N.பாலசுப்ரமணியம்*** எழுதித் தயாரித்துக் 'கிராம சஞ்சிகை'யில் ஒலிபரப்பான ' '***தேன் கூடு***' முதலான தொடர் நாடகங்களும் அந்நாளில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற நாடகங்கள் என ராஜேஸ்வரி [சண்முகம்] அக்கா கூறித் தெரிந்து கொண்டேன்.

தனது 20 ஆண்டுகால நாடகத் தயாரிப்புப் பணியின்போது ஆயி ரத்துக்கும் மேற்பட்ட நாடகங்களைத் தயாரித்தளித்த கலாஜோதி சானா தாம் பணியிலிருந்து ஒய்வு பெறமுன்னதாக 1969 இல் நாடளாவிய ரீதியில் ஒரு மணி நேர வானொலி நாடகப் போட்டி ஒன்றை நடாத்தி னார். பலநூறு எழுத்தாளர்களும் கலந்துகொண்ட அந்நாடகப் போட்டி யில் ***ஆர்.சத்யராஜ்*** எழுதிய '***நீதியின் நிழலில்***' எனும் துப்பறியும் நாடகம் முதற் பரிசையும் ***கி.பஞ்சரத்தினம்*** எழுதிய '***தயிரா வடையா***?' எனும் நகைச்சுவை நாடகம் இரண்டாவது பரிசையும் தட்டிக்கொண் டன. மூன்றாவது பரிசை எழுத்தாளர் ***வீ.என்.குகராஜா*** பெற்றார்.

சொல்லப்போனால் முதலிரு பரிசுகளுமே ஒருவருக்குத்தான். ஆமாம். அந்த அதிர்ஷ்டசாலி அடியேனே தான்! [சத்யராஜ் என்ற எனது இளைய சகோதரனின் பெயரிலும் பஞ்சரத்தினம் என்ற எனது மற் றொரு பெயரிலும் பிரதிகளை அனுப்பியிருந்தேன் 'காலத்தால் சாகா தது' என எனது சொந்தப் பெயரில் எழுதிய சமகால நாடகத்துக்கு ஆறுதல் பரிசு கூடக் கிடைக்கவில்லை!]

அதற்கு முன் வானொலிக்கென எந்த ஒரு நாடகப் பிரதியையும் எழுதாதவன் நான். எடுத்த வாக்கிலே முதலிரு பரிசுகளையும் நான் தட்டி ச்சென்றமையானது பலரது புருவங்களை உயர்த்தவும் சிலரதைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகத்தில் சுருங்கவும் வைத்ததும் உண்மையே. கலாநிதி க.கைலாசபதி, கவிஞர்கள் இ.முருகையன், இ.இரத்தினம் ஆகியோரே நடுவர்களாகக் கடமையாற்றினர் என்பது நான் பின்னர் அறிந்து கொண்டது. அவர்களுள் கவிஞர் இ.முருகையனுடன் மட்டுமே எனக்கு ஓரளவு பரிச்சயமுண்டு. அதுவும் பின்னாட்களில் ஏற்பட்டதுதான்.

அக்காலகட்டத்தில் சி.வி. ராஜசுந்தரம் அவர்களும் சானாவுக்கு உதவியாக நாடகத் தயாரிப்பாளராகச் சிலகாலம் பணியாற்றினார். 15 நிமிட நாடகங்களைத் தயாரிக்கும் பொறுப்பை அவர் ஏற்றிருந்தார். 'வானோசை' என்ற பெயரில் வானொலி சம்பந்தமான பயனுள்ள ஆங் கில நூலொன்றைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்கியவர் அவர்.

அவரது தயாரிப்பில் நானும்கூட நடித்திருக்கிறேன். கம்பரின் வாழ் வுக்கூற்றின் ஒரு நிகழ்வைப் பகைப்புலனாகக் கொண்டு ***கவிஞர் முருகையன்*** எழுதிய '***மனிதனைப் பாட மாட்டேன்***' எனும் 15 நிமிட நாடகத்தில் எனது 20 ஆவது வயதில் குலோத்துங்க சோழனாக நான் நடித்தது மறக்கற்பாலது. அந்நாடகத்தை நெறியாள்கை செய்தவர் 'சுந்தா' எனும் வீ.சுந்தரேசலிங்கம். அதில் கம்பராக மிகச் சிறப்பாக நடித் தவர் எஸ்.விஸ்வரத்தினம் எனும் அற்புதமான நடிகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 70 களில் இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள்

**1969** இல் 'தினகரன்' மாபெரும் மேடை நாடகப் போட்டியொன்றை அகில் இலங்கை ரீதியாக நடாத்தியது. அதில் தெரிவான ஏழு நாடகங்கள் தொடர்ச்சியாக ஒரு வார காலம் மிகக் கோலாகலமாகக் கொழும்பில் அரங்கேற்றப்பட்டன. அதில் சிறந்த நாடகமாகத் தெரிவு செய்யப்பட்ட 'சுமதி' என்ற நாடகத்தை எழுதித் தயாரித்து முதற் பரிசீட்டியவர் தான் கே.எம்.வாசகர்

சானாவின் காலத்தில் ஒரு தொழில்நுட்ப உதவியாளராக மட்டும் வானொலியுடன் பரிச்சயம் கொண்டிருந்த அவருக்கு சானா ஓய்வு பெற்றபின் நாடகத் தயாரிப்பாளராகும் தகுதியை 'சுமதி'யின் வெற்றி ஈட்டிக் கொடுத்ததெனலாம்.

70 களின் ஆரம்பத்தில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றமும் விஞ்ஞான தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சியும் வானொலி நாடகத் தயாரிப்பிலும் சில சாதகமான விளைவுகளை ஏற்படுத்தின. அதற்குச் சிறிது காலத்துக்கு முன்னரே ஒலிப்பதிவு நாடாக்கள் புழக்கத்துக்கு வந்துவிட்டபோதிலும் சானாவின் காலத்தில் நாடகங்கள் யாவும் நேரடியாகவே ஒலிபரப்பாயின.

ஆனால் வாசகர் காலத்தில் இலங்கை வானொலியில் ஒலி நாடாக்கள் பாவனை ஆரம்பமாகிவிட்டது. அதைவிட அப்போது ஆட்சிக்கு வந்த சுதந்திரக்கட்சி அரசானது தமிழகத் திரைப்பட இறக்குமதியில் ஏற்படுத்திய தடையானது உள்ளூர் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் ஊக்கமளிப்பதாக அமைந்துவிட்டது. அனைத்து இலங்கைத் தமிழர்களதும் ஒரே பொழுதுபோக்குச் சாதனமாக இலங்கை வானொலி மாறிவிட்டது. அதனால் வானொலி நாடகங்களைக் கேட்டு ரசிக்கும் நேயர்களின் தொகையும் அக்காலகட்டத்தில் உச்சத்தை எட்டிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சேவையில் மட்டுமின்றி வர்த்தக சேவையிலும் விளம்பர தாரர்கள் அனுசரணையுடன் தொடர் நாடகங்கள் பல ஒலிபரப்பாக ஆரம்பித்தன. எழுத்தாளர்கள் பலரும் களத்தில் இறங்கிச் சளைக்காது எழுதிக் குவிக்க ஆரம்பித்தனர்.

கே.எம்.வாசகரின் தயாரிப்பில் ***இளங்கீரனின் 'வாழப் பிறந்த வர்கள்'*** நாடகம் 130 வாரங்கள் அதாவது இரண்டரை ஆண்டுகள் தொடராக ஒலிபரப்பானது. அவரது ***'அவளுக்கு வேலை வேண்டும்'*** தொடரும் வர்த்தக சேவையில் பின்னர் வலம்வந்தது. ***'மனித புராணம்'*** தேசிய சேவையில் தொடராக ஒலிபரப்பான இளங்கீரனின் மற்றொரு நாடகம்.

மேலதிகப் பணிப்பாளராகச் சிலகாலம் கடமையாற்றிய பிரபல எழுத்தாளர் ***அங்கையன் கைலாசநாதனின்'பருவக் காற்று'*** 52 வாரங் களை வெற்றிகரமாகக் கடந்தது. கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்த ***வீ.என்.பாலசுப்ரமணியத்தின் 'பழமுதிர்ச்சோலை'*** பிரபல எழுத்தாளர் ***சு.வே.***எழுதிய ***'பொழுது புலர்ந்தது'*** என்பனவும் அந்நாட் களில் தொடராக ஒலித்து மண்வாசனை பரப்பிய நாடகங்களே!

வர்த்தக சேவையில் 70 களில் ஒலிபரப்பான ***சில்லையூர் செல்வராஜனின் 'தணியாத தாகம்'*** அந்நாளைய நேயர்களின் கண்களைக் குளமாக்கி நெக்குருகச் செய்து நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்துவிட்ட ஒரு முத்திரைத் தொடர் நாடகம். அதில் கமலினி செல்வராஜனதும் கே.எஸ்.பாலச்சந்திரனதும் நயமான நடிப்பு பலராலும் வியந்து போற்றப்பட்டு நீண்ட காலம் பேசப்பட்டது.

***M.அஷ்ரப்கானின் 'ஒரு வீடு கோவிலாகிறது'***வும் அப்துல் ஹமீதின் உணர்ச்சிகரமான நடிப்புக்குத் தீனியாக அமைந்து அந் நாளைய நேயர்களின் அமோக ஆதரவைப் பெற்ற ஒரு தொடர் நாட கமே. இதே 70 களில் கமத்தொழில் திணைக்கள அனுசரணையுடன் கிராம சஞ்சிகை'யில் ***'முகத்தார் வீடு'*** எனும் நாடகத் தொடரை எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் முகத்தாராகவும் நடித்து 268 வாரங்களுக்கு, அதாவது சுமார் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒலிபரப்பச் செய்து முத்திரை பதித்தவர் இளவாலையூர் ***எஸ் ஜேசுரட்ணம்***. அவரது '***சண்டியன் சின்னத்தம்பி***' 26 வாரங்களும் '***மருக்கொழுந்து***' 13 வாரங்களும் தொடராக ஒலிபரப்பான மற்றிரு நாடகங்களாம்.

'மரைக்கார்' ராமதாஸ் 'அப்புக்குட்டி' ராஜகோபால் 'உபாலி' செல்வசேகரன் எனத் தாம் உயிரூட்டிய பாத்திரங்களின் பெயர்களால் நடிகர்கள் நினைவுகூரப்படக் காரணமான '***கோமாளிகள் கும்மாளம்***' தொடர் நாடகமும் 75 இல்தான் வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகி நேயர்களின் பேரபிமானம் பெற்றது. நகைச்சுவை எழுத்தாளராக மஹதி ஹசன் இப்ராஹீமை இனங்காட்டியதும் அந்த நாடகம்தான். அந் நாடகத்தின் மகத்தான வெற்றி நீண்ட காலத்துக்கு எஸ்.ராமதாஸின தும் அதில் நடித்த ஏனைய நடிகர்களினதும் பெயர்களை ரசிக நெஞ்சங்களில் தக்கவைக்கக் காரணமானது. ***மஹதி ஹசன் இப்ராஹிமின்*** '***கரையைத் தொடாத அலைகள்***' '***கல்யாணக் கைதிகள்***' '***இரு துருவங்கள்***' என்பனவும் பின்னர் ஒலிபரப்பான குறிப்பிடத்தக்க தொடர்கள்.

70 களில் நகைச்சுவையில் கொடிகட்டிப் பறந்த மற்றுமொரு எழுத்தாளர் ***சி சண்முகம்***. அவரது '***துணி விடு தூது***' ரசிக நெஞ்சங்களைக் களிப்பிலாழ்த்திய தொடர்களில் முதன்மையானது. '***இதயத் துடிப்புகள்,***' '***எங்கேயோ கேட்ட குரல்***', '***இரவில் கேட்ட குரல்***' மற்றும் 52 வாரத் தொடரான '***நெஞ்சில் நிறைந்தவள்***' நூறு வாரத் தொடரான '***அப்பாவும் மகனும்***', ***ஆனந்த வாசம்***' என அவரது கற்பனையில் உருவாகிக் காற்றலைகளில் வலம் வந்த தொடர்கள் பலப்பல.

அக்காலகட்டத்தில் அதிகளவான ஜனரஞ்சகத் தொடர்களை எழுதியவரென '***வரணியூரான்***' ***S.S. கணேசபிள்ளை***யைக் குறிப்பிடலாம். '***இராசமலர்க் களஞ்சியம்***', '***கண்ணே லலிதா***', '***குழறி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கந்தையா', 'ஆசை மச்சான்', சுகுணாவின் காதலன்', 'மனம் போல வாழ்வு', 'சுந்தரி சாகவில்லை', 'அசட்டு மாப்பிள்ளை'*** முதலான பல்வேறு தொடர் நாடகங்களையும் எழுதிய அவர் தமது தொடர் நாடகமான ***'இரை தேடும் பறவைகளை'*** நூலுருவாக்கியுமுள்ளார். 1972 இல் 31 வாரங்கள் ஒலிபரப்பான அவரது ***'புளுகர் பொன்னையா'*** பின்னர் மேடை நாடகமாக அவதாரமெடுத்து இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் வெற்றி நடை போட்டு வெள்ளிவிழாக் கண்டது. அவ ரது அயராத உழைப்பு வானொலி நாடக வரலாற்றில் அவருக்கொரு தனி இடத்தைப் பெற்றுத்தந்திருக்கிறது

மேற்குறிப்பிட்ட தொடர்களை விட, ***காவலூர் ராஜதுரை****யின்* ***'துப்பறியும் லாவோஜி', சுரேஷ் சுவாமிநாதனின்*** எழுத்துருவாக்கத் தில் ***அ.ந.கந்தசாமி****யின்* ***'மனக்கண்', ஞானசக்தி கந்தையா****வின்* ***'ஒரு சுமைதாங்கி கல்லாகிறது', தி.வ. அரியரத்தினத்தின்'பூங்காவனம்'. கே.எம்.வாசகரின் 'நீண்ட பயணம்,' எஸ்.ராமதாஸின் 'வினோத உலகம்'*** முதலான நாடகங்கள் வர்த்தக சேவையில் தொடராக ஒலி பரப்பாக - ***எம் கந்தசாமி****யின்* ***'போடியார் வீட்டில்'*** மற்றும் ***எஸ் பொ.*** *வின்* ***'மட்டக்களப்பு மாப்பிளை'*** என்பன தேசிய சேவையில் தொடராக ஒலிபரப்பாகி நேயர்களின் வரவேற்பைப் பெற்றன.

மேடை நாடக மரபில் வந்ததாலோ என்னவோ வாசகருக்கு அதன் பால் ஓர் அபிமானம் இருந்து வந்தது போலும். அதனால் அந் நாட்களில் மேடையேறிய தரமான மேடை நாடகங்களை வானொலிக் கேற்ப மாற்றி ஒலிபரப்புச் செய்ததுடன் சில நாட்டுக் கூத்துகளை ஒலிநாடாக் களில் பதிவு செய்து களஞ்சியப்படுத்தும் கைங்கரியத்தையும் செய்துள் ளார். நடிகமணி வி.வி. வைரமுத்துவின் 'பூதத்தம்பி'க் கூத்தும் 'பக்த நந்தனார்', 'திருநீலகண்ட நாயனார்' கூத்துகளும் அவ்வாறாக நிலையக் காப்பகத்தில் [அவரால்] ஒரு போது பேணப்பட்டன.

***வைரமுத்துவின் 'அரிச்சந்திர மயான காண்டம்', அம்பியின் 'வேதாளம் சொன்ன கதை', இ.பாலேந்திராவின் 'மழை',***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***S.S.கணேசபிள்ளையின் 'நம்பிக்கை', கலைச்செல்வனின் 'மனித தர்மம்', வாசகரின் 'சுமதி', 'மனித வலை'*** போன்ற மேடை நாடகங்கள் வானொலி வடிவம் கண்டனவற்றுள் குறிப்பிடத்தகுந்தன.

வாசகரின் தயாரிப்பில் ***எஸ்.பொ., இளங்கீரன், சொக்கன், தெணியான்,*** மற்றும் ***அகஸ்தியர், செங்கை ஆழியான், அங்கையன் கயிலாயநாதன். மு.கனகராசன்*** போன்ற பிரபல எழுத்தாளர்களின் கைவண்ணத்தில் நல்ல பல நாடகங்கள் உருவாகின. மாப்பசானின் சிறுகதையைத் தழுவி ***எஸ்.பொ.*** எழுதிய '***முள்,' அங்கையன் கயிலாய நாதனின் 'கடற் காற்று'*** [அவரே எழுதிய நாவலின் நாடக வடிவம்], ***இளங்கீரனின் 'மகாகவி பாரதி'*** மற்றும் '***வெறும் கனவல்ல,' இ.இரத்தினத்தின்*** வரலாற்று இலக்கிய நாடகமான '***சண்டாளிகா' அகஸ்தியரின் 'அலைகளின் குமுறல்', 'ரஞ்சனி', ;எரிமலை வெடித்த போது', 'கோபுரங்கள் சரிந்தன'*** போன்ற நாடகங்கள் பெரிதும் விதந்து பேசப்பட்டன.

***பேராசிரியர் கணபதிப்பிள்ளை*** எழுதிய '**பொருளோ *பொருள்'*** எனும் நாடகம் 17/01/74 இல் ஒலிப்பரப்பானதென்றும் அதில் தன்னுடன் கா.சிவத்தம்பியும் நடித்தார் என்றும் தனது 'வானொலிக் கால நினைவு கள்' [இருக்கிறம்] தொடரில் கே எஸ் பாலச்சந்திரன் குறிப்பிடுகிறார்

இவர்களை விட ***ஞானசக்தி கந்தையா, விஜயராணி செல் லத்துரை,*** *பாமா ராஜகோபாலன், ஜே.ஜெயமோகன், S.பத்மநாதன், இரா.ஜெகசோதி, எம்.திருநாவுக்கரசு, நெல்லை க.பேரன்,* ***V.N.*** *குக ராஜா,* ***போர்வையூர் ஜிப்ரி, ஆ.கருணைரத்தினம்*** போன்ற பல எழுத்தாளர்களும் வாசகரின் காலத்தில் வானொலி நாடகங்களுக்கு வலுச் சேர்த்தார்கள்.

ஆயினும் சமீபத்திய [2012] தனது 'தினக்குரல்' பேட்டியில் '*சானாவின் பின்னர் வானொலி நாடகம் தயாரித்தவர் எனது நாடகங் களில் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு அதிகமாக இருப்பதாகத் தெரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வித்து அதனை மாற்றி எழுதித்தருமாறு கேட்டுப் பிரதியைத் திருப்பி அனுப்பினார். பேச்சு மொழியை மாற்றிப் போலியான பாத்திரங்களை உருவாக்க நான் விரும்பவில்லை. [அதனால்] அதன் பிறகு வானொலி நாடகங்கள் எழுதுவதை நான் நிறுத்திக் கொண்டேன்'* என எழுத்தாளர் தெணியான் சுட்டுகிற குற்றச் சாட்டானது கே.எம்.வாசகரின் நாடகத் தெரிவு பற்றிய ஒரு கேள்வியை எழுப்புகிறது. அதற்குப் பதிலளிக்கத் தற்போது அவரில்லை. அவரது உழைப்பை உறிஞ்சிய வானொலியும் அவரைப் பற்றிய - அவர் காலத்து நாடக வரலாறு பற்றிய – எவ்விதமான பதிவுகளையும் மீள எடுத்துப் பார்க்க முடியாதவாறு முற்றாகவே அழித் தொழித்துவிட்டது.

என்றோ எழுதிவைத்துத் தப்பிப்பிழைத்த எனது பழைய குறிப் பேடுகளில் இருந்தும் எனது மனப்பதிவுகளில் இருந்தும், கே.எஸ்.பாலச்சந்திரன், எஸ்.ஜேசுரட்னம் போன்ற அவர் காலத்து எழுத் தாள நடிகர்களின் பதிவுகளில் இருந்தும் கே.எம்.வாசகரின் காலப் பகுதி பற்றி என்னால் இவ்வளவேனும் தொகுக்க முடிந்தது.

**70** களில் எழுதியவர்களுள் ***M.அஷ்ரப்கானும்*** நினைவுகூரப்பட வேண்டிய ஒருவர். 60 களில் சானா காலத்திலேயே அவரும் அவரது சகோதரர் ***M.அஸ்வத்கானும்*** தமது பெயர்களைத் தமிழ் நாடக அரங் கில் பதித்துவிட்டார்கள். 'எது தியாகம்?' என்ற நாடகத்துடன் 1958 இல் களமிறங்கியவர் எம்.அஷ்ரப்கான். சாகித்திய வானொலி நாடகப் போட்டியில் அவரது ***'இதயம் வாழ்கிறது'*** எனும் நாடகம் பரிசீட்டியது. சானாவும் முஸ்லீம் நாடகத் தயாரிப்பாளர் குத்தூஸுமாகச் சேர்ந்து வானொலியில் அந்நாடகத்தைத் தயாரித்தளித்தார்கள்.

வெற்றிபெற்ற அஷ்ரப்கானின் ***'ஒரு வீடு கோவிலாகிறது'*** தொடர் நாடகம் **அப்துல் ஹமீட்**டினால் தயாரிக்கப்பட்டது. அவரது ***'அனிச்ச மலர்'*** என்ற தொடர் நாடகமும் அப்துல் ஹமீடினாலேயே தயாரிக்கப் பட்டது. அவரது நாடகத் தயாரிப்பின் சிறப்புக்கு ஓர் உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது அந்நாடகம். தமிழகத்து திரைப்பட நடிகர்களான ஜெமினி கணேசன், ஸ்ரீவித்யா, I.S.R. போன்றோர் இந்நாடகத்தில் முக்கிய பாத்திர மேற்று இலங்கை வானொலி நடிகர்களுடன் இணைந்து நடித்தனர். ஆனாலும் அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கால் பதிக்கவில்லை. தமிழகக் கலையகம் ஒன்றிலேயே வைத்து அவர்களின் வசனப் பகுதிகளை - Voice Cuts – ஆகத் தனியாக ஒலிப்பதிவு செய்து கொணர்ந்து நமது கலைஞர்களின் பங்களிப்புடன் Edit செய்து இணைத்துத் தொகுத்து முழுமையான வடிவத்துடன் நாடகமாக்கி ஒலிபரப்பியமையானது அந்நாளில் வேறெவரும் செய்யாத புதுமையானதும் வித்தியாசமானதுமான ஒரு முயற்சி!

இவற்றைவிட M.அஷ்ரப்கானின் ***'சக்கரங்கள்', 'ஓடம் நதியினிலே', 'அலைகள், உறங்காத உறவுகள்', 'வர்ணமில்லாத வானவில்', 'தாய்மைக்கு என்ன விலை?'*** முதலான தொடர்களும் தேசிய, வர்த்தக சேவைகளில் 70 களில் ஒலிபரப்பாகியுள்ளன. முஸ்லீம் சேவை நாடகங்களைப் பொறுத்தமட்டில் அஷ்ரப்கானின் பங்களிப்பு அளவிடற்கரியது. அச்சேவையில் ஒலிபரப்பான அவரது பத்து வானொலி நாடகங்களின் தொகுப்பு 'முள்' எனும் மகுடத்துடன் நூலுருவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 களில் இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள்

1979 இல் கே.எம்.வாசகர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பயிற்சி நிலைய ஒழுங்கமைப்பாளராகப் [Organizer] பதவி உயர்வு பெற்றுச்செல்ல ஆர்வமுள்ள இளைஞரான **பி.விக்னேஸ்வரனின்** கைகளில் நாடகத் தயாரிப்பு ஒப்படைக்கப்பட்டது. 1970 இல் ஓர் ஒலிப்பதிவு உதவியாளராக இலங்கை வானொலியில் காலடி பதித்த P. விக்னேஸ்வரன் பின்னர் வர்த்தக சேவை நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பரீட்சார்த்த நாடகத் தயாரிப்பாளராகவும் சிலகாலம் இருந்த அனுபவம் அவருக்குக் கை கொடுத்தது. நாடகம் பற்றிய தெளிவான சிந்தனை கொண்டவரான விக்னேஸ்வரன் மிகக் குறுகிய காலமே நாடகத் தயாரிப்பாளராகப் பணியாற்றியபோதிலும் காத்திரமான பல நாடகங்கள் அவரது காலத்தில் ஒலிபரப்பாயின.

தம்மால் தயாரிக்கப்பட்ட நாடகங்களுள் தரமானவற்றைத் தெரிந்து வானொலி நிலைய ஒலிப்பேழைக் காப்பகத்தில் அவர் களஞ்சியப் படுத்தியுள்ளார். அவரை முன்னுதாரணமாகக் கொண்டு அவர் பின் வந்தவர்கள் அக்கைங்கரியத்தைத் தொடராதது இலங்கைத் தமிழ் வானொலி நாடகத் துறைக்குப் பேரிழப்பாகும். பழையனவற்றைப் பேணாதது மட்டுமின்றி ஒலிப்பதிவாகி இருந்தவற்றையும் முற்றாக அழித்து அதன் சுவடுகளே இல்லாமற் செய்துவிட்ட மகானுபாவர்களை என்னென்பது?

விக்னேஸ்வரனால் அவ்வாறாகக் களஞ்சியப் படுத்தப்பட்ட நாடகங்கள் - ***பாலேந்திராவின் 'கண்ணாடி வார்ப்புகள்', செங்கை ஆழியானின் 'பாலையில் பூக்கும் மலர்கள்', ஞானசக்தி கந்தையாவின் 'பட்டங்கள் தாமாகப் பறப்பதில்லை', ஜீ.பி.வேதநாயகத்தின் 'நினைவுகள் சாவதில்லை', ஜே.ஜெயமோகனின் 'கற்பனைகள் கலைவதில்லை', மு.கனகராசனின் 'அவளுக்கு***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வேலை வந்த போது', எம்.திருநாவுக்கரசின் 'சோகங்கள் வெல்லப் படும்', இ. இரத்தினத்தின் 'ஒத்தெல்லோ', 'இன்ஸ்பெக்டர் துரை',* மற்றும் ***பி.விக்னேஸ்வரனின் 'பலவீனம்'*** ஆகிய பத்து நாடகங் களுமாம். மேற்குறிப்பிட்ட நாடக எழுத்தாளர்களை விட S. ***அகஸ்தியர், இளங்கீரன், எஸ்.எஸ்.கணேசபிள்ளை, அஷ்ரப்கான், தி.வ. அரிய ரத்தினம், விஜயராணி செல்லத்துரை, பா.சத்தியசீலன், நெல்லை க.பேரன்*** முதலான ஏற்கெனவே அறிமுகமான எழுத்தாளர்களினதும் ***அராலியூர் சுந்தரம்பிள்ளை, செ.குணரத்தினம், நாகேசு தர்மலிங் கம், கே.ரி.சிவகுருநாதன், சாரதா சண்முகநாதன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், த. ர'.பேல், எஸ்.சண்முகம்*** போன்ற புதிய நாடக எழுத்தாளர்களினதும் நாடகங்கள் விக்னேஸ்வரனின் தயா ரிப்பில் ஒலிபரப்பாயின.

அக்காலகட்டத்தில் திரைப்படக் கூட்டுத் தாபனத்தால் நடாத்தப் பட்ட திரைப்பட எழுத்துப் போட்டியில் முதற் பரிசீட்டியவரான P.விக்னேஸ்வரன் இலங்கையில் முதன்முதலாகத் தொலைக் காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டபோது 1982 இல் அதில் தமிழ்ப் பகுதி நிகழ்ச் சித் தயா ரிப்பாளராகப் பதவியேற்றுச் செல்ல நேரிட்டது. தமிழில் சின்னத் திரை நாடகத் தயாரிப்பில் இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து முத்திரை பதித்தவர் பி.விக்னேஸ்வரன்.

விக்னேஸ்வரன் ரூபவாஹினியுடன் சங்கமமான பின் இலங்கை வானொலியில் செய்தி வாசிப்பாளராகவும் நடிகராகவும் இருந்த **ஜோர்ஜ் சந்திரசேகரன்** நாடகத் தயாரிப்பாளரானார். கொழும்பில் கல்வி பயின்று கொழும்புப் பிரதேசத்தைக் களமாகக் கொண்ட சிறு கதைகளையும் 'செய்தி' இதழில் 'பொம்மலாட்டம்' எனும் ஒரு தொடர் நாவலையும் எழுதித் தரமான ஒரு எழுத்தாளனாக அறியப்பட்டவர் ஜோர்ஜ் சந்திரசேகரன். சானாவைப் போலவே ஓவியத் துறையிலும் ஈடுபாடு கொண்டவர் ஜோர்ஜ். கா.சிவத்தம்பியின் இளைஞர் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இலங்கை வானொலியுடன் பரிச்சயம் கொண்டு பத்து ஆண்டு களுக்கும் மேலாக ஒரு வானொலி நடிகனாகவும் இருந்தமையால் ஜோர்ஜ் வானொலியின் நுட்பங்களையும் சாதக பாதகங்களையும் புரிந்து கொண்டவராக இருந்தார். அவரது கட்டுப்பாட்டின் கீழ் சுமாராக ஒரு தசாப்த காலம் இலங்கை வானொலித் தமிழ் நாடகத் துறை பல ஏற்ற இறக்கங்களுக்கூடாகப் பயணித்தது.

80 களின் ஆரம்பத்தில் நடாத்தப்பட்ட வானொலி நாடக எழுத்துப் போட்டியில் ***பாமா ராஜேந்திரன்*** எழுதிய '***பந்தம்***' என்ற நாடகம் முதற் பரிசீட்டியது. இலங்கையர்கோனின் மகளான ***ஜனகமகள் சிவஞானம்***, மற்றும் ***ஞானசக்தி கந்தையா, இந்து மகேஷ்*** போன்ற வர்கள் எழுதிய தரமான நாடகங்கள் பல 1982 - 1984 காலப் பகுதியில் ஒலிபரப்பாகி நேயர்களின் அபிமானத்தை வென்றன. யாழ் மக்களின் வாழ்வியல் பிரச்சனைகளை, சிறப்பாகப் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை உணர்வுபூர்வமாக, இரத்தமும் சதையுமாக அவர்களின் நாடகங்கள் வடித்துத் தந்தன.

1980 இல் வானொலி நாடகங்களை எழுத ஆரம்பித்தவர் ***அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை***. அவரது நாடக ஆக்கங்களுக்கு அதிக ளவு களமமைத்துக் கொடுத்தவர் ஜோர்ஜ் என்றே கூறலாம். அவரது கால கட்டத்தில் அதிகளவான நாடகங்களை எழுதிக் குவித்தவரும் அவரே. 2005 வரையான 25 ஆண்டுகளில் 400 மட்டிலான நாடகங்கள் எழுதி தள்ளியதாக அவர் தமது நூல் முகவுரை ஒன்றில் குறிப்பிடுகிறார். ஆயினும் அவரது அரை மணி நேர நாடகங்கள் குறிப்பிட்ட கால இடை வெளியில் நூறு மட்டில்தாம் என்பதுதான் எமது கணிப்பு!

அராலியூராரின் நாடகங்கள் பெரும்பாலும் 'அன்றாடக் குடும்ப நிகழ்வுகளை சமகாலப் பின்னணியில் மெல்லிய எள்ளலுடன் நாசூக் காகக் கூறுவன. அவரது நாடகங்களில் சம்பவக் கோவைகளை விட உரையாடல்கள் முக்கியத்துவம் பெறுவது வழக்கம். நீளமில்லாத சின் னச் சின்ன உரையாடல்கள் மூலம் நாடகத்தை நகர்த்திக் செல்லும் அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரது உத்தியானது வானொலிக்குப் பொருத்தமானதாக அமைந்ததால் நீண்ட காலம் அவரையும் அது தக்கவைத்துக் கொண்டது.

1996 இல் இடம்பெற்ற வானொலி நாடக எழுத்துப் போட்டியில் அவரது '***கல்வியா - கனடா கல்யாணமா?***' என்ற நாடகம் மூன்றாவது பரிசையும் 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடகப் போட்டியில் அவரது '***தனிக் குடித்தனம்***' என்ற நாடகம் முதலாவது பரிசையும் தட்டிக் கொண்டன. 80 களில் அவரெழுதிய 'வெள்ளம்' எனும் நாடகம் பலராலும் சிலாகிக்கப்பட்டு பல தடவைகள் மறு ஒலிபரப்பும் செய்யப்பட்டது. 2005 இல் 'இமயம்' என்ற அவரது நாடகத் தொகுப்பு நூலுக்குச் சாகித்ய மண் டலப் பரிசும் சித்தித்தது.

80 களின் ஆரம்ப ஆண்டுகளில் ***அ. பாலமனோகரன், கலை நேசன் சிவம், N. யோகேந்திரநாதன், A.V. ராஜகுலசிங்கம்*** ஆகியோ ருடன் ***எஸ்.எஸ்.கணேசபிள்ளை, எஸ்.ஜேசுரட்னம்*** ஆகியோரின் பங்க ளிப்பும் தமிழ் வானொலி நாடகங்களைப் போஷித்தது.

82 இல் ***தி.வ.அறியரத்தினத்தின்*** '***வேரில்லா விருட்ஷங்கள்***' எனும் தொடரும் 83 இல் ***ஞானசக்தி கந்தையா***வின் '***இதய சங்கமம்***' தொடரும் S.K. ***அமிர்தஞானத்தின்*** '***வீடே நாடகம்***' தொடரும் தேசிய சேவையில் [சேவை - 1 இல்] வலம் வந்தன.

1983 இல் இலங்கையில் ஏற்பட்ட ஆடிக் கலவரமானது வானொலி நாடகத்துறையையும் ஆட்டம்காண வைத்துவிட்டது. அதுகாலவரை எழுதிக் கொண்டிருந்த எழுத்தாளர்கள் பலரும் காணாமல் போய்விட புதிய எழுத்தாளர்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய தேவைக்கு ஜோர்ஜ் தள்ளப்பட்டார். இடையில் சில காலம் தடைப்பட்டிருந்த வானொலி நிகழ்ச்சிகள் படிப்படியாக மீண்டும் வழமைக்குத் திரும்ப, மறு ஒலிபரப்புகளால் ஒப்பேறிக்கொண்டிருந்த நாடக அரங்கம் 1987 மட்டில் மீண்டும் புத்துயிர் பெற்றபோது அதற்கு உத்வேகமளிக்க அராலியூராருடன் திருமலையில் இருந்து லீலா ஜெயரட்னம் என்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஜெயலீலா*வும் சானா காலத்தைய மூத்த எழுத்தாளரான ***பாலாம் பிகை நடராஜா***வும் கூட்டுச் சேர்ந்தனர்.

ஜெயலீலா, பாலாம்பிகை நடராஜா இருவருமே நாடக எழுத்தைப் பொறுத்த மட்டில் கொஞ்சம் பழைமைவாதிகள். ஆரம்பகால சினிமாத் தமிழில் [ஓ ஹென்றி வகைத்தான] திடீர்த் திருப்பங்கள் கொண்ட கற்பனாவாதக் கருப்பொருளைக் கொண்ட நாடகங்களை எழுதுபவர் கள். ஜோர்ஜ் பணியாற்றிய 1982 – 1993 வரையான காலப் பகுதியில் அராலியூராருட்பட இம் மூவரும் தலா 20 க்கும் மேற்பட்ட அரை மணி நேர நாடகங்களை எழுதியிருந்தார்கள் 'அவர்கள் படித்தவர்கள்' எனும் சமூக நாடகத்துடன் தனது வானொலி நாடக எழுத்துப் பணியை 1987 இல் ஆரம்பித்தவர் ***'அகளங்கன்'*** *எனும்* ***நா.தர்மராசா***. 1987 – 1992 க்கு இடைப்பட்ட ஆறு ஆண்டுகளில் ஆறு அரை மணி நேர நாடகங்களை அவர் வானொலிக்கு எழுதியிருந்தார்.

இவர்களைவிட, ***கே.கே.மதிவதனன், N.உதயகுமார், R.பகவான், குயின்ரஸ் ஜீவன், P .சந்தனம்*** எனப் புதிதாகச் சில எழுத்தாளர்கள் உதயமாகி இருந்தனர். இவர்களுள் முதற் குறிப்பிட்ட இருவரைத் தவிர ஏனையோர் ஜோர்ஜ் இளைப்பாறியவுடன் தாமும் எழுத்துக்கு முழுக் குப் போட்டுவிட்டனர். என்ன காரணமோ தெரியவில்லை!

***S.S.கணேசபிள்ளை, எஸ்.ஜேசுரட்ணம், கே.எஸ்.பாலச்சந்திரன், பா.சத்தியசீலன், தி.வ.அரியரத்தினம், P.V.ராஜகுலசிங்கம்*** போன் றோர் அவ்வப்போது தொட்டுக்கொள்ளும் ஊறுகாயைப் போல அருந்த லாக ஒரு சில நாடகங்களை எழுதியிருந்தார்கள். ஜோர்ஜின் காலத் தில் வானொலி நடிகர்களாகவும் இருந்த ***அருணா செல்லத் துரை, நாகேசு தர்மலிங்கம், V,N,S..உதயசந்திரன், பிராங் புஷ்பநாயகம், பிலிப்ஸ் ஜெகநாதன், K.T. சிவகுருநாதன்*** போன்றோரும் சில நாட கங்கள் எழுதிப் பங்களிப்புச் செய்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பீட்டளவில் சிறுகதையைவிட நாடக ஆக்கத்தில் பெண்களின் பங்களிப்பு கூடுதலானதாகவே தெரிகிறது. ***ஜெயலீலா, பாலாம்பிகை நடராஜா*** உட்பட ***'ஷிவானி', விஜயராணி செல்லத்துரை, வதனி ஆனந்தமூர்த்தி, ஆனந்தக்கிளி ஆறுமுகம், உமா ராஜநாயகம், விக்னா செல்வநாயகம் சாவித்திரி அத்துவிதானந்தம், மாலினி சுப்ரமணியம், சதாயினி நாகலிங்கம், வினோதினி துரைராஜா, பாமா இதயகுமார், சித்ராஞ்சனி தாமோதரம்பிள்ளை, யோகேஸ் கணேசலிங்கம், கோவை ஜெயந்தி , A.நாகேஸ்வரி, மங்களேஸ்வரி நமசிவாயம்*** என ஒரு 18 பெண் எழுத்தாளர்களின் நாடகங்கள் ஜோர்ஜின் தயாரிப்பில் ஒலிபரப்பாகி உள்ளன. ஆனால் இவர்களுள் ஓரிருவர் தவிர ஏனையோர் ஓரிரு நாட கங்கள் எழுதித் தமது பெயரை வானொலியில் கேட்டதுடன் திருப்தியுற்று தமது மன வெளிப்பாடுகளு டன் சேர்த்து பேனா மூடிகளையும் இறுக மூடிக்கொண்டு விட்டனர்!

ஆண் எழுத்தாளர்களிலும் ஓரிரு நாடகங்களுடன் ஓய்ந்துவிட்ட வர்கள் என ஒரு 15 பேரைச் சொல்லலாம். ***S. இளையதம்பி, P.வாகீசன், N.யோகேந்திரநாதன், சோ.பத்மநாதன், ப.ரா.சின்னத்தம்பி, A.V.சொர்ணலிங்கம், K..சொக்கலிங்கம், K.C.பாலேந்திரா, S.லோக ராஜா, புத்தூர் T.யோகராசா, M.V. தவராசா, P.சுந்தரம், M.முத்துக் குமார், H.R. ரவீந்திரன், தட்ஷிணாமூர்த்தி குகன்*** என நீள்வது அவர் களின் பட்டியல். ஜோர்ஜின் நாடகத் தயாரிப்புக் காலத்தில் அறிமுக மானவர்களுள் ***எஸ். அம்பலவாணர்*** மட்டும் சளைக்காது தொடர்ந் தும் நாடகங்கள் எழுதிக் கொண்டிருக்கும் ஒருவர் எனச் சொல்லலாம்.

83 இல் '***பிரமைகள்***', 84 இல் '***உறவுகள்***' என இரு நாடகங்களை மட்டுமே எழுதியபோதிலும் தமது வித்தியாசமான அணுகுமுறையால், அந் நாடகங்களின் கருப்பொருளை உளவியல் ரீதியாகக் கையாண்ட நேர்த்தியால் குறிப்பிடத்தக்க வானொலி நாடக எழுத்தாளராகச் சுட்டிக் காட்டப்படவேண்டியவர் '***ஷிவானி*** என்கிற ***சியாமளா சிவகுரு*** **நாதன்**.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷிவானியின் அவ்விரு நாடகங்களுட்பட ***ஞானசக்தி கந்தையாவின் 'வேலி', 'சிலந்திவலைப் பின்னல்கள்', 'புழுதிப் பூக்கள்', ஒரு மணி நேர நாடகங்களான N யோகேந்திரநாதனின் 'காட்டு நிலா', பா.சத்தியசீலனின் 'அதுவும் கௌரவம் தான்'*** *மற்றும்* ***பாலமனோகரனின் 'தம்பளப் பூச்சிகள்', பாமா ராஜேந்திரனின் 'தனி மரம்', வாகீசனின் 'தீராத செலவுகள்', அராலியூராரின் 'ஓர் இரவு', 'உதிர் பூக்கள்', 'வெள்ளம்', எஸ்.ஜேசுரத்தினத்தின் 'வெனீஸ் வர்த்தகன்', 'ஜூலியஸ் சீசர்'*** என்பன ஜோர்ஜின் ஆரம்ப காலத் தயாரிப்புகளில் குறிப்பிடத்தக்கன. அந்த 80 களின் ஆரம்பத்தில் ஷேக்ஸ்பியரின் ***'ரோமியோ ஜூலியட்' சில்லையூர் செல்வராஜனின்*** கைவண்ணத்தில் தமிழுருப் பெற்று ***B.H.அப்துல்ஹமீட்***டினால் தயாரிக்கப்பட்ட சிறப்பான ஒரு நாடகம்.

***கே.எஸ்.பாலச்சந்திரனின் 'கிராமத்துக்கு கனவுகள்', 'வாத்தியார் வீட்டில்'***, பல எழுத்தாளர்களின் கூட்டு *முயற்சியான* ***'புதியதோர் உலகம் செய்வோம்'*** என்பன 88, 89 களில் ஒலிபரப்பான தொடர் நாடகங்களுள் குறிப்பிடத் தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1990 -2001 இல் இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள்

**90**களின் ஆரம்பத்தில் ***R. சிவலோகநாயகியின் 'விழுதுகள்', பில்ப்ஸ் ஜெகநாதனின் 'அலைகடல் ஓடங்கள்', சி. சண்முகத்தின் 'வாழப் பிறந்தவர்கள்',*** *மற்றும்* ***கே. ஞானசேகரத்தின் 'இதுதான் விதியா?', 'விதியா மதியா?' 'பாதைகள் முடிவதெங்கே?'*** முதலான தொடர் நாடகங்களும் சேவை - 1 இல் ஒலிபரப்பாயின. 'விதியா மதியா?' 128 வாரங்கள் வரை தொடர்ந்தது.

முரண்பாடான பாத்திரங்களின் உணர்ச்சி வெளிப்பாடுகளால் தோன்றும் போராட்டங்களை முதன்மைப்படுத்தி ஆவலைத் தூண்டும் வகையில் நகர்த்தப்பட்ட 'பாதைகள் முடிவதெங்கே?' பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் பாராட்டுகளை பெற்றது. எஸ்.கணேஸ்வரன் தனது பண்பட்ட நடிப்பால் முத்திரை பதித்தார்.

சேவை - 2 [வர்த்தக சேவை] இல் 90 களின் பிற்பாதியில் ***G.P. வேத நாயகத்தின் 'திரைகடல் ஓடும் தேவதைகள்'*** தொடரும் ***அனுஷா மொறாயஸ்*** எழுதிய சில மர்மத் தொடர்களும் ஒலிபரப்பாயின.

80 களின் ஆரம்பத்தில் நல்ல பல எழுத்தாளர்களின் படைப்பு களால் மிடுக்கோடு நடைபயின்ற இலங்கை வானொலி 'நாடக அரங் கம்' 90 களில் தள்ளாட ஆரம்பித்தமைக்கு அரசியலில் ஏற்பட்ட மாற்றங் கள் பிரதான காரணம். ஒருசில எழுத்தாளர்களில் மட்டுமே சார்ந்திரு க்க நேர்ந்தமையால் ஜோர்ஜிடம் ஏற்பட்ட தளர்வும் பிறிதொரு கார ணம். அகளங்கனின் 'அன்றில் பறவைகள்' நாடக நூலுக்கான அணிந் துரையில், *"சீரியஸ்' எழுத்தாளர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் எமது இலக்கிய ஜாம்பவான்களும் வானொலி நாடகங்களின் பக்கம் தலை வைத்தும் படுப்பதில்லை. வானொலி நாடகங்களின் ஆயுட் காலம் 30 அல்லது 45 நிமிடங்களே என்பதால் 'அற்ப ஆயுசுகள்' என்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒதுக்கி விடுகிறார்களோ தெரியவில்லை",* என ஆதங்கப்படுவதில் இருந்து ஜோர்ஜின் விரக்தி மன நிலையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

93 இன் நடுப்பகுதியில் சுகவீனம் காரணமாக ஜோர்ஜ் திடீரென ஓய்வு பெறவும் **S. எழில்வேந்தன்** வசம் இலங்கை வானொலித் தமிழ் நாடகத் தயாரிப்பு ஒப்படைக்கப்பட்டது. மாத இறுதிச் சனிக் கிழமைக ளில் ஒலிபரப்பாகிவந்த 45 நிமிட நாடகங்கள் மூத்த அறிவிப்பாளர்க ளான அப்துல் ஹமீட், ராஜேஸ்வரி சண்முகம் ஆகியோரிடம் ஒப்படைக் கப்பட்டன.

தமிழிலக்கியப் பின்புலம் கொண்ட எழில்வேந்தன் 70 களின் பிற்பகுதியில் 'கிராம சஞ்சிகை' நடிகராக இலங்கை வானொலியில் அறிமுகமாகித் தனது அதீத அக்கறையாலும் ஆர்வத்தாலும் செய்தித் துறை, விளையாட்டுத்துறை, நேர்முக வர்ணனை, சிறுவர் மலர் எனப் பல்வேறு துறைகளிலும் புகுந்து புறப்பட்டுத் தனது ஆற்றலை வெளிப் படுத்தியவர்.

தமது நாடகத் தயாரிப்புக் காலத்தில் தாம் எதிநோக்கிய பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி, 'சரிநிகர்' 11-24/07/1996 இதழில் [வானொலி, நாடகவிழா பற்றிய] ஒரு கட்டுரையில் அவரே எழுதிய தகவல்களைப் பொருத்தம் கருதி இங்கு மீள் பதிவு செய்கிறேன்.

*'வானொலி நாடகக் கலைஞர் தெரிவிற்குத் தோற்றி அதில் சித்தி யடைந்த கலைஞர்கள் மட்டுமே வானொலி நாடகத்தில் பங்குபற்ற முடி யும் என்பதை அனைவரும் அறிவர். இந்த வானொலி நடிகர் தேர்விற்கு ஆர்வத்துடன் வந்து கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர் கள் அனைவரும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது சோபிப்ப தில்லை என்பது வேறு விஷயம். இது தவிர பல்வேறு காரணங்களுக் காக இவர்கள் நாடகங்களில் கலந்துகொள்ளவருவது கிடையாது. காரணங்களோ பல. சிலர் இறந்து விட்டனர். சிலர் புலம்பெயர்ந்து விட்ட னர். சிலர் பட்டியலில் பெயர் இருந்தால் போதுமென்ற எண்ணம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்கள். சிலர் தமது முகவரி மாற்றம் பற்றி அறிவிக்காதவர் கள். ஒரு சிலர் நடிகர் தேர்வில் சிறப்பாகச் செய்திருந்தும் ஒலிப்பதி விற்கு வரும்போது ஒழுங்காக நடிக்காதவர்கள். சிலர் திருமணமானதும் கணவர் அல்லது மனைவியின் வேண்டுகோளின் பேரில் நடிக்காதவர் கள். [கணவனுக்கு அல்லது மனைவிக்குப் பயந்து வந்து நடித்துவிட்டுப் போகின்ற கலைஞர்களும் இருக்கிறார்கள்.]

காதலியாக நடித்ததற்கு அலுவலகத்தில், கூட வேலை செய்யும் நண்பிகள் கண்டித்ததற்காக நடிக்க வராதவர்களும் உள்ளனர். நாடக ஒலிப்பதிவிலிருந்து கிடைக்கும் சன்மானம் 100 /- ரூபாவிற்கும் மேலதிக மாக சன்மானம் கிடைக்கும் ஒரு நிகழ்ச்சி/ வேலை வந்துவிட்டால் நாடக ஒலிப்பதிவிற்கு வராத கலைஞர்களும் உள்ளனர். நாடக ஒப்பந்தப் பத்திரம் தபாலில் வந்து சேரவில்லை என்று [சாட்டுக் கூறி] வராத கலைஞர்களும் உள்ளனர். வேறு வேலை காரணமாக வரமுடியாவிட் டால் தபால் திணைக் களத்தைக் குறைகூறுபவர்களும் உள்ளனர். இது தவிர தனது சுகவீனம், குடும்ப அங்கத்தவர் சுகவீனம், திருமண வீடு, மரண வீடு, என்பவை காரணமாக வராத கலைஞர்களும் உள்ளனர்.

இப்படி ஆயிரம் காரணங்கள். இதைத் தவிர வானொலி நாடகத் தயாரிப்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியத்தைப் பற்றியும் கூறவேண்டி யுள்ளது. அரை மணி நேர நாடகத் தயாரிப்பிற்கு மொத்தமாக 1050 /- ரூபா மட்டுமே எம்மால் செலவிட முடியும். நாடகப்பிரதி எழுத்தாள ருக்கு அதிகபட்சம் 450 /-ரூபா. கலைஞர் சன்மானம் ஆகக்கூடியது 6 கலைஞர்களுக்கு ஆளுக்கு 100 /- ரூபா வீதம் 600 /- ரூபா. மொத்தம் 1050 /- ரூபா. தற்செயலாக ஒரு நாடகத்தில் 8 பாத்திரங்கள் வந்துவிட்டால் இரண்டு நடிகர்கள் இலவசமாக நடிக்க வேண்டும்.

அடுத்து நாடக ஒலிப்பதிவுக்கான கால அவகாசம். அரை மணி நேர நாடக ஒலிப்பதிவிற்கு 2 மணித்தியால கலையக நேரமும் ஒத்திகை நேரமும் கிடைக்கிறது. இந்த 4 மணி நேரத்தினுள் நாடகப் பிரதி இரு தடவைகள் ஒத்திகை பார்க்கப்பட்டு ஒலிப்பதிவு நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உண்மையில் பல்வேறு காரணங்களால் இந்த 4 மணி நேரத்தையும் ஒழுங்காகப் பயன்படுத்த முடிவதில்லை. இவற்றுக்கும் பல காரணங் கள். ஒத்திகைக்கு கலைஞர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் வந்து சேர்வதில்லை. கலைஞர் ஒருவர் வருவாரா மாட்டாரா என்று தயாரிப் பாளர் நிலையத்தின் வாசலுக்கும் ஒத்திகைக் கூடத்துக்குமிடையில் ஒருவித அந்தரத்துடன் அலைவதை நீங்கள் நாடக ஒலிப்பதிவு நாட்க ளில் காணலாம். எப்படியும் இந்த இரண்டு மணி நேரத்தில் ஒரு மணி நேரம் உபயோகிக்கப்பட்டாலே பெருங்காரியம்.*

*இழந்த ஒரு மணி நேரத்திற்காக ஒலிப்பதிவு நேரத்தில் கொஞ்ச நேரத்தை எடுத்துக் கொள்ளவேண்டியேற்படும். அவ்வாறான வேளை களில் ஒலிப்பதிவு நேரம் குறைந்துவிடும். மீண்டும் அந்தரப்படுவது தயாரிப்பாளரே. இதைத் தவிர கலையக வசதிகள், இயந்திரக் கோளா றுகள் என்று வேறு சிக்கல்களும் வருவதுண்டு.*

*இத்தகைய பல்வேறு சிக்கல்களின் மத்தியில் ஒரு நாடகம் தயாரிக்கப்படுவதை, அரை மணி நேரமோ முக்கால் மணி நேரமோ நாடகத்தை உட்கார்ந்து கேட்கும் ஒருவர் அறிந்திருக்கமாட்டார்தான். [ஆயினும்] ஒரு வானொலி நாடகத் தயாரிப்பாளன் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் இவை என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.'* எனும் எழில்வேந்தனின் விளக்கம் அந்நாளையத் தமிழ் வானொலி நாடக உலகின் கையறு நிலையைத் தெற்றெனப் புலப் படுத்தும்.

ஏற்கெனவே குறிப்பிட்டது போல நல்ல எழுத்தாளர்கள் பலரும் ஓய்ந்து போன காலம்; சன்மானத் தொகையோ மிக அற்பமானது; நடிகர்களுக்கும் பெருந் தட்டுப்பாடு. புலம்பெயர்வினால் பலரும் இடம் மாறி விட்டதால் சுறுசுறுப்பும் செயற்றிறனும் ஈடுபாடும் மிக்க எழிலுக் குச் சோதனையான காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் ***அராலியூரார், ஜெயலிலா, என்.உதயகுமார்*** ஆகி யோரை விட மட்டக்களப்பில் இருந்து ***செ.குணரெத்தினமும்*** இக் கால கட்டத்தில் தொடர்ந்து எழுத ஆரம்பித்திருந்தார். சிறிது கால இடை வெளியின் பின் ***அஷ்ரப்கானும்*** களத்தில் குதித்திருந்தார். ***அகளங் கன், செ. .நடராசா, பி.சிவபாலன்*** போன்றோரும் முண்டு கொடுக்க முதலுக்கு மோசமில்லாமல் எழிலால் ஒப்பேற்ற முடிந்தது.

மூன்று 45 நிமிட நாடகங்கள் [அப்துல் ஹமீட்டினால் தயாரிக்கப் பட்டவை] உட்பட மொத்தமாக 10 நாடகங்களை எழுதி, தமிழ் வானொலி நாடக உலகில் ***G.P.வேதநாயகம்*** மீள் பிரவேசம் செய்ததும் இவரது காலத்திலேயே.

96 இல் நடாத்தப்பட்ட மூன்றாவது வானொலி நாடகப் போட்டியில் ***கே.கே.மதிவதனன், எஸ்.எஸ்.கணேசபிள்ளை, அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை*** ஆகியோர் முதன் மூன்று பரிசுகளைச் சுவீகரித்துக் கொண்டனர்.

21 வயதுக்குக் குறைந்தவர்கள் சிறுநீரக தானம் செய்ய முடியா தென்பது பொது விதி. ஆனால் சிறுவன் ஒருவன் மற்றொரு சிறுவனுக் குத் தனது 'கிட்னி'யைத் தானஞ் செய்வதைக் கருவாகக் கொண்ட ***'மனிதனும் தெய்வமாகலாம்'*** எனும் நாடகத்துக்கு முதற் பரிசு வழங்கிய நடுவர்களின் அறியாமை கேள்விக்குள்ளாக்கப்படாதது ஆச்ச ரியமே! நடுவர்கள் கூட நிலை தடுமாறலாம்; ஊரபிமானம் அவர்களது கண்களையும் கூடக் கட்டிவிடலாம் - என்பதற்குச் சான்றாக அத்தீர்ப்பு அமைந்துவிட்டது.

நீண்டகாலமாக வானொலி உலகுக்குச் சேவையாற்றிய 'வரணியூரான்' எஸ்.எஸ்.கணேசபிள்ளை முதன்முறையாக 2 ஆம் பரிசும் பாராட்டும் பெற்றது இம்முறைதான். ஆனால் அப்பாராட் டையோ பரிசையோ பெற அவர் கொடுத்து வைக்கவில்லை. காலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைக் காவு கொண்டுவிட்டான். '***குருவிக்கூடு***' அவர் எழுதிய கடைசி நாடகம்.

பரிசுபெறாத போதிலும் ***பளையூர் சுந்தரம்பிள்ளை*** எழுதிய '***துறவு***' என்ற நாடகமும் அமுதன் என்ற புனைபெயரில் ***G.P.வேத நாயகம்*** எழுதிய '***பூக்களைப் பறிக்காதீர்கள்***' என்ற நாடகமும் நேயர்களின் பாராட்டுகளைப் பெற்றன. எழில் பணிபுரிந்த காலத்தை 'மறு ஒலிபரப்புக் காலம்' என்றும் சொல்லலாம். அந்தளவுக்குப் பிரதித் தட்டுப்பாடு போலும். ஆயினும் 1996 ஆம் ஆண்டின் சிறந்த வானொலி நாடகத் தயாரிப்பாளருக்கான உண்டா விருது அவருக்கு வழங்கப் பட்டது ஆறுதலான ஒரு விடயம்தான்.

96 இல் எழில்வேந்தன் சக்தியுடன் சங்கமிக்க இலங்கை வானொலி நாடகப் பொறுப்பு **ராஜபுத்திரன் யோகராஜன்** வசமானது. ஒரு தொழில் நுட்ப உதவியாளனாக, வானொலி நடிகனாகச் சில ஆண் டுகள் பெற்ற அனுபவத்தினால் அதன் நெளிவு சுழிவுகளைத் தெரிந்து வைத்திருந்த ஆர்.யோகராஜன் பழகுவதற்கு இனியவராக நடிகர்களை அனுசரித்து அரவணைத்து வேலை வாங்குவதில் சமர்த்தராக விளங்கி னார். அவரது Knack கான, நாசூக்கான அணுகுமுறையானது நாடக அரங் கைத் தளம்பல் இல்லாமல் கொண்டு நடாத்த உறுதுணை புரிந்தது. 96 முதல் 2001 இன் இறுதிவரையான காலப் பரப்பில் அவரது தயாரிப்பில் சுமார் 160 – 30 நிமிட /45 நிமிட நாடகங்கள் மட்டில் தயாரிக்கப்பட்டன

இவற்றுள் 33 நாடகங்களை ***அராலியூராரும்*** 13 நாடகங்களை ***செ.குணரெத்தினமும்*** 12 நாடகங்களை ***G.P. வேதநாயகமும்,*** ஐவை ந்து நாடகங்களை ***அஷ்ரப்கானும் அருணா செல்லத்துரையும் K.T.சிவகுருநாதனும்*** எழுதியிருந்தார்கள். ***இ.முருகையன், பா.சத் தியசீலன், அகளங்கன், தா.பி.சுப்ரமணியம், சித்தி அமரசிங்கம், செவ்வந்தி மகாலிங்கம், செ. நடராசா*** போன்ற மூத்த எழுத்தாளர் களும் ***பேராதனை A.A. ஜுனைதீன், சோ.ராமேஸ்வரன், பா.சிவபாலன், S.அம்பலவாணர், பளையூர் சுந்தரம்பிள்ளை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற இளையவர்களும் R.யோகராஜனின் தயாரிப்பில் கணிச மான பங்களிப்புச் செய்தனர்.

சித்ராஞ்சனி தாமோதரம்பிள்ளை ***சித்ராஞ்சனி தேவதாசன்*** ஆகி மீண்டும் நாடக எழுத்தில் கால் பதித்தார். அவருட்பட R.யோகராஜ னின் தயாரிப்பில் வானொலி நாடகங்களுக்குப் புது ரத்தம் பாய்ச்சப் புறப்பட்ட புதியவர்களான ***ஆனந்தராணி நாகேந்திரன், M.மாசிலா மணி, எஸ்.எஸ்.வேதவனம், S.P.டக்ளஸ், R.T.டக்ளஸ்*** எனும் ஒவ்வொரு வரும் தலா ஏழுக்கும் குறையாத நாடகங்களை எழுதி வளம் சேர்த்தனர்.

வானொலி நடிகர்களாகவும் இருந்து நாடகமும் எழுதிய, ***K.ஞானசேகரம், S. செல்வசேகரம், 'சோக்கல்லோ' சண்முகநாதன், M.ரவீந்திரன்*** போன்ற உள்வீட்டுப் பிள்ளைகளின் பங்களிப்பு குறிப் பிடும் படியாக இல்லை!.

ஜோர்ஜின் காலத்தில் எழுதிய ***விஜயராணி செல்லத்துரை***யும் ***ஆனந்தக்கிளி தேவகுமாரும் S.இளையதம்பி***யும் மீண்டும் இக் காலத் தில் வானொலி நாடக உலகில் பிரவேசித்தனர். ***யோகேஸ்வரி சிவப்பிரகாசம், ராசநாயகம் ராகுலநாயகி, S. சிவகுருநாதன், S.சண் முகவடிவேல், தும்பளையூர் பி.வேதநாயகம், S.சிவராஜா, உசனார் சலீம்*** எனப் புதிதாக எழுதப் புறப்பட்ட சிலர் ஓரிரு பிரதிகளுடன் திருப் திப்பட்டு வானொலிக்கு எழுதுவதை நிறுத்திக்கொண்டு விட்டார்கள்.

2000 ஆம் ஆண்டின்பின் ***-அற்புதராணி காசிலிங்கம், எம்.இந்திராணி, திருமலை மலர்ராஜன், கே.சிவகடாட்சம்பிள்ளை, R.ராஜபாண்டியன், பாரதிகென்னடி, எஸ்.தியாகராஜா, செல்லையா குமாரசாமி, V.ரவீந்திரமூர்த்தி, எஸ்.திருவாகரன், கே.ஸ்ரீஸ்கந்த ராஜா, ஷிபார்டீன் மரிக்கார்*** எனப் புதிதாக நாடகம் எழுதப் புறப் பட்டவர்கள் பலர். நிலைத்து நின்று தமிழ் வானொலி நாடகங்களின் தரத்தை எத்தனை பேர் உயர்த்துவார்கள் என்பதைக் காலம்தான் நிர்ண யிக்கும். ***அற்புதராணி காசிலிங்கம்*** எழுதிய '***கனவுகள் நனவாகும்***'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் 43 அங்கத் தொடராக இக்காலகட்டத்தில் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளது.

**94** இல் ***G.P.வேதநாயகம்*** எழுதி அப்துல் ஹமீட் தயாரித்த 45 நிமிட நாடகங்களான ***'நீயில்லாமல் நானில்லை!', வேஷங்கள் மாறலாம்', 'மீண்டும் ஒரு வசந்தம்'*** முதலியனவும் எழில்வேந்தன் தயாரிப்பில் G.P. வேதநாயகத்தின் எழுத்தில் உருவான ' ***சட்டத்தின் வட்டத்துள்', 'பிழை திருத்தம்'*** என்பனவும் **95** இல் ***'காதலிக்கக் காலமுண்டு', 'கல்யாணக் காலம் வரும் வரை', 'ஏதோ ஒரு மயக்கம்'*** என்பனவும் **96** இல் ***'ஒரு பனிப் போர் முடிவடைகிறது', 'பூக்களைப் பறிக்காதீர்கள்'*** ஆகியனவும் குறிப்பிடத்தக்க நாடகங்கள்.

**96, 97** இல் ***அகளங்கனின் 'கங்கையின் மைந்தன்', 'கூவாத குயில்கள்', S.S. கணேசபிள்ளையின் 'குருவிக் கூடு' செ.குணரத்தினத்தின் 'கண்ணீரும் சோறும்', தா.பி. சுப்ரமணியத்தின் 'தனக்குத் தனக்கென்றால்', சித்தி அமரசிங்கத்தின் 'இராவண தரிசனம்' அருணா செல்லத்துரையின் 'நந்தி உடையார்', G,P.வேத நாயகத்தின் 'விருப்பமில்லாத் திருப்பங்கள்' , 'தாம் தூம் தை தை' செ.நடராசாவின் 'பாரி மகளிர்'*** என்பன நினைவுகூரப்பட வேண்டியன.

**98** இல் ***அகளங்கனின் 'வாலி' இ.முருகையனின் 'வந்தனவா அவை?',*** *99* இல் ***G.P.வேதநாயகத்தின் 'சனிப் பெயர்ச்சி' 2000*** இல் ***செ.குணரெத்தினத்தின் 'பாதுகையே துணை', அராலி யூராரின் 'தனிக் குடித்தனம்' பா.சிவபாலனின் 'நாளை நல்ல நாள்'*** 2001 இல் ***G.P.வேதநாயகத்தின் 'பெண்ணியம்', பளையூர் சுந்தரம் பிள்ளையின் 'அவதந்திரம்', எஸ்.சிவராஜாவின் 'கருகத் திருவுளமோ***?' என்பன தரமான நாடகங்களாக நாடக அபிமானிகளால் கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இ.முருகையன், நீலாவணன், இ.இரத்தினம், சில்லையூர் செல்வராசன், பா. சத்தியசீலன்* போன்றோரின் தரமான பா நாடகங்கள் அவ்வப்போது ஒலிபரப்பாகியுள்ளன. பா நாடகத்தைப் போலவே தாளலய நாடகமும் கவித்துவதுடன் இயைந்த ஒரு புதிய நாடக வடிவம். போர்த்துக்கேயரின் வழியாக சிங்களத்தில் ஊடுருவிப் பின்னர் தமிழிலும் 60 , 70 களில் மவுசு பெற்ற 'பைலா'ப் பாடல்கள் போல சிங்களவர் மத்தியில் பிரபலமாயிருந்த தாளலய நாடக வடிவத்தைத் தமிழிலும் தான் தயாரிப்பாளராக இருந்த காலத்தில் பரீட்சார்த்தமாக ஜோர்ஜ் முயன்று பார்த்துள்ளார். 'தானான்னா தனனானா தன்னன்னா தானனனா' என்பது போல ஒரே லயத்தில் அமைந்த தாளக்கட்டில் தொடர்ச்சியாக எழுதப்படும் உரையாடலை எழுதவும் சரி நடிக்கவும் சரி கொஞ்சம் இசை ஞானம் தேவை.

நான் எழுதிய 'கண்டறியாக் கலியாணம்' எனும் தாளலய நாடகத்தை 1982 இல் 15 நிமிட நாடகமாக ஜோர்ஜ் சந்திரசேகரன் தயாரித்து ஒலிபரப்பினார். பைபிளில் யேசுநாதரால் கூறப்பட்ட ' 'ஊதாரிப் பிள்ளை' உவமைக் கதையை 'மனம் திருந்திய மகன்' எனும் தலைப்பில் நான் தாளலய நாடகமாக எழுத 1998 இல் அது S. கணேஸ்வரனால் தயாரிக்கப்பட்டுக் கல்விச் சேவையில் ஒலிபரப்பப்பட்டது. வேறும் சிலரது தாளலய நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டுள்ளதாக நடிக நண்பர் போல் அன்ரனி கூறி அறிந்து கொண்டேன். சிங்கள நாடகங்களைத் தமிழில் பெயர்த்து ஒலிபரப்புச் செய்யும் முயற்சிகளும் அவ்வப்போது நடைபெற்றதுண்டு. 70, 80 களில் முன்னணி வானொலி நடிகராக வலம் வந்த கோபால் சங்கரும் அக்காலகட்டத்தில் அத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடக அரங்கத்துக்கு அப்பால்...

அரை மணி ஒரு மணி நேர நாடகங்கள் பற்றியும் தேசிய, வர்த்தக சேவைகளில் ஒலிபரப்பான தொடர் நாடகங்கள் பற்றியும் மட்டுமே என்னால் தகவல்கள் பெற முடிந்தது. 15 நிமிட நாடகங்கள் எழுதியவர்களையோ பிற சஞ்சிகை நிகழ்ச்சிகளில் எழுதியவர்களையோ பட்டியலிடுவது சிரமம்.

நாடக நடிகர்களுக்கு மட்டுமல்லாது நாடக எழுத்தாளர்கள் பலருக்கும் அத்திவாரமாக அமைந்தது 'சிறுவர் மலர்' நிகழ்ச்சி. ***பாலாம்பிகை நடராஜாவும் சி.சண்முகமும்*** ஆரம்ப காலத்தில் சிறுவர் மலரிலும் எழுதி முத்திரை பதித்தவர்கள். பாலாம்பிகை நடராஜாவின் ***'பட்டே ஜம்பா', 'தங்கப் பதக்கம்', 'கதகளி ஆராய்ச்சி'*** தொடர்களைக் கேட்டு ரசித்த சிறுவர் சிறுமியர் ஏராளம். சிறுவர் மலர் நடிகர்களைக் கொண்டு அரங்கேற்றப்பட்ட ஒரு சிறுவர் கலைவிழாவில் [1957இல்] சி.சண்முகம் எழுதிய 'தேள் கொட்டிய திருடன்' என்ற நாடகத்தில் நடித்தது ஞாபகத்தில் உள்ளது. அந்நாடகப் பிரதியும் நீண்டகாலமாக என் கைவசமிருந்தது. நான் சிறுவர் மலர் நாடகம் எழுத மறைமுகத் தூண்டுகோலாக அது சிலவேளை இருந்திருக்கலாம் போலும்.

ஆசிரியர் வ.இராசையா வானொலி மாமாவாக இருந்த [1978 - 1980] காலகட்டத்தில் 'சிறுவர் மலருக்குச் சில நாடகங்களை எழுதியவர் 'மறைமுதல்வன்' ***G.P. வேதநாயகம்***. அதில் 17 நாடகங்களைத் தொகுத்து 'நாளைய நாயகன்'[2000] எனும் பெயரில் நூலாக்கியுள்ளார். 90 களில் வானொலி மாமாவாக இருந்த ஆசிரியர் ***V.N.S. உதயச்சந்திரனும்*** தமது சிறுவர் மலர் நிகழ்ச்சிக்கெனத் தாமெழுதிய சில நாடகங்களைத் தொகுத்து நூலாக்கியுள்ளார்.

***ஆ. கருணைரத்தினம்*** வானொலி மாமாவாக இருந்தபோது, ,'நானே ராஜா' எனும் நாடகப் பிரதியை எழுதி வானொலிப் பிரவேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர்தான் ***அராலியூர் நா.சுந்தரம்பிள்ளையும்.*** சிறுகதை எழுத்தாளர் ***மா.பாலசிங்கம், மாஸ்டர் சிவலிங்கம், கவிஞர் இ.சிவானந்தன்*** முதலானோரும் சிறுவர்க்கான நாடகங்களை முனைப்புடன் எழுதியோருட் சிலர்.

நகைச்சுவையாக எழுதுவது ஒரு கலை. யாவர்க்கும் அது கைவந்து விடுவதில்லை. ***G.P.வேதநாயகம்*** உட்பட ***ரொசாரியோ பீரிஸ், C..சண்முகம், S.ஜேசுரட்ணம், S.S. கணேசபிள்ளை, ,K.S..பாலச்சந்திரன், எஸ். ராமதாஸ், மஹதி ஹசன் இப்ராஹிம், பௌசுல் அமீர், ராஜா கணேசன், ஸ்ரீதர் பிச்சையப்பா, செ.குணரத்தினம், ரீ.பாக்கியநாயகம், லிங்க வேலாயுதம், சீ.தர்மகுலசிங்கம்*** என ஒரு சிலரே நகைச்சுவையாக எழுதுவதில் கைதேர்ந்தவர்கள். 'மத்தாப்பு'ம் 'கதம்பம்'மும் அவர்களுக்குக் கை கொடுத்த நிகழ்ச்சிகள்.

கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பில் முன்னோடியாகத் திகழ்ந்த பல்துறை மேதை ***வீ.என். பாலசுப்ரமணியம்,*** எழுத்தாளர்கள் ***சு.வேலுப்பிள்ளை, எஸ்.பொன்னுத்துரை மற்றும் எஸ்.ஜேசுரட்ணம், மாஸ்டர் சிவலிங்கம்*** போன்ற பலரும் கிராமிய நாடகங்கள் பலவற்றையும் மண் மணம் கமழ எழுதியவர்கள். 90 களில் ***சுமதி பால ஸ்ரீதரனும் R.யோகராஜனும்*** 'கிராம சஞ்சிகை'க்கு எழுதியும் அதில் நடித்தும் பெயரெடுத்தவர்கள்.

மலையக மக்களின் குரலாக ஒலித்துவரும் 'குன்றின் குரல்' நிகழ்ச்சியில் ***கு.ராமச்சந்திரன், டி.முத்தையா, நிலக்சன் சுவர்ண ராஜா, தக்ஷயாயினி குணரத்தினம், விசு கருணாநிதி*** போன்றோரின் கைவண்ணத்தில் மலைமணம் வீசும் நாடகங்கள் வானலைகளில் வலம் வந்தன.

சானா காலத்து நடிகரும் பிரதி எழுத்தாளருமான அரசரட்ணம் ஐயாத்துரையின் மேற்பார்வையில் இலங்கை வானொலியின் தமிழ்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சேவையானது இயங்கத் தொடங்கிய காலம் தொட்டு அதிலும் நாடகங்கள் ஒலிபரப்பாகி வந்தன. அதில் கல்வி சம்பந்தமான நாடகங்களும் இலக்கிய, வரலாற்று நாடகங்களும் முதன்மை பெற்றன. 90 களில் அறிவிப்பாளரும் நடிகருமான S.கணேஸ்வரன் கல்விச் சேவைக்காக இலக்கிய, வரலாற்று, சமூக நாடகங்கள் பலவற்றைத் தயாரித்து வழங்கினார். அதில் ***பேராதனை ஜுனைதீன், கலாபூஷணம் ஜெக சோதி, நீர்கொழும்பூர் ரட்ணராஜா, பாலாம்பிகை நடராசா*** ஆகியோருடன் ***G.P. வேதநாயகத்தின்*** நாடகப் பிரதிகளும் பெரும் பாலும் இடம்பெற்றன.

***பௌசுல் அமீர், கோப்பாய் சிவம், மாவை வரோதயன், மதுரகவி பாஸ்கரதாஸ், திருக்கோவில் கவியுவன், கோவிலூர் செல்வராஜன், கே. கோவிந்தராஜ், கோகிலா மகேந்திரன்*** என அவ்வப் போது ஏதாவது நிகழ்ச்சியில் ஒலிக்கும் ஏதேனும் நாடகங்களை எழுதிய வர்களாகச் சிலரது பெயர்கள் எனது ஞாபகப் பேழையில் தங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலி எழுத்தாளர்களின் நாடக நூல்கள்

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடக நூல்கள் வெளிவந்துள்ள போதிலும் வானொலி நாடக நூல்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. ஆனால் இலங்கையைப் பொறுத்த மட்டில் 30 க்கும் மேற்பட்ட வானொலி எழுத்தாளர்களின் 50 க்கும் குறையாத நாடக நூல்கள் வெளி வந்துள்ளமையானது எமக்குப் பெருமை சேர்ப்பதே!

இலங்கை நாடக வரலாற்றைப் பொறுத்த மட்டில் சமூக நாடகங்களின் தோற்றப்பாட்டுக்கும் பேச்சு வழக்குத் தமிழின் பயன்பாட்டுக்கும் கால்கோளிட்டவரெனப் பேராசிரியர் ***க.கணபதிப்பிள்ளை****யே* இனம் காணப்படுகிறார்.

*'நாடகம் என்பது உலக இயல்பாய் உள்ளது உள்ளபடி காட்டுவது. ஆகவே, வீட்டிலும் வீதியிலும் பேசுவது போலவே அரங்கிலும் பேசல் வேண்டும்'* எனத் தமது நோக்கைச் செவ்வனே வரையறை செய்து கொண்டவர் அவர்

வானொலிக்கென அவர் நாடகங்கள் எழுதாவிட்டாலும் மேடைக்கென அவர் எழுதிய நாடகங்கள் அவசியமான மாற்றங்களுடன் வானொலியிலும் நடை பயின்றுள்ளன.

அவரால் எழுதப்பட்ட நாடக நூல்களுள் 'உடையார் மிடுக்கு' உட்பட நான்கு நாடகங்களை உள்ளடக்கிய ***'நானாடகம்'*** [1930], மற்றும் 'பொருளோ பொருள்', 'தவறான எண்ணம்' எனும் இரு நாடகங்களை உள்ளடக்கிய ***'இரு நாடகம்'*** [1952] எனும் இரு நூல்களும் சமகால [சமூக] நாடகங்களுக்கு மாதிரிகளாக அமைவன.

இவற்றுள் 'உடையார் மிடுக்கு' 'பொருளோ பொருள்' என்பன வானொலி நாடகங்களாகவும் நடிக்கப்பட்டு ஒலிபரப்பாயின. 'சங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலி' [1953] யும் 'மாணிக்கமாலை' [1952] யும் அவரது குறிப்பிடத் தக்க மற்றுமிரு நாடக நூல்கள்.

ஈழத்துச் சிறுகதையுலகின் பிதாமகராகத் திகழும் ***'இலங்கையர்கோன்'*** செ.சிவஞானசுந்தரம் வானொலிக்கென எழுதி எட்டு வாரங்கள் தொடராக ஒலிபரப்பான ***'மாதவி மடந்தை'*** - இலக்கிய நாடகம், மேடை நாடக நூலாக 1958 இல் வெளியானது. 1957 இல் வெளியிடப்பட்ட அவரது நாடக நூல் ***'மிஸ்டர் குகதாசன்'***. அதுவும் வானொலியில் தொடராக ஒலிபரப்பான நாடகமே!

பிரபல நாடக ஆசானும் நடிகரும் எழுத்தாளருமான 'கலைப் பேரரசு' ***A.T. பொன்னுத்துரை*** சானாவின் 'பதியூர் ராணி' யுட்படப் பல மேடை நாடகங்களில் நடித்தவர். மன்ற நாடகங்களை வானொலியில் 'அரங்கேற்ற' 1967 இல் சானா ஒரு சந்தர்ப்பம் அளித்தார். அதில் கலைப் பேரரரசின் 'இறுதிப் பரிசு' என்ற நாடகம் அவரது குரும்பசிட்டி, சன்மார்க்க நாடக மன்றத்தினரின் நடிப்பில் ஒலிபரப்பானது. அதில் புலவராக கவிஞரும் நடிகருமான வீ.கந்தவனம் நடித்தார். சங்ககால இலக்கியக் கதாபாத்திரமான குமண மன்னனின் உதார குணத்தை விதந்துரைக்கும் நாடகமான ***'இறுதிப் பரிசு'*** அது ஒலிபரப்பான 1967 இலேயே நூலுருப் பெற்றுவிட்டது. ஆயினும் அதுவும் மேடை நாடக வடிவத்திலேயே நூலானது!

1991 இல் வெளியிடப்பட்ட அவரது இன்னொரு நூல் ***'மயில் - இரு நாடகங்கள்'*** என்பது. அதில் ஒன்றான 'தாளக் காவடி'யும் வானொலியில் ஒலிபரப்பான நாடகமே. அது பற்றி நூலாசிரியர், 1972 இல் இலங்கை வானொலி நடாத்திய நாடகப் போட்டியில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டு 1973 ஒக்டோபரில் இரு தடவைகள் ஒலிபரப்பப் பட்ட நாடகமதெனக் குறிப்பிடுகிறார். 'பஞ்ச பூதங்கள்' இவரெழுதி ஒலிபரப்பான மற்றொரு வானொலி நாடகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவோ தெரியவில்லை ஆரம்பகால எழுத்தாளர்கள் பலரும் தமது நாடகங்களை வானொலி நாடக நூல்களாக வெளிக் கொணரக் கொஞ்சம் தயக்கம் காட்டியதாகத் தெரிகிறது.

எஸ்.பொ., இளங்கீரன், நந்தி, கனக செந்திநாதன், சில்லையூர் செல்வராஜன், ச.அம்பிகைபாகன், இ.முருகையன் என நாடறிந்த எழுத் தாளர்கள் பலரும் இப்பட்டியலில் அடங்குவர்.

'***வலை***' எனும் தலைப்பில் **எஸ்.பொ**.வால் வானொலிக்கென எழு தப்பட்ட ஒரு மணி நேர நாடகம் பின்னர் மேடைக்கேற்ப சானாவால் மாற்றியமைக்கப்பட்டு 'சாணக்கியன்' ஆக 1968 இல் மேடையேறியது. 1 972 இல் அது 'வலை' எனும் மகுடத்துடன் மேடை நாடக நூலாக வெளியிடப்பட்டது. எஸ்.பொ.வின் '***முதல் முழக்கம்***' எனும் மற்றொரு வானொலி நாடகமும் நூலுருவானதாக எழுத்தாளர் அன்ரனி ஜீவா குறிப்பிடுகிறார்.

பேராசிரியர் '***நந்தி***'யின் [செ சிவஞானசுந்தரம்] '***குரங்குகள்***' முதலில் சிறுகதையாக வெளியாகிப் பின்னர் வானொலி நாடகமாகி இறுதியில் மேடைக்கான மாற்றங்களுடன் 1975 இல் அச்சு வாகன மேறியது.

பிரபல சிறுகதை எழுத்தாளர் ***கனக செந்திநாதனின்*** '***ஒரு பிடி அரிசி***' யும் அவ்வாறே, சிறுகதை - வானொலி - மேடை என வடிவ மாற்றம் பெற்று 1976 இல் நூலுருப் பெற்றதெனத் தமது 'ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி' எனும் நூலில் நூலாசிரியர் 'சொக்கன்' குறிப்பிடுகிறார்.

'நீதியே நீ கேள்!' எனும் தொடர் நாவலை எழுதி வாசகர்களை வசப்படுத்திய எழுத்தாளர் '***இளங்கீரன்' சு.'.சுபைர்***. 1976 - 1979 காலப் பகுதியில் அவரெழுதி இலங்கை வானொலியில் ஒலிபரப்பான 'மகா கவி பாரதி', 'கவிதை தந்த பரிசு', 'நீதிக்காகச் செய்த அநீதி' எனும் முத்தான மூன்று நாடகங்களின் தொகுப்பு நூல் - '***தடயம்***'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியில் கவிஞர்களின் பங்களிப்புக் கணிசமானதாக இருந் ததெனக் கூறமுடியாது. அவர்கள் சிலரது நாடகங்கள் நூலுருப் பெற்ற போது அவையும் மேடைக்கமைய மாற்றியமைக்கப்பட்டு வெளி யானமையை அவதானிக்க முடிகிறது.

'**அம்பி**'எனப் பலராலும் அறியப்பட்ட கவிஞர் ச.அம்பிகைபாகனின் '***வேதாளம் சொன்ன கதை***' முதலில் மேடை நாடக நூலாக 1970 இல் பிரசுரமாக்கிப் பின் மேடையில் அரங்கேறி அதன் பின் காற்றலைகளிற் கதை சொன்னது. மூன்று கவிதை நாடகங்களை உள்ளடக்கிய அவரது '***அந்தச் சிரிப்பில்*** இடம்பெற்ற யாழ்ப்பாடி' பின்னர் வானொலி மூலம் கவிமழை பொழிந்தது!

'***நீலாவணன் கவிதை நாடகங்கள்***' எனும் நூலில் இடம் பெற்றுள்ள கவிஞர் ***நீலாவணனின்*** நான்கு கவிதை நாடகங்களுள் 'மழைக்கை' மட்டும் வானொலியை ஆரத்தழுவியது.

வானொலிக்கெனப் பல நாடகங்களை எழுதியவர் கவிஞர் ***இ.முருகையன்***. அவரது கவிதை நாடக நூல்களும் சில வெளியாகியுள் ளன. அவற்றுள் 1961 இல் வெளியான '***தரிசனம்***' வானொலியையும் தரிசித்ததாக அறியமுடிகிறது.

ஷேக்ஸ்பியரின் '***ரோமியோ ஜூலியட்***' எனும் நாடகத்தைத் 'தான்தோன்றிக் கவிராயர்' எனும் ***சில்லையூர் செல்வராசன்*** தமிழில் வானொலிக்கெனத் தழுவி எழுதினார். அது1981 இல் அப்துல் ஹமீடின் தயாரிப்பில் வானலைகளில் தவழ்ந்தது. ஆயினும் அதுவும் 1993 இல் நூலுருக் கொண்டபோது மேடை நாடக நூலாகவே வடிவங்கொண்டது!

திரைப்படச் சுவடியாக முதலில் 1971 இல் வெளியான அவரது '***தணியாத தாகம்***' பின்னர் வானொலி நாடகமாக வாராவாரம் வான லைகளை வசப்படுத்தி நேய நெஞ்சங்களை நெக்குருகச் செய்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல வங்கக் கவிஞரும் நாடகாசிரியருமான ரவீந்திரநாத் தாகூர் தாமெழுதிய நாடகங்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் தாமே மொழி பெயர்த்து வெளியிட்டார். அவ்வாறான நாடகங்கள் நான்கை நம் நாட்டு எழுத்தாளர். ***Y. முத்துக்குமாரசாமி 'வேந்தனும் அரசியும்'*** எனும் தலைப்பில் 1973 இல் நூலாக்கி வெளியிட்டுள்ளார். அவற்றுள் 'வேந்தனும் அரசியும்' தவிர மற்றைய மூன்று நாடகங்களுமான 'சித்ரா', 'பலி', 'செவ்வலரிகள்' என்பன முறையே 1961,1962, 1965 ஆம் ஆண்டுகளில் இலங்கை வானொலி[யில்] நாடகங்களாக ஒலிபரப்பாகியுள்ளன.

***'வரணியூரான்' கணேசபிள்ளை***யின் தொடர் நாடகமான ***'அசட்டு மாப்பிளை'*** அது ஒலிபரப்பான 70 களிலேயே சூட்டோடு சூடாக அச்சு வாகனமும் ஏறிவிட்டது. 1975 இல் வர்த்தக சேவையில் அவரது ***'இரை தேடும் பறவைகள்'*** 50 வாரங்கள் தொடராக வலம் வந்தது. 18 ஆண்டுகளின் பின் 1993 இல் 50 அங்கங்களையும் 686 பக்கங்களையும் கொண்ட 'கனமான' ஒரு நூலாக அதை வெளிக் கொணர்ந்து வானொலி நாடக நூலாக்கத்தில் ஒரு சாதனை படைத்தார் வரணியூரான்!

பழம்பெரும் வானொலி எழுத்தாளரான ***பாலாம்பிகை நடராஜா*** பின்னாளில் 90 களில் நாடக எழுத்துலகில் மீள் பிரவேசம் செய்தபோது எழுதிய பதினொரு நாடகங்களின் தொகுப்பு நூல் ***'சலங்கை ஒலி'***.

துறைநீலாவணையைச் சேர்ந்த ***S.முத்துக்குமாரன்*** சானா காலத்து நாடக எழுத்தாளர். 1961-1969 காலப்பகுதியில் புராண, இலக்கிய, ராஜா ராணிப் புனைவு நாடகங்கள் சிலவற்றை அவர் வானொலிக்காக எழுதியிருந்தார். அவற்றுள் 45 நிமிட நாடகம் ஒன்றுடன் 30 நிமிட நாடகங்கள் நான்கும் 15 நிமிட நாடகங்கள் ஐந்தும் என மொத்தம் பத்து நாடகங்களைத் தொகுத்து சுமார் 40 வருடங்களின் பின் 2008 இல் நூலுருவாக்கித் தந்திருக்கிறார். அந் நாடக நூல்தான் ***'வீர வில்லாளி'***!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம் சேவையில் ஆரம்பகாலத்தில் பல நாடகங்களை எழுதி யவரான எழுத்தாளர் ***எஸ். முத்துமீரானின்*** சில நாடகங்களின் தொகுப்பு நூல் '***மானிடம் சாகவில்லை!***' [2001] அதில் இலங்கை வானொலித் தமிழ்ச் சேவைக்காக அவரெழுதி முறையே 1958,1966,1980 களில் ஒலிபரப்பான 'காதலும் கருணையும்', 'வடிகால்', 'மாமன்னன் ஒளரங்கசீப்' முதலான மூன்று நாடகங்களும் இடம்பெற்றுள்ளன.

1980 இல் எழுத ஆரம்பித்துத் தொடர்ந்து 25 ஆண்டுகளுக்கும் மேலாக சளைக்காது எழுதியவர் ***அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை***. அதி களவான வானொலி நாடகங்களை எழுதியவராக அவரது பெயர் முன் னிலைப்படுத்தப்படுவது வழக்கம். 2005 இல் 'இமயம்' எனும் தமது வானொலி நாடகத் தொகுப்பு நூலுக்காக இலங்கை சாகித்ய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொண்டவர் அவர்.

***கெட்டிக்காரர்கள்***', '***முதலாம் பிள்ளை***', '***வீடு***' , '***எங்கள் நாடு***', '***யாழ்ப்பாணமா கொழும்பா?***' , '***மழை வெள்ளம்***', '***இமயம்***' என ஏழு தொகுப்புகளில் 1988 – 2004 வரையான காலப்பகுதியில் எழுதிய 51 சம கால யதார்த்த வானொலி நாடகங்களை உள்ளடக்கி அவர் வெளியிட் டுள்ளார்.

1969 இல் நடாத்தப்பட்ட முதலாவது இலங்கை வானொலி நாடகப் போட்டியில் 'நீதியின் நிழலில்' எனும் துப்பறியும் நாடகத்துக்கும் 2001 இல் 'அமுது' சஞ்சிகை நடத்திய படைப்பாற்றல் போட்டியில் 'இது ஒரு வழிப் பாதை' எனும் சமகால வானொலி நாடகத்துக்குமாக முதற் பரிசு களை ஈட்டிக் கொண்டவரான 'மறைமுதல்வன்' எனும் **G.P. வேதநாயகம்** 1977 - 1980 காலப்பகுதியில் தாம் எழுதிய 'சிறுவர் மலர்' நாடகங்கள் பதினேழின் தொகுப்பை '***நாளைய நாயகன்***' எனும் தலைப்பில் 2000 ஆம் ஆண்டில் நூலாக வெளியிட்டுள்ளார்.

அவரெழுதிய 'கதம்பம்' நாடகங்களுட்பட வானொலி, மேடை, தொலைக்காட்சி - நாடகங்கள் பதினொன்றில் தொகுப்பாக '***கழுதைக்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கும் காலம் வரும்'*** எனும் நகைச்சுவை நாடகத் தொகுப்பு நூல் 2005 இல் வெளியாகியுள்ளது. 90 களின் பின் அவரெழுதி வானொலியில் வலம் வந்த 'கந்தசாமி + நல்லம்மா' குடும்ப நகைச்சுவை நாடகங்கள் ஏழின் தொகுப்பு - ***'காதல் போயின் கல்யாணம்!'*** 2020 இல் நூலுரு வானது.

முகத்தார் வீடு' நாடகத்தை ஐந்து ஆண்டுகள் தொடராக எழுதி நடித்து 'முகத்தார்' பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டவர் ***S.ஜேசுரட்ணம்*** இந்நாடகத்தின் சிறப்பான ஐந்து அங்கங்களையும் மற்றும் நான்கு வானொலி நாடகங்களையும் மூன்று மேடை நாடகங்களையும் ஒன்று சேரத் தொகுத்து 1993 இல் அவர் படைத்துள்ள நகைச்சுவை விருந்து - ***'முகத்தார் வீட்டுப் பொங்கல்'***!

வானொலி, மேடை, தொலைக்காட்சி எனத் தமிழ் நாடக உலகின் பல்வேறு பரிமாணங்களிலும் பரிச்சயமானவர் ***அருணா செல்லத் துரை***. உண்டா அபிநந்தன் விருது பெற்ற கலைஞர் அவர். 1988 இல் வானொலிக்கு அவரெழுதி ஒலிபரப்பான 'புண்ணிய பூமி', 'இவர்களும் மனிதர்கள்' 'முடிவுகள் மாற்றப்படலாம்' எனும் 30 நிமிட நாடகங்கள் மூன்றும் சில பல காரணங்களால் ஒலிபரப்பாகாமல் போன 'சுடலை ஞானம்' 'மானத்திற்காக ஏங்கும் கவரிமான்கள்' எனும் இரு நாடகங் களும் 'வீடு' எனும் தொலைக்காட்சி நாடகமுமாக 6 நாடகங்களின் தொகுப்பான ***'வீடு'*** - 1993 இலும் வானொலியில் ஒலிபரப்பான அவரது வன்னிப் பாரம்பரிய வரலாற்று நாடகமான ***'நந்தி உடையார்*** - 1996 இலும் நூலுருப்பெற்றன.

சிறுகதை எழுத்தாளரும் நாடகாசிரியருமான ***ஜோர்ஜ் சந்திர சேகரனின்*** பரீட்சார்த்த நாடகங்கள் சில 70 களின் முற்பாதியில் நாடக உதவித் தயாரிப்பாளராக இருந்த பி விக்னேஸ்வரனால் தயாரிக்கப் பட்டு ஒலிபரப்பாயின. அவ்வாறாக ஒலிபரப்பானவற்றுள் ஒன்று 'சொர்க்கமும் நரகமும்'. வானொலியில் ஒரு மணி நேர நாடகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலித்த அது பின்னர் 1979 இல் இலங்கை வானொலித் தமிழ்ச் சேவையினர் நடாத்திய மேடை நாடக விழாவில் அரங்கேறியது.

பிரெஞ்சு நாடகாசிரியர் இயூஜின் அயன்ஸகோவின்[Frenzy for the two or more by Eugene Ionesco] அபத்த நாடகமொன்றைத் தழுவி தமிழில் ஜோர்ஜ் எழுதிய 'நத்தையும் ஆமையும்' எனும் நாடகமும் 1976 இல் வானொலியில் ஒலிபரப்பானது. பின்னரது இ.ஒ.கூ.தாபனம் 1992 இல் நடாத்திய நாடக விழாவில் மேடையேறியது. மேற்குறிப்பிட்ட இரு நாடகங்களையும் உள்ளடக்கிய ***'அபத்த நாடகம்'*** எனும் நாடக நூல் 1999 இல் ஜோர்ஜ் சந்திரசேகரனால் வெளியிடப்பட்டது.

வானொலி நாடக நூலுக்கென முதன் முதலில் இலங்கை சாகித்ய மண்டலப் பரிசைப் பெற்றவர் வவுனியாவைச் சேர்ந்த ***'அகளங்கன்'*** எனும் ***என்.தர்மராஜா***. ***'அன்றில் பறவைகள்'***[1992], ***'இலக்கிய நாடகங்கள்'***[1994], ***கூவாத குயில்கள்'***[2001],***'கங்கையின் மைந்தன்*** '[2009] எனும் நான்கு வானொலி நாடகத் தொகுப்பு நூல்களின் சொந்தக்காரர் அவர். முதல் மூன்று தொகுதிகளில் 1991, 1996, 1997 என 90 களில் வானொலிக்கு அவரெழுதிய இலக்கிய , இதிகாச, சமகால நாடகங்கள் 15 தொகுக்கப்பட்டுள்ளன. 2009 இல் வெளியான நூலில் 1996 இல் ஒலிபரப்பான 'கங்கையின் மைந்தன்' மற்றும் 1998 இல் ஒலிபரப்பான 'வாலி' என்பனவற்றுடன் மேடைக்கான நான்கு இலக்கிய, இதிகாச நாடகங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

திருமலை ***த. சித்தி அமரசிங்கம்*** வானொலி நடிகராகவும் தெரிவானவர். வானொலிக்கென நாடகங்கள் சிலவும் எழுதியவர். 'கீக் கிரட்டீஸ்', 'தொழிலுக்குத் தொழில்' போன்ற நகைச்சுவைக் குறுநாட கங்களை 'கதம்பம்' நிகழ்ச்சிக்கு எழுதியவர். ***'இராவண தரிசனம்'*** என்னும் இவரது மேடை நாடகம் பின்னர் வானொலிக்கென மாற்றி எழுதப்பட்டு 1997 இல் வானொலியிலும் ஒலிபரப்பானது. அவரது ஈழத்து இலக்கியச் சோலை' ப் பதிப்பகம் மூலம் பின்னரது நூலாகவும் வெளியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் நடத்திய பவள விழா நாடகப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற நாடக எழுத்தாளர் பா. சிவபாலன். 1991 – 1995 காலப் பகுதியிலும் 2001 இலும் அவரெழுதிய ஐந்து 30 நிமிட நாடகங்களும் கதம்பம், கிராமிய நிகழ்ச்சிகளுக்கென அவரெழுதிய மூன்று குறுநாடகங்களும் உட்பட மொத்தமாக எட்டு நாடகங்களின் தொகுப்பு நூல்தான் 'நாளை நல்ல நாள்'[2001].

தனது 'முகவரியைத் தேடுகிறார்கள்' [2005] சிறுகதைத் தொகுதிக்காகச் சாகித்ய மண்டலப் பரிசு பெற்ற சிறுகதை, நாவலாசிரியரான சோ.ராமேஸ்வரன் எழுதிய மூன்று சமூக, நகைச்சுவை வானொலி நாடகங்களின் தொகுப்பு 'கானல் நீர் கங்கையாகிறது' 2006 இல் நூலுருப்பெற்றது.

'நெல்லை லதாங்கி' என்னும் புனைபெயரில் ஆனந்தராணி நாகேந்திரன் எழுதி 2007 இல் வெளியிட்டுள்ள வானொலி நாடகங்களின் தொகுப்பு நூல் 'எதிர்பார்க்கைகள்'. இதில் 1997,1998 காலப் பகுதியில் அவரெழுதி இலங்கை வானொலியில் ஒலிபரப்பான ஒன்பது நாடகங்கள் இடம்பெற்றுள்ளன.

ஜோர்ஜ் சந்திரசேகரன் காலத்தில் 90 களில் வானொலி நாடக நடிகராகவும் எழுத்தாளராகவும் பரிணாமம் பெற்ற 'மறவன் புலோ' எஸ்.அம்பலவாணர் இலங்கை வானொலிக்கெனத் தாமெழுதிய நாடகங்கள் சிலவற்றை 'சட்டத்தின் திறப்பு விழா'[2016], சிறந்த சுய நாடக இலக்கியத்துக்கான சாகித்ய விருதை வென்ற 'மன வைரம்' [2018] மற்றும் 'விதை' [2019] ஆகிய மூன்று நாடகத் தொகுப்பு நூல்களாகப் பதிப்பித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனக் கல்விச்சேவையில் 'சமூகக் கண்ணாடி' எனும் நிகழ்ச்சியில் 1994 இல் ஒலிபரப்பான எட்டு நாடகங்களின் தொகுப்பு நூல்தான் ***'ஈரமுள்ள காவோலைகள்'*** [1996].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகாசிரியர் ***M.P.செல்வவேல்*** அவை பற்றிச் சமய, சமூக, விஞ்ஞான நாடகங்கள் எனக் குறிப்பிடுகிறார். நாடகம் ஒலிபரப்பான காலத்தில் கல்விச் சேவைப் பணிப்பாளராக இருந்தவர் அரச ஐயாத்துரை. நாடகங்களைத் தயாரித்து வழங்கியவர் த. டே. பத்மகைலைநாதன்

'ஷர்மிளாவின் இதய ராகங்கள்' திரைப்படக் கதை வசன கர்த்தாவும் தயாரிப்பாளருமான *பேராதனை* ***A.A.ஜுனைதீன் 'எனது வானொலி நாடகங்கள்'*** எனும் வானொலி நாடகத் தொகுப்பு நூல் ஒன்றை 1999 இல் வெளியிட்டார். அதில் முஸ்லீம் சேவையில் ஒலிபரப்பான ஐந்து நாடகங்களும் எஸ். கணேஸ்வரனின் தயாரிப்பில் கல்விச் சேவையில் ஒலிபரப்பான 'பாசம் என்பது எது வரை?', 'நல்ல முடிவு', 'தேடி வந்த பழி' முதலான மூன்று நாடகங்களுமாக எட்டு நாடகங்கள் இடம்பெற்றுள்ளன

சானா காலத்தில் எழுத ஆரம்பித்து R.யோகராஜன் காலம் வரை தொடர்ந்து சளைக்காது வெற்றிகரமாகப் பல நாடகங்களை இலங்கை வானொலித் தமிழ்ச் சேவைகளில் எழுதிக் குவித்தவர் **M.*அஷ்ரப்கான்***. முஸ்லீம் சேவையில் அவர் பணி மகத்தானது. முஸ்லீம் சேவைக்கென அவரெழுதிய காத்திரமான பத்து நாடகங்களின் தொகுப்பு நூல் - ***'முள்'***!

முஸ்லீம் சேவையில் நாடகங்களை எழுதிவந்த எழுத்தாளர் ***ஜுனைதா ஷெரீப், 'பொன்னாடை'*** [1988]' எனும் வானொலி நாடக நூலையும், ***திக்குவல்லை கமால்' புகையில் கருகிய பூ***'[ 2001] எனும் நாடக நூலையும் வெளியிட்டுள்ளனர். ***அபுகாகம பழீலின் 'கோல மிடும் மேகங்கள்'*** 2011 இல் வெளியான வானொலி நாடகத் தொகுப்பு நூல்.

மொத்தமாக 33 வானொலி நாடக எழுத்தாளர்களின் 53 வானொலி நாடக நூல்கள். வானொலி நாடகங்களிற் சாத்தியமான பல்வேறு வடிவங்களையும் உள்ளடக்கியனவாக இந்நூல்கள் உள்ளன. சமகால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதார்த்த நாடகங்கள், மிகை உணர்வுடன் கூடிய சமூக நாடகங்கள், எள்ளி நகையாடும் நையாண்டி நாடகங்கள், அபத்த நாடகங்கள், இலக்கிய, வரலாற்று, புராண வகைப்பட்ட நாடகங்கள், கவிதை நாடகங்கள், கிராமிய நாடகங்கள், விஞ்ஞான நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், தொடர் நாடகங்கள் என்று வகைமாதிரிக்கு ஒரு சிலவற்றையாவது தெரியக் கூடியவாறு பரந்துபட்ட வீச்செல்லை கொண்டனவாக நம்மவரின் வானொலி நாடக நூல்கள் திகழ்வது உண்மையிலேயே பெருமைப்படக் கூடிய விடயம்தான்

மலையகச் சிறுவர்களின் வாழ்வைப் பகைப்புலமாகக் கொண்ட, அவர்களின் பிரதேச வழக்கில் எழுதப்பட்ட சில நாடகங்கள் 'மறை முதல்வன்' G.P. வேதநாயகத்தின் 'நாளைய நாயகன்' நாடக நூலில் இருந்தபோதிலும் முற்றுமுழுதாக மலையக, மட்டு நகர் பிரதேச வாழ்வைக் களமாகக் கொண்ட சமகால யதார்த்த நாடகங்களும், துப்பறியும் நாடகங்களும், மர்ம நாடகங்களும், உளவியல் சார்பான நாடகங்களும், வேற்றுக் கிரகவாசிகளைப் பற்றிய விஞ்ஞானப் புனைவு நாடகங்களும் தாம் இன்னும் நூலுருப் பெறவில்லை. காலப்போக்கில் அவையும் வரவேண்டும் ; வரும்.

நவீன விஞ்ஞான மாற்றங்களை உள்வாங்கி ***K.S.பாலச் சந்திரனும் அருணா செல்லத்துரையும் ராஜா கணேசனும் M.C.ரஸ்மினும்*** தமது நாடக ஆக்கங்களை ஒலிப் பேழைகளில்/ இறுவெட்டுகளில் வெளியிட்டுள்ளமையும் நோக்கற்பாலது

2000 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் இருந்து இலங்கை வானொலியின் நாடக முயற்சிகள் சிறிது தளர்வுற, வானொலி நாடகங்களுக்கு முட்டுக் கொடுப்பது போல் சக்தி, சூரியன் பண்பலை வானொலிகளும் காலத்துக்குக் காலம் நாடகங்களை ஒலிபரப்பி வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வானொலியில் 'சுவிஸ் கொன்ராக்ட்' நிறுவன அனுசரணை யுடன் இடம்பெற்ற 'நாளை நமதே' எனும் விளம்பரதாரர் நிகழ்ச்சியில் எஸ்.எழில்வேந்தனின் தயாரிப்பில் 2001 இன் பிற்கூற்றில் இருந்து 2004 இன் முற்கூறு வரையான காலப்பகுதியில் சுமார் 40 , பதினைந்து நிமிட நேரக் குறுநாடகங்களை நானே எழுதி நடித்துள்ளேன்

சூரியன் பண்பலை வானொலியின் பணிப்பாளராக லோஷன் என்கிற A.V. வாமலோசனன் கடமையாற்றிய காலத்தில், 2006 - 2007 காலப்பகுதியில் வாரத்தில் நான்கு நாட்கள் தொடர்ச்சியாக 300க்கும் மேற்பட்ட அரை மணிநேர நாடகங்களை எஸ்.பிரதீப்பின் தயாரிப்பில் ஒலிபரப்பி வானொலி நாடகத்துறையில் ஒரு புரட்சியையே ஏற்படுத்தியிருந்தார். அதில் ஒலிபரப்பான நாடகங்களுள் 25 க்கும் கூடுதலாக நானும் ஏனையவற்றை ***S.செல்வசேகரன் (பல மொழி பெயர்ப்பு நாடகங்கள்)***, **M.*அஷ்ரப்கான், M.C. ரஸ்மின், A.R. திருச்செந்தூரன், ராஜா கணேசன், ஏ.எஸ்.பாரதி, கோலாகலன், லோஜி*** போன்றோரும் எழுதியிருந்தோம்.

2001 இன் பின் மூத்த அறிவிப்பாளர் ***ராஜேஸ்வரி சண்முகம்***, ***லூக்கஸ் திருச்செல்வம்***, இளைய தலைமுறை ஒலிபரப்பாளரும் நடிகருமான ***சிவராஜா தக்கீசன்*** போன்றோரின் வழிகாட்டலில் இலங்கைத் தமிழ் வானொலி நாடக உலகம் கண்ட ஏற்ற இறக்கங்கள் பற்றி அறிந்தவர்கள் தொடரட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் - 2

## இலங்கை வானொலி
## தமிழ் நாடகத் தயாரிப்பாளர்களும் கலைஞர்களும்

### *'சானா' சகாப்தம்* - II

**50** களின் ஆரம்பத்தில் பொரளை, கொட்டா வீதியில் பரீட் சார்த்தமாக இயங்கிக் கொண்டிருந்த 'ரேடியோ சிலோன்' டொரிங்டன் சதுக்கத்தில் நிரந்தரமாகக் காலூன்றித் தனது ஒலிபரப்பை விஸ்தரித்த வேளையில் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண் டருந்தவர் – அந்நாளைய 'ஈழகேசரி'ப் பத்திரிகை ஆசிரியராக இருந்தவரும் 'ஒலிபரப்புக் கலை' [1957] என்ற வானொலி பற்றிய முன் னோடி நூலை எழுதியவருமான திரு.சோ.சிவபாதசுந்தரம் அவர்கள் தான்.

தாம் 'ஈழகேசரி'யில் கடமையாற்றிய காலத்தில் ஒரு சைத்திரி கனாக அதில் ஓவியம் வரைந்து கொண்டிருந்த பல்துறை மேதையான 'கலாஜோதி' சானா என்கிற சண்முகநாதனை இனங்கண்டு, முதல் வானொலி நாடகத் தயாரிப்பாளராக 1951இல் பதவியில் அமர்த்திய வரும் அவரேதான்!

சானா நாடகத் தயாரிப்பாளராகப் பொறுப்பேற்ற அந்தக் காலத் தில் வானொலி நாடகமொன்றைத் தயாரிப்பதென்பது சவாலான ஒரு சாதனை. ஒலிப்பதிவுக் கருவிகளோ செய்முறையோ அறிமுகமாகாத காலம். நாடகமுட்பட எந்நிகழ்ச்சியாயினும் நேரடியாகவே நடைபெற் றாக வேண்டும். பங்குபற்றும் சகல கலைஞர்களும் உரிய நேரத்தில் கலையகத்தில் இருந்தாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர அளவு துல்லியமாகக் கணிக்கப்பட வேண்டும். ஒரு 30 நிமிட நாடகமென்றால் அது ஆரம்பித்துச் சரியாக 30 நிமிடத்தில் நிறைவு பெற்றாக வேண்டும். இம்மியளவும் நேரம் கூடவோ குறையவோ கூடாது. அதனால் நடிகர்களும் வசனத்தைக் கூட்டியோ குறைத்தோ பேசமுடியாது. பிரதியில் உள்ளதை உள்ளபடி பேசியாக வேண்டும். ஒத்திகையில் ஒரு நடிகர் எவ்வளவு நேரம் எடுத்தாரோ அதே அளவு நேரத்தையே நேரடி ஒலிபரப்பிலும் எடுக்கவேண்டும். தட்டுத் தடுமாறி வாய் குழறி உளறிக் கொட்ட முடியாது.

அதனால் ஒத்திகையின்போது ஒவ்வொரு பக்கமும் எவ்வளவு நேரம் எடுக்கிறதென்பதை நிறுத்தற் கடிகாரம் மூலம் கணித்துப் பக்கத்தின் அடியில் சானா குறித்துக் கொள்வார். குறியிசை, இடை யிசை, [கார் வரும் சப்தம் போன்ற] ஒலிக் குறிப்புகளுக்கு எடுக்கும் நேரம், நாடகம் பற்றிய முன் பின் அறிவிப்புகளுக்கான நேரம் போன்ற அனைத்தையும் கணித்து வைத்துக்கொள்வார்.

நாடகப் பிரதியானது தட்டச்சிற் பொறிக்கப்பட்டு **Roneo** செய்யப் பட்டுத் தயாரிப்பாளர், நடிகர்கள், ஒலிபரப்பு உதவியாளர்கள் எனச் சகலருக்கும் தேவையான அளவு பிரதிகள் எடுக்கப்படும். ஒலிபரப் புக்கு முதல் நாளே நடிகர்களுக்குப் பிரதிகள் கொடுக்கப்பட்டு முதல் வாசிப்பு ஒத்திகையும் நடைபெறும். அதன்போது எழுத்து, வசனப் பிழை கள் திருத்தப்பட்டுத் தேவையான மாற்றங்கள் ஏதும் இருப்பின் செய்யப்படும். இரண்டாவது ஒத்திகையின்பின் கலைஞர்கள் பிரதிக ளுடன் வீடு திரும்புவர். மறுநாள் குறித்த நேரத்தில் [ஒலிபரப்புக்கு ஆறேழு மணி நேரம் முன்னதாக] அவர்கள் கலையகத்தில் இருந்தாக வேண்டும். நேரம் தவறாமையில் சானா மிகக் கண்டிப்பாக இருப்பார். இரண்டாம் நாளும் ஒத்திகைகள் நடைபெறும். [நல்ல நினைவாற்றல் உள்ளவருக்கு முழுப் பிரதியுமே 'கரதலப்' பாடமாகி விடக்கூடும்!]

ஒலிபரப்பு ஆரம்பமாகவும் சிகப்பு விளக்கு எரிய ஆரம்பிக்கும். கலையகம் ஒரு **Operation Theatre** போலாகிவிடும். மூச்சைப் பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நடிகர்கள் நாடகத்தை ஒருவாறாக ஒப்பேற்றி விடுவார்கள். **30** நிமிட முடிவில் அறிவிப்பாளர் - பங்கு பற்றியவர்கள், எழுதியவர், தயாரித்தவர் முதலானோரின் பெயர்களைக் கூறி நாடக நிறைவுக் கான குறியிசையும் ஒலித்து முடிந்த பின்தான் இருமலை அடக்கியவர் இருமி, தும்மலைத் துறந்தவர்கள் தும்மிச் சுதந்திரப் பறவைகளாக ஆசுவாசப் பெருமூச்சு விட்டு விடிவு பெறுவர்.

வாரா வாரம் இதே சோதனை. அந்தச் சோதனையை வெல்வதும் ஒரு சாதனைதானே? இன்ன பிற காரணங்களால் நடிகர்கள் தமிழைத் தட்டுத் தடங்கலின்றி வாசிக்கக் கூடிய ஆற்றலுள்ளவர்களாக இருக்க வேண்டும். புராண, இதிகாச, இலக்கிய, வரலாற்று நாடகங்களிலோ கவிதை நாடகங்களிலோ நடிப்பவர்களாக இருந்தால் சொல்லத் தேவையில்லை. இலக்கணப் பிழையின்றித் தெளிவான உச்சரிப்புடன் நல்ல குரல் வளத்துடன் பேசி நடிக்க வல்லவர்களாக இருக்க வேண்டும்.

ஒத்திகைக்கும் ஒலிபரப்புக்கும் குறித்த நேரத்தில் சமூகமளிக்க வேண்டியிருந்ததால் வானொலி நிலையத்துக்கு அருகாமையில் 5 மைலுக்குள்ளான சுற்றாடலில் நடிகர்கள் இருந்தாகவேண்டும் எனும் விதியும்கூட இருந்தது. பல்வேறுபட்ட நாடகங்களுக்கும் அவ்வவற் றுக்குப் பொருத்தமான நடிகர்கள் தேவைப்பட்டார்கள். இவ்வாறாகச் சகல அம்சங்களையும் கருத்திற்கொண்டு நடிகர்களைத் தேடிப்பிடிக்க வேண்டியிருந்தது. அதற்காக நடிகர்களின் குரல் தேர்வுக்கான அழைப்பு வானொலி மூலம் விடுக்கப்படும். சானா காலத்தில் இருந்து இந்நடை முறையே தொடர்கிறது.

எழுத்தாளர்களுக்கும் நடிகர்களுக்குமான சன்மானத்தொகை அந் நாட்களில் [50, 60 களில்] ஒப்பீட்டளவில் மிக உயர்வாக இருந்தது. பிற மாவட்டங்களில் இருந்த திறமையான கலைஞர்கள் பெருமூச்சு விட, கொழும்பைப் பிறப்பிடமாகவோ வதிவிடமாகவோ கொண்டு தங்கியி ருந்த படித்த மட்டத்தினர், குறிப்பாக ஆசிரியர்கள் எழுது வினைஞர்கள் போன்றவர்கள் வானொலியால் ஈர்க்கப்பட்டு, திறமையும் அதிர்ஷ்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் உள்ளவர்கள் தெரிவாகி ஆதாயமடைந்தார்கள். பணமும் புகழும் ஒருசேர ஒருசிலரை அரவணைத்தது.

அவ்வாறாக வானொலி நாடகக் கலைஞர்களாக 50 களில் மின்னிச் சுடர் விட்டவர்களுள் முக்கியமானவர் ***கா.சிவத்தம்பி.*** சானா வின் தயாரிப்பில் உருவான முதல் நாடகம் ***'சதை செய்த வதை'.*** புராண-இலக்கியக் கதாபாத்திரமான கம்சனை நாயகனாகக் கொண்டு இலங்கையர்கோனால் எழுதப்பட்ட நாடகமது. அதில் நாயக னாக நடித்தமை மூலம் இலங்கை வானொலி நாடக நடிகர்களுக்குப் பிதாமகராக இலங்குபவர் கா.சிவத்தம்பி. பல்கலைக்கழக மாணவனா கத் தனது பட்டப்படிப்பை பேராதனையில் தொடர்ந்து கொண்டிருந்த அவர் நடிப்பின் மீதிருந்த தீவிர ஆர்வம் காரணமாகப் பிரதி சனிக் கிழமைகளிலும் நேரடியாக ஒலிபரப்பாகும் நாடகங்களில் நடிக்கக் கொழும்பு வந்துவிடுவாராம்.

கிராம சஞ்சிகையில் **1951 – 1953** களில் **2 1/2** ஆண்டு காலம் சனிக் கிழமைகளில் மாலை 7.00 மணி முதல் 7.15 வரை ஒலிபரப்பான தொடர் நாடகம் ***'விதானையார் வீட்டில்'.*** அந்நாட்களில் கிராம சேவைக்குப் பொறுப்பாக இருந்த V.N.பாலசுப்ரமணியம் அதைத் தயாரித்தளித்தார். *"யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழைக் கையாண்டு சகலரும் ரசிக்கத்தக்க ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்து ஒலிபரப்ப முடியும் என்பதை முதலில் நிரூபித்த நிகழ்ச்சி 'விதானையார் வீட்டில்'. யாழ் மத்தியதர மக்களின் வாழ்க்கையை, அவர்களது சமய, கலாசாரப் பின்னணியில் சித்தரித்த நாடகம்".* என அது பற்றி மூத்த அறிவிப்பாளர் எஸ்.நடராஜ ஐயர் தமது 'திரைமறைவுக் கலைஞர்கள்' நூலில் குறிப்பிடுகிறார்.

அந்நாடகம் பற்றி மேலுமவர் 1930களில் மலேஷியா, சிங்கப்பூ ருக்குப் புலம்பெயர்ந்த யாழ்ப்பாணத்தவர்கள் நிகழ்ச்சியைக் கேட்டு ரசித்துப் பாராட்டுக் கடிதங்கள் எழுதினார்களாம் என்றும் குறிப்பிடு கிறார். இலங்கையர்கோனால் எழுதப்பட்ட அந்நாடகத்தில் விதானை யாராக நடித்தவர் பத்தொன்பது வயது இளைஞரான ***கா.சிவத்தம்பி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மனைவியாக - ஆச்சியாக முத்திரை பதித்தவர் ***பரிமளாதேவி விவேகானந்தா.*** விதானையாரின் தம்பியாக, சின்ன விதானையாராக ஜொலித்தவர் '*சுந்தா*' எனும் ***வீ.சுந்தரலிங்கம்.*** வேலைக்காரனாக வந்து அசத்தியவர் ***கே.மார்க்கண்டு.*** மருமகளாக ***பத்மா சோமசுந்தரம்*** நடிக்க சட்டம்பியாராகச் ***சரவணமுத்து மாமா*** பண்டிதத் தமிழ் பேசிக் கலக்கினார். முதற் பெண் அறிவிப்பாளரான ***செந்திமணி மயில்வாகனம்*** மற்றும் ***எம்.எஸ்.ரட்ணம்*** **போன்றோரும் அதில் பங்கேற்றனர்.**

அறிவிப்பாளர், நடிகர், கர்நாடக இசைக் கலைஞர் எனப் பல்துறை விற்பன்னராகத் திகழ்ந்த தயாரிப்பாளர் V.N.பாலசுப்ரமணியத்துக்கு உதவியாக எம்.எஸ்.ரட்ணம் பணியாற்றினார்.

***T.S.பிச்சையப்பா, ரொசாரியோ பீரிஸ், V.N.நவரத்தினம், S.K. தர்மலிங்கம், N.P.தர்மலிங்கம், S.S. கணேசபிள்ளை, நந்தி'*** எனும் புனைபெயரில் 'மலைக் கொழுந்து' உட்பட நாவல்கள், சிறுகதைகள் பலவற்றையும் எழுதியவரான ***செ.சிவஞானசுந்தரம்,*** அவரது சகோ தரர் முறையான மின் பொறியியலாளர். ***M.திருநாவுக்கரசு,*** தமிழ கத்தில் பின்னைய நாட்களில் நேர்முக விளையாட்டு வர்ணனையா ளராக முத்திரை பதித்த ***S.M.A..ஜப்பார்,*** 'வாடைக்காற்று' புகழ் ***வசந்தா அப்பாத்துரை*** மற்றும் ***பிலோமினா சொலமன், பஞ்சவர்ணம் லக்ஷ்மணன், சரசாம்பிகை சுப்பிரமணியம், புஷ்பம் கோமஸ்*** போன்ற ஆரம்பகாலக் கலைஞர்கள் அந்நாளைய நாடக அபிமானிகள் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்தவர்கள்.

அறிவிப்பாளர்களாகக் கடமையாற்றிய ***V.N.பாலசுப்ரமணியம், S.குஞ்சிதபாதம், V.P.தியாகராஜா*** மற்றும் ***அரச ஐயாத்துரை*** போன் றோரும் நேரடி ஒலிபரப்பு எனும் காரணத்தால் அவ்வப்போது ஆபத்பாந் தவர்களாகக் குரலீந்து கைகொடுத்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராகப் பணிபுரிந்த வித்துவான் ***R.S. சோதிநாதன்*** 50 களின் ஆரம்பத்தில் 12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்க்கான 'பாலர் கழகம்' எனும் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியவர். ஆரம்பகால வானொலி நடிகர்களுள் அவரும் ஒருவர். அவரது மாணவியான ***விசாலாட்சி குகதாசனும்*** [ஹமீட்] 50 களின் பிற்கூற்றில் வானொலி நடிகையானவர். நீண்ட கால நடிகையாகவும் [பின்னாளில் ஒரு பகுதி நேர அறிவிப்பாளராகவும்] வானொலியுடன் 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பரிச்சயம் கொண்ட அவர், தமது வானொலி நாடக அனுபவங்களைத் தொகுத்து 'ஒலி அலையில் என் நினைவலைகள்' எனும் நூலில் சுவைபடத் தந்துள்ளார்.

இலக்கிய, வரலாற்று நாடகங்களில் பிரதானமாகப் பெயர் பதித்த அவர் நடித்த முதல் நாடகம் 'மகதலத்து மரியாள்'. வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டு புனையப்பட்ட அவ்வரலாற்று நாடகத்தில் நாயகியாக அவர். அவருடன் அதில் ஜீஸஸாக நடித்தவர் ***S.M.A.*** ஜப்பார். அந்நாடகப் பிரதி அவருக்குத் தபால் மூலம் அனுப்பப்பட்டதென்பதும் நாடக நடிப்புக்கான சன்மானத் தொகையாக 30 ரூபா வழங்கப்பட்டதென்பதும் அவர் தந்துள்ள உபயோகமான உபரித் தகவல்கள். ஒரு அரச ஊழியரின் ஆரம்பச் சம்பளமே 100 ரூபாய் மட்டில் இருந்த காலமது.

அந்நாளைய நடிகர்களைப் பற்றி அவர் தமது நூலில் - *'இந்தியத் தமிழ் நன்றாகப் பேசக் கூடியவர்கள் ரொசாரியோ பீரிஸ், பஞ்சவர்ணம் லக்ஷ்மணன். [இவர்கள் நகைச்சுவை ஜோடி], பிச்சையப்பா, பிலோமினா சொலமன் [குணசித்திர நாயக நாயகியர்], ஜப்பார், ராஜேஸ்வரி [சரித்திர நாயகன் ,நாயகி] - இப்படிப் பிரதான பாத்திரங்களுக்கு இவர்கள் என முத்திரை பதித்தவர்கள்.'* - என்று குறிப்பிடுவதன் மூலம் அந்நாளைய முன்னணி நடிகர்கள் சிலரைக் கோடிகாட்டுகிறார். ***ராஜேஸ்வரி பிச்சாண்டி*** எனும் ராஜேஸ்வரி சண்முகம் இலங்கை வானொலி வரலாற்றில் மறக்கப்பட முடியாத ஓர் ஆளுமை. 1952 இல் ஒரு வானொலிக் கலைஞராகக் கால்பதித்த அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடித்த முதல் நாடகம் N.S.M. ராமையாவின் 'விடிவெள்ளி' சில்லையூரா ரின் 'சிலம்பின் ஒலி' அவரது நடிப்புச் சிறப்பைப் பறை சாற்றும் ஒரு சிறு துளி! அவரது நாடக உலகப் பங்களிப்புப் பல் துறையிலும் பரிமளிப்பது.

***டோசன் பெர்னாண்டோ, ஆர்.விக்டர்*** போன்றவர்கள் 50 களின் பிற்பகுதியில் வானொலிக் கலைஞர்களாகத் தெரிவாகி 60,70 களில் முன்னணியில் திகழ்ந்தவர்கள்.

கலாபூஷணம் ***M.S.A.அஸீஸூம்*** 40 களில் 'அசோகமாலா', 'நவமணி' முதலான நாடக நூல்களை எழுதியவரான *வெள்ளவத்தை* ***மு.இராமலிங்கமும்*** கைலாசபதி, சிவத்தம்பி காலத்தில் தாமும் நடித்த தாகக் குறிப்பிடுகின்றனர். அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்து விட்ட ***சிசு.நாகேந்திரா*** 'லண்டன் கந்தையா', 'சிறாப்பர் குடும்பம்' நாடகங்களில் தான் நடித்துள்ளதாகவும் 'ராஜ்' நகைச்சுவை நாடக மன் றத்தின் 'சக்கடத்தார்' நாடகத்திலும் தான் பங்கேற்றுள்ள தாகவும் தமது வலைத் தளத்தில் பதிவு செய்துள்ளார்.

தன்னோடு முதல் நாடகத்தில் நடித்தவராக ***V.N.P. ஞான தீபத்****தை* நினைவுகூரும் பேராசிரியர் கா.சிவத்தம்பி வர்த்தக சேவை ஒலிபரப் பில் 1959 முதல் 1962 வரை **21/2** ஆண்டுகாலம் ஒலிபரப்பான 'சிறாப்பர் குடும்பம்' தொடரில் நடித்த ***எஸ்.ராஜரட்னத்****தையும்* தமது [இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பவள விழாச் சிறப்பு மலர் -2000] கட்டுரை யில் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். நானறிந்த மட்டில் அச்சுவேலியைச் சேர்ந்த 'சக்கடத்தார்' புகழ் ராஜரட்ணமாக அவர் இருக்கவேண்டும். 60 களின் பிற்பகுதியில் இரசிகர்களின் முன்னிலையில் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபன ஆறாம் இலக்கக் கலையகத்தில் நடாத்தப்பட்ட 'மத்தாப்பு' நிகழ்ச்சிகளில் சானாவுடன் சில குறு நாடகங்களிலும் அவர் பங்கேற்றார்.

இவர்களைவிட, ***தீ.ரா.ஆறுமுகம்[ஆச்சி], செல்வஜோதி செல்லத்துரை, R.சோமசுந்தரம், S.சோமசுந்தரம், D .சுப்பிரமணியம்,***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***எஸ்.நஸ்ருதீன், ஸ்ரனிஸ்லோஸ், மாகிரட் அன்ரனி, மேரி ஜோசபின், M.A.ஹமீட், சுகிர்தாதேவி, திருவடிநாதன், கனகலிங்கம், செல்லத்தம்பி, செல்லையா குமாரசாமி*** போன்ற கலைஞர்களும் 50 களில் இலங்கை வானொலி நடிகர்களாகத் தடம் பதித்துள்ளார்கள்.

தான்தோன்றிக் கவிராயர்' ஆகக் கவிதையுலகில் கவிச்சமர் நடாத்திக் கர்ஜனை புரிந்தவர்; 'ஞானசௌந்தரி' நாட்டுக்கூத்து நாயகனாகப் பாடி ஆடி நடித்து அசத்தியவர்; 'நிர்மலா', 'மஞ்சள் குங்குமம்' போன்ற ஈழத் திரைப்படங்களின் பாடலாசிரியர்; 'ரோமியோ ஜூலியட்' உட்பட ஷேக்ஸ்பியரின் பல நாடகங்களைத் தமிழில் தந்த சிருஷ்டி கர்த்தா; காதல் துணைவி கமலினியுடன் இணைந்து சிருங்கார ஜோடியாக 'கோமாளிகள்' திரைப்படத்தில் வலம் வந்த நாயகன்; நல்ல தமிழ்க் கவிதைகளால் வர்த்தக விளம்பரங்களுக்கு வலுச் சேர்த்த வித்தகர்; முத்தாய்ப்பாகத் 'தணியாத தாகம்' எனும் முன்னோடித் திரைப்படச் சுவடியை எழுதி வெளியிட்டு, அதுவே பின்னர் வானொலித் தொடராக விரிந்து ஒலிபரப்பாகி, தமிழ் பேசும் அனைத்துலக நேய நெஞ்சங்களையும் நெக்குருகச் செய்யக் காரணமான, காத்திரமான எழுத்தாளர் எனப் பல்கலை வேந்தனாகத் திகழ்ந்த ***சில்லையூர் செல்வராஜனும்*** 50 களின் ஆரம்பத்தில் வானொலி நடிகனாகக் களமிறங்கியவர்தான். 1933 இல் பிறந்து மிக இளம் வயதில் ஒரு எழுத்தாளனாகக் கால் பதித்துவிட்ட சில்லையூருக்கு சக எழுத்தாளர்களுடனான பரிச்சயம் 18 -20 வயதிலேயே சித்தித்து விட்டது.

*"1950 ஆம் ஆண்டு வாக்கில் தினகரனில் 'திலோத்துமை' என்ற புனைபெயரில் 'திரைவானம்' நடத்தியபோது, என்னைச் சூழ்ந்துழைத்தவர்கள் பலர். மறைந்த நண்பர் றொசாரியோ பீரிஸ் குறிப்பிடத்தக்கவர். தமிழ், ஹிந்தி, ஆங்கில சினிமாப்படத் தகவல்களுக்கு அப்போதும் அவர் ஒரு களஞ்சியம் மாதிரி. நிறையத் தெரிந்து வைத்திருப்பார். ஆனால் வார்த்தைகளில் வடித்து எழுத்திற் சுத்தமாகப் பதிவு செய்வதற்குச் சிரமப்படுவார். கா.சிவத்தம்பி அவருக்கு நண்பர். இப்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*போது கலாநிதியாயுள்ள சிவத்தம்பி, கைலாசபதி, கவிஞர் முருகையன், தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் முதலானோர் அப்போது ஒருவரோ டொருவர் தொடர்பு கொண்டிருந்த மாணாக்கர்கள்"* எனத் தமது 'தணியாத தாகம்' நூல் முன்னுரையில் [1971 இல்] அவர் குறிப்பிடுவதில் இருந்து நமது இலங்கை வானொலி நாடகத் துறையுடன் தொடர்பு கொண்டிருந்த அவர்களின் பிணைப்புப் பற்றி ஓரளவு ஊகிக்க முடிகி றது.

கா.சிவத்தம்பி, றொசாரியோ பீரிஸுக்கு நண்பராக ஆனமைக்கு அவர்களது வானொலித் தொடர்பே பிரதான காரணமாக இருக்கவேண் டும். அந்நாளில் மொழிபெயர்ப்பு நாடகங்கள் சிலவற்றை எழுதிய வரான கலாநிதி கைலாசபதியும் கூட பிரதான பாத்திரம் ஏற்காவிடி னும் அவசியமேற்படுமிடத்து சிறு வேடங்களில் நடித்துமுள்ளார்.

இலண்டன் BBC யில் வானொலி நிலையத்தில் பயிற்சி பெற்று மீண்ட சானாவை ஆதர்சக் கதாபாத்திரமாக்கி அவருக்காகவே இலங்கையர்கோன் எழுதிய நாடகம்தான் ***'லண்டன் கந்தையா'***. கால் மணி நேர நாடகமாக **26** வாரத் தொடராக அது முதன் முதலில் **1951** இல் ஒலிபரப்பானது. யாழ் பிரதேச வழக்கு உட்பட மலையக வட்டாரத் தமிழையும் முஸ்லீம் பேச்சு வழக்கையும் 'சிங்கள'த் தமிழையும் பேசும் பாத்திரங்களை ஒன்றிணைத்து ஒரே நாடகத்தில் உலவ விட்டதன் மூலம் நகைச்சுவைக்கு ஒரு புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்தவர் இலங்கையர்கோன். அவரது வழியைப் பின்பற்றி சி.சண்முகமும் [வாடகை வீடு], G. P. வேதநாயகமும் [கலை + 6 தலை = 1 கொலை], எஸ்.ராமதாசும் [கோமாளிகள் கும்மாளம்] மேடையிலும் வானொலியி லும் சிரிப்பலைகளைச் சிதறவிட்டனர்; வெற்றியும் கண்டனர்.

அந்த 'லண்டன் கந்தையா' வில் காசிம் காக்கா எனும் முஸ்லீம் இளைஞராகத் தோன்றிப் பெயர் பதித்தவர்தான் ***றொசாரியோ பீரிஸ்***. சானாவால் மேடையேற்றப்பட்ட 'பதிவுத் திருமணம்' உட்படப் பல நகைச்சுவை நாடகப் பிரதிகளை ஆரம்ப காலத்தில் வானொலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக எழுதியவர் 'ரொஸி' எனும் ரொசாரியோ பீரிஸ். சானா நகைச்சு வைப் பாத்திரமேற்று நடித்த ஒரே ஈழத்துத் தமிழ்த் திரைப்படமான **'Taxi Driver'** இல் 'றொஸி'யும் நடித்தார். 'குத்து விளக்கு'ம் [1972] அவர் நடித்த மற்றொரு திரைப்படம். மிக இளம் வயதிலேயே அவர் மறைந்துவிட்ட மையானது தமிழ்க் கலை யலகுக்குப் பேரிழப்புத்தான்.

'லண்டன் கந்தையா'வில் மலையகக் கதாபாத்திரத்தில் வாழ்ந்து காட்டியவர் ***T.S.பிச்சையப்பா***. நகைச்சுவை வேடமானாலும் சரி உணர்ச்சிகளைப் பிழிந்து பரிமாறும் குணசித்திர வேடமானாலும் சரி இலக்கிய, வரலாற்றுக் கதாபாத்திரமானாலும் சரி கணீரென்ற தொனியில் கச்சிதமாகப் பேசித் தூள் பரத்திவிடுவார். திருச்சி சந்தர் எழுதிய 'வளையாபதி' எனும் நகைச்சுவை நாடகம் 78 rpm இசைத் தட்டிலும் விட்டம் கூடியதான, தோசை வார்க்கும் சட்டி போன்ற ஒலித்தட்டில் அந்நாளில் பதியப்பட்டதால் அடிக்கடி ஒலிபரப்பான ஒரு நாடகம். அதில் பிச்சையப்பாவின் நடிப்புக்கு முன் ஏனைய நடிகர்கள் எல்லாம் பிச்சை வாங்கவேண்டும்.

நடிப்பைப் பொறுத்த மட்டில் கா. சிவத்தம்பியும் யாழ்ப் பாணப் பேச்சு வழக்காயினும் சரி வரலாற்று, இலக்கியப் பாத்திர வெளிப் பாட்டிலும் சரி இருவேறு எல்லைகளையும் இலாவகமாகக் எட்டக் கூடியவர்தான். இலக்கிய நாடகங்களில் கம்பீரித்து வரும் அவரது வசன உச்சரிப்பும் நடிப்பும் அந்நாளையப் பிரபல வில்லனும் குணசித் திர நடிகருமான R. பாலசுப்ரமணியத்தைச் சிலவேளைகளில் ஞாபகப் படுத்தும்.

'லண்டன் கந்தையா' வில் சானாவுக்குத்தான் முதலிடம். அதில் கா.சிவத்தம்பி நடித்ததாகத் தெரியவில்லை. அது இரண்டா வதோ மூன் றாவதோ முறையாக 1964 இல் நேரடியாக ஒலிபரப்பானபோது அதிர்ஷ் டவசமாக அதன் நாலாவது அங்கத்தில் இருந்து தொடர்ந்து நடிக்கும் பாக்கியத்தை நானும் பெற்றேன். ஒரு வானொலி நடிகனாக எடுபட்டும் எடுபடாமலும் விட்டு விட்டு நீண்ட காலம் நானும் இருந்து வந்துள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளேன் என்பதால் இவ்விடத்தில் தவிர்க்க முடியாது எனது சுயபுராணத் தில் கொஞ்சத்தை அவிட்டுவிட வேண்டியுள்ளது.

1964 இன் பிற்பாதியில் ஒரு நாள். இலங்கை வானொலியில் பிரதி வியாழக்கிழமைகளிலும் மாலை 5.00 முதல் 5.30 வரை ஒலிபரப்பாகும் 'இளைஞர் மன்றம்' நிகழ்ச்சியை எமது கல்லூரி ஆசிரியர் வ.இராசையாதான் அப்போது தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தார். அதில் நானும் அவ்வப்போது பங்கு பற்றிக்கொண்டிருந்தேன். படிப்பை இடைநிறுத்திவிட்டு இனி என்ன செய்வது என்ற எதிகாலத் திட்டமேது மின்றி நான் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்த –[ **71/2** சனி என்னைக் கட்டிப் பிடிக்கக் காத்துக் கொண்டிருந்த] காலமது. ஆனாலும் எதிர்பா ராத விதமாக அதிர்ஷ்டம் ஆசிரியரின் உருவில் என் வீடு தேடி வந்து கதவைத் தட்டியது. இளைஞர் மன்றத்தில் கலந்து கொள்வதற்காக கையோடு என்னைத் தனது செலவில் அழைத்துச் செல்ல வந்திருந்தார் ஆசிரியர்.

அதே வியாழக்கிழமைகளில்தான் மாலை 7.45 – 8.00 க்கு 'லண்டன் கந்தையா' தொடர் நாடகமும் ஒலிபரப்பாகி வந்தது. அது ஆரம்பமாகி மூன்று வாரங்கள்தாம் கடந்திருந்தன. அதில் சானாவின் அல்லக்கை யாக 'மயிலு' என்றொரு பாத்திரம். மயிலுவுக்கு வசனம் அவ்வளவாக இராது. 'என்னோன்னியள் என்னோன்னியள்' [என்ன சொன்னீர்கள்? என்பதன் மருவலான யாழ் பிரதேச வழக்கு] என்று அடிக்கடி விளக்கம் கேட்கும் பாமரத்தனமான வெகுளிப் பாத்திரம். அப்பாத்திரத்தை ஏற்று நடித்துக் கொண்டிருந்த கனகலிங்கம் என்பவர் அன்று வரவில்லை.

நேரடி ஒலிபரப்பு என்பதால் ஒரு நடிகரில்லாவிடினும் நாடகத்தை நடத்த இயலாது. அந்த நேரத்தில் எங்கு போய் யாரைத் தேடுவது? பேசாமல் நிகழ்ச்சியை ரத்துச் செய்துவிட்டுக் 'குறிப்பிட்ட நிகழ்ச்சிக் குப் பதிலாக' இசைத் தட்டுகளில் தஞ்சம் புகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள் தாம் பாவம். வராத 'கனகு'வை மனதுக்குள் வைது கொண்டு வெறும் கையோடு இல்லம் மீள வேண்டிய பரிதாப நிலைமை அவர்களுக்கு. அப்படி அவர்களை விட்டுவிடச் சானாவுக்கு மன மில்லை. இப்படிப் பல சங்கடங்களையும் சந்தித்துச் சமாளித்து அனுப வப்பட்டவரல்லவா? ஒரு கை பார்த்து விடுவோம் என்று 'இளைஞர் மன்றம்' நடைபெறும் கலையகத்தின் தொழில் நுட்பக் கூடத்தினுட் பிரவேசித்து, இடை நடுவேயுள்ள கண்ணாடியூடாக நிகழ்ச்சியை அவதானிக்கலானார். அன்று ஏதோ ஒரு விவாதம். [பட்டிமன்றம்] அப்துல் ஹமீட், போல் அன்ரனி, எம்.கே. ராகுலன் போன்ற நண்பர்க ளுடன் நானும் பங்கு கொண்டு பிரதியில்லாமலே வெளுத்துத் தள்ளிக் கொண்டிருந்தோம். எல்லோருமே அரைக் காற் சட்டை மாணவர்கள்.

நிகழ்ச்சி முடிந்ததும் ஆசிரியரிடம் கூறிவிட்டுச் சானா என்னைக் கையோடு நாடக ஒத்திகை நடைபெறும் கூடத்துக்கு அழைத்துச் சென் றார். நாடகப் பிரதியைக் கையில் தந்தார். 'மயிலு' பாத்திரத்தைச் செய் யச் [வாசிக்கச்] சொன்னார். அடுத்த நிமிடமே நான் மயிலுவாக மாறி விட்டேன். அங்கு ஒத்திகைக்கு வந்திருந்த ஏனைய நடிகர்களுக்கோ ஆச்சரியமான ஆச்சரியம்! தம் செவிகளையே அவர்களால் நம்ப முடி யவில்லை. 'கனகு'வே வேறு அவதாரம் எடுத்து வந்து விட்டாரோ என்று வியந்து போனார்கள். 'அப்படியே கனகலிங்கம் போலவே அச்சொட்டா யிருக்குது' என்று கூறவும் செய்தார்கள். சானாவுக்கோ இரட்டிப்பு மகிழ்ச்சி. நாடகம் தடையின்றி ஒலிபரப்பாகப் போகின்றதென்ற நிச்ச யம் முதலாவது. ஆபத்பாந்தவனாகத் தான் அழைத்து வந்த 'பெடியன்' சாமான்யன் ஆகவோ சக்கட்டையாகவோ இல்லை என்ற பெருமி தம் தந்த மகிழ்ச்சி இரண்டாவது.

சானா அப்போதே தீர்மானித்துவிட்டார். தொடர்ந்து வரும் வாரங் களிலும் அப்பாத்திரத்தில் என்னையே நடிக்க வைப்பதென்று. ஆனால் 'அவருக்குப் பதில் இவர்' என்ற மாதிரியெல்லாம் சொல்லிச் சமாளிக்கா மல் 'மயிலு' என்ற பாத்திரத்தின் பெயரை மட்டும் மாற்றிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லக்கைதானே? மயிலு ஆனால் என்ன முருகேசானால் என்ன விஷ யம் மாறப்போவதில்லை. குத்தி முறியாமல் யாரையும் கும்பிட்டுக் கெஞ்சாமல், குரல் தேர்வில் எடுபடாமல் திடீரென ஒரே நாளில் நானும் நாடக அரங்க நடிகனாகிவிட்டேன். நாடகத் தொடர் முடியும் வரை என் காட்டில் மழைதான். சன்மானத் தொகையாக 15 ரூபா. அது அந்நாளில் பெரிய காசுதான்!

கனகலிங்கமாக என்னால் மாற முடிந்ததில் மற்றவர்கள் அறியாத உள்வீட்டு ரகசியம் ஒன்றிருக்கிறது. கொழும்பில் நீண்ட காலமாக நாங்கள் வாடகைக்கிருந்த வீட்டின் ஒரு பகுதியில் குடியிருந்த 'அன்ரி' ஒருவரின் தம்பிதான் அந்தக் கனகலிங்கம். சாதாரணமாகவே எங்கள் வீட்டில் எல்லோரும் எமது வானொலி நாடகத்தை விரும்பிக் கேட்போம். அதிலும் நாமறிந்த ஒருவர் வானொலியில் நடிகராக இருக்கிறார் என் றால் சொல்ல வேண்டுமா? கொஞ்சம் உன்னிப்பாகவே அந்நாடகத் தைக் கேட்டு வந்தோம்.

மற்றவர்களைப் பார்த்து 'மிமிக்ரி' செய்யும் திறமை கொஞ்சம் என்னையறியாமலே எனக்குள் இருந்திருக்கிறது. அது தக்க சமயம் பார்த்து வெளிப்பட்டு என்னை 'எழுப்பி' விட்டுவிட்டது. பார்க்கப் போனால் நடிப்பு என்பதே ஒரு வகையில் 'மிமிக்ரி' தானே? என்றோ எங்கோ பார்த்த ஒருவரை அறிந்தோ அறியாமலோ நாமேற்கும் பாத்திரத்துடன் பொருத்தி வெளிப்படுத்துகிறோம். அவ்வளவுதான்.

1964 இல் ஒலிபரப்பான ***'லண்டன் கந்தையா'வில் சானா வுடன் T.S.பிச்சையப்பா, றொசாரியோ பீரிஸ்*** மற்றும் சானாவின் தாயாராக ***வசந்தா அப்பாதுரை***, 'கொச்சை'த் தமிழ் பேசும் சிங் கள பண்டாவாக ***எஸ்.ஆறுமுகம்***, பண்டிதத் தமிழ் பேசும் சட்டம்பி யாராக ***R.S.சோதிநாதன் மற்றும் S.S.கணேசபிள்ளை, M. திருநாவுக்கரசு, 'நந்தி', R.விக்டர், டோசன் பெர்னாண்டோ, , சரசாம்பிகை சுப்ரமணியம்*** முதலான மூத்த நடிகர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சற்சொரூபவதி நாதன், கோகிலவர்த்தனி சுப்ரமணியம் [சிவராஜா], G.P.வேதநாயகம்* ஆகிய இளைய தலைமுறையினரும் பங்கேற்றார்கள்.

அது ஒலிபரப்பான காலத்தில்தான் - 'ஈழகேசரி'யில் 1935 -1939 காலப்பகுதியில் தாமெழுதிய சில நடைச் சித்திரங்களின் தொகுப்பை 'பரியாரி பரமர்' எனும் தலைப்பில் சானா நூலுருவாக்கியிருந்தார். அதில் அவரே வரைந்த சித்திரங்கள் அவரது ஓவியத் திறமையைப் பறைசாற்றுவன. அந்நாளில் கொழும்பு நாடக மேடையில் புகழ் பெற்றிருந்த ஒரு நடிகர் ***லடிஸ் வீரமணி***. [நெறியாளர் சுஹைர் ஹமீட் மூலம் பின்னாளில் 1970 இல் அவர் எனக்கு அறிமுகமானார்.]

நடிகவேளின் 'ரத்தக் கண்ணீர்' நாடகத்தைப் பலமுறை மேடையேற்றி 'நடிகவேள்' பட்டத்தையும் இலங்கையில் சுவீகரித்துக் கொண்டவர் அவர். மஹாகவியின் 'கண்மணியாள் காதை' யை வில்லுப்பாட்டாக நாடெங்கிலும் நடாத்திப் புகழீட்டிய லடிஸும் ஆரம்ப கால வானொலி நடிகராகவும் பெயர் பதித்தவர்தான்.

மேடை வேறு; வானொலி வேறு. வானொலி நடிகருக்கு வாசிப்புத் திறன் அவசியம். லடிஸுக்கு அதில் கொஞ்சம் பிரச்சினை இருந்திருக் கலாம். அதனாலோ என்னவோ ஒத்திகைகளுக்கு ஒழுங்காக அவர் சமூகமளிப்பதில்லைப்போலும். அதனால், மேடையில் கோடை இடி யென முழங்கும் ஒப்பற்ற நடிகராக அவர் விளங்கியபோதிலும் வானொலி நடிகராகத் தொடரவோ புகழீட்டவோ அவரால் முடிய வில்லை.

***இரா.பத்மநாதன், பாலுமகேந்திரா, T. மயில்வாகனம், T.தர்மலிங்கம், N.P.தர்மலிங்கம், S.K.தர்மலிங்கம், S.விஸ்வரத்தினம் ராம். சுந்தரலிங்கம், சரா. இம்மானுவேல், ஜோர்ஜ் சந்திரசேகர், ஜோக்கிம் பெர்னாண்டோ, A. சிவதாசன், மாஸ்டர் சிவலிங்கம், மகாராணி, பரமேஸ்வரி, யோகா தில்லைநாதன்***, என 60 களில் தெரியப்பட்டோரில் பாலு மகேந்திரா தமிழகம் சென்று புகழ்க் கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினார். சிவதாசன் 'வாடைக் காற்று'த் திரைப்படத் தயாரிப்பாள ராக மாறிப் புகழீட்டினார்.

இரா.பத்மநாதன் வானொலி மாமாவாக, நேரடி வர்ணனையா ளராக, திரைப்பட நடிகராக பல அவதாரங்கள் எடுத்தார். தொழிலாளர் வேளை', 'சிறுவர் மலர்' போன்ற நிகழ்ச்சிகளைச் சுவைபடத் தொகுத்து வழங்கிய ராம்.சுந்தரலிங்கம் 80 களின் பின் வானொலியுடன் தொடர் பற்றுப்போனார். சரா.இம்மானுவேலும், யோகா சொக்கநாதனும் ஜோர்ஜும் ஜோக்கிமும் அறிவிப்பாளர்களாகவும் மாறி நீண்டகாலம் வானலைகளை வசப்படுத்தியமை பலரும் அறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகரின் வசந்த காலமும்

## வானொலி நடிகர்களின் பொற்காலமும்

**70** களின் ஆரம்பத்தில் இடம்பெற்ற வானொலி நடிகர்களுக்கான குரல் தேர்வில் தெரிவானவர்களுள் ***C.நடராஜசிவம், போல் அன்ரனி, S.ராமதாஸ்***, [இவர்கள் அக்காலகட்டத்தில் பகுதி நேர அறிவிப்பாளர்களாகவும் தெரிவானார்கள்.] மற்றும் ***S.செல்வசேகரம், K.சந்திரசேகரன், M.சுந்தர்ராஜன், R.திவ்யராஜன், M.K.ராகுலன், செல்வம் பெர்னாண்டோ, மணிமேகலை ராமநாதன், மகேஸ்வரி ரட்னம், நீலாம்பிகை சுப்ரமணியம், ஜெயந்தி அப்புக்குட்டி, ஜெயதேவி கந்தையா, விஜயாள் பீட்டர்*** போன்றவர்கள் இலக்கிய, புராண மற்றும் மலையக வழக்குட்பட சமூக நாடகங்களிலும் தமதாற்றலை எண்பித்தார்கள்.

***K.S.பாலச்சந்திரன், T.ராஜகோபால், S.ஜேசுரட்ணம், P.N.R.அமிர்தவாசகம். பிராங் புஷ்பநாயகம், K.கந்தசாமி, இரா. காசிநாதன், J.ஜெயமோகன், ஜீவா நாவுக்கரசன், றொபேட் வேதநாயகம், P.விக்னேஸ்வரன், ஆனந்தராணி ராஜரத்தினம், சுப்புலக்ஷ்மி காசிநாதன், கமலினி செல்வராஜன், ஷாமினி ஜெயசிங்கம், செல்வநாயகி தியாகராஜா, தேவமனோஹரி விஜயேந்திரா, சந்திரப்பிரபா மாதவன், சுமதி பாலஸ்ரீதரன்*** போன்றோர் குறிப்பாக யாழ் வழக்கு நாடகங்களிலும் கிராம சஞ்சிகையில் ஒலித்த கிராமிய நாடகங்களிலும் 'கதம்பம்' ஆகப் பெயர் மாற்றம் பெற்ற ['மத்தாப்பு'] நகைச் சுவைக் குறுநாடகங்களிலும் தமது மண் வாசனை வீசும் யதார்த்த நடிப்பால் ரசிக உள்ளங்களை ஈர்த்துத் தம் வசமாக்க, 70 களில் இலங்கை வானொலித் தமிழ் நாடகங்கள் புதிய பாதையில் பீடுநடை போட ஆரம்பித்தன.

வாசகரின் 'சிலோன் சேவா ஸ்டேஜ்' நாடக நடிகர்களுட்பட கொழும்பு நாடக மேடைகளில் நடித்துக் கொண்டிருந்த நடிகர்கள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் வானொலி நடிகர்களாக உள்ளீர்க்கப்பட்ட இக்காலகட்ட நடிகர்கள் அதிர்ஷ்டசாலிகள். ஆட்சியில் இருந்த சுதந்திரக்கட்சி அரசானது தென்னிந்தியத் திரைப்படங்களையும் தமிழ் சஞ்சிகைகளையும் தடை செய்தமையானது வானொலி நாடகங்களுக்கான தேடலையும் வரவேற்பையும் அதிகப்படுத்தி, வானொலி வர்த்தகசேவை விளம்பரதாரர் நிகழ்ச்சிகளில் நாடகங்கள் பிரதானமாக இடம் பெறவும் வழி வகுத்தது. எனவே வர்த்தக சேவையில் தொடர் நாடகங்கள் புற்றீசல்கள் போலக் கிளம்பிவர நடிகர்களுக்கான தேவையும் சந்தர்ப்பங்களும் அதிகரித்தன.

70 களில் கலையகத்தினுள்ளேயே ஒலிபரப்புக் கருவிகள் இடம் பெறத் தொடங்கிவிட்ட காரணத்தால் சானா காலத்து நேரடி நாடக ஒலிபரப்பில் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகள் பல இல்லாதொழிந்தன. அவசியம் ஏற்படும் இடங்களில் நிறுத்தி நிறுத்தி ஒலி பரப்பைத் தொடர முடிந்ததால் நடிகர்களுக்கு இயல்பாக நடிக்கக்கூடிய சுதந்திரம் கிடைக்கப்பெற்றது. ஒத்திகையையும் ஒலிபரப்பையும் ஒரே நாளிலேயே செய்து முடிக்கக்கூடிய நிலைமையுருவானது.

1973 இல் நாடகத் தயாரிப்பாளராகப் பதவியேற்ற வாசகரின் நாடக நெறியாள்கை முறைபற்றி P.விக்னேஸ்வரனின் 'வாழ்ந்து பார்க்கலாம்' வானொலி நாடக நூலின் முன்னுரையில் இருந்து சில தகவல்களை அறியமுடிகிறது.

*"வாசகர் அவர்கள் உணர்ச்சி வசப்படுபவர். அதை வெளிப்படையாகவே காட்டிக்கொள்பவர். நாடக ஒத்திகை, ஒலிப்பதிவுகளின் போது அவர் தன்னை மறந்த நிலையில் நின்று நடிகர்களுக்கு நடித்துக் காண்பிப்பார். வரிக்குவரி வசனங்களைச் சொல்லிக் கொடுப்பார். நடிகர்கள் உணர்ச்சிகரமாக நடிக்கும்போது அவர்களின் உணர்ச்சிக்கேற்ப இவரின் முகபாவங்கள் மாறிக்கொண்டேயிருக்கும். ஆரம்பத்தில் இத்தகைய நெறியாள்கையால் நான் [விக்னேஸ்வரன்] கவரப்பட்டாலும் காலப்போக்கில் இதில் குறைபாடு இருப்பதை உணர்ந்தேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காரணம், காலம் செல்லச்செல்ல அவரின் நாடகங்களில் அனைவரும் ஒரே பாணியில் நடிக்கத் தொடங்கிவிட்டார்கள். குறிப்பாக நடிகைகளும் புதிய நடிகர்களும் வாசகர் போலவே வசனங்களை ஏற்ற இறக்கங்கள் நிறுத்தங்களுடன் நடிக்கத் தொடங்கிவிட்டார்கள். நடிகர்களின் சொந்தப் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. நடிப்பும் யதார்த்தத்தில் இருந்து சற்று மிகைப்பட்டதாக இருந்தது". -*

என விக்னேஸ்வரன் குறிப்பிடுகிறார்.

'கலையரசு' சொர்ணலிங்கத்தின் நாடகப் பட்டறையில் இருந்து பட்டைதீட்டப்பட்ட வாசகரால் அத்தகைய ஒரு மரபு வழிப் பயிற்சி முறையில் இருந்து தன்னை மாற்றிக்கொள்ள உடனடியாக முடியவில்லை என்பதை இதன் மூலம் உணரமுடிகிறது. அந்த வகையில் T.ராஜேந்தரின் திரைப்படங்களை - அவரின் நெறியாள்கை முறையை/குறையை வாசகரதும் ஞாபகப்படுத்துகிறது.

ஆயினும் 'தணியாத தாகம்' திரைப்படச் சுவடியை வானொலிக்கென மாற்றி எழுதித் தயாரித்த பின்னைய காலத்தில் வாசகரும் ஓரளவு மாறிவிட்டமை தெரிகிறது. அவரது மாற்றத்துக்கு சில்லையூராரின் தூண்டுதலும் பிடிவாதமும் காரணமாக இருந்திருக்கலாம்.

வாசகரது காலத்தில் வர்த்தக சேவையிலும் தொடர் நாடகங்கள் அதிகமாக ஒலிபரப்பாக ஆரம்பித்தன. அதனால் அவற்றில் நடித்த நடிகர்களும் பிரபலமானதுடன் கணிசமான அளவு வருமானமும் ஈட்டலாயினர். இன்னபிற காரணங்களால் தேசிய சேவையில் இடம்பெற்ற நாடகங்களுக்கான மவுசும் கொஞ்சம் குறையலாயிற்று.

ஏற்கெனவே கிராம சஞ்சிகை நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்தவர்கள் தேசியசேவை நாடகங்களில் நடிக்கமுடியாதெனும் கட்டுப்பாடும் இருந்தது. போதாக்குறைக்கு வர்த்தக சேவை நாடகங்களில் நடிக்க விரும்பும் நடிகர்களும் தேசியசேவை நாடகங்களில் நடிக்க முடியாதெனும் விதியையும் வாசகர் ஏற்படுத்தியதால் தேசிய சேவையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நடிகர் வங்கி' சுருங்கிப்போனது. அதிர்ஷ்டமும் திறமையும் உள்ள நடிகர்கள் பலரும் வர்த்தக சேவையில் அடைக்கலமாகி விட்டார்கள்.

அக்காலகட்டத்தில் 'கிராம சஞ்சிகை' போன்ற கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளராக பி.குமாரலிங்கமும் வர்த்தகசேவை நாடகத் தயாரிப்பாளராக பி.விக்னேஸ்வரனும் பணியாற்றினார்கள். வர்த்தக சேவை நாடக நடிகர்களுக்கான சன்மானத் தொகை [Payment] விளம்பரதாரர்களாலேயே வழங்கப்பட்டதால் அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தேசியசேவை முகாமையாளர்கள் கைகளில் இருக்கவில்லை. அதனால் காலப்போக்கில் கிராமசேவை, முஸ்லிம்சேவை நடிகர்களுட் படக் குரல் பரிசோதனை மூலம் தெரிவு செய்யப்படாத நடிகர்களும்கூட வர்த்தகசேவை நாடகங்களில் நடிக்க வாய்ப்புப் பெற்றனர்.

1970 களில் 'பொப்பிசைச் சக்கரவர்த்தி' மனோகரனும் பிரபல சிறுகதை, நாவல் எழுத்தாளர் அங்கையன் கைலாயநாதனும் மிகக் குறுகிய கால எல்லையில் நாடகத் தயாரிப்பாளர்களாக இருந்துள் ளார்கள். கயிலாயநாதன் தமது 'கடற்காற்று' நாவலைத் தானே வானொலிக்கான வடிவத்தில் தொடர் நாடகமாக எழுதித் தயாரித்தளித்தார். என்பதும் அதில் முதிய மீனவனது பாத்திரத்தில் S.ஜேசுரட்னம் வாழ்ந்து காட்டினார் என்பதும் பதிவுக்குட்பட வேண்டிய தகவல்கள். மனோகரனும் 'சறுக்கல்' உட்படச் சில நாடகங்களைத் தானே எழுதித் தயாரித்துள்ளார்.

அறிவிப்பாளராக இருந்த எஸ்.நடராஜாவும் சானாவின் சேவை நீடிப்புக் காலத்தில் ஒருசில நாடகங்களைத் தயாரித்தளித்தார். முதற் பரிசீட்டிய எனது 'நீதியின் நிழலில்' ஒரு மணி நேர நாடகமும் 1970 இல் அவரது தயாரிப்பிலேயே ஒலிபரப்பானது. *'70 களில் வானொலி நாடகப் பிரிவுக்குச் சிறப்புத் தயாரிப்பாளர்களாகவும் எழுத்தாளர்களாகவும் நடிகர்களாகவும் சிலரைக் கூட்டுத்தாபனம் வரவேற்றது. நா.சுந்தரலிங்கம், இ.முருகையன், A.தாசீஸியஸ் என்போர் அவ்வாறாக அழைக்கப்பட்டோரில் சிலர்'* எனக் கலாநிதி சி.மௌனகுரு அகளங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னின் 'அன்றில் பறவைகள்' நூல் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் அவர்களது பங்களிப்பின் மூலம் சிறப்பான 'அறுவடை' ஏதும் நிகழ்ந்ததாகத் தகவல் இல்லை!

1977 இல் பூந்தான் யோசேப்பு குழுவினரின் 'செனகப்பு' எனும் 'ஜெனோவா' நாட்டுக்கூத்து அ.தாசீஸியஸின் தயாரிப்பில் இலங்கை வானொலியில் நான்குவாரத் தொடராகப் பாடி நடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. 1962 இல் அதே நாட்டுக்கூத்து அதே குழுவினரால் ஏற்கெனவே கிராம சஞ்சிகை நிகழ்ச்சியில் நேரடியாக ஒலிபரப்பான ஒன்று தான்!

தேசிய சேவை நடிகர்கள் பலரும் வர்த்தக சேவைக்குள் தஞ்சமடைந்ததாலோ என்னவோ வாசகரின் காலத்தில் 1977 இல் வானொலி நாடக நடிகர்களுக்கான குரல் தேர்வு ஒன்று நடாத்தப்பட்டதாகத் தெரிகிறது. அதில் தெரிவானவர்கள் பற்றிய விபரம் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரனின் சாதனைக் காலம்

பயிற்சிக்கூட ஒருங்கமைப்பாளராக K.M.வாசகர் 1979 இல் பதவி உயர்வு பெற்ற பின்பு தேசிய சேவைத் தமிழ் நாடகத் தயாரிப்பாளராக நியமிக்கப்பட்ட S.விக்னேஸ்வரன் தமது முன்னைய அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டு சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

நடிகர்களைப் பொறுத்தமட்டில் 1977 இல் கொழும்பில் தமிழர் களுக்கெதிராக இடம்பெற்ற வன்முறைகள் காரணமாகப் பல தமிழ் வானொலி நடிகர்கள் இடம்பெயர்ந்தமையாலும் கொழும்பில் வானொலி நிலையத்துக்கு அருகாமையில் 5 மைல் சுற்றலாடலுக்குள் இருப்பவர்களே வானொலிக் கலைஞர்களாகலாம் என்ற கட்டுப்பாடு காரணமாகவும் யாழ்ப்பாணம் உட்பட வெளி மாவட்டங்களில் வசித்து வந்த பல திறமையான கலைஞர்கள் கண்டுகொள்ளப்படாதிருந்தனர்.

நடிகர் பட்டியலில் இருந்த சில நடிகர்களும்கூடத் தேசிய சேவை, வர்த்தக சேவை என அங்குமிங்குமாக அலைபாய்ந்து இரண்டிலுமே சந்தர்ப்பம் பெறமுடியாது குழம்பிப்போயிருந்தனர். இத்தகைய பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்காகப் பட்டியலில் இருக்கும் நடிகர்களுக்கான ஒரு மீள் தேர்வுட்பட நாடளாவிய ரீதியில் நடிகர்களுக்கான ஒரு குரல் தேர்வை நடத்தி புதியவர்கள் பலரையும் முன்னவர்களுடன் இணைத் துக்கொண்டார் P. விக்னேஸ்வரன்.

அக்குரல் தேர்வுகளின் போது ஏற்கெனவே இருந்தவர்களுட்படச் சுமார் 85 பேர் மட்டில் பட்டியலில் இடம்பிடித்தனர். விக்னேஸ்வரனே தமது நாடக நூலின் முன்னுரையில் இப்பட்டியலைத் தந்துள்ளார். அவர் களுள் 60 பேர் மட்டில் ஓரளவுக்குப் புதியவர்கள். '77 இல் தேர்வான ஒரு சிலரும் இதில் இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***G.P.வேதநாயகம், S.கணேஸ்வரன், பாலசிங்கம் பிரபாகரன், S.வாசுதேவன், அருணா செல்லத்துரை, S.எழில்வேந்தன்,*** [இவர்கள் பின்னர் பகுதி நேர அறிவிப்பாளர்களாகவும் சிலர் தயாரிப்பாளர்களாகவும் தெரியப்பெற்றார்கள்.] ***T.மயில்வாகனம், றோச் அருளப்பு,*** [இவர்கள் இருவரும் திருகோணமலைவாசிகள்.] ***S.S.அச்சுதன்பிள்ளை,*** [நடிகர் S.S.கணேசபிள்ளையின் இளைய சகோதரர்.] ***கோபால்சங்கர், S.நாகேந்திரன், நாகேசு தர்மலிங்கம், P.C. தர்மலிங்கம், லிங்க வேலாயுதம், S.நாகராஜா, S.தேவராஜா, R.ரகுநாதன், S.குமாரவேல், R.ராஜரத்தினம், S.விக்னேஸ்வரன், பரராஜசிங்கம், சிவபாலன், S.சிவசுந்தரம்*** முதலானோரும் ***A.M.C.ஜெகசோதி, வனஜா ஸ்ரீநிவாசன், சாந்தி சச்சிதானந்தம், திலகா தில்லைநாதன், திலகாரட்னம், சகுந்தலா சின்னையா, சசி பரம், பூங்கொடி ராஜரத்தினம் பாக்கியம் கந்தசாமி, மாதுரிதேவி கணேசதுரை, சுபத்ரா கதிர்காமத்தம்பி, விஜயகுமாரி நடேசபிள்ளை, ஜமுனாராணி நடராஜா*** போன்ற நடிகையரும் குறிப்பாக யாழ் பேச்சுவழக்கு நாடகங்களில் பங்கேற்றனர்.

***ஸ்ரீதர் பிச்சையப்பா, ராஜா கணேசன், குயின்ரஸ் ஜீவன், ஜவஹர் பெர்னாண்டோ, பூதரன் பெர்னாண்டோ, ரஞ்சித் பெர்னாண்டோ, B.விஜயராஜா, N.உதயகுமார், கலைச்செல்வன், ஜோபு நஸீர், ரவிசங்கர் சண்முகம், வசந்தி சண்முகம், அம்பிகா சண்முகம், நித்யகல்யாணி காராளபிள்ளை, சிவரஞ்சனி பத்மநாதன், ஸ்ரீதேவி கந்தையா, உமாசந்திரா முத்தையா, T.புஷ்பலீலா, லலிதா பெர்னாண்டோ, இந்திராணி ஜோர்ஜ் பெர்னாண்டோ, வேர்ஜினி பெர்னாண்டோ*** முதலானவர்கள் சிறப்பாக மலையக வழக்கிலும் [சினிமாத் தமிழ் சார்ந்த] பொது வழக்கிலும் உருவான நாடகங்களுக்கும் உயிர் கொடுத்தார்கள். செந்தமிழ் வழக்கில் இடம்பெற்ற புராண, இதிகாச, இலக்கிய நாடகங்களில் உச்சரிப்புத் திறனுடன் பேசவல்லோர் இருபகுதிகளில் இருந்தும் தெரிவாகினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதி கருதி யாழ், மலையகம் எனக் கலைஞர்களை நானிங்கு வகைப்படுத்தியுள்ள போதிலும் செந்தமிழ் வழக்கிலும் பொது வழக்கிலும் இயல்பாக நடிக்கக் கூடியவர்களாக இரு பிரிவுகளிலும் ஒரு சிலர் இருக்கத்தான் செய்தார்கள். இவர்களுள் வனஜா ஸ்ரீநிவாசன் தவிர மட்டு நகரைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் வேறு யாரென எனக்குத் தெரியவில்லை. நினைவுத் தடத்தில் 40 ஆண்டு காலம் பின்னோக்கிச் சென்று விக்னேஸ்வரன் போன்றவர்கள் தாம் அவர்களை அடையாளம் காட்டக்கூடும்.

விக்னேஸ்வரன் தயாரிப்பாளராக இருந்த காலத்தில் அவரே தமது நூல் முன்னுரையில் குறிப்பிடுவது போல மலையகத்தில் இருந்து எழுத்தாளர்கள் எவரும் வர்னொலி நாடகங்கள் எழுதாத காரணத்தால் மலையகப் பேச்சுப்பாணி நாடகங்கள் எதுவும் ஒலிபரப்பாகவில்லை. அஷ்ரப்கான் போன்றவர்களால் எழுதப்பட்ட இந்திய [சினிமாப் பாணி] பேச்சு வழக்கு நாடகங்கள் சில ஒலிபரப்பாயின.

ஏதோ ஒரு பிரதி அதை எப்படியோ போட்டு முடித்து நேரத்தை ஒப்பேற்றிவிடும் போக்கு விக்னேஸ்வரனுக்குக் கிடையாது. நாடகத் தயாரிப்பை மிகுந்த கரிசனையுடன், செவ்வனே செய்து முடிக்கவேண்டும் எனும் கடமையுணர்வுடன் அணுகியவர் அவர். நாடகப் பிரதிகளைத் தேடி அவர் எழுத்தாளர்களை முற்றுகையிட் டார்.

*"நாடகம் தயாரிப்பதற்கு மிக முக்கியமானது பிரதி. அதை போதிய அளவு பெறுவதற்கும் தரத்தை விருத்தி செய்வதற்கும் நான் மிகுந்த அளவில் உழைக்க வேண்டியிருந்தது. யாழ்ப்பாணத்துக்குச் சென்று எழுத்தாளர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து எழுதத் தூண்டியதோடு எழுதி அனுப்பப்படும் பிரதிகளை எழுத்தாளருடன் நேரடியாகவோ அல்லது கடித மூலமோ விவாதித்துத் திருத்தி வடிவமைப்பித்தேன்"*, எனத் தனது நூலில் குறிப்பிடும் விக்னேஸ்வரன் தனது நெறியாள்கை முறை பற்றியும் விரிவாகவே எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*" ஒரு நடிகனுக்கு எப்படி வசனத்தைப் பேசுவது என்று சொல்லிக் கொடுத்துப் பேசுவிப்பது நடிப்பல்ல, என நான் கருதியதால் நடிகர் களுக்குப் பாத்திரத்தின் தன்மையை விளங்கப்படுத்தி, குறிப்பிட்ட வச னங்கள் என்ன அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளன, அதில் வெளிக்காட் டப்படவேண்டிய உணர்ச்சிகள் எவை என்று நான் எதிர்பார்க்கிறேன் என்பதை விளக்குவதன் மூலம், நடிகர்கள் அதை உணர்ந்து கொண்டு, தம் சொந்தத் திறமையினால் அவற்றை வெளிக்கொணரும்போது அவை தத்ரூபமாகவும் வேறுபாடுகள் நிரம்பியனவாகவும் இருக்கும் என்பதால், அத்தகைய நெறியாள்கையைக் கடைப்பிடித்தேன். இத னால் நடிகர்களுக்கு நாடகத்தில் ஈடுபாடு அதிகமாகியது".*

என விபரிக்கும் P. விக்னேஸ்வரன் மேலும் நாடக ஒத்திகை பற்றி-

*"ஒத்திகைகளைக் குறைத்தேன். நடிகர்கள் திருப்பித் திருப்பி பல தட வைகள் ஒத்திகை பார்க்கும்போது அவர்கள் அறியாமலேயே ஓர் இயந் திரத்தன்மை ஏற்பட்டு விடுகிறது; புதுமை கெட்டுவிடுகிறது, என்பதால் நான் முதலாவது வாசிப்பிலேயே வசனங்களைத் திருத்துதல் முதற் கொண்டு அவற்றைப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் வேண்டிய விளக்கங்களை அளித்தபின் ஓர் ஒத்திகை மட்டும் பார்த்துவிட்டு நேரடி யாக ஒலிப்பதிவிற்குப் போவதை விரும்பினேன். இதனால் ஒலிப்பதி வின்போது சகலரும் புதுமை குன்றாத ஈடுபாட்டோடு செயற்பட முடிந் தது"* - எனவும் விளக்குகிறார்.

இவ்வாறாக, ஒவ்வொரு நடிகரும் தத்தம் பாத்திரத்தின் தன் மையை உணர்ந்து உட்கிரகித்து வெளிப்படுத்த வகைசெய்வதன் மூலம் பாத்திரங்களின் வேறுபட்ட தனித்தன்மைகள் புலப்படுத்தப் பட்டு, முழுமையான ஒரு ரசானுபவத்தை நேயர்களிடத்து தொற்ற வைக்கவும், ஒவ்வொரு நடிகரதும் நடிப்பாற்றல் வெளிக்கொணரப் படவும் வழிகோலுவதாக விக்னேஸ்வரன் கையாண்ட புதிய உத்தி முறை அமைந்துள்ளமையை உணர முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுமவர், சாதாரண பேச்சுவழக்கு நாடகங்களில் எழுத்தில் உள்ளதை உள்ளபடி ஒப்புவிக்காது, நடிகர் தமதியல்புக்கேற்ப சொற்க ளையோ வசனங்களையோ மாற்றியமைத்து நடிக்க அனுமதித்ததுடன் ஒலிப்பதிவின்போது எவ்விதக் குறுக்கீடுமின்றித் தொடர்ச்சியாக ஒலிப் பதிவை மேற்கொள்வதன் மூலம், நாடக ஓட்டத்தைத் தடை செய்யாமல், பாத்திரங்களுடன் ஒன்றித்து நடிக்கும் நடிகர்களின் உணர்ச்சி வெளிப் பாட்டுக்குப் பங்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதன் மூலம், நடிகர் களின் உச்சபட்சப் பங்களிப்பைப் பெறமுடிந்தமையையும் விளக்க மாக விபரிக்கின்றார்.

ஒலிப்பதிவு முடிந்தபின் 'எடிட்டிங்' அறையில் அவரது நேரத் தையும் உழைப்பையும் உறிஞ்சும் வேலை மீதமிருக்கும். குறியிசை, இடையிசை போன்ற ஒலிச் சேர்க்கைகளை, வெட்டல் – ஒட்டல்கள் என நுணுக்கமான வேலைகளைப் பார்க்கவேண்டியிருக்கும். ஆயினும் நாட கத்தின் இறுதி வடிவம் தரம் வாய்ந்ததாக அமையவேண்டுமே எனும் ஆதங்கம் அவரது சிரமங்களை மறக்கடித்து விடும்.

வானொலி நாடகத் தயாரிப்பில் ஒலிக்குறிப்புகளைப் பாவிப்பது, தேவையான இசையைத் தேவையான நேரத்தில்/இடத்தில் பிரயோ கிப்பது போன்ற மிக நுட்பமான செயற்பாடுகளுக்காக இலங்கை வானொலியின் இசைத்தட்டுக் காப்பகங்களில் மணிக்கணக்கில் தேடு தல் வேட்டை நடாத்தும் அவரது இயல்பு, அவரது சலியாத முயற்சி யையும் நாடகக் கலைமீது அவர் கொண்டுள்ள குன்றாத ஆர்வத்தை யும் கோடிட்டுக் காட்டுகின்றன.

நாடக நிகழ்ச்சிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காகத் தயாரிப் பாளருக்கான தனது வேலைகளைத் தனி ஒருவராகத் தானே சுமக்கா மல், ஞாயிறு தோறும் காலை 10.00 - 10.30 க்கு இடம்பெறும் 'கதம்பம்' நிகழ்ச்சியை S.வாசுதேவனிடமும் புதன்கிழமைகளில் மாலை 7.45 – 8.00 க்கு இடம்பெறும் 15 நிமிட நாடகங்களை ஜோர்ஜ் சந்திரசேகரனிடமும் ஒப்படைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இலங்கை வானொலித் தமிழ் நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாட்டோடு பணியாற்றிய விக்னேஸ்வரன் இலங்கையின் தேசியத் தொலைக்காட்சியான 'ரூபவாஹினி' உதயமாகி 1982 இல் குறு நடை போட ஆரம்பித்தபோது அதன் தமிழ்ப் பிரிவின் கலைத்துறையை வளர்த்தெடுக்கவென நிறைவேற்றுத் தயாரிப்பாளராகப் பதவியேற்றுச் சென்றமையானது தமிழ் வானொலி நாடக நடிகர்களோ அபிமானி களோ எதிர்பாராத ஒரு நிகழ்வாகும்.

நடுநிலை கோணாத நேர்மையும், அயரா உழைப்பும், சலியாத தேடலும், தீராத கலைத் தாகமும், நேரான சிந்தனையும், சக நடிகர்க ளிடத்து நேயமும் அக்கறையும் ஒருங்கே கொண்டவரான விக்னேஸ்வரன் வானொலி நாடகத் தயாரிப்பாளராக மிகக் குறுகிய காலமே பணியாற்றிய போதிலும் அக்காலம் இலங்கை வானொலித் தமிழ் நாடக வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்ட ஒரு சாதனைக் காலம் எனக் கூறின் அதிற் தவறில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் சந்திரசேகரனின் தயாரிப்பில்

## பன்னீராண்டுகள்... [1982 - 1993]

**50 - 70** களில் தலைநகரில் தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதில் பெரும் பங்காற்றிய ஒரு கல்லூரிதான் கொட்டாஞ்சேனை, சென். பெனடிக்ற் கல்லூரி. அக்கல்லூரித் தமிழ்ச் சங்கச் செயற்பாடுகள் அந்நாட்களில் வியந்து போற்றப்பட்டன. அக்கல்லூரித் தமிழ்ப் பிரிவு ஆசான்களாகத் திகழ்ந்த திரு.யோசப்பொன்ராஜன், வித்துவான் நீ.மே.யோ.வேதநாயகம், திரு.வ.இராசையா மற்றும் இராம் சுந்தரலிங்கம் போன்றோரின் ஆற்றுப்படுத்தல்கள் பல நல்ல கலைஞர் களும் அறிவிப்பாளர்களும், எழுத்தாளர்களும் உருவாகக் காரணமா யின.

ஆரம்பகால அறிவிப்பாளர் எஸ்.புண்ணியமூர்த்தி, அறிவிப்பாளர் களும் நடிகர்களுமான ஜோர்ஜ் சந்திரசேகரன், ஜோக்கிம் பெர்னாண்டோ, நடராஜசிவம், விமல் சொக்கநாதன், G.P. வேதநாயகம், ஹரன் சந்திரசேகரன், ஜவஹர் பெர்னாண்டோ, மற்றும் ரஞ்சித் பெர்னாண்டோ, பூதரன் பெர்னாண்டோ, இக்னேஷியஸ் மொறாயஸ், மற்றும் ஈழத் திரைப்பட வானொலி நடிகர்களான 'உபாலி' செல்வ சேகரம், B. விஜயராஜா, 'கதம்பம்' ஆசிரியர் K.V.S.மோகன் எனப் பலரும் அக்கல்லூரி ஈன்ற கலைச் செல்வங்களே! தமிழகத் திரைவானில் கதை வசனகர்த்தாவாகவும் இயக்குனராகவும் 40, 50 களில் மின்னிய A.S.A.சாமியும் வில்லன் நடிகனாகத் தலைகாட்டிய ['விளக்கேற்றியவள்' புகழ்] E.L.ஆதித்தனும் கூட அக்கல்லூரிப் பழைய மாணவர்களே.

விக்னேஸ்வரனைத் தொடர்ந்து 1982 இல் நாடகத் தயாரிப்பாளரான ஜோர்ஜ் சந்திரசேகரன் நடிப்பின் பாலபாடத்தைக் கற்றுக்கொண்டது சென்.பெனடிக்ற் கல்லூரி மேடையில்தான். ஒரு சிறுகதை எழுத்தாள ராக வாசகர் மட்டத்தில் அறிமுகமாகுமுன் அவரது கலைத்துறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவாயிலாக அமைந்தது கலாநிதி கா.சிவத்தம்பி அவர்கள் வானொலியில் நடத்திய 'இளைஞர் மன்றம்'.

அதிற் புடம்போடப்பட்டுப் பின் வானொலி நடிகராக, செய்தி வாசிப்பாளராகப் படிப்படியாக முன்னேறிய ஜோர்ஜுக்கு P. விக்னேஸ்வரனின் காலத்தில் உதவித் தயாரிப்பாளராகப் பணியாற்றிய அனுபவமும் கைகொடுக்க P.விக்னேஸ்வரன் போட்ட நாடக ராஜ பாட்டையில் நடிகர்கள், எழுத்தாளர்கள் தட்டுப்பாடின்றி பீடு நடை போட முடிந்ததில் வியப்பேதுமில்லை!

83 ஆடிக் கலவரம் வந்து வானொலித் தமிழ்ச் சேவையைத் தலைகீழாக மாற்றி ஆட்டங்காண வைத்துவிட்டது. அதனால் அடுத்த மூன்றாண்டுகள் மறு ஒலிபரப்புக் காலமாகத் தமிழ் வானொலி நாடக உலகை முடக்கிப் போட்டுவிட்டது. மீண்டும் 87 இல் வானொலி நாடகத் தயாரிப்புகள் படிப்படியாக ஆரம்பமானபோது நடிகர்கள் பலரும் காணாமல் போயிருந்தார்கள். பிரதிகளுக்கும் தட்டுப்பாடு. ஜோர்ஜுக்கோ சோதனையும் சவாலுமாக மாறிப்போன ஒரு காலகட்டம்.

ஜோர்ஜ் சானாவிடம் நடிப்புப் பயின்றவர். அவரைப் போல ஓவியத்திலும் நாட்டம் கொண்டவர். வானொலி நாடகத் தயாரிப்பைப் பொறுத்த மட்டில் சானாவின் பாதிப்பு அவரிடமிருந்தது. எழுத்தில் இருப்பதை எவ்வித மாற்றமுமின்றி வாசிக்க வேண்டுமென எதிர்பார்ப்பார். ஒரு பிரபல நாடக எழுத்தாளர் தாமெழுதும் நாடகங்களில் நடிகர்கள் அனைவரும் சிரித்தபடி உரையாடினால்தான் நாடகம் 'சிரிப்பு' நாடகமாகக் களைகட்டும் என நினைத்தாரோ என்னவோ கண்டமேனிக்கு அடைப்புக்குறிக்குள் [சிரிப்பு] எனப் போட்டு வைப்பார்.

ஜோர்ஜின் தயாரிப்பில் ஒரு நாடகத்தில், அப்போது பகுதி நேர அறிவிப்பாளராகவும் இருந்த ஒரு நடிகர் நடிக்க வந்தார். ஒத்திகையின் போது 'சிரிப்பு' என வரும் இடங்களில் அவர் சிரிக்கவில்லை. *"Bracket*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இல் எழுதியிருப்பதை நீர் வாசிக்கவில்லையோ?"* என ஜோர்ஜ் கேட்டார். சிரிப்பை வருந்தி வரவழைக்க அவரால் முடியவில்லைப்போலும். அத னால் *''சிரிப்பு வருகுதில்லை'* என்றார் அவர் அழாக்குறையாக. *''நடிகன்னா சிரிக்க வேண்டிய இடத்தில சிரிக்கணும். அழவேண்டிய இடத்தில அழணும். சிரிக்க முடியலைன்னா நீர் நடிக்க லாயக்கில்லை. நடையைக் கட்டலாம்"* என்று ஜோர்ஜ் கண்டிப்பாகக் கூறி அவரை அனுப்பிவிட்டார். சக நடிகர்கள் முன் அவமானப்பட நேர்ந்ததால் அந்த நடிகர் ஜோர்ஜ் தயாரிப்பாளராக இருந்த காலத்தில் நடிப்பதையே நிறுத் திக்கொண்டு விட்டார். ஜோர்ஜின் கண்டிப்புக்கும் கறாருக்கும் இது ஒரு சிறிய உதாரணம்.

80 களின் பிற்பகுதியில் ***R.யோகராஜன், மஹதி ஹசன் இப்ராஹிம், தம்பியையா தேவதாஸ், S.S.நாதன், P.சீதாராமன், K.ஜெய கிருஷ்ணராஜா, லூக்கஸ் பெர்னாண்டோ கலிஸ்ரா லூக்கஸ், ரேலங்கி செல்வராஜா, தேவி கருப்பையா, நாகபூசணி கருப்பையா, குமுதினி ஜெகநாதன்,*** *[இவர்கள் பகுதி நேர அறிவிப்பாளர்களாகவும் எடுபட்டவர்கள்] மற்றும்* ***S.சுரேஷ்ராஜா, V.N.S.உதயசந்திரன், R.பகவான், K.M.சித்தானந்தன், K.T.சிவகுருநாதன், P.N.ஜெயசீலன், பத்மா குகபாலன், சிசிலியா ஜோக்கிம், குயின்ரஸ் ஜீவன், K.மோகன்குமார், R.ராஜசேகர், திருச்செல்வம், பரமேஸ்வரி கருப்பையா, நிலாமதி பிச்சையப்பா, பராசக்தி*** போன்றோர் உட்பட மற்றும் சில புதியவர்களும் வானொலி நடிகர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

***G.P.வேதநாயகம், S.கணேஸ்வரன், பாலசிங்கம் பிரபாகரன், S.வாசுதேவன், அருணா செல்லத்துரை, S.எழில்வேந்தன்***, [இவர்கள் பின்னர் பகுதி நேர அறிவிப்பாளர்களாகவும் சிலர் தயாரிப்பாளர் களாகவும் தெரியப்பெற்றார்கள்.] ***T.மயில்வாகனம், றோச் அருளப்பு,*** [இவர்கள் இருவரும் திருகோணமலைவாசிகள்.] ***S.S.அச்சு தன்பிள்ளை,*** [நடிகர் S.S.கணேசபிள்ளையின் இளைய சகோதரர்.] ***கோபால்சங்கர்,***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***S.நாகேந்திரன், நாகேசு தர்மலிங்கம், P.C. தர்மலிங்கம், லிங்க வேலாயுதம், S.நாகராஜா, S.தேவராஜா, R.ரகுநாதன், S.குமாரவேல், R.ராஜரத்தினம், S.விக்னேஸ்வரன், பரராஜசிங்கம், சிவபாலன், . S.சிவசுந்தரம், M.வரகுணன், முத்தையா ரத்னபாலன், P.சக்திவேல்*** முதலானோரும் ***A.M.C.ஜெகசோதி, வனஜா ஸ்ரீநிவாசன், சாந்தி சச்சிதானந்தம், திலகா தில்லைநாதன், திலகா ரட்னம், சகுந்தலா சின்னையா, சசி பரம், பூங்கொடி ராஜரத்தினம் பாக்கியம் கந்தசாமி, மாதுரிதேவி கணேசதுரை, சுபத்ரா கதிர்காமதம்பி, விஜயகுமாரி நடேசபிள்ளை, ஜமுனாராணி நடராஜா*** போன்ற நடிகையரும் குறிப்பாக யாழ் பேச்சுவழக்கு நாடகங்களில் பங்கேற்றனர்.

***ஸ்ரீதர் பிச்சையப்பா, ராஜா கணேசன், குயின்ரஸ் ஜீவன், ஜவஹர் பெர்னாண்டோ, பூதரன் பெர்னாண்டோ, ரஞ்சித் பெர்னாண்டோ, B.விஜயராஜா, N.உதயகுமார், கலைச்செல்வன், ஜோபு நஸீர், ரவிசங்கர் சண்முகம், வசந்தி சண்முகம், அம்பிகா சண்முகம், நித்யகல்யாணி காராளபிள்ளை, சிவரஞ்சனி பத்மநாதன், ஸ்ரீதேவி கந்தையா, உமாச்சந்திரா முத்தையா, T.புஷ்பலீலா, லலிதா பெர்னாண்டோ, இந்திராணி ஜோர்ஜ் பெர்னாண்டோ, வேர்ஜினி பெர்னாண்டோ*** முதலானவர்கள் சிறப்பாக மலையக வழக்கிலும் [சினிமாத் தமிழ் சார்ந்த] பொது வழக்கிலும் உருவான நாடகங்களுக்கும் உயிர் கொடுத்தார்கள். செந்தமிழ் வழக்கில் இடம்பெற்ற புராண, இதிகாச, இலக்கிய நாடகங்களில் உச்சரிப்புத் திறனுடன் பேச வல்லோர் இருபகுதிகளில் இருந்தும் தெரிவாகினர்.

ஜோர்ஜ் தயாரிப்பாளராக இருந்த பின்னைய ஆண்டு களில் - 90 களின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஒரு சில எழுத்தாளர்களின் நாடகங்கள், அவருக்கு இணக்கமான சில நடிகர்கள் எனக் குறுகிய ஒரு வட்டத்துக்குள் தன்னை அவர் குறுக்கிக் கொண்டுவிட்டதான ஒரு தோற்றப்பாட்டை உணரமுடிகிறது. 1993 இல் உடநலமின்மை காரணமாக அவர் முன்னதாகவே ஓய்வுபெற நேரிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த ஒரு சிறுகதை எழுத்தாளராக **60** களில் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட அவர் எழுதிய சில சிறு கதைகளின் தொகுப்பு நூல் '**ஜோர்ஜ் சந்திரசேகரனின் சிறுகதைகள்**' என்ற தலைப்பில் 1995 இல் வெளியிடப்பட்டு, அது அவ்வாண்டுக்கான சிறந்த சிறுகதை நூலுக் கான இலங்கைச் சாகித்ய மண்டலப் பரிசையும் வென்றது. '**ஒரு சருகுக்குள் கசியும் ஈரம்**', '**வானொலியும் நானும்**' எனத் தனது வாழ்க்கைச் சரித்ததின் சுவையான பகுதிகளின் அனுபவப் பகிர்வு களையும் அவர் நூல்களாக்கி வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலித் தமிழ் நாடக உலகம்...

## 1994 இல் இருந்து 2001 வரை

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல' எனும் வள்ளுவனின் கூற்றை எண்பிக்கவோ அல்லது நிரந்தர ஊழியர்கள் அல்லாத காரணத்தால், கால மாற்றத்துக்கு இயைபப் பழைய நடிகர்கள் சிலர் 'அந்தர்த்தானம்' ஆகிவிடப் புதியவர்களின் தேவை உணரப் படுவதாலோ தயாரிப்பாளர்கள் மாறும் போது நடிகர்களுக்கான புதிய குரல் தேர்வும் இடம்பெறுவது இயல்பாயிற்று. தயாரிப்பாளருடன் பரிச்சயம் கொண்ட சிலர் நல்ல நடிப்பாற்றல் பெற்றவர்களாகவும் இருக்கக் கூடும்; சில பாத்திரங்களுக்கு கச்சிதமாகப் பொருந்தவும் கூடும். ஆனால் குரல் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட நடிகர்களாக அவர்கள் இல்லாதவிடத்து 'தேசிய சேவை' நாடகங்களில் பங்கேற்பது முடியாத காரியம். அவர்களைப் போன்றவர்களை உள்ளீர்க்க ஒரே வழி குரல் தேர்வுதான்!

ஜோர்ஜுக்குப் பின் தயாரிப்பாளரான S.எழில்வேந்தன் கடமை யாற்றிய காலத்தில், 1994 இல் வானொலி நடிகர்களுக்கான ஒரு குரல் தேர்வு இடம்பெற்றது. அதில் ***ஜெயரஞ்சன் யோகராஜன், விமல்ராஜ் பாக்கியநாயகம், V.T. ராஜேந்திரா, முருகேசு ரவீந்திரன், M.N.ராஜா*** [இவர்கள் பின்னர் பகுதி நேர அறிவிப்பாளர்களாகவும் தெரிவானார் கள்]மற்றும் ***ஜே.கிரிஷ் குறூஸ், ரஞ்சினி ராஜ்மோகன், B.வாமலோசனன், 'சோக்கல்லோ' K.சண்முகநாதன், K.ஞானசேகரன், S.அம்பலவாணர், A.M.ஜேசுரட்ணம், பிலிப்ஸ் ஜெகநாதன், T.சுகிர்த ராஜ், லோறன்ஸ் செல்வநாயகம், S.P.டக்ளஸ், S.T.டக்ளஸ், J.M.சாந்திலேகா, மங்கள கௌரி விரகநாதன், நாகராணி பேரின்பராசா, புஷ்பராணி சிவலிங்கம், விஜயாம்பிகை ஞானமணி, சுபாஷினி ஞானசேகரம், சுமதி சோமசுந்தரம்*** போன்ற புதுக் குரல்கள் அறிமுகமாயின.

எழில்வேந்தனது காலத்துக்குச் சற்று முன்பின்னாக கே.ஞானசேகரம் சிறப்புத் தயாரிப்பாளராகக் குறுகிய காலம் பணி யாற்றியதாக அறியமுடிகிறது. எழிலுக்குக் பின் நாடகத் தயாரிப்பாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக ராஜபுத்திரன் யோகராஜன் பதவியேற்ற 1996 இல் நடைபெற்ற குரல் தேர்வில் செய்தி வாசிப்பாளரான இளையதம்பி தயானந்தா, பகுதி நேர அறிவிப்பாளர்களான ***I.கஜமுகன், அபர்ணாசுதன், சிதம்பரம்பிள்ளை சிவகுமார், கலைமகள்*** மற்றும் ***வாசுகி வைரவநாதன், லத்திகா விவேகானந்தன், சிவகங்கா சிவப்பிரகாசம், சுபாஷினிதேவி வேலாயுதம், ஜெயரூபா பத்மநாதன், கோபிகா சுவாமிநாதன், சுரனுதா, சுதர்சினி சிவரதன், கஜமதி, தர்ஷினி, ராணி ஜோசப், பத்மினி நடராஜன், A.R.திருச்செந்தூரன், சக்திதரன், சித்தார்த்தன், ஞானசேகரம், நாகேஸ்வரன், விபுலானந்தன், ராமநாதன் தமிழ்வாணன், தவமயூரன், கதிர்மணி, சுரேஷ், முரளி, பரமேந்திரா, A.M.ஜெயந்தி [கணேஸ்வரன்], K.T.தயாநிதி, K.M.மகாலிங்கம், R.ராஜதுரை, அபராஜிதன், உமாசுதன் சுப்ரமணியம், விஜயபவானி ஞானமணி, ராணி பொன்னம்பலம், ஜெனிற்ரா சிவபாலச்சந்திரன், நவமணி தயாளன், வனிதா நிரோஷினி, சத்யப்பிரியா, மல்லிகா கீர்த்தி, ஜோன் தோமஸ்*** எனப் பலரும் தெரிவாகி தேர்வுப் பட்டியலில் இடம் பிடித்தனர். அறிவிப்பாளர்களாகவும் பகுதிநேர அறிவிப்பாளர்களா கவும் எடுபட்டு உள்வீட்டுப் பிள்ளைகளாக வலம்வந்த காரணத்தால் அவ்வப்போது ஆபத்பாந்தவர்களாகக் குரலீந்து கைகொடுத்து உதவிய, ***யமுனா சர்வானந்தா, ரஜனி விக்டர், V.N.மதியழகன், லூக்கஸ் திருச் செல்வம், K.ஜெகன்மோகன், S.சந்திரகாந்தன், N.T.ஜெகன், V.K.குமார், G.ஸ்ரீகுமார், S.தக்கீசன்*** போன்றவர்களும் வானொலி நாடக நடிகர்களாகத் தேர்வாகியிருந்தபோதிலும் யார் யார் எந்தெந்தக் காலங்களில் தேர்வானார்கள் என என்னால் அறுதியிட்டுக் கூறமுடியா துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மலரும் கிராம சஞ்சிகையும்

**50** களின் ஆரம்பத்திலேயே இலங்கை வானொலியில் ஆரம்பிக் கப்பட்ட சிறுவர் மலர், 50 களின் பிற்பாதியில் தொடங்கிய இளைஞர் மன்றம் போன்ற நிகழ்ச்சிகள் பல நாடகக் கலைஞர்களை உருவாக்கும் பயற்சிக் களங்களாக அமைந்து வந்துள்ளமை நிதர்சனமானது. முதன் முதலாக சிறுவர் மலர் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு 'ரேடியோ மாமா'வாக இருந்து, தனது பெயருடன் 'மாமா'வையும் சிறப்பாக இணைக்கப்பட்டவர் ***சரவணமுத்து மாமா.***

தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்களைப் போன்று இத்தகைய [சஞ்சிகை] நிகழ்ச்சிகளைத் தொகுப்பவர்களின் பதவி ஒன்றும் நிரந்தர மானதல்ல. காலத்துக்குக் காலம் மேலிடத்து முடிவுக்கேற்ப நிகழ்ச்சித் தொகுப்பாளர்களும் மாறிக்கொண்டிருப்பார்கள். அவ்வாறாக அவ்வப் போது இடைவிட்ட போதிலும் சரவணமுத்து மாமா **23** ஆண்டுகள் வரை பணியாற்றினார்.

இடைப்பட்ட காலங்களில் ***S.குஞ்சிதபாதம், இராசையா மாஸ்டர், V.A.சிவஞானம், ராம் சுந்தரலிங்கம், ஆ.கருணைரத்தினம் ந.மகேசன், மாஸ்டர் சிவலிங்கம்*** போன்றவர்கள் மாமாக்களாக மாறிச் சிறுவர் மலரைச் சிறப்பித்துள்ளார்கள். ***இரா.பத்மநாதன், V.N.S.உதயசந் திரன், S.எழில்வேந்தன்*** போன்றவர்கள் 80 களின் பின் வந்த வானொலி மாமாக்கள்.

சரவணமுத்து மாமாவின் சிறுவர் மலரில் பங்குகொண்டவர்க ளுள் விசாலாட்சி குகதாசனுடன் S.M.A.ஜப்பார், R.விக்டர், மேரிஜோசபின், D.சுப்ரமணியம் என்போர் 1957 இல் வானொலிக் கலைஞர்கள் ஆனார் கள். 1956 இல் சிறுவர் மலரில் பங்குபற்றிய ஆனந்தி சுப்ரமணியம் [சூரியப்பிரகாசம்], செல்வம் பெர்னாண்டோ, மணிமேகலை ராமநாதன் போன்றோரும் 1958 இல் காலடி பதித்த அப்துல் ஹமீட், போல் அன்ரனி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகரன், ராமதாஸ் போன்றவர்களும் **1970** களின் ஆரம்பத்தில் வானொலிக் கலைஞர்கள் ஆனார்கள்.

**1957** இல், பாராளுமன்ற உரைபெயர்ப்பாளரும் இலங்கை வானொலிச் செய்தி வாசிப்பாளரும் நடிகருமான இருந்த S.குஞ்சித பாதம் சிறுவர் மலர் மாமாவாகி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். அவர் காலத்தில் பங்குகொண்ட G.P.வேதநாயகம், விமல் சொக்கநாதன், அற்புதராஜா போன்றவர்களும் பின்னர் வானொலி நடிகர்கள் ஆனார்கள். C. நடராஜசிவமும் ஆமினா பேகம் பாரூக்கும் சிறுவர் மலர் மூலம் வானொலியில் நுழைந்து பின்னர் நாடக நடிகர்களானவர்களே.

80 களில் இந்திய பேச்சு வழக்கு நாடகங்களில் நடிப்பதற்காக உள்ளீர்க்கப்பட்ட பலரும் கொழும்பு - கொட்டாஞ்சேனை, கொச்சிக் கடைப் பகுதிகளைச் சேர்ந்த பரதவ சமூகத்தவர்கள் என்பதும் அவர்களுள் ஆண் நடிகர்கள் பெரும்பாலும் சென்.பெனடிக்ற் கல்லூரி மாணவர்கள் என்பதும் நோக்கற்பாலது. இதற்கு மூல காரணமாக இருந்தவர் அக்கல்லூரி ஆசிரியராக இருந்த இராசையா மாஸ்டர். சிறுவர் மலர், இளைஞர் மன்றம் போன்ற நிகழ்ச்சிகளை அவர் நடாத்திய காலங்களில் அவர் மூலம் உச்சரிப்புப் பயிற்சி, நடிப்புப் பயிற்சி, ஒலிவாங்கிக் கட்டுப்பாடு என்பனவற்றைத் தெளிவாக அறிந்து கொண்டதனால் நடிகர்களாகவும் ஒலிபரப்பாளர்களாகவும் பலரால் மிளிர முடிந்தது.

அவ்வாறாக 80 களில் வானொலிக் கலைஞர் ஆனவர்களுள் ***பாலசிங்கம் பிரபாகரன், ஸ்ரீதர் பிச்சையப்பா, ரவிசங்கர் சண்முகம், நித்யகல்யாணி காராளபிள்ளை, பரமேஸ்வரி கருப்பையா சிவரஞ்சனி பத்மநாதன்*** போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

மணிமலர், வளரும் பயிர், நாளைய சந்ததி போன்ற நிகழ்ச்சிகளும் எதிகாலக் கலைஞர்களை உருவாக்கும் பயிற்சிப்பட்டறைகளாகத் திகழ்ந்தன. கிராம சஞ்சிகை, குன்றின் குரல், மாதர் பகுதி, மங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர் மஞ்சரி போன்ற நிகழ்ச்சிகளிலும் கல்விச் சேவையில் இடம்பெற்ற நாடகங்களிலும் நாடகக் கலைஞர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர் களே நடித்தார்கள். அவற்றில் பெரும்பாலும் 15 நிமிட நாடகங்களோ அல்லது அதற்கும் குறைவான நேர அளவில் அமைந்த நாடகங்களோ தான் இடம்பெற்றன. கிராம சஞ்சிகையில் காலத்துக்குக் காலம் தொடர் நாடகங்களும் இடம்பெற்றன. அவை நேயர்களால் விரும்பி வரவேற் கவும்பட்டன. சி.சண்முகத்தின் 'நெஞ்சில் நிறைந்தவள்' நாடகம் ராஜேஸ்வரி சண்முகம் தயாரித்தளித்த 'மங்கையர் மஞ்சரி' நிகழ்ச்சி யில், அவர் பிரதான பாத்திரமேற்க **52** வாரங்கள் தொடராக ஒலிபரப் பாகியுள்ளது.

ஆரம்பகாலத்தில் கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந் தவர் ***V.N.பாலசுப்ரமணியம்***. கர்நாடக இசைப் பாடகராக, அறிவிப்பா ளராக, நடிகராக, இயக்குனராக, எழுத்தாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பா ளராக, நேர்முக வர்ணனையாளராக - பல்வேறு திறமைகளும் ஒருங்கே அமையப்பெற்றவராக இலங்கிய V.N.பாலசுப்ரமணியத்தின் தயாரிப் பில் முதன்முதலாக உருவாகி இரண்டரை ஆண்டு காலம் தொடராக ஒலிபரப்பான நாடகம்தான் ***'விதானையார் வீட்டில்'***.

அந்நாடகம் பெற்ற அமோக வரவேற்பானது தொடர்ந்தும் 'கிராம சஞ்சிகை'யில் தொடர் நாடகங்கள் ஒலிபரப்பாகக் காரணமானது. சானாவின் நாடக அரங்க நாடகங்களில் பங்குகொண்ட அதே கலைஞர் களே கிராமசஞ்சிகை நாடகங்களிலும் நடித்தபோதிலும் கிராமசஞ் சிகை நாடகங்கள் ஒருவிதத்தில் சானாவுக்குச் சவாலாகவே அமைந் தனவெனலாம். கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டுமல்லவா? ஆரோக்கியமான அப்போட்டியால் இரு பகுதி நாடகங்களும் வளர்ச்சி யுற்றன.

***சு.வே.யின் பொன்னச்சி குளம்', 'பொழுது புலர்ந்தது', V.N. பால சுப்ரமணியத்தின் 'தேன் கூடு', 'பழமுதிர்ச்சோலை'*** என்பன ஆரம்ப காலக் கிராமசஞ்சிகைத் தொடர் நாடகங்களில் பேசப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 களில் கிராம சஞ்சிகை நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருந்தவர் பல்துறை அறிவும் அனுபவமும் ஆற்றலும் நிறைந்தவரான ***V.V.N.நமசிவாயம்*** அவர்கள். அவரது தயாரிப்பில் நாட்டுக் கூத்துக் கலைஞர்கள் புத்தூக்கம் பெற்றனர்.

வெள்ளிக்கிழமைகள் தோறும் மாலை 6.30 க்கு நாட்டுக்கூத்து ஒலிபரப்பப்பட்டது. பிரபல அண்ணாவியாரும் கூத்துக் கலைஞருமான பூந்தான் யோசேப்பின் குழுவினரது கூத்துக்கள் முதன்முதலாக ஒலி பரப்பாயின. யாழ்ப்பாணத்துக் கலைஞர்களான அவர்கள் தலைநகர் வந்துபோவதற்கான இலவச புகையிரத ஆணைச்சீட்டுகள் அவர்க ளுக்கு வழங்கப்பட்டன. இவ்வாறாக பூந்தான் யோசேப்பு குழுவினரின் நாட்டுக்கூத்துகளான 'எஸ்தாக்கியார்'. 'செனகப்பு எனும் ஜெனோவா' என்பன 1962 இலும் 'விஜய மனோகரன்', 'கருங்குயில் குன்றத்துக் கொலை' என்பன 1966 இலும் 'கண்டி அரசன்', [காவலூர்க் கவிஞர் செல்வராஜாவின்] 'ஞானசௌந்தரி' என்பன 1968 இலும் நேரடியாக ஒலிபரப்புச்செய்யப்பட்டன.

மூன்று மணி நேர அளவாகச் சுருக்கப்பட்ட ஒவ்வொரு கூத்தும் ஐந்தாறு வாரங்கள் தொடராக ஒலிபரப்பாயின. 'பூந்தான் யோசேப்பு[வின்]: கலையுலக வாழ்க்கை வரலாறு' [1981]வை எழுதிய எழுத்தாளர் எஸ்.அகஸ்தியர் அவரைப்பற்றி - *"1961 இல் இருந்து இன்று வரை [1981] இவரின் நாடகம் ஒலிபரப்புவதை நேயர்கள் - மக்கள் அவ் வப்போது கேட்டு ரசித்து வருகின்றனர். யோசேப்புவைத் தொடர்ந்து - பாஷையூர், குருநகர், நாவாந்துறை, ஆனைக்கோட்டை, மன்னார், மட்டக்களப்பு, மலையகம் போன்ற பிரதேசக் கிராமங்களிலுள்ள கலை ஞர்களும் வானொலியில் இடம்பிடித்துக் கொண்டமை நாட்டுக்கூத்தின் வளர்ச்சிக்குத் தக்க சான்றாகும்"*- என்கிறார்.

அதே நூலில் பிறிதோரிடத்தில் –*"பூந்தானின் முயற்சியால் வானொலியில் நாட்டுக் கூத்துகளுக்கான கதவுகள் திறக்கப்பட்டு - பாஷை யூர் ஆசைப்பிள்ளையின் 'கிளியோபாட்ரா', 'கற்பகமலர்',*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொழும்புத்துறைக் கலைஞர்களின் 'ஹரிச்சந்திரா', சில்லாலை மறை மாவட்டக் கன்னியரின் 'சஞ்சுவாம்', ஆனைக்கோட்டைக் கன்னியரின் 'பாலசூரன்', சிலுவைராசாவின் 'குயிலோசை' என்பன ஒலிபரப்பாயின"-*

எனக் குறிப்பிடுகிறார். இதன்மூலம் வெவ்வேறு கிராம/பிரதேசக் குழு வினரின் நாட்டுக் கூத்துகள் கிராம சஞ்சிகையில் காலத்துக்கு காலம் ஒலிபரப்பாகி வந்துள்ளமை நிதர்சனமாகிறது. 1980 இலும் கூட பூந்தான் யோசேப்புவின் 'சங்கிலி'யும் 'கருங்குயில் குன்றத்துக் கொலை'யும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 5 வாரத் தொடர்களாக ஒலி பரப்பாகியுள்ளன.

70 களின் பிற்கூற்றில் P.குமாரலிங்கம், அவரைத் தொடர்ந்து டேவிட் ராஜேந்திரன், K.ஸ்ரீஸ்கந்தராஜா எனக் கிராமிய நிகழ்ச்சித் தயா ரிப்பானது பலரது கைகளுக்கும் மாறியிருக்கிறது. பின்னையவர்களது தயாரிப்பில் உருவான சில தொடர் நாடகங்களில் நானும் நடித்திருக் கிறேன். 70 களின் ஆரம்பத்தில் கிராம சஞ்சிகைக்கெனத் தனியாகக் கலைஞர்கள் தேர்வாகினர். அவ்வாறாகத் தேர்வானவர்தான் S.ஜேசுரட்ணமும். அவரது 'முகத்தார் வீடு', சண்டியன் சின்னத்தம்பி', 'மருக்கொழுந்து' முதலான தொடர்கள் அந்நாட்களில் ஒலிபரப்பானவற் றுள் பிரபல்யம் பெற்றவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லீம் சேவை

## நடிகர்களும் நாடக எழுத்தாளர்களும்

**1956** இல் இருந்து தனித்தியங்க ஆரம்பித்த முஸ்லீம் சேவை யானது நடிகரும் எழுத்தாளரும் சிறந்த அறிவிப்பாளருமான எம்.ஏ.கபூரின் மேற்பார்வையில் ஏற்றம் பெற்றது. அவரைத் தொடர்ந்து M.H. குத்தூஸ் மரைக்காரின் வழிகாட்டலில் வளம் கண்டது.

முஸ்லீம் சேவையில் செவ்வாய்க்கிழமைகள் தோறும் இரவு 8.30 முதல் 9.00 வரை அரை மணி நேர நாடகங்கள் நீண்டகாலமாக ஒலிபரப் பாகி வந்தன. அந்நாடகங்களில் நடிப்பதற்காக முஸ்லீம் சேவை மூலம் நடிகர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். அதனால் முஸ்லீம் நடிகர்கள் தமிழ் நாடகங்களில் பங்கேற்பது மிக அரிதாகவே நடைபெற்றது.

ஆனால் ஆரம்ப காலத்தில் எவ்வித பேதமுமின்றி முஸ்லீம் நடிகர் களும் தமிழ்ச் சேவையில் உள்வாங்கப்பட்டார்கள். அவ்வாறாக ஆரம்ப காலத் தமிழ் நாடகங்களில் பங்கேற்றவர்களுள் ***N.தாலிப், O.நாகூர், S.M. நஸ்ருதீன், M.A. ஹமீட். S.M.A. ஜப்பார், S.I.M.A. ஜப்பார், ஜோபு நசீர், அல்ஹாஜ் M.S.A. அஸீஸ்,*** மற்றும் கா.சிவத்தம்பியின் 'இளைஞர் மன்றம்' மூலம் முகிழ்த்த ***H.M.ஷரீப். H.M. முஹம்மது, A.L.M. சனூன்*** போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**60** களிலும் அதற்குப் பின்னரும் ***B.H.அப்துல் ஹமீட்,K.A. ஜவா ஹர், ஆமினா பேகம் பாரூக், ஜெய் ரஹீம் சஹீட், சித்தி நிஹாரா சபூர்தீன், நூர்ஜான் மர்ஸூக், புர்கான் B.இப்திகார், சில்மியா ஹாதி, ஷியானா ஹாதி, மஹதி ஹசன் இப்ராஹிம், A.L.ஜாபீர், பரீன் அப்துல் காதர், சனூஸ் மொஹமட் பெரோஸ், உவைஸுல் ரஹ்மான், M.C.ரஸ்மின்*** போன்ற திறமையான நடிக நடிகையரும் தமிழ் நாடகங்களில் நடித்து அதன் வளர்ச்சிப் பாதையில் பங்களிப்புச் செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம் ஆண் நடிகர்களது கனமான சாரீரம் வரலாற்று நாடகப் பாத்திரங்களுக்குக் கச்சிதமாகப் பொருந்திவந்ததால் அவர்கள் வர வேற்கப்பட்டார்கள். நடிகைகளைப் பொறுத்தமட்டில் உருக்கமான உணர்ச்சிகரமான பாத்திரங்களுக்குத் தமது பண்பட்ட நடிப்பால் உயி ரூட்ட வல்லவர்களாக அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்களது அனுபவ முதிர்ச்சி அதற்கு உறுதுணை புரிந்தது.

ஆமினா பேகம் பாரூக், ஞெய் ரஹீம் சஹீட், புர்கான் பீ. இப்திகார் போன்றவர்கள் யாழ்ப்பாணத் தமிழிலும் வாலாயமாகப் பேசி அசத்தக் கூடியவர்களாக இருந்தார்கள்.

மேற்குறிப்பிட்டவர்களைவிட ***கலைச் செல்வன் M.N. ரவூப், ஷபா மஹ்ரூர், M.M.A. லத்தீப், K.M.A. முஹைறதீன், A.C.M. ஹுசைன் பாரூக், M.S. அப்துல் லத்தீப், M.S.M. நஜீப், விஸ்வா நிஸார், H.I.M. ஹுசைன், A.H.M. அஸ்வர், நாகூர் S.I.கனி, நாஜிமா பாறூக், ஸஹ்ரியா மொஹமட். தாஹிரா, ஷபானா, ஷர்மிளா ஜெய்னுலாப்தீன், M.H.பௌசுல் அமீர்*** எனக் காலத்துக்குக் காலம் கொழும்பு, திக்குவலை, புத்தளம், மன்னார், கிழக்கு மாகாணம் என நாட்டின் பல்வேறு பிர தேசங்களைச் சேர்ந்த கலைஞர்களும் முஸ்லீம் நாடகங்களில் பங் கேற்று வளம் சேர்த்திருக்கிறார்கள்.

நாடகங்களைவிட 'முத்தாரம்' நகைச்சுவைக் கதம்ப நிகழ்ச்சியா னது 'அபுநாநா' எனும் பாத்திரத்தை உருவாக்கி உலவவிட்ட என்.தாலிப் மற்றும் மருதானை எம்.ஷபா மஹ்ரூர் உட்படப் பல நடிக நடிகையரின் நகைச்சுவைத் திறனை வெளிக்கொணர வழி வகுத்தது. 'ஊடுருவல்' சமூகச் சித்திரமும் நடிகர்களதும் எழுத்தாளர்களதும் திறமையைப் புடமிட்டுக் காட்டிய மற்றுமொரு நிகழ்ச்சி.

முஸ்லீம் நாடக எழுத்தாளர்களைப் பொறுத்தமட்டில் ***M.A.முஹம்மத்*** ஒரு மூத்த எழுத்தாளர். ***எஸ்.நஸ்ருதீன்*** நகைச்சுவை யில் கால் பதித்து சமூகத்தில் கலந்தவர். '***தீன்ஷா***' எனும் புனைபெயரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிவந்த ***M.R.சைபுதீன் ஹாஹிப்*** பரிசுபெற்ற ஓர் எழுத்தாளர். அவரைப்பற்றி 'வாழ்வோரை வாழ்த்துவோம்' - முஸ்லீம் கலாசார விழா மலர் -1991 இல் கவிஞரும் எழுத்தாளருமான M.H.M. ஷம்ஸ்,

*'60 களில் [வானொலியில் நடாத்தப்பட்ட] தமிழ் நாடகப் போட்டியில் எம்.ஆர்.சைபுதீன் ஹாஹிப்பின் 'பணமும் பாசமும்' முதலிடம் பெற்றது பலருக்கும் வியப்பைக் கொடுத்தது. பின்னாளில் 'தீன்ஷா 'என்ற [புனை]பெயரில் நல்ல வானொலி நாடகங்களைத் தந்தார்'* எனத் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

முஸ்லீம் சேவையில் அதிகமாகவும் தரமாகவும் நாடகங்களை எழுதி, அதைத் தலைநிமிர வைத்த பெருமை ***எம்.அஷ்ரப் கானை****யே* சாரும். நேயர்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்த அவர் தமிழ்ச் சேவை நாடகங்களிலும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார். 'முள்' அவரது நாடகத் தொகுப்பு நூல்.

பிரபல சிறுகதை நாவலாசிரியர் ***ஜுனைதா ஷெரீப்*** 1967 இல் எழுத ஆரம்பித்து 1988 வரையான பன்னீராண்டுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியவர். அவரது வானொலி நாட கங்கள் சிலவற்றின் தொகுப்பு நூல் 'பொன்னாடை'[1988 ]. '**ஹிஜிறி - 1500?'** ***ஷரீப்*** எழுதி 1966 இல் வெளியான ஒரு வானொலி நாடக நூல்

'காதலும் கருணையும்' எனும் நாடகத்துடன் 1958 இல் நாடக எழுத் துத்துறையில் கால் பதித்தவர்தான் ***எஸ்.முத்துமீரான்***. சிறுகதை எழுத் தாளராக முத்திரை பதித்த அவருடைய வானொலி நாடகங்கள் சில வற்றின் தொகுப்பு நூல் 'மானிடம் சாகவில்லை'[2001] எழுபதுக்கும் மேற் பட்ட சிறுகதைகளை எழுதிய அவரது வானொலி நாடகங்களின் எண் ணிக்கை 200 க்கும் மேற்பட்டது.

**1960** இல் வானொலியில் எழுத ஆரம்பித்த நடிகரும் எழுத்தாளரு மான ***S.I.M.A. ஜப்பார்*** எழுதிய வானொலி நாடகங்கள் - 241 . அவர் கதை வசனம் எழுதி நடித்த மேடை நாடகங்கள் - 47 .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைத் துறையில் முன்னணியில் பிரகாசிக்கும் மற்றுமொரு எழுத்தாளர் ***திக்வல்லை கமால்***. முஸ்லீம் சேவையில் அவரது பங்களிப்பு பாரியது. 'புகையில் கருகிய பூ' [2001 ] அவரது நாடகத் தொகுப்பு நூல். 'கோலமிடும் மேகங்கள்' 2011 இல் நூலுருவான ***அபுக்காகம பழீலின்*** வானொலி நாடகங்கள் சிலவற்றின் தொகுப்பு..

***M.N. அப்துல் அஸீஸின்*** 'வேலை நிறுத்தம்' நகைச்சுவை நாடகம் 1958 இல் வானொலியில் ஒலிபரப்பானது. அதைத்தொடர்ந்து அவர் பல சமூக நாடகங்களை எழுதியுள்ளார். மாத்தறையைச் சேர்ந்த ***M.M. ஸப்வானும்*** 32 வானொலி நாடகங்களை எழுதியதாகத் தெரிகிறது.

புகழ்பெற்ற அறிவிப்பாளராக நடிகராக அறியப்பட்ட ***M.A. கபூரின்*** நாடக ஆக்கங்கள் பல ஆரம்ப காலத்தில் இலங்கை வானொலியில் வலம் வந்துள்ளன.

இவர்களைவிட சிறுகதை எழுத்தாளர் ***M.A.ரஹ்மான்***, மேடை நாடக எழுத்தாளர் ***பௌசுல் அமீர்***, நடிகர் ***N. தாலிப்***, M.அஷ்ரப்கானின் சகோதரர் ***M.அஸ்வத்கான்***, ***போர்வையூர் ஜிப்ரி, K.M. மொஹிதீன், கரீமா அபூபக்கர், பதுருன்னிஸா தாஹிர், U.S.ஹமீத்***, திரைப்பட, மேடை வானொலி நாடக எழுத்தாளர் ***பேராதனை A.A. ஜுனைதீன்***, வானொலி நடிகையரும் சிறுகதை எழுத்தாளருமான ***ஆமினா பேகம் பாரூக், புர்கான் பீ.இப்திகார்***. 'சமூக வானொலி - மனித வலுவாக்கத்திற்கான ஊடகம்' எனும் ஆய்வுநூலை 2012 இல் எழுதி வெளியிட்டவரும், இளம் மாணவ மாணவியரை வானொலி நாடகச் செயற்றிட்டம் மூலம் எழுதவும் நடிக்கவும் பயிற்றுவித்து வருபவருமான ஊடகக் கலைஞர் ***M.C. ரஸ்மின்***, நடிகரும் நாடகத் தயாரிப்பாளருமான ***A.L. ஜபீர்*** என முஸ்லீம் நாடக எழுத்துத்துறையில் காலூன்றிக் கோலோச்சியவர்கள் பலர்.

இத்தகைய புகழ் பூத்த எழுத்தாளர்களின் கைவண்ணத்தில், தேர்ந்த நடிக நடிகையரின் குரல் வண்ணத்தில் லட்சோபலட்சம் நேயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கலைத் தாகத்தைத் தீர்த்த முஸ்லீம் சேவை நாடகங்கள் பற்றிய ஒரு நுனிப்புல் மேய்ச்சலே என்னுடையது. இதைப்பற்றிய முழுமையான ஆய்வை மேற்கொண்டு ஆவணப்படுத்த வேண்டிய கடப்பாடு வாழும் முஸ்லீம் வானொலிக் கலைஞர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக மேடையும் வானொலிக் கலைஞர்களும்

நாடகக்கலைக்கு மேடையே தாய்வீடாகும். சொல்லப்போனால் வானொலிக் கலைஞர்கள் பலரும் மேடையில் நடைபயின்று பின்னர் வானொலியை வசப்படுத்தியவர்களே. மிக அரிதாக ஒரு சிலர் வானொலியில் கரைகண்டு பின் மேடையையும் ஒரு கை பார்க்கப் புறப்பட்டவர்கள். குறிப்பாகச் சில பெண் நடிகைகள் அவ்வகைப்பாட்டினுள் அடங்குவர்.

கலையரசு சொர்ணலிங்கத்தின் பட்டறையில் நடிப்புப் பயின்று, லண்டன் BBC யின் 'ஷேக்ஸ்பியர் தியேட்டரில்' பயிற்சிபெற்று, தமிழகத்துத் திரைவானில் கலை இயக்குநராகப் புகுந்து புறப்பட்டு, ஜெமினி ஸ்ரூடியோவில் திரைப்படக் கலை நுட்பங்களைத் தெரிந்துகொண்டு இலங்கை மீண்ட **சானா** வானொலியில் நுழைய முன் மேடை நாடகத் தயாரிப்பாளராகவே கலையுலகில் கால் பதித்தார்.

ஒப்பனை, ஒளியமைப்பு, மேடையமைப்பு உட்பட மேடை நாடகத்தின் சகல பரிமாணங்களையும் அறிந்துவைத்திருந்த சானாவின் நாடக ஆக்கங்கள் - அனுபவங்கள் பற்றி அவருடன் கூடப் பணியாற்றிய கலைப்பேரரசு A.T. பொன்னுத்துரை தமது 'அரங்கக் கலைஞர் ஐவர்' நூலில் விதந்து பாராட்டுகிறார்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் [**Two Gentlemen of Verona, Tempest** எனும்] இரண்டைத் தழுவி '**வேணிபுரத்து இரு நண்பர்கள்**' **[1932 ], 'சண்ட மாருதம்'[1933 ]** என முப்பதுகளில் மேடையேற்றிய சானா லண்டன் சென்று நாற்பதுகளின் இறுதியில் தாயகம் மீண்டு, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் '**உடையார் மிடுக்கு**'[1949] வையும் பிரெஞ் நாடகாசிரியர் மோலியரின் '**Miser**' எனும் நாடகத்தின் தழுவலான '**உலோபி**' [ 1950 ] யையும் மேடையேற்றினார்.

சானா, இலங்கை வானொலித் தயாரிப்பாளரான பின்னர் 1953 – 1963 க்கு இடைப்பட்ட காலத்தில் அவர் தயாரிப்பில் பத்துப் பன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு நாடகங்கள் 200க்கும் மேற்பட்ட மேடையேற்றங்கள் கண்டன. **'லண்டன் கந்தையா'** மட்டும் 1954க்குப் பின் 200 தடவைகள் மேடையேறியது. 'லண்டன் கந்தையா' நாடகத்தில் முத்தாய்ப்பாக நந்தனார் சரிதத்தைக் கதாப்பிரசங்கமாக ஆங்கிலக் கலப்புடன் சானா நிகழ்த்துவார். வானொலியில் ஒலிபரப்பானபோதும் கடைசி அங்கமாக அது இடம்பெற்றது. அதன் அமோக வரவேற்புக் காரணமாக அவர் நடித்த ஈழத்துத் திரைப்படமான **'Taxi Driver'** [1966] இலும் அது இணைக்கப் பட்டது!

ஆங்கில இலக்கிய மேதை ஒஸ்கார் வைல்டின் **'Importance of being Earnest** எனும் நாடகத்தைத் தழுவி **'ஸ்ரீமான் ஆனந்தம்'** [1954 ], **Duchess of Paduva'** வைத் தழுவி [தமிழாக்கம் இ.இரத்தினம்] **'பதியூர் ராணி'** [1960], வங்காள நாடகாசிரியர் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயவின் நாடகமொன்றின் தழுவலான **'சவப்பெட்டி'**[1953 ] மற்றும் இலங்கையர்கோன் எழுதிய **'மிஸ்டர் குகதாசன்'** [1957 ], திருச்சி சந்தரின் வானொலி நாடகத்தின் மேடை வடிவமான **'சந்திப்பு'**[1959], N.S.M.ராமையா வானொலிக்கென எழுதி இருமணி நேர மேடை நாடகமாக நீடிக்கப்பட்ட **'ஒரு மின்னல்'**[1960], S,M.நஸ்ருதீன் எழுதிய **'நிதியெல்லாம் நீயே!'** [1960], ரவீந்திரநாத் தாகூரின் 'சாகுந்தலம்' வங்காள நாடக காவியத்தைத் தழுவி நவாலியூர் நடராசன் எழுதிய **'சகுந்தலா'**[1962 ], C.சண்முகம் எழுதிய **'பறந்ததே பைங்கிளி'**[1962 ], ரொசாரியோ பீரிஸ் எழுதிய **'பதிவுத் திருமணம்'**[1962 ], 'வலை' என எஸ்.பொ.வால் வானொலிக்கென எழுதப்பட்டு மேடைக்கென சானாவால் மாற்றியமைக்கப்பட்ட **'சாணக்கியன்'**[1968], மற்றும் கலையரசு சொர்ணலிங்கத்தின் **'அசட்டு வேலைக்காரன்'** என்பன சானா மேடையேற்றிய நாடகங்கள்.

சானாவின் 'பதியூர் ராணி'யில் கதாநாயகி ராணியாக விசாலாட்சி குகதாசன் நடித்தார். பெண்கள் மேடை நாடகங்களில் நடிப்பதை இன்று வரை நமது சமூகத்தினர் அவ்வளவாக அங்கீகரிப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை. இன்றும்கூட இந்நிலைமைதான் என்றால் அன்றைய காலகட் டத்தில் எப்படி இருந்திருக்கும்? பல தடைகளையும் மீறி அதில் அவர் நடித்தார். அரசனாக நடித்தவர் தெல்லிப்பளைக் கல்லூரியில் அந்நா ளில் அதிபராக இருந்த A.T.பொன்னுத்துரை. S.M.A. ஜப்பார், டோசன் பெர்னாண்டோ, சரவணமுத்து மாமா, R.S.சோதிநாதன் மாஸ்டர், S.S.கணேசபிள்ளை போன்ற பிரபல வானொலி நடிகர்களும் அதில் பங்கேற்றனர்.

கொழும்பில் 1960 இல் **Lionel Wendt** அரங்கில் முதன் முதலாக மேடையேற்றப்பட்ட தமிழ் நாடகம் எனும் சிறப்பைப் பெற்ற 'பதியூர் ராணி'யைத் தொடர்ந்து அடுத்தடுத்த நாட்களில் மேடையேறிய 'நிதியெல்லாம் நீயே!', 'ஒரு மின்னல்' நாடகங்களில் எஸ்.ஆறுமுகம், ரொசாரியோ பீரிஸ், மேரி ஜோசபின், M.A.ஹமீட் போன்ற வானொலி நடிகர்களும் பங்கேற்றார்கள். சானாவின் மேடை நாடகங்களில் அவர் காலத்து வானொலி நடிகர்களான S.திருநாவுக்கரசு, 'நந்தி' செ.சிவஞான சுந்தரம் போன்றோரும் அவ்வப்போது இணைந்து கொண்டனர்.

வரலாற்று நாடகமான சாணக்கியனில் சுப்புலக்ஷ்மி காசிநாதன், T.ராஜேஸ்வரன், A.ரகுநாதன் போன்ற அனுபவ நடிகர்கள் முக்கிய பாக மேற்றனர்.

சானா காலத்தில் வானொலி நடிகராக இருந்த S.ராஜரட்ணத்தின் 'ராஜ் நகைச்சுவை நாடக மன்றம்' பல நாடகங்களை யாழ் குடாநாட்டில் மேடையேற்றிக் கொண்டிருந்தது. '**சக்கடத்தார்**' ராஜால் உருவாக்கப் பட்டு அவரது புகழை உயர்த்திய ஒரு நாடக பாத்திரம். அவரது நாடகக் குழுவில் பங்கேற்ற சி.சு.நாகேந்திரா ஒரு வானொலி நாடகக் கலைஞரா கவுமிருந்தவர்.

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் பல நாடகங்கள் பேராத னைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினரால் 1955, 1956 காலப்பகு தியில் பேராதனை வளாக மேடையில் மேடையேற்றப்பட்டன. அவ்வம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம் மாணவர்களாக இருந்த கா.சிவத்தம்பி, க.கைலாசபதி, S.M.A.ஜப்பார் போன்றோர் அந்நாடகங்களில் முக்கிய பங்கேற்றனர். அவ்வாறாக மேடையேற்றப்பட்ட நாடகங்களுள் '**தவறான எண்ணம்**', '**சுந்தரம் எங்கே?**', '**துரோகிகள்**' என்பன குறிப்பிடத்தக்கன.

**வரணியூரான் கணேசபிள்ளை** தனது 'யாழ் கலை அரங்கம்' மூலம் பல நாடகங்களைப் பிரதானமாகக் கொழும்பிலும் யாழ்ப் பாணம் உட்பட நாட்டின் ஏனைய பிரதான நகரங்களிலும் மேடை யேற்றி வந்தார். வெள்ளிவிழாக் கண்ட நாடகமான '**புளுகர் பொன்னையா**', மற்றும் '**கறுப்பும் சிவப்பும்**', '**நம்பிக்கை**', '**ஆசை மச்சான்**', **அசட்டு மாப்பிளை**', '**பாசச் சுமைகள்**, '**ஒருத்தருக்கும் சொல்லாதே**' என்பன அவரது எழுத்தில் உருவாகி அவர் தயாரிப்பில் மேடையேறியவற்றுள் குறிப்பிடத்தக்கன. அவரது நாடகங்களில் அவருடன் K.S.பாலச்சந்திரன், K.கந்தசாமி, S.S.அச்சுதன்பிள்ளை, A.சிவதாசன், சந்திரப்பிரபா மாதவன், A.M.C.ஜெகசோதி போன்ற வானொலி நடிகர்கள் சேர்ந்து நடித்தார்கள். எஸ்.ஜேசுரட்ணம் சில நாட கங்களில் இணை சேர்ந்தார். நம்பிக்கை', 'கறுப்பும் சிவப்பும்' போன்ற நாடகங்களில் மணிமேகலை ராமநாதனும் 'பாசச்சுமை'யில் விமல் சொக்கநாதனும் சேர்ந்துகொண்டனர்.

பகுத்தறிவாளரான டொக்டர் ஏபிரகாம் கோவூரின் உண்மை அனு பவத்தில் உருவான சம்பவத்தை அடியொற்றி வரணியூரான் எழுதிய '**நம்பிக்கை**' நாடகம் மேடையேற்றப்பட்டபோது கோவூரின் பாத்திரத் தில் ஜோர்ஜ் சந்திரசேகரன் நடித்தார். கொழும்பிலும் யாழ்ப்பாணத் திலும் நாடகம் மேடையற்றப்பட்ட தருணங்களில் இடைவேளையின் போது கோவூரும் மேடையில் தோன்றி ஆங்கிலத்தில் சிற்றுரையாற்றி னார். அதை ஜோர்ஜ் தமிழில் மொழிபெயர்த்தார். இருவரையும் ஒரு சேரக் காண்பது ரசிகர்களுக்கு வியப்பான விருந்தாக அமைந்தது.

தனது '**மனிதருள் மாணிக்கம்**' நாடகத்துடன் 1957 இல் கொழு ம்பு மேடையில் கால் பதித்தவர் நகைச்சுவை எழுத்தாளர் **C.சண்முகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'மனிதருள் மாணிக்கம்', 'ஸ்புட்னிக் சுருட்டு' 'வாடகை வீடு', 'இதுவும் ஒரு நாடகம்', 'என்ன உலகமடா?'** என்பன C. சண்முகம் எழுதி S.S.கணேசபிள்ளை தயாரித்த சில நாடகங்கள். அவற்றில் கணேசபிள்ளையின் நாடகக் குழுவினருடன் ராஜேஸ்வரி சண்முகமும் நடித்தார். இதுவும் ஒரு நாடகத்தில் G.P.வேதநாயகமும் 'என்ன உலகமடா?'வில் M.K.ராகுலனும் இணைந்து கொண்டனர். C.சண்முகத்தின் 'வாடகை வீடு' நாடகம் பின்னர் 1997 இல் தில்லை நடராஜாவால் கொழும்பிலும் வவுனியாவிலும் மேடையேற்றப்பட்ட போது அதில் A.சிவதாசன், R.யோகராஜன் ஆகியோருடன் G.P.வேதநாயகமும் நடித்தார்.

'மறைமுதல்வன் நாடக மன்றம்' சார்பாக **G.P.வேதநாயகம்** எழுதித் தயாரித்து நடித்த முதல் மேடை நாடகம் '**முசுப்பாத்திதான்**'. 18.02.1968 இல் கொழும்பில் லும்பினி கலையரங்கில் மேடையேற்றப்பட்டபோது G.P.வேதநாயகத்தின் நெறியாள்கையில் முதன் முதலாக K.S. பாலச்சந்திரன் மேடையேறினார்.

1971 இல் நாடகத் திறனாய்வாளர் K.S.சிவகுமாரன் உட்படப் பலரது பாராட்டையும் பெற்ற **'சதுரங்கம்'** நாடகம் கொழும்பு, சரஸ்வதி மண்டபத்தில் மேடையேறியது. G.P.வேதநாயகம் கதை உரையாடலை எழுதி நெறியாள்கை செய்து நடித்த இந்நாடகத்தில் அவருடன் S.S.கணேசபிள்ளை, K.S. பாலச்சந்திரன், சந்திரப்பிரபா மாதவன், K.கந்தசாமி, றொபேட் வேதநாயகம் ஆகிய வானொலிக் கலைஞர்களும் பாத்திரமேற்றுச் சிறப்பித்தார்கள்.

1970 ஆம் ஆண்டில் கொட்டாஞ்சேனை, சென்.பெனடிக்ற் கல்லூரித் தமிழ் மன்றம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடியது. அவ்விழாவில் G.P.வேதநாயகம் கதை உரையாடல் எழுதி நெறிப்படுத்திய **'கலை + 6 தலை = கொலை'** எனும் நகைச்சுவை நாடகம் மேடையேறியது. அதில் அக்கல்லூரிப் பழைய மாணவர்களும் வானொலிக் கலைஞர்களுமான ஜோர்ஜ் சந்திரசேகரன், C.நடராஜசிவம், ஜோக்கிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெர்னாண்டோ ஆகியோருடன் 'மறைமுதல்வன்' **G.P**. வேதநாயகமும் சேர்ந்து கலக்கினார்.

முப்பது ஆண்டுகளின் பின் அதே கல்லூரியின் தமிழ் மன்ற ஆண்டு விழாவின்போதும் **G.P.**வேதநாயகம் எழுதி நெறியாள்கை செய்த **'உள்ளே வெளியே'** எனும் நகைச்சுவை நாடகம் மேடையேறி யது. அதில் அவருடன் வானொலிக் கலைஞர்களான C.நடராஜசிவமும் , 'உபாலி' செல்வசேகரமும் சேர்ந்து கலை விருந்தளித்தனர்.

2001 இல் இலங்கை வானொலியின் பவளவிழாவின்போது R.யோகராஜனின் நெறியாள்கையில் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் **'பிறந்த மண்'** சமகால நாடகமும் G.P.வேதநாயகத்தின் **'உள்ளே வெளியே'[சக்கடத்தார்]** நகைச்சுவை நாடகமும் மேடையேறின. பிறந்த மண்ணில் சோக்கல்லோ சண்முகம் தனது உணர்ச்சிகரமான நடிப்பால் சிகரம் தொட்டார். S.கணேஸ்வரன், G.P.வேதநாயகம், தம்பியையா தேவதாஸ், V.K.ராஜேந்திரன், I.கஜமுகன், ரஞ்சினி ராஜ்மோகன், A.M.C.ஜெகசோதி, ஸ்ரீகுமார் கணேசன் உட்பட வானொலி நடிகர் பட்டாளமே களமிறங்கிய நாடகமது. R.யோகராஜனின் சிறப்பான நெறியாள்கையில் விழாவின் மணிமகுடமாக அந்நாடகம் அமைந்தது. G.P.வேதநாயகத்தின் 'உள்ளே வெளியே' நகைச்சுவை நாடகம் நாட்டு நடப்புகளை நாசூக்காக நையாண்டி செய்தது. அதில் G.P.வேதநாயகத்துடன் ராஜாகணேசன், R.யோகராஜன் K.ஜெயகிருஷ்ணராஜா ஆகிய கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

வானொலி நாடகக் கலைஞர்களால் அவ்வப்போது சில நாட கங்கள் மேடையேற்றப்பட்டு வந்துள்ளன. **ஜோர்ஜ் சந்திரசேகரன்** எழுதி நெறியாள்கை செய்த **'சொர்க்கமும் நரகமும்'** 1979 இல் மேடை யேறிய ஒரு நாடகம். வானொலி நடிகர்களான ராஜா கணேசன், குயின்ரஸ் ஜீவன், P.விமல்ராஜ், N. உதயகுமார் போன்றோர் அதில் பங்கேற்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70 களின் பிற்கூற்றில் உதவி நாடகத் தயாரிப்பாளராக இருந்த பி.விக்னேஸ்வரன் சில பரீட்சார்த்த நாடகங்களைத் தயாரித்து ஒலி பரப்பினார். அவ்வாறாக ஒலிபரப்பான ஒரு நாடகம்தான் **ஜோர்ஜ் சந்திரசேகரனின் 'நத்தையும் ஆமையும்'. Eugene Ionesco** எனும் பிரெஞ் நாடகாசிரியரின் அபத்த நாடகமான **Frenzy for Two, or More** [1962] எனும் நாடகத்தைத் தழுவித் தமிழில் எழுதப்பட்ட அது, இ.ஒ.கூ. தாபனம் நடாத்திய ஒரு நாடக விழாவில் 1992 இல் மருதானை **Tower** அரங்கில் மேடையேற்றப்பட்டது. C.நடராஜசிவத்தினதும் ஆனந்தராணி [பாலேந்திரா] ராஜரட்னத்தினதும் உயிர்த்துடிப்பான நடிப்பில் ரசிகர்க ளின் இதயங்களைப் பிணித்து, நின்று நிலைத்துவிட்ட நாடகமது.

கலாஜோதி 'சானா'வைத் தொடர்ந்து அவர் அடிச்சுவட்டில் **K.S.பாலச்சந்திரன்** மேடைகளில் **Stand up Comedy** எனும் தனிநபர் நடிப்பில் முத்திரை பதித்தார். வானொலிக் 'கதம்பம்' நிகழ்ச்சியில் அவர் பெற்ற அனுபவம் அதற்கு உறுதுணை புரிந்ததெனலாம். அவரது **'அண்ணை றைட்'** பல மேடைகள் கண்டு ஒலிப்பேழையாக, இறுவட் டாக உலக உலா வந்தது.

**'சண்டியன் சின்னத்தம்பி', 'லண்டன் மாப்பிள்ளை', 'பண்டார வன்னியன்'** உட்படப் பதினொரு நாடகங்களைத் தானே எழுதி மேடை யேற்றினார் - வானொலிக் கலைஞரான **'முகத்தார்' S. ஜேசுரட்ணம்**! அவரது நாடகங்களில் A.M.C. ஜெகசோதியும் S.எழில்வேந்தனும் பங்கேற் றுச் சிறப்பித்தார்கள்..

'வாடைக்காற்று' திரைப்படத் தயாரிப்பாளரும் வானொலி நடிகருமான **A.சிவதாசனின்** 'கமலாலயம் கலைக் கழகம்' C.சண் முகத்தின் **'வாடகை வீடு'**, வரணியூரானின் **'அசட்டு மாப்பிள்ளை'** மற்றும் **'ஞான ஒளி', 'பாசச் சுமை'** முதலான நாடகங்களைத் தலை நகர் கொழும்பில் மேடையேற்றியுள்ளது. 'குணம் குன்றினால்', 'சீதனம்',



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடிப்பேன் பல்லுடைய' என்பன சோக்கல்லோ S.சண்முகநாதனது சில மேடை நாடகங்கள்.

இலங்கை வானொலி நடிகரும் நாடகாசிரியருமான **சின்னையா சிவநேசன்** [துறையூரான்], தயானந்த குணவர்தன சிங்களத்தில் எழுதிய **Nari Baanaa** நாடகத்தை '**நரி மாப்பிள்ளை**' எனும் தலைப் பில் எழுதி **200** க்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேற்றியுமுள்ளார். அது **1971** இல் நூலுருப் பெற்றது. '**தங்கச்சி கொழும்புக்கோ போகிறாய்?**' -சி.சிவநேசன் எழுதிய, யாழ் மண்வாசனை வீசும் ஒரு நகைச்சுவை நாடகம். 1971, 1972 இல் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமாக மும்முறை அது மேடையேற்றப்பட்டது. அதுவும் 2001 இல் நூலுருப்பெற்றது. '**நினைத்தது நடந்ததா?**' மேடையேறிய இவரது மற்றொரு நாடகம். அரசியல் பின்னணியில் இவரெழுதிய நாடக நூல் '**ஒன்று பட்டால்**' - 1995 இல் வெளியானது.

60 களில் K.M.வாசகரின் **Ceylon Seva Stage** வெற்றிகரமான பல நாடகங்களைக் கொழும்பில் மேடையேற்றியது. சுப்புலக்ஷ்மி காசிநாதன், இரா.காசிநாதன், S.ராஜகோபால், விஜயாள் பீட்டர் போன்ற வானொலிக் கலைஞர்கள் அவரது நாடகங்களில் பிரகாசித்தார்கள். **'மனித வலை'[1964], 'மஞ்சள் குங்குமம்'[1965], 'புரோக்கர் கந்தையா' [1966], 'பார்வதி பரமசிவம்'[1968]** எனப் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருந்த K.M.வாசகரை **'சுமதி'[1969]** உச்சத்தில் ஏற்றிவிட்டது. தினகரன் நாடக விழாவில் ஐந்து விருதுகளை அலாக்காகத் தூக்கி அவர் கையில் அது கொடுத்துவிட்டது! S.ராமதாசும் செல்வம் பெர்னாண்டோவும் வாசகரின் 'புரோக்கர் கந்தையா', 'சுமதி' நாடகங்களிலும் C.நடராஜசிவம் புரோக்கர் கந்தையா'விலும் S.ஜேசுரட்ணம் 'மனித வலை'யிலும் ஏனையோருடன் சிறப்பாக இணைந்துகொண்ட வானொலி நடிகர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**70** களின் ஆரம்பத்தில் தனது கல்லூரித் தோழர்களுடன் சேர்ந்து நகைச்சுவைக் குட்டி நாடகங்களை மேடையேற்றிக் கொண்டிருந்த **எஸ்.ராமதாஸ்** வானொலி நடிகனாகி 'கோமாளிகள் கும்மாளம்' மூலம் வரவேற்புப்பெற்ற சூட்டோடு அதில் தன்னோடு இணைந்து நடித்த T.ராஜகோபால், S.செல்வசேகரம், K.சந்திரசேகரன், B.H.அப்துல் ஹமீட், சுப்புலக்ஷ்மி காசிநாதன், மஹுதி ஹசன் இப்ராஹிம் போன்ற வானொலிக் கலைஞர்களை ஒன்று சேர்த்துக்கொண்டு, தனது **Comedians** நாடக மன்றம் மூலம் **'காதல் ஜாக்கிரதை', 'கலாட்டா காதல்'** போன்ற நாடகங்களை மேடையேற்றி 'கோமாளிகளை' இலங்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் பிரபலப்படுத்தினார்.

'நிர்மலா' திரைப்படப் புகழ் **A.ரகுநாதன்** 'நிழல் நாடக மன்றம்' என ஒரு மன்றம் அமைத்துப் பலரது நாடகங்களும் மேடையேற வழி சமைத்தார். அவரது 'நிழல் நாடக மன்றம்' 1968 இல் ஒரு வார காலம் நாடக விழாவொன்றைக் கொழும்பில் இலவசமாக நடாத்தி எட்டு நாடகங்களை மேடையேற்றியது. அந்நாடக அமைப்பில் இணைந்து கொண்டு எழுத்தாளர் பேராதனை ஜுனைதீன் ஈடுபாட்டோடு செயலாற்றினார்.

**மஹாகவியின் 'கோடை', எஸ்.பொ.வின் 'சாணக்கியன்', பௌஸில் அமீரின் 'வாடகைக்கு அறை', அம்பியின் 'வேதாளம் சொன்ன கதை'**, தமிழக எழுத்தாளர் **'துறையூர்' கே.மூர்த்தியின் 'தேரோட்டி மகன்', 'உலகம் சிரிக்கிறது', S.A.அழகேசனின் 'பாவிகள்', புலவர் தட்ஷணாமூர்த்தியின் 'ரகுபதி ராகவ ராஜாராம்'** என்பன அவ்வாறாக மேடை யேற்றப்பட்ட நாடகங்களாம்.

துறையூர் கே.மூர்த்தியால் எழுதப்பட்டு சுஹைர் ஹமீட்டினால் நெறியாள்கை செய்யப்பட்ட அவர்களின் 'தேரோட்டி மகன்' நாடகத்தில் குந்திதேவியாக ராஜேஸ்வரி சண்முகமும் கண்ணனாக K.S.பாலச்சந்திரனும் நடித்தனர். T. ராஜேஸ்வரனும் A.ரகுநாதனும் கூட அதில் முக்கிய பாத்திரங்களேற்றனர். அது யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேற்றப்பட்டபோது சம்பந்தப்பட்டவர்கள், 'வானொலியில் பிரபலமான நடிகர்கள் நடிப்பதால் அவர்களைக் காண ரசிகர்கள் பெருமளவில் திரண்டு வருவார்கள்', என எதிர்பார்த்து, - 'நுழைவுச் சீட்டுகளை மண்டபத்தில் பெறலாம்'- என விளம்பரம் செய்துவிட்டு வாழாவிருந்தார்கள். ஆனால் அவர்களது மனக்கோட்டை சரிந்து மண்ணாகிப்போனது. மண்டபத்தில் எண்ணிப் பத்தே பத்துப் பேர்தான்! அவர்களும்கூட யாரோ சிலரின் அறிமுகத்தால் எட்டிப் பார்த்த [என்னைப் போன்ற] ஓஸிப் பேர்வழிகள்தாம்!

திறந்தவெளி அரங்கில் கடலையைக் கொறித்துக் கொண்டு இலவசமாக நாடகங்கள் பார்க்கும் யாழ்ப்பாண மக்களா காசு கொடுத்து நாடகம் பார்ப்பார்கள்? ஒரு குருவியும் எட்டிப்பார்க்கவில்லை. கலைத்தாகத்தால் மனைவியின் நகையை விற்று நட்டை விற்று வீட்டை அடமானம் வைத்துப் பணத்தைப் புரட்டி எக்கச்சக்கமாகச் செலவு செய்து இலக்கிய நாடகம் செய்யப் புறப்பட்ட தயாரிப்பாளர்தான் பாவம். தலையில் கை வைத்தபடி குந்திவிட்டார். இவ்வாறாக மேடை நாடகம் செய்யப்புறப்பட்டு ஓட்டாண்டியானவர்கள் பலர். வானொலி நடிகர்களுக்கோ அந்தக் கஷ்டம் இல்லை. அவர்களுக்கோ பணமும் புகழும் தாமாகத் தேடிவரும். ஆயினும் தம் திறமைக்கான அங்கீகாரத்தை கண் முன்பாக நேரடியாகக் காண விரும்பும் கலைஞர்கள் மேடையிலும் தோன்ற யாசிக்கிறார்கள்.

கொழும்பைப் பொறுத்தமட்டில் ஆரம்பகால நடிகர்கள் பலரை உருவாக்கியவர் ஜிந்துப்பிட்டி **K.P.A.ராஜேந்திரம் மாஸ்டர்**. அவரது 'மனோரஞ்சித நாடக சபா' மூலம் உருவானவர்களுள் ஒருவர்தான் **லடிஸ் வீரமணி**யும். லடிஸின் முதல் மேடை நாடகம் '**மல்லிகா**', 1945 இல் மேடையேறியது. N.தாலிபும் மணிமேகலை ராமநாதனும் திரைப் படத் தாரகை ஹெலன் குமாரியும் கூட அவரது நாடக சபாவில் பயின்று புறப்பட்ட நடிகர்கள்தாம். அவர்களது '**உரிமை இழந்தவன்**' நாடகம் மூலம் நாடக உலகில் 1957 இல் பிரவேசித்தவர்தான் N.தாலிப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகவேள் ராதாவைத் தனது மானஸீகக் குருவாகக் கொண்டு மேடை நாடக வரலாற்றில் தனக்கெனத் தனிப் பாட்டை அமைத்துக் கொண்டு தன்னிகரின்றித் திகழ்ந்தவர் லடிஸ்!

திருவாரூர் தங்கராாசுவின் **'ரத்தக் கண்ணீர்'**, ஜெயகாந்தனின் **'யாருக்காக அழுதான்'**, பைபிளை ஆதாரமாகக் கொண்ட **'சலோமியின் சபதம்'**, மற்றும் **'கட்டபொம்மன்'**, **'கங்காணியின் மகன்'**, **'நாடற்றவன்'**, **'வீரத் தேவன்'**, **'தாய் நாட்டு எல்லையிலே'**, **'மனிதர் எத்தனை உலகம் அத்தனை'**, **'கலைஞனின் கனவு'**, **'ஊசியும் நூலும்'** என நடிப்பையே முழுநேரப் பணியாக வரித்துக் கொண்டு, தானே கதை வசனம் எழுதி நெறியாள்கை செய்து மேடை பல கண்டவரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து வெற்றி கண்டவர் பிரபல நாடக இயக்குனர் சுஹைர் ஹமீட். கலைச்செல்வனும் **C.** நடராஜசிவமும் செல்வம் பெர்னாண்டோவும் லடிஸின் நாடகங்களில் நடித்து நடிப்புக் கலையின் ஆரம்பப் பாடங்களைக் கற்றுக் கொண்டவர் களில் முதன்மையானோர். தேசிய நாடக விழாவில் மேடையேறிய லடிஸின் 'ஊசியும் நூலும்'[1978] போன்ற நாடகங்களில் பங்கேற்று பின் னாளில் வானொலி நடிகர்களாக வலம் வந்தவர்களில் ஜவகர் பெர்னாண்டோ, P.சீதாராமன், ஸ்ரீதர் பிச்சையப்பா, B.விஜயராஜா போன் றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பல்வேறுவிதமான பரீட்சார்த்த நாடகங்களையும் கொழும்பு மேடைகளில் நிகழ்த்தி விமர்சகர்களின் விழிகளை விரிய வைத்தவர் சுஹைர் ஹமீட். தங்களுக்குப் பிடித்தமான ஒரு சிலரை மட்டும் நாடகக் காவலர்களாக, நவீன நாடக விற்பன்னர்களாக ஏற்றிப் போற்றும் சில நாடகத் திறனாய்வாளர்கள் சுஹைர் ஹமீடின் பெயரை இருட்டடிப்புச் செய்துவிடுவதன் காரணம் காழ்ப்பா அல்லது கண்டுகொள்ள விருப் பின்மையா?

அவரது **'பொம்மலாட்டம்'** நாடகத்தில்தான் லடிஸ் என்ற கலைஞ னின் முழுப்பரிமாணமும் வெளிக்கொணரப்பட்டது. கவிஞர் அம்பியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா நாடகமான '**வேதாளம் சொன்ன கதை**'யிலும் சுஹைரின் நெறி யாள்கையில் லடிஸின் நடிப்புப் பேசப்பட்டது. K.M.M. சுபியானின் தழுவ லில் உருவான '**அவளைக் கொன்றவள் நீ**', கவிஞர் **இ.இரத்தினத்தின்** மொழிபெயர்ப்பான **Maxim Gorki** யின் '**அதல பாதா ளம்**', **Maxim Gorki யின் 'நகரத்துக் கோமாளிகள்', ஹென்றிக் இப்சனின்** நாடகத்தை தழுவி **தேவன்-யாழ்ப்பாணம்** எழுதிய '**பெண்பாவை**' மற்றும் '**ஏணிப் படிகள்**' என சுஹைர் ஹமீடின் சாதனைப் பட்டியல் நீளமானது.

அவரது நாடக நடிகர்களுள் ஜெயந்தி அப்புக்குட்டி தமிழ் வானொலி நாடக நடிகையானார். லடிஸின் வலது கரமாகத் திகழ்ந்த M.M.A.லத்தீப் உட்படப் பல முஸ்லீம் நடிகர்கள் முஸ்லீம் சேவை நடிகர் களாக உள்ளீர்க்கப்பட்டார்கள்.

**பௌசுல் அமீரின்** எழுத்தாக்கத்தில் சுஹைர் ஹமீடின் நெறி யாள்கையில் உருவான '**வாடகைக்கு அறை**' வெவ்வேறு நடிக நடிகை யரின் பங்களிப்பில் பல தடவைகள் மேடையேற்றப்பட்ட ஒரு நகைச் சுவை நாடகம்.

1972 இல் யாழ்-வீரசிங்கம் மண்டபத்தில் A.ரகுநாதனின் தயாரிப் பில் அது மேடையேறியபோது அதில் வானொலி நடிகர்களான T.ராஜேஸ் வரன், G.P. வேதநாயகம் ஜெயந்தி அப்புக்குட்டி ஆகியோருடன் யாழ்ப்பாணத்தில் பிரபலமாக இருந்த பிரான்சிஸ் ஜெனம், டிங்கிரி-சிவகுரு போன்றோரும் நடித்தார்கள்.

1964 இல் **புரட்சிமணி** இயக்கிய '**ஒருத்தி சொன்னாள்**' மேடை நாடகம் மூலம் கலையுலகில் பிரவேசம் செய்தவர் **K.A. ஜவாஹர்**. 15 ஈழத்துத் திரைப்படங்கள், 15 தொலைக்காட்சி நாடகங்கள், 500 மேடை நாடகங்கள், எண்ணிறந்த வானொலி நாடகங்கள் எனக் கலைத்துறை யின் பல்வேறு ஊடகங்களிலும் புகுந்து புறப்பட்டு வெற்றிக்கொடி நாட்டியவர் K.A.ஜவாஹர். 1969 இல் தினகரன் நாடக விழாவில் மேடை யேறிய சுஹைர் ஹமீடின் 'வாடகைக்கு அறை', கலைச்செல்வனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'**மனித தர்மம்**' ஆகிய இரு நாடகங்களிலும் வேடமேற்று சிறந்த துணை நடிகருக்கான விருதைப் பெற்றவர் அவர். 1974 - தேசிய நாடக விழாவில், சுஹைர் ஹமீடின் இயக்கத்தில் '**பிள்ளை பெற்ற ராஜா ஒரு நாயை வளர்த்தார்**' எனும் நாடகத்தில் நடித்துச் சிறந்த நடிகருக்கான விருதையும் வென்றவர் K.A. ஜவாஹர்.

இலங்கை வானொலி முஸ்லீம் சேவை நடிகரான **கலைச் செல்வன் ரவூப்** கொழும்பு நாடக மேடைகளில் பழம் தின்று கொட்டை போட்டவர். நீண்டகாலப் போராட்டத்தின் பின் தினகரன் நாடகவிழாவில் அவரது '**மனித தர்மம்**' சிறந்த நெறியாளருக்கான விருதைப் பெற்றுக்கொடுத்து அவருக்கான அங்கீகாரத்தை வழங்கியது.

'**கலைஞனின் கண்ணீர்**' அவரது ஆதர்ச நாடகம். '**கொலைகாரன்**', '**சிறுக்கியும் பொறுக்கியும்**', '**சக்காராம் பைண்டர்**', '**பாவசங்கீர்த்தனம்**', '**அலைகள்**', '**அக்கினிப் பூக்கள்**', '**டைமன் ராணி**', **பௌசுல் அமீரின்** '**தோட்டத்து ராணி**', **மொழிவாணனின்** '**நவரசம்**', **ஹுசைன் பாரூக்கின்** '**அகராதி அபூநாநா**' என மிகை நடிப்பு வகையறா நாடகங்கள் சிலவும் பரீட்சார்த்த நாடகங்கள் சிலவும் என மேடையேறிய கலைச்செல்வனின் நாடகங்கள் கொழும்பு நகரில், குறிப்பாக முஸ்லீம் சமூகத்தவரிடையே வரவேற்புப் பெற்றன. மணிமேகலை ராமநாதன் அவரது ஆஸ்தான மேடை நாயகி!

1958 இல் நாடக நடிகனாகக் காலூன்றியவர் **S.I.M.A.ஜப்பார்**. '**கடமையின் எல்லை**', '**மரணப் பரிசு**', '**நீதிதேவன் தீர்ப்பு**', '**விந்தியத்தின் விளிம்பிலே**' உட்படப் பல மேடை நாடகங்களில் நடித்த S.I.M.A.ஜப்பார் நடிப்புடன் நாடக எழுத்துத் துறையிலும் ஈடுபாடு கொண்டவர். 24 வானொலி நாடகங்களை முஸ்லீம் சேவைக்காக எழுதிய இவரது '**கல்பொலி கொண்ட கவி**' எனும் இலக்கிய நாடக நூல் 1997 இல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராஜசேகர் - ஹெலன்குமாரி** தம்பதியின் மேடை நாடகங்களும் 80 களின் பின் கொழும்பு ரசிகர்களால் பரவலாக ரசிக்கப்பட்டன. மானா மக்கீனின் மொழிபெயர்ப்பான **Dial M for Murder', 'Carry on Director'** என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. சிறந்த தொழில் நுட்பக் கலைஞ ரும் நாடக நெறியாளருமான **J.B.றொபேட்** நீண்டகாலமாகக் கொழும்பு நாடக மேடைகளில் குப்பை கொட்டிய போதிலும் அவரது மறைவுவரை அவர் பலராலும் அவ்வளவாக அறியப்படாதவராக, திறமை வெளிக் கொணரப்படாதவராக - குடத்துள்ளிட்ட விளக்காக இருந்துவிட்டார். வானொலிக் கலைஞரான செல்வம் பெர்னாண்டோ அவரது நாடகங்களில் பிரதான பாத்திரமேற்றவர். J.B.றொபேட் மாத்தளைக் கார்த்திகேசுவுடன் சேர்ந்து தேசிய நாடக விழாக்களில் அரங்கேற்றிய **'ஒரு சக்கரம் சுழல்கிறது' [1976], 'காலங்கள் அழுவதில்லை' [1978]** என்பன அவரது நெறியாள்கையில் உருவானவற்றுள் குறிப்பிடத்தக்க நாடகங்கள்.

எழுத்தாளர்கள் **மாத்தளைக் கார்த்திகேசுவும் [போராட்டம்], அன்ரனி ஜீவாவும் [அலைகள், அக்கினிப் பூக்கள், 'பறக்காத கழுகுகள்']** ஓரளவுக்கு மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொழும்பில் நாடகம் போட்டவர்கள் எனக்கூறலாம்

1970 இல் தனது **'முள்ளில் ரோஜா'** வுடன் களத்தில் இறங்கியவர் அன்ரனி ஜீவா. முற்போக்கு அணி சார்ந்த மலையகத் தோட்டத் தொழி லாளர்களின் குரலாக, சுரண்டல் வர்க்கத்துக்கெதிரான போர் வாளாகத் தனது நாடகங்களை வடிவமைத்துக் கொண்டவர் அன்ரனி ஜீவா. அவரது 'அக்கினிப் பூக்கள்' பதுளையுட்பட மலையகத்தின் சில பகுதிக ளில் மேடையேறியது. அது 1979 இல் நூலாகவும் உருவானது. அவரது 'அலைகள்' 1978 இல் மலையகத்திலும் தென்னிலங்கை நகரங்கள் சிலவற்றிலும் மேடையேறியது. 'அலைகள்'ளில் கலைச்செல்வன், M.M.A.லத்தீப் ஆகியோருடன் மகேஸ்வரி ரத்னமும் நடித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள நாடகங்களின் செல்நெறியைத் தெரிந்து வைத்திருக்கும் அன்ரனி ஜீவா தமிழ் நாடக உலகில் தனது கால்களை ஊன்றிப் பதிக் கவில்லை என்றே கூறத் தோன்றுகிறது. தமிழகம் சென்று வீதி நாடகப் பயிற்சிப் பட்டறையில் - பாதல் சர்க்காரின் வழிகாட்டலில், வீதி நாடகம் பற்றிப் பெற்ற பயிற்சிகளை மலையகத்தில் நடைமுறைப்படுத்திப் பார்த்தவர் அன்ரனி ஜீவா. அவரது நாடகக் குழு நடிகர்களுள் மகேஸ்வரி ரட்னம் ஒருவரே இலங்கை வானொலி நடிகையாகவும் இருப்பவர். அவரது 'முள்ளில் ரோஜா'வில் A.E.மனோகரனும் கூட நடித்திருப்பதாகத் தெரிகிறது. மற்றப்படி ஹெலன் குமாரி, சந்திரகலா, ராஜம் ராஜன், ஜெயதேவி, கமலஸ்ரீ, ஸ்ரீசங்கர், டொன் பொஸ்கோ, மோகன்குமார், டீன்குமார் என நடித்தவர்கள் பலரும் வெள்ளித்திரையில் மின்னியவர்க ளாக இருக்கிறார்கள். ஆனால் வானொலிப் பக்கம் ஏனோ இவர்கள் எட்டியும் பார்க்கவில்லை! மோகன்குமார் மட்டும் [S.செல்வசேகரன் மொழிபெயர்த்து எழுதி] 'சூரியன்'FM வழங்கிய வானொலி நாடகங்கள் சிலவற்றில் பின்னைய நாட்களில் நடித்தார்.

**அ.ந.கந்தசாமியின் 'மதமாற்றம்'** கொழும்பில் இரு தடவைகள் மேடையேறிய ஒரு நாடகம். 1967 இல் முதற் தடவையும் பின்னர் 1972 இல் [என நினைக்கிறேன்] இரண்டாவது தடவையும் அது மேடையேறியது. கலாநிதி க.கைலாசபதியுட்பட அன்ரனி ஜீவா போன்ற முற்போக்கு அணியினர் அதை ஏதோ 'மகத்தான சாதனை'ப் படைப்பாகப் பதிவு செய்துள்ளனர். அதன் இரண்டாவது மேடையேற்றத்தின் போது ஜோர்ஜ், C.சண்முகம் உட்படச் சில நாடக ஆர்வலர்களுடன் நானும் அதைப் பார்க்க நேரிட்டது. ரசனையான கதைப் பின்னாலோ வசனச் செழு மையோ இல்லாத எவ்விதமான கலாநேர்த்தியுமற்ற அந்நாடகம் எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையளித்தது.

நாமொன்றும் முற்போக்கிற்கு எதிரானவர்களல்ல. அதற்காக அவர்களின் அபத்தமான படைப்புகளையும் ஆகா ஓகோவென்று பாராட்ட வேண்டுமென்றில்லையே. வெறும் மத எதிர்ப்புப் பிரசாரமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையாளர்களிடத்தில் எவ்வித அருட்டுணர்வையும் ஏற்படுத்தாத, மாறாக எரிச்சலை மூட்டுவதாக அமைந்த ஒரு நாடகத்தைப் பற்றி இத்தகைய ஒரு தவறான பதிவை ஏற்படுத்துவது நடுநிலை விமர் சன மாகாது. லடிஸ் வீரமணியின் நெறியாள்கையில் உருவானபோதிலும் கொழும்பில் மேடையேறிய உப்புச் சப்பில்லாத மிக மோசமான நாட கங்களில் அதுவும் ஒன்று என்பது எமது துணிபு.

70 களில் மரபுவழி நாடகங்களைப் புறந்தள்ளிவிட்டு நவீன மோடி நாடகங்கள் தமிழில் மேடையேறக் கால்கோளிட்டவரென சுஹைர் ஹமீட்டைதான் கூறவேண்டும். ஆங்கில, பிரெஞ் நாடகாசிரியர்களின் பரிசோதனை நாடகங்களை தம்மளவில் அவரும் முயன்று பார்த்தார்.

அவரது 'ஏணிப்படிகள்' நாடகத்தில் நடித்தவரான **க.பாலேந்திரா** அவர் வழியில் சென்று இன்னும் ஒரு படி முன்னேறித் தமது 'அவைக்காற்றுக் கலைக்கழகம்' மூலம் **1976** இல் **இந்திரா பார்த்தசாரதி** யின் '**மழை**'யுடன் ஆரம்பித்து **1983** வரை 20 நாடகங்கள் மட்டில் நெறியாள்கை செய்து தயாரித்து வெற்றிகரமாக மேடையேற்றி யுள்ளார். **'கண்ணாடி வார்ப்புகள்'[1978], 'யுகதர்மம்'[1979], ந.முத்துசாமியின் 'நாற்காலிக்காரர்'[1979], 'ஒரு பாலை வீடு'[1979], 'அரையும் குறையும்'** [1981] என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கன.

ஜேர்மனிய நாடகாசிரியரான **Bertolt Brecht** இன் **The Exception and the Rule** எனும் நாடகத்தின் தமிழாக்கமான 'யுகதர்மம்' மட்டும் இலங்கையில் இனப் பிரச்சினை முனைப்படைந்து கொண்டிருந்த அக்காலகட்டத்தில் பேராதனை, மாத்தளை, பதுளையுட்பட நாட்டின் பிரதான நகரங்களில் **29** தடவைகள் மேடையேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதொரு சாதனை எனலாம். 'யுக தர்மம்' நாடகத்தில் வானொலிக் கலைஞர் சாந்தி சச்சிதானந்தம் பிரதான பாத்திரமேற்று நடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பாலேந்திராவின் 'யுகதர்மம்' நூல் தொகுப்புரையில் அவர் குறிப்பிட்டுள்ள ஒரு விடயம் கவனத்துக்குரியது.

**'70களில் இலங்கையில் தமிழில் நாம் மேற்கொண்ட மொழிபெயர்ப்பு முயற்சிகளை ஒரு அணியினர் புறக்கணிக்க முற்பட்டார்கள். தமிழ் உயர்கல்விச் சமூகத்தின் 'குழு' மனப்பான்மை ஈழத் தமிழர் கலை இலக்கியப் பரப்பில் கோலோச்சிய காலம் அது. ஒரு ஆதிக்க சக்தியாக அது இருந்தது. ஆதிக்க சக்திகளே வரலாற்றை நிர்ணயிக்கின்றன போலும். இவர்களின் மார்க்சிய முற்போக்கு அணியைச் சாராதவர்களைப் புறக்கணிக்கும் போக்கே மேலோங்கி இருந்தது. உற்சாகமாக, அர்ப்பணிப்புடன் தமிழ் நாடகத்தின் பன்முகத் தன்மைக்கு உழைத்த இளம் தலை முறையினரின் நாடகச் செயற்பாடுகளை மழுங்கடிக்க முயன்ற செயல் அது."**

எனக் குறிப்பிடும் க.பாலேந்திரா பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் ஒருதலைப்பட்சமாக, தமது நாடகங்கள் பலவற்றையும் பார்க்காமலே செய்துள்ள ஒரு பதிவின் காரணமாக, தமிழ் நாடக வரலாற்றின் உண்மைத் தன்மையை மூடிமறைத்து இருட்டடிப்புச் செய்துள்ளமையை விசனத்துடன் சுட்டிக்காட்டுகிறார்.

**"நாடக ஆற்றுகைகள் ஒரு நிகழ்ச்சியாகவே நடந்து முடிந்துவிடும் தன்மையுடையன. அவற்றின் பதிவுகள்தான் அவை பற்றிய விபரங்களை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச்செல்ல முடியும். அந்த வகையில் வரலாறு எழுதுபவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயலாற்ற வேண்டிய தேவையுண்டு. [இது சம்பந்தமான கைலாசபதியாரது கருத்தானது/கட்டுரையானது பின்னைய நூல்கள் இரண்டில் மீள்பதிவும் செய்யப்பட்டதால்] இதனது அடிப்படையிலேயே ஈழத் தமிழ் நாடக வரலாறு தற்போதும் பார்க்கப்படுவது வேதனைக்குரியது".** என ஆதங்கப்படும் க.பாலேந்திராவின் கூற்றை நாமும் புறக்கணித்துவிட முடியுமா? அவரது நாடகங்களில் வானொலி நடிகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தராணி ராஜரட்ணம் முக்கிய பங்கேற்றார். பின்னரவர் பாலேந்திராவின் வாழ்விலும் பங்கேற்று ஆனந்தராணி பாலேந்திரா வானார். அவர்களது நாடக முயற்சிகள் புலப்பெயர்வின்பின் லண்டனி லும் தொடர்ந்தன; தொடர்கின்றன. அவரது 'கண்ணாடி வார்ப்புகள்', 'மழை' என்பன பி.விக்னேஸ்வரனால் வானொலிக்கென மாற்றியமைக் கப்பட்டு ஒலிபரப்பாயின.

நவீன மேடை நாடகக்காரர்கள் எனத் தம்மை அடையாளப்படுத் திக் கொள்வோர் அவ்வளவாக வானொலியுடன் சங்காத்தம் வைத்துக் கொள்வதில்லை. அவர்களது புதிய பரிசோதனைகளுக்கு வானொலி வாகாக அமைய மாட்டாதென அவர்கள் கருதிவிட்டார்களோ என் னவோ!

ஆனால் அவர்களது நாடகங்களிலும் நமது வானொலிக் கலை ஞர்கள் சிலர் அருந்தலாக நடித்துப் பங்களிப்புச் செய்துள்ளதால் அவ ற்றைப் பற்றியும் மேலோட்டமாகவேனும் பார்க்க வேண்டியுள்ளது.

**'பொறுத்தது போதும்'** நாடக அரங்கக் கல்லூரியினரால் 1968 இல் மேடையேற்றப்பட்டது. A.தாசீஸியஸின் இயக்கத்தில் உருவான அந் நாடகத்தில் பிரான்சிஸ் ஜெனம், A.T.பொன்னுத்துரை, தயாளன் போனறோருடன் சோ.தேவராஜாவும் நடித்தார். சில காலத்தின்பின் அவர் வானொலி நடிகராகவுமானார். வானொலி நாடக எழுத்தாள ராகவிருந்த V.N.குகராஜா மேடையமைப்பை நிர்வகித்தார். பாடகர் குழுவில் வானொலி நடிகர் சிசு நாகேந்திராவும் இடம் பெற்றிருந்தார்.

அம்பலத்தாடிகளின் தயாரிப்பில் ரகுநாதனின் பிரதியாக்கத்தில் **A.தாசீஸியஸின்** நெறியாள்கையில் உருவான மற்றொரு நாடகம் **'கந்தன் கருணை'**. **மஹாகவி**யின் கவிதை நாடகமான **'கோடை'** தாசீஸியஸின் நெறியாள்கையில் அவரது 'நாடோடிகள்' நாடகக் குழு வினரால் 1969இல் லும்பினி அரங்கில் முதன்முதலாக மேடையேற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. அதைத் தொடர்ந்து பல மேடைகளில் பல நெறியாளர்களி னதும் கைவண்ணத்தில் அது மேடையேறியுள்ளது.

சோ.தேவராஜன், சோக்கல்லோ நா.சண்முகநாதன், ஆனந்தராணி ராஜரட்ணம் உட்பட A.T.பொன்னுத்துரை, பிரான்சிஸ் ஜெனம், வி.சிங் காரவேலு, உ.சேரன் எனப் பலரும் காலத்துக்குக் காலம் நடித்துச் சிறப்பித்துள்ள அந்நாடகத்தின் இரண்டாவது மேடையேற்றம் மட்டக் களப்பு, திறந்தவெளி அரங்கில் 1970 இல் இடம்பெற்றபோது நானும் அதில் நடித்தேன்.

மூன்று பதிப்புகளைக் கண்ட 'கோடை' நாடக நூலின் முதற் பதிப்பில் நடிகர்களின் பெயரட்டவணையில் கீழே தனியாக 'முருகப் புவாக ஜீ.மறைமுதல்வன் இரண்டாவது மேடையேற்றத்தின்போது நடித்தார்' எனச் சிறிய எழுத்துக்களில் பதிவாகியிருக்கும். மூன்றாவது பதிப்பில் அது எப்படியோ விடுபட்டுப்போனது.

அந்நாடகத்தில் நான் நடித்ததும் ஒரு சுவையான அனுபவம்தான். நண்பர் சிங்காரவேலு மூலம் தாசீஸியஸ் எனக்கு அறிமுகமானார். 'கோடை' முதலில் கொழும்பில்தான் மேடையேறுவதாக இருந்தது. 1970 இல் ஒரு நாவலர் விழாவுக்காக மேடையேற்றச் சகல ஏற்பாடுகளும் செய்து முடித்து இறுதி ஒத்திகைக்காக மண்டபத்துக்கும் சென்றுவிட் டோம். அரங்க அமைப்பு வேலைகள் நடந்து கொண்டிருந்தன. கடைசி நேரத்தில் நாடகத்தை மேடையேற்ற முடியாத தடங்கல் ஒன்று. நாய னக்காரர் வீட்டில் ஐயர் ஒருவர் இட்டிலி சாப்பிடுவதாக நாடகத்தில் ஒரு காட்சி. அக்காட்சி நீக்கப்படவேண்டுமென தயாரிப்பாளர்களான நாவலர் சபையினரால் கோரிக்கை வைக்கப்பட்டது. எழுத்தாளரின் சுதர்மத்தில் தான் தலையிட முடியாதென தாசீஸியஸ் அழுத்தமாகக் கூறிவிட்டார். ஏற்பாட்டாளர்களோ விட்டுக்கொடுக்கத் தயாராக வில்லை. இந்துத்துவ சனாதனிகளின் பிடிவாதத்தால், சாதித் தடிப்பால் அன்று நாடகம் தடைப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் மட்டக்களப்பில் திறந்தவெளி அரங்கில் அது மேடையேறியபோது மஹாகவியின் மகன் சேரன் சிறுவன் கணேசுவாகத் தோன்றி அப்பாவின் கவிதையை அட்ஷரம் பிசகாமல் அழகுற 'ஒப்பு வித்து' மகிழ்வித்தான். என்னை ஆரத்தழுவி அன்பு செய்த M.A.நுஹ்மானை அதன் பின்னர் நான் சந்திக்கக் கிடைக்கவில்லை. ஆனால் மஹாகவி வானொலியில் 'கலைக்கோலம்' நடத்தியபோது 'கொல்லன் தெருவில் ஊசி விற்பவனைப் போல' அந்நிகழ்ச்சியில் நானும் 'நாடகம்' பற்றிக் கட்டுரை வாசித்தேன்.

சோக்கல்லோ S.சண்முகநாதன், சோ.தேவராஜா போன்ற வானொலி நடிகர்களும் பின்னர் 'கோடையை மேடையேற்றியுள்ளார் கள். வானொலி நடிகையான புவனலோஜினி வேலுப்பிள்ளையும் 'கோடை' யில் நாயகியாக நடித்துள்ளார். நா.சுந்தரலிங்கத்தின் 'விடிவை நோக்கி' நாடகத்திலும் அவர் முக்கிய வேடமேற்றார்.

தாசீஸியஸின் நெறியாள்கையில் மஹாகவியின் கவிதை நாடகமான '**புதியதொரு வீடு**'ம் பின்னர் மேடையேறியது. மஹாகவி து.உருத்திரமூர்த்தியின் 'கோடை', புதியதொரு வீடு', 'முற்றிற்று' எனும் மூன்று கவிதை நாடகங்களும் ஒரே தொகுப்பாக 2000 இல் நூலுருவாயின. '**முற்றிற்று**'வை ஏனோ எவரும் மேடையேற்றவில்லை.

அலெக்ஸி ஆபூகோ எனும் நாடகாசிரியரின் நாடகத்தைத் தழுவி எழுதப்பட்ட '**பிச்சை வேண்டாம்**' எனும் நாடகத்தையும் தாசீஸியஸ் மேடையேற்றினார். அதில் முக்கிய வேடத்தில் விமல் சொக்கநாதன் நடித்தார். [தாசீசியஸுக்கு அவரது பெயரைச் சிபாரிசு செய்தவன் அடியேன்தான்!] ஷேக்ஸ்பியரின் **Merchant of Venice**, '**வெனீஸ் வணிகன்**' ஆகத் தமிழில் கொழும்பு, லயனல் வென்ட் அரங்கில் மேடையேறிய ஒரு போதில் அதில் விமல் சொக்கநாதனும் அவரது சகோதரி யோகா தில்லைநாதனும் சிறப்பாக நடித்திருந்தனர். நானும் அதைப் பார்த்திருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் தேவை காரணமாக நாடகத்தின் தொனிப்பொருளில் ஏற்பட்ட மாற்றமும் அரங்கியல் பற்றிய புதிய கோட்பாட்டுச் சிந்தனையும் களிப்பூட்டல் எனும் அம்சத்தை விழிப்பூட்டலாக மாற்றி, பார்வையாளர்களாக இருந்த மக்களைப் பங்காளிகளாக நிர்ப்பந்திக்கும் கைங்கரியம் 80 களின் பிற்பகுதியில் துரிதமாக நடந்தேறியது. நடிகர்களின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு நெறியாளர்களின் ஊடகமாக நாடகம் மாற்றப்பட்டது.

அந்த வகையில் அதன் சூத்திரதாரிகளாக குழந்தை ம.சண்முகலிங்கம், சி.மௌனகுரு, இ.முருகையன், இ.சிவானந்தன், ந.சுந்தரலிங்கம் போன்றோர் முதன்மை பெற்றனர்.

**மௌனகுருவின் 'சங்காரம்', குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'அன்னை இட்ட தீ', 'மண் சுமந்த மேனியன்', இ.முருகையனின் 'கடூழியம்' [நெறியாள்கை - நா.சுந்தரலிங்கம்], 'விடியலை நோக்கி', 'விழிப்பு' இ.சிவானந்தனின் 'காலம் சிவக்கிறது' இளைய பத்மநாதனின் 'கந்தன் கருணை'** என யாவுமே போர்க்காலச் சூழலில் உருவான, அதை வளர்த்தெடுக்க - பார்வையாளர்களான மக்களை உசுப்பிவிட்ட மகத்தான படைப்புகள்!

ஆயினும் குழந்தை ம.சண்முகலிங்கமும் சி.மௌனகுருவும் சிறுவர் நாடக அரங்க உருவாக்கத்தில் மேற்கொண்ட பணிகளும் அதற்கென ஆக்கியுள்ள நூல்களும் அளப்பரியன; பாராட்டப்படவேண்டியன.

**குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்'**, பிரான்சிஸ் ஜெனம், சோ.தேவராஜா, சோக்கல்லோ சண்முகம் எனப் பலராலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்ட ஒரு நாடகம். அது 22.03.2006 இல் சோக்கல்லோ சண்முகத்தால் கொழும்பு, தமிழ்ச்சங்க மண்டபத்தில் மேடையேற்றப்பட்டபோது அதில் அவருடன் G.P.வேதநாயகம் A.M.C.ஜெகசோதி, ஜெயந்தி அப்புக்குட்டி போன்ற வானொலி நடிகர்களும் நடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் அவ்வளவாக வானொலியுடன் தொடர்புபட்டதாகத் தெரியவில்லை. பல்கலை வேந்தர் **சில்லையூர் செல்வராஜன்** மட்டும் இதற்கு விதிவிலக்கு. '**ஞானசௌந்தரி**' நாட்டுக் கூத்தின் நாயகனாகத் தோன்றி, பாடியும் ஆடியும் தனது பன்முகத் திற மையை அவர் பறைசாற்றினார். 1974 இல் இலங்கை முத்தமிழ்க் கலா மன்ற இசை விழாவில் இடம்பெற்ற பூந்தான் யோசேப்புவின் '**சங்கிலியன்**' நாட்டுக்கூத்தில் தனது புதல்வன் திலீபனுடன் சில்லையூர் செல்வராசனும் சேர்ந்து பங்களிப்புச் செய்தார்.

அவரடியொற்றி **கமலினி செல்வராஜனும்** அக்கலையைப் பயின்று தேறி மேடைகளில் நிகழ்த்திக்காட்டியதுடன் தான் பயின்ற நாட்டுக்கூத்துக் கலையைப் பயிற்றுவிப்பவராகவும் விளங்கி, நாட்டுக் கூத்துக் கலைஞருக்கான அரச விருதும் பெற்றார்.

கூத்துக் கலைக்காகவே தன்னை அர்ப்பணம் செய்த **நடிகமணி V.V.வைரமுத்துவின் 'மயான காண்டம்'** [70 களில்] சரஸ்வதி மண்டபத் தில் மேடையேறியபோது அதில் சந்திரமதியாகப் பாடி நடித்து ஈடு கொடுத்தவர் சுப்புலக்ஷ்மி காசிநாதன்.

நடிகமணி V.V. வைரமுத்துவுடன் இணைந்து 'மயான காண்டம்' நாட்டுக்கூத்தில் மணிமேகலை ராமநாதனும் நடித்துள்ளார். 'கலா விநோதன்' **சின்னமணியின் 'சத்தியவான்', 'காத்தவராயன்'** கூத்து களி லும் அவர் பங்களிப்புச் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலிக் கலைஞர்களும் ஈழத்துத் தமிழ் சினிமாவும்

இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களின் வரலாற்றை மேலோட் டமாகப் பார்த்தால், அது 60 களில் மெல்ல மெல்லத் தளர் நடைபோட ஆரம்பித்து 70 களில் தமிழகத்துத் திரைப்படங்களின் தடையுடன் வீரி யம் பெற்றுப் பாய்ச்சல் காட்டிப் பின் 80 களில் தடை நீக்கத்தின் பின் படிப்படியாக ஜீவனிழந்து, அதன் பின்னான ஆண்டுகளில் போர்க் காலக் கார்மேகம் சூழ்ந்து மறைக்க, அத்திபூத்தாற் போல அவ்வப்போது ஒருசில படங்கள் வெளியான போதிலும் ஆதரித்துப் போஷிப்பாரற்ற சவலைக் குழந்தையாக மாறிப் போய்விட்ட நிதர்சனம் உறைக்கிறது.

ஈழத்தின் மிகப்பெரிய எழுத்தாள ஜாம்பவான்கள் எனப்படும் தெளிவத்தை ஜோசப் [புதிய காற்று], செங்கை ஆழியான் [வாடைக் காற்று] காவலூர் ராசதுரை[பொன்மணி] போன்றவர்களும் நவீன நாடக முன்னோடிகளெனப் போற்றப்படும் சி.மௌனகுரு, குழந்தை ம.சண்முகலிங்கம் போன்றவர்களும் முன்னணி வானொலி நாடக நடிக நடிகையரும் பங்களிப்புச் செய்தும்கூட குறிப்பிடத்தக்கதான ஒரு படத் தையேனும் அவர்களால் தர முடியவில்லை. ஒரு லெஸ்டரோ, ராமுகரியத்தோ, ஜெயகாந்தனோ ஈழத் தமிழ்த் திரையுலகில் உருவாக வில்லை. நடிப்பு, பாடல்கள் என ஒருசில படங்கள் கவனயீர்ப்புப் பெற்ற போதிலும் ஒட்டு மொத்தமாகச் சிறந்த ஒரு படைப்பைத் தன்னும் ஏனோ உருவாக்க முடியவில்லை. 'நமக்குமோர் நலியாக் கலையுடையோம்' எனப் பீற்றிக்கொள்ளும் எம்மால் எமக்கான ஒரு திரைப்படப் பாதையை வகுத்துக் கொள்ள இயலவில்லை.

'வாடைக் காற்றில் ஜேசுரட்ணத்தினதும் K.S.பாலச்சந்திரனினதும் நடிப்புப் பேசப்பட்டதும் அதிக நாட்கள் ஓடிய படம் எனும் பெருமையை 'கோமாளிகள்' பெற்றதும் முத்தழகுவும் ஜோசப் ராஜேந்திரனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாவதியும் பாடிய சில பாடல்கள் காதில் இனித்ததும் உண்மைதான். மற்றப்படி வேறென்ன? புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டாற் போல கேரளத்துச் 'செம்மீனை' வைத்து 'வாடைக் காற்று'ம் ஏ.பி.என்.னின் ''தில்லானா மோகனாம்பாள்' ஐப் பார்த்து 'தெய்வம் தந்த வீடு'ம் வந்து எமது இயலாமையைப் பல்லிளித்துக் காட்டின.

60 களில் வெளியான ஈழத் திரைப்படங்களில் அவ்வளவாக வானொலி நடிகர்கள் நடிக்கவில்லை. 1962 இல் வெளிவந்த முதல் 16mm படமான 'சமுதாயம்' படத்தில் இரா.காசிநாதன் நடித்ததாகத் தெரிகிறது. 1966 இல் மற்றொரு 16mm படம் வெளியானது. 'பாசநிலா' எனும் அப்படத்தில் A.E.மனோகரன் நடித்திருந்தார்.

'கோமாளிகள்', 'வாடைக் காற்று' என மேலுமிரு படங்களில் பின்னரவர் நடித்திருந்த போதிலும் 'பொப்பிசைச் சக்கரவர்த்தி'யாகப் புகழ் பெற்ற அவர் தமிழகத்து சிவாஜி பட வில்லனாகவே அதிகம் அறியப்பட்டார். பின்னைய நாட்களில் தமிழகச் சின்னத்திரைத் தொடர் ஒன்றிலும் அவரைக் காண முடிந்தது.

1966 இல் வெளியான சுண்டிக்குளி சோமசேகரனின் **Taxi Driver** இல் கதாநாயகனாக T.ராஜேஸ்வரன் கதாநாயகியாக யோகா சொக்கநாதன் மற்றும் நகைச்சுவை வேடங்களில் சானா, ரொசாரியோ பீரிஸ் என நான்கு வானொலி நடிகர்கள் முக்கிய பங்காற்றினர். ரொஸியும் யோகாவும் பின்னர் மேலுமிரு படங்களிலும் T.ராஜேஸ்வரன் ஒரு படத்திலும் துணை வேடமேற்றனர்.

1968 இல் வெளியான 'நிர்மலா'வில் சிசு.நாகேந்திராவும் 'சக்கடத்தார்' ராஜரத்தினமும் நடித்துள்ளார்கள். சிசு.நாகேந்திரா 1972 இல் வெளியான குத்துவிளக்கிலும் நடித்தார்.

70 களில் இலங்கை வானொலி நடிகர்களாக இருந்தவர்கள் பேறு பெற்றவர்கள். ஈழத்துத் திரைப்படங்கள் அதிகளவில் தயாரிக்கப்பட்டு வெளியானது இக்காலகட்டத்திலேயே. அதனால் அப்படங்களில் நடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் வாய்ப்புகளும் இக்காலகட்ட வானொலி நடிகர்களுக்கு இலகுவா கவே வந்து சேர்ந்தது. இன்றுவரை அந்நடிகர்களின் பெயர்கள் நேயர்க ளின்/இரசிகர்களின் மனங்களில் நின்று நிலைப்பதற்கும் விமர்சகர்க ளால் அடிக்கடி உச்சரிக்கப் படுவதற்கும் இதுவே காரணம்.

K.A.ஜவாகர். S.ராமதாஸ், K.S.பாலச்சந்திரன் S.செல்வசேகரன், M.M.A.லத்தீப் போன்றவர்கள் குறைந்தது நான்கு படங்களிலேனும் நடிக் கக் கொடுத்துவைத்தவர்கள். வானொலி நாடக எழுத்தாளர் பேராதனை ஜுனைதீன் எழுதித் தயாரித்ததும் இலங்கையில் தயாரான முதல் தமிழ் வண்ணப்படமுமான 'ஷர்மிளாவின் இதய ராகம்' [1993] திரைப்படத்தில் மேற்குறிப்பிட்ட ஐவரும் நடித்துள்ளார்கள் என்பது சிறப்பு! சுப்புலக்ஷ்மி காசிநாதன், மணிமேகலை ராமநாதன், செல்வம் பெர்னாண்டோ, யோகா தில்லைநாதன், S.ஜேசுரட்ணம், T.ராஜகோபால், இரா.பத்மநாதன், B.விஜயராஜா, ஜோபு நசீர் முதலானோர் தலா மூன்று படங்களிலும் லடிஸ் வீரமணி, கலைச் செல்வன், S.திருநாவுக்கரசு T.ராஜேஸ்வரன், சிசு நாகேந்திரா, R.ஆனந்தராணி போன்ற மூத்த நடிகர் கள் தலா இரண்டு படங்களிலும் நடித்தார்கள்.

இவர்களை விட அப்துல் ஹமீட், சில்லையூர் செல்வராஜன், கமலினி செல்வராஜன், K.சந்திரசேகரன்[கோமாளிகள்], ரேலங்கி செல்வராஜா [தெய்வம் தந்த வீடு] T.S.பிச்சையப்பா [வெண்சங்கு], R.விக்டர் [ஏமாளிகள்], விமல் சொக்கநாதன் [நான் உங்கள் தோழன்],' நந்தி' செ.சிவஞானசுந்தரம், சோக்கல்லோ S.சண்முகநாதன் [பொன்மணி], சித்தி அமரசிங்கம் [தென்றலும் புயலும்], ஜோர்ஜ் சந்திரசேகரன், நடராஜசிவம் [பாதை மாறிய பருவங்கள்], P. சீதாராமன், ஸ்ரீதர் பிச்சையப்பா [அவள் ஒரு ஜீவநதி] போன்ற வானொலிக் கலை ஞர்களும் ஈழத்துத் திரைவானிலும் உலா வந்துள்ளார்கள்.

82 இல் வெளியான 'பாதை மாறிய பருவங்கள்' இல் இருந்து 'கோமாளி கிங்ஸ்' [2018] ஈறாக நான்கு தமிழ்ப்படங்களில் ராஜா கணேசன் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தினார். 2012 இல் போர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் பின்னணியில் 'இனி அவன்' எனும் திரைப்படம் இலங்கையில் தயாராகி வெளியானது. அதில் மகேஸ்வரி ரட்னம் பங்களிப்புச் செய்தி ருந்தார்.

S.செல்வசேகரம், ராஜா கணேசன், K.சந்திரசேகரன் போன்றோர் சிங்களப் படங்களிலும் நடிக்க வாய்ப்புப் பெற்றனர். சிங்கள - தமிழ் மொழிமாற்றப் படங்களுட்படச் சில படங்களில் S.செல்வசேகரம், ஜோக்கிம் பெர்னாண்டோ, C.நடராஜசிவம், ஆமினா பேகம், நிஹாரா சபூர்தீன், செல்வம் பெர்னாண்டோ, ராஜேஸ்வரி சண்முகம், விஜயாள் பீட்டர், ஜெய் ரஹீம் சஹீட், K.சந்திரசேகரன், R.திவ்யராஜன் போன்ற வானொலிக் கலைஞர்கள் நாயக, நாயகியர் உட்படப் பிற நடிகர்க ளுக்கும் பின்னணியிற் குரல்கொடுத்து உயிரூட்டியுள்ளார்கள். V.P.கணேசன் தயாரித்து நடித்த மூன்று படங்களில் அவருக்குப் பின்ன ணிக் குரல் கொடுத்தவர் S.செல்வசேகரம். அதனால் அவரது 'நாடு போற்ற வாழ்க'வில் [1980] S.செல்வசேகரமும் நடிக்க நேர்ந்தபோது செல்வாவுக்கு S.N. தனரத்தினம் எனும் நடிகர் குரல் கொடுக்க நேர்ந்தது!

இவ்விடத்தில் 1972 இல் வெளியான 'குத்து விளக்கு' சம்பந்தமான உள்குத்துகள் பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டியிருக்கிறது. தொழில திபரான V.S.துரைராஜ் தயாரித்த திரைப்படம் 'குத்து விளக்கு'. அதற் கான திரைப்படப் பிரதி எழுதும் [அ]பாக்கியம் முதலில் சில்லையூர் செல்வராஜனுக்குச் சித்தித்தது. தனது நீண்ட கால அனுபவத்தையும் கற் பனையையும் குழைத்து, யாழ் மண் வாசனை கமழும் யதார்த்தமான திரைப்படச்சுவடியை உருவாக்கிக் கொடுத்தார் செல்வராஜன். தயா ரிப்பு ஆரம்பித்துச் சில நாட்களுக்குள் தயாரிப்பாளருக்கும் கதாசிரிய ருக்குமிடையே முட்டிக் கொண்டுவிட்டது. பிரம்மப் பிரயத்தனத்துடன் பிரதியை மீளப்பெற்ற சில்லையூரார் உடனடியாக அதை நூலுருவாக் கிப் படம் திரையிடப்படுமுன் 1971 இல் வெளியிட்டும்விட்டார். ஏழை எழுத்தாளனால் வேறென்னதான் செய்ய முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலக்கதை உருமாற்றப்பட்டு, சிதைக்கப்பட்டு வெளியான படம் விளம்பர பலத்தால் ஒருவாறாக ஒருசில நாட்கள் ஓடியது என்பது உண்மைதான். ஆனாலும் அதில் ஏற்பட்ட இழப்புத்தான் சில்லையூராரின் சிறப்புக்கு, அவர் பெயர் நின்று நிலைப்பதற்கு மறைமுகத் தூண்டுகோலானது.

சிறுகதை மன்னன் ஜெயகாந்தனுக்கும் சில்லையூராருக்கும் சில ஒற்றுமைகளுண்டு. இருவருமே 'சீறுவோர்ச் சீறு'வோராக, நக்கீரத் துணிச்சலுடன் அநீதிக்கு எதிராக உரத்துக் குரல் கொடுக்கும் எழுத்தாளவர்க்கத்தினர்தாம். ஆனாலும் நான் கூற வந்தது அதுவல்ல.

'அக்கினிப் பிரவேசம்' எனும் முத்திரைக் கதையொன்றை 60 களில் விகடனில் ஜெயகாந்தன் எழுதினார். அக்கதையைப் பாராட்டியும் கண்டித்தும் விமர்சனங்கள் பல எழுந்தன. சனாதனிகள் ஜெயகாந்தனைச் சாடினார்கள். அவர்களுக்கெல்லாம் பதிலடியாக 1967 இல் 'கோகிலா என்ன செய்து விட்டாள்?' எனும் நாவல் உருவானது. அதைத் தொடர்ந்து 'சில நேரங்களில் சில மனிதர்கள்' நாவல் 1970 இல் வெளியாகி எதிர்ப்புக்குரல் எழுப்பியவர்களை வாயடைக்கச் செய்தது. 1977 இல் அது திரைப்படமாகவும் வெளியாகி விருதுகள் பல வென்றது.

ஏறக்குறைய சில்லையூராரின் கதையும் இதே போன்ற ஒரு எழுத்தாளனின் போராட்டக் கதைதான். அவரது 'தணியாத தாகம்' பல குத்துவெட்டுகளுக்கு உள்ளாகிப் பல தடைகளைத் தாண்டி நூலுருவானது 1971 இல். சில ஆண்டுகளின் பின் அதுவே வானொலித் தொடர் நாடகமாக விரிந்து உலகெங்கணுமுள்ள தமிழுள்ளங்களைச் சென்றடைந்து சில்லையூராரின் பெயரைப் பொன்னெழுத்துகளிற் பொறிக்கச் செய்துவிட்டது.

இயக்குனர், நடிகர்களுக்கான புறக்குறிப்புகளும் உள்ளடக்கிய தாகத் தமிழகத்தில் இருந்து வந்த முதற் திரைப்படச்சுவடி[**Shooting Script]** 'சில நேரங்களில் சில மனிதர்கள்' தான். 1976 இல் அது வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடப்பட்டது. ஆனால் அதற்கு ஐந்து ஆண்டுகள் முன்னதாகவே 1971இல் வெளிவந்துவிட்டது நம்மவரின் 'தணியாத தாகம்' திரைப்படச் சுவடி! [அந்தக்காலத்தில் வெளியான 'பராசக்தி', 'மனோகரா' போன்ற எட்ட ணாத் திரைக்கதை வசனப் புத்தகங்கள் எல்லாம் Shooting Scripts அல்ல.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வானொலிக் கலைஞர்களும் சின்னத்திரையும்

**1982** இல் இலங்கையின் தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினியின் உதயம் வானொலி, திரைப்பட இரசிகர்களை வேறொரு தளத்துக்கு அழைத்துச் சென்றது. அதில் இடம்பெற்ற நம்மவரின் நாடகங்கள் ஒரு வித்தியாசமான ரசனைக்கு வித்திட்டன. பெரும்பான்மையின மொழியான சிங்களத்தைப் போஷித்த அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழையும் கொஞ்சம் அரவணைத்தது. புல்லுக்குமாங்கே பொசிந்த சிறு துளி நீரையும் பயன்படுத்தி நல்ல அறுவடை செய்தவர் ரூபவாஹினியின் முதல் தமிழ் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட P. விக்னேஸ்வரன். அவரது திறமையை இனங்கண்டு அவருக்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்துப் பக்கபலமாக நின்ற திருமதி ஞானம் இரத்தினத்தின் இன உணர்வும் பங்களிப்பும் மறக்கற்பாலன.

P.விக்னேஸ்வரனால் தயாரிக்கப்பட்ட முதற் தொலைக்காட்சி நாடகம் ***'கற்பனைகள் கலைவதில்லை'***. ஜெ.ஜெயமோகனால் வானொலிக்கு எழுதப்பட்டு ஒலிபரப்பான அந்நாடகம் தொலைக் காட்சிக்கென மாற்றி எழுதப்பட்டு 1982 ஜூனில் ஒளிபரப்பானது. ***'நிஜங்கள் தரிசனம்'***, ***'உதயத்தில் அஸ்தமனம்'*** என அவரது நாடகங்களின் பயணம் தொடர்ந்தது. அவரது நாடகங்களில் வானொலி நடிகர்களான C.நடராஜசிவம், கமலினி செல்வராஜன், K.S.பாலச்சந்திரன், ஜோர்ஜ் சந்திரசேகரன், B.H.அப்துல் ஹமீட், ஆனந்தராணி ராஜரத்தினம், விஜயாள் பீட்டர், சாந்தி சச்சிதானந்தம், மகேஸ்வரி ரத்னம், T. ராஜேஸ்வரன், அருணா செல்லத்துரை போன்றவர்கள் நடித்து மெருகூட்டினர்.

P.விக்னேஸ்வரனின் தயாரிப்பில் கே.கோவிந்தராஜனின் எழுத்தில் ***'மலையோரம் வீசும் காற்று'*** பன்னிருவாரத் தொடராக வானலைகளில் வலம் வந்தது. பாலேந்திராவின் ***'கண்ணாடி வார்ப்புகள்'***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படச் சில மேடை நாடகங்களும் விக்னேஸ்வரனால் தொலைக் காட்சிக்காக மாற்றியமைக்கப்பட்டு ஒளிபரப்பாயின. 'கண்ணாடி வார்ப்பு'வில் வானொலி நடிகை ஆனந்தராணி ராஜரத்தினம் பிரதான பாகமேற்றமை அனைவரும் அறிந்ததே. அருண் விஜயராணி எழுதிய 'தவறுகள் வீட்டில் ஆரம்பிக்கின்றன' எனும் வானொலி நாடகம் தொலைக் காட்சிக்கென P.விக்னேஸ்வரனால் மாற்றி எழுதப்பட்டு ***'துணை'*** எனும் தலைப்பில் ரூபவாஹினியில் ஒளிபரப்பானது. அவரது தயாரிப்பில் அப்துல் ஹமீட் நடித்த நாடகம் ***'என் வாழ்வு உன்னோடு தான்'***. ஜோர்ஜ் சந்திரசேகரன் எழுதி நெறிப்படுத்திய ***'இதயத்தில் ஓர் உதயம்'*** தொலைக்காட்சி நாடகம் ரூபவாஹினியிலும் பின்னர் சுயாதீனத் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பானது. ***'நினைவில் மலர்ந்த நிஜம்'*** தொடராக ஒளிபரப்பான ஒரு தொலைக்காட்சி நாடகம். பாகீரதி மோசஸின் கதை வசனத்தில் உருவான ***'புதுமைப் பெண்'*** 2012 இல் ரூபவாஹினியில் ஒளிபரப்பானது.

நாடகாசிரியர் கே.கோவிந்தராஜ் எழுதிய மூன்று வாரத் தொடரான ***மாப்பிள்ளை வந்தார்,*** மற்றும் ***மனிதர்கள் நல்லவர்கள், புதுக் குடும்பம், அரும்பு, திருப்பம்*** முதலான மலையகப் பின்னணியில் உருவான தொலைக்காட்சி நாடகங்கள் ரூபவாஹினியிலும் ***'நிஜத்தின் நிழல்'*** எனும் தலைப்பில் **16** குறு நாடகங்கள் சக்தி தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாயின.

பிரபல வானொலி, மேடை நாடக எழுத்தாளர் கணேசபிள்ளையின் ***'நம்பிக்கை', 'பாசச் சுமை', 'வாடகை வீடு'***, [எழுத்து– C.சண்முகம்] முதலான மேடை நாடகங்களும் மற்றும் ***'வருடம் பிறந்தது', 'சமூக சேவகி', 'காத்திருந்தவன்', 'இனிப் பாருங்கோவன்'*** முதலான நாடகங்களும் ரூபவாஹினியில் இடம்பிடித்தன. S.S.கணேசபிள்ளையின் வானொலி, மேடை நடிகர்களுடன் கமலினி செல்வராஜனும் ஸ்ரீதர் பிச்சையப்பாவும் அவரது நாடகங்கள் சிலவற்றில் நடித்தனர். வாசகரின் ***'சுமதி'***யும் தொலைக்காட்சி நாடகமாக மாற்றப்பட்டு ஒளிபரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானது. அதில் வாசகரின் நாடக மன்ற நடிகர்களுடன் ஜேசுரட்ணமும் நடித்துப் பங்களிப்புச் செய்தார்.

ராமதாஸின் '***எதிர்பாராதது***'வும் ரூபவாஹினியில் ஒளிபரப்பான ஒரு நாடகம். அதில் அவருடன் கமலினி செல்வராஜன், S.செல்வசேகரம், ஸ்ரீதர் பிச்சையப்பா போன்ற வானொலிக் கலைஞர்களும் பங்கேற்ற னர். '***உறவுகள்***' 1990 இல் ஒளிபரப்பான ராமதாஸின் மற்றுமொரு நாட கம்.

நாடக எழுத்தாளர் அருணா செல்லத்துரை எழுதித் தயாரித்த '***வீடு***' எனும் தொலைக்காட்சி நாடகம் S.S.கணேசபிள்ளை, கமலினி செல்வராஜன், பிராங் புஷ்பநாயகம், S.சுரேஷ்ராஜா, உதயகுமார், தேவி ஸ்ரீபத்மநாதன், ஸ்ரீரஞ்சனி விக்னேஸ்வரன் முதலான வானொலி நடிகர்களுடன் அருணாவும் பங்கேற்க மூன்று அங்கங்களாக **1991** ஏப்ரில் **1,08,15** ஆம் திகதிகளில் ஒளிபரப்பானது. தொலைக்காட்சி நாடக எழுத்தாளர்களுக்கு உதவும் வகையில் வகைமாதிரியாக அந் நாடகத்தின் **Shooting Script** ஐ நூலுருவில் அருணா தந்துள்ளார். அவரது தயாரிப்பில் ஒளிபரப்பான மற்றொரு தொலைக்காட்சி நாடகம் '***திருப்பங்கள்***'. K.S. பாலச்சந்திரன் எழுதிய இந்நாடகத்தில் கமலினி செல்வராஜன் பிரதான பாத்திரமேற்றார்.

தொலைக்காட்சிச் சேவையுடன் நீண்டகாலத் தொடர்பு கொண்டு, பல்வேறு நிகழ்ச்சிகளையும் தயாரித்து அனுபவம் பெற்ற எழுத்தாளரான அருணா செல்லத்துரையால்கூட ஓரிரு நாடகங்களே தயாரிக்க முடிந்திருக்கிறது. அவர் பணி செய்த காலம் அத்தகையது. அவரை மட்டும் குறைகூற முடியாது. அக்காலகட்டத்தில் தமிழ்ப் பிரி வில் நிர்வாகத்தில் மேலிடத்தில் இருந்தவர்கள் தமது இருப்பினைத் தக்க வைத்துக்கொள்வதற்காக, அரசு சார்பானவர்களிடம் நல்ல பிள் ளைப் பெயரெடுக்கவேண்டி, 'சும்மா இருப்பதே சுகம்' என மெத்தன மாக வாளாவிருந்தமையும் உருப்படியான தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்கள் உருவாகாமைக்கான முக்கிய காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 25 ஆண்டுகாலம் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, பணிப்பாளராகக் குப்பை கொட்டிய S .விஸ்வநாதன் சிங்களத்தொலைக்காட்சி நாடகங்களில் நடிப்பதில் காட்டிய அக்கறையைத் தமிழ் நாடகத் தயாரிப்பில் காட்டியதாகத் தெரியவில்லை! ***'குடும்பம் ஒரு கதம்பம்'***, *'மானுடம் வெல்லும்'*, *'காத்திருந்தவன்'*, *'வெளியூர் மாப்பிள்ளை'*, ***'தூரத்துக் கனவுகள்'***, *'மண்டையன்'*, ***'தப்பு'*** என விரல் விட்டு எண்ணக் கூடிய சில நாடகங்கள் அவர் தயாரிப்பில் ஒளிபரப்பாகியுள்ளன. சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களில் நடித்துப் பெருமைப்பட்ட /சேர்த்த தமிழ் வானொலிக் கலைஞர்களில் C. நடராஜசிவம், உபாலி செல்வசேகரன், ராஜா கணேசன், கலைச்செல்வன், K.சந்திரசேகரன், சுமதி பாலஶ்ரீதரன் போன்றோரும் அடங்குவர்

சோக்கல்லோ சண்முகநாதனின் ***'அண்ணனும் தம்பியும்'*** எனும் தொலைக்காட்சி நாடகம் R.ரவீந்திரனின் தயாரிப்பில் ரூபவாஹினியில் ஒளிபரப்பானது. அதில் சோக்கல்லோவுடன் G.P.வேதநாயகம், R.யோகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்..

சுயாதீன தொலைக்காட்சி சேவையான ITN இலும் காலத்துக்கு காலம் பல தொலைக்காட்சி நாடகங்கள் ஒளிபரப்பாகி வந்துள்ளன. மொழிவாணன் எழுதிய பல நாடகங்கள் ஹுசைன் பாரூக்கின் தயாரிப்பில் ITN இல் ஒளிபரப்பாகியுள்ளன. ***'அகராதி அபுநாநா'*** எனும் நகைச்சுவைத் தொடரில் K.A. ஜவாஹர், ஜெய் ரஹீம் சஹீத் உட்படப் பல முஸ்லீம் வானொலி நடிகர்கள் பங்கு கொண்டார்கள். மொழிவாணனின் ***'காதலுக்கு என்ன விலை?***, ஜெய்னுலாப்தீனின் ***'ஆகாயப் பந்தல்'*** என்பனவும் குறிப்பிடத் தக்கன.

G.P.வேதநாயகத்தின் ***'குலுக்கிய பின் சிரிக்கவும்'*** எனும் நகைச்சுவை நாடகம் சுயாதீனத் தொலைக்காட்சியில் எம்.வரதராஜனின் தயாரிப்பில் ஒளிபரப்பானது. அதில் G.P.வேதநாயகத்துடன் ராஜா கணேசனும் எஸ்.ஏஞ்சல் வெர்ஜினியும் நடித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ITN இல் ஒளிபரப்பான நாடகங்கள் பற்றிய முறையான பதிவுகள் ஏதும் சம்பந்தப்பட்டவர்களால் பேணப்பட்டதாகத் தெரியவில்லை. அதனால் அவைபற்றி விபரமாக என்னாலும் எழுத முடியவில்லை.

சுவர்ணவாஹினியில் 'கலைச் சுரங்கம்' எனும் நிகழ்ச்சியிலும் சில குறுநாடகங்கள் ஒளிபரப்பாயின. அதில் ஜெயரஞ்சன் யோகராஜனுடன் சேர்ந்து G.P.வேதநாயகம் சில குறு நாடகங்களை எழுதி நடித்தார்.

சக்தி தொலைக்காட்சியில் '***சின்னத்திரை*** எனும் தலைப்பில் 2014 இல் மாதம் ஒரு தொடர் ஒளிபரப்பானதாகத் தெரிகிறது.'தாமினி' எனும் சிங்களத் தொலைக்காட்சித் தொடர் ஒன்று 2001 இன் பிற்பகுதியில் மொழி மாற்றம் செய்யப்பட்டு ஒளிபரப்ப எடுக்கப்பட்ட முயற்சியானது அங்கு நிகழ்ந்த தீ விபத்துக் காரணமாக முளையிலேயே கருகிப் போனது. அதன் 'டப்பிங்'கில் குரலீந்த வானொலிக் கலைஞர்கள் சிலரில் நானும் ஒருவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வானொலிக் கலைஞர்களின் பன்முக ஆளுமைகள்

**வா**னொலி நடிகர்களாக முத்திரை பதித்த பல கலைஞர்களும் நடிப்புத் தவிர்ந்த பல்வேறு கலைத்துறைகளிலும் கால் பதித்துத் தமது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்கள். இலங்கை வானொலி அறிவிப் பாளர்களாக வலம் வந்தவர்களையும் திரைப்படத் துறையிலும் மேடை நாடகங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் வாய்ப்புப் பெற்ற வர்களையும் பற்றி ஏற்கெனவே விரிவாகப் பார்த்துவிட்டதால் ஏனைய கலைத்துறைகளில் களம் கண்டவர்களைப் பற்றி இவண் ஆராய்வோம்.

## வானொலி /மேடை-நாடக எழுத்தாளர்கள்

நவாலியூர் சோ.நடராசன், கலாஜோதி 'சானா' சண்முகநாதன், V.N.பாலசுப்பிரமணியம், S.குஞ்சிதபாதம்,M.S.ரட்னம், அரச அய்யாதுரை, லடிஸ் வீரமணி, சில்லையூர் செல்வராஜன், ரொசாரியோ பீரிஸ், S.நஸ்ருதீன், S.S.கணேசபிள்ளை, சின்னையா சிவநேசன், G.P.வேதநாய கம், S.ஜேசுரட்ணம், S.ராமதாஸ், பௌசுல் அமீர், S.I.M.A. ஜப்பார், கலைச் செல்வன், மஹதி ஹசன் இப்ராஹிம், K.S.பாலச்சந்திரன், அருணா செல்லத்துரை, சித்தி அமரசிங்கம், ராஜா கணேசன், நாகேசு தர்மலிங் கம், பிராங் புஷ்பநாயகம், பிலிப்ஸ் ஜெகநாதன், ஸ்ரீதர் பிச்சையப்பா, K.சந்திரசேகரன், S.செல்வசேகரன், K.T.சிவகுருநாதன், S.அம்பலவாணர், R.பகவான், P.சந்தனம், S.P.டக்ளஸ், R.T.டக்ளஸ், N.உதயகுமார், முருகேசு ரவீந்திரன், சுமதி பாலஸ்ரீதரன், ஆமினா பேகம் பாரூக் என்போர் நாடக எழுத்தாளர்களாகவும் வானொலி நடிகர்களாகவும் பரிணமித்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை/கவிதை/ஓவியம்

வானொலி நடிகர்களுள் சிறுகதைத்துறையில் தடம் பதித்தவர் களை விரல்விட்டு எண்ணிவிடலாம். கலாஜோதி 'சானா' ['பரியாரி பரமர்' - நடைச்சித்திரம்], நந்தி செ.சிவஞானசுந்தரம், நடமாடி ராஜ ரத்தினம், ஜோர்ஜ் சந்திர சேகரன், G.P.வேதநாயகம், தம்பியையா தேவ தாஸ், K.S. பாலச்சந்திரன், முருகேசு ரவீந்திரன், சோ.தேவராஜா, நாகேசு தர்மலிங்கம், S.எழில்வேந்தன், சோக்கல்லோ சண்முகநாதன், புர்கான் பீ.இப்திகார் ஆமினா பேகம் பாரூக், S. அம்பலவாணர் ஆகியோர் புனை கதைத்துறையும் கை வந்த வானொலிக் கலைஞர்கள்.

சில்லையூர் செல்வராஜன், G.P.வேதநாயகம், S.எழில்வேந்தன், ஸ்ரீதர் பிச்சையப்பா, 'இறைதாசன்' B.H.அப்துல் ஹமீட், K.நாகபூஷணி, V.திவ்யராஜன், கலையன்பன் ரபீக், கலையழகி வரதராணி, S.அம்பல வாணர் எனும் பதின்மரும் கவிதையுலகிலும் உலாவந்த நாடகக் கலை ஞர்கள்.

கலாஜோதி 'சானா'வும் ஜோர்ஜ் சந்திரசேகரனும் ஸ்ரீதர் பிச் சையப்பாவும் விசாலாட்சி ஹமீதும் ஓவியத்திலும் தமது கைவண் ணத்தைக் காட்டிச் சிறப்புப் பெற்றவர்கள்.

## இசைத்துறை - கர்நாடகம்/மெல்லிசை/ வில்லுப்பாட்டு

பல்துறை மேதையான V.N.பாலசுப்ரமணியம் கர்நாடக இசைக் கலைஞராகவும் புகழ்பெற்றவர். வயலின், வீணை என இசையில் வித்து வம் பெற்ற மோனி எலியாசும் **1950** களில் புகழ்பெற்ற நாடக நடிகை யும் பாடகியுமாவார். நாடக நடிகையான வனஜா ஸ்ரீநிவாசன் கர்நாடக இசையிலும் கரைகண்டு சங்கீத ஆசிரியையாகத் திகழ்ந்தவர். அவ ரைப் போலவே கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலிக் கலைஞரான மங்களகௌரி விராகநாதனும் ஒரு சங்கீத ஆசிரியையே.

மெல்லிசையில் 'அத்தானே அத்தானே' புகழ் கமலினி செல்வ ராஜனையும் சில்லையூர் செல்வராஜனையும் அறியாதோர் அபூர்வமே ஸ்ரீதர் பிச்சையப்பாவும் நிலாமதியும் அந்நாளில் நாடறிந்த மெல்லிசை மேடைப் பாடகர்கள். பொப்பிசை மூலம் சக்கரவர்த்தியானவர் A.E.மனோகரன். ஆனந்தராணி பாலேந்திரா, விசாலாட்சி ஹமீட், மணிமேகலை ராமநாதன், S. கணேஸ்வன், A.M. ஜெயந்தி என நீளும் மெல்லிசைப் பாடகர்கள் பட்டியலில் பௌசுல் அமீர், M.M.A. லத்தீப், K.A.ஜவாஹர், நூர்ஜஹான் மர்சூக், ஞெய் ரஹீம் சஹீட் போன்ற முஸ்லீம் கலைஞர்களுடன் மரைக்கார் S.ராமதாசும் இடம் பிடிக்கிறார்.

இயல் இசை நாடகம் என முத்தமிழும் கலந்த நிகழ்ச்சியான வில்லுப்பாட்டுக் கலையில் நம் நாட்டில் புகழ்பெற்று விளங்கிய ஒருவர் நடிகவேள் லடிஸ் வீரமணி. மஹாகவியின் 'கண்மணியாள் காதையும் 'செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்' வரலாறு'ம் அவர் பெயர் சொல் லும் வில்லுப்பாட்டுகள். அவரது வில்லிசைக் குழுவில் அங்கம் வகித்த ஜெயந்தி அப்புக்குட்டியும் M.M.A.லத்தீப்பும் அவர் வழியைப் பின்பற்றி வில்லிசையை வாலாயப்படுத்திக் கொண்டவர்களில் சிறப்பிடம் பெற்றவர்கள். திருமலைக் கலைஞரான சித்தி அமரசிங்கமும் வில்லி சையில் தனது பெயர் பதித்த ஒருவர். சோக்கல்லோ சண்முகநாதனும் அவரது வில்லிசைக் குழுவிலிருந்து அக்கலையைப் பயின்ற A.M.C.ஜெகசோதியும் மற்றும் சகலகலா வித்தகி சற்சொரூபவதி நாதனும் வில்லிசையிலும் மெல்லெனப் புகுந்து புறப்பட்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பின்னிணைப்பு* - சொல்ல மறந்த சில சின்னத் தகவல்கள்

இந்நூலுடன் சம்பந்தப்பட்டதாயினும் குறிப்பிட்ட தலைப்பு களுக்குள் சொல்லமுடியாத சில ருசிகரமான தகவல்கள் எனது தேட லின்போது கிடைக்கப்பெற்றன. அவற்றை இங்கு பின்னிணைப்பாகப் பதிவு செய்துள்ளேன்.

* 50 களின் ஆரம்ப காலத்தில் வானொலியில் ஒலிபரப்பாக இருக் கும் நாடகம் பற்றியும் அதை எழுதிய எழுத்தாளர், பங்கு பற்றும் கலை ஞர்கள் பற்றியும் முன்னதாகவே வானொலியிலும் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்து ஆவலைத் தூண்டி விடுவார்களாம். அதனால் குடும் பத்தார் அனைவரும் இரவு 8.30 க்கு ஆவலோடு காத்திருந்து நாடகத் தைச் செவிமடுப்பார்களாம். இத்தகவலை ரேடியோ சிலோனின் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக 1942 - 1952 காலப் பகுதியில் கடமையாற்றிய வரும் லண்டன் 'தமிழோசை'யின் நிறுவனருமான ['ஈழகேசரி'புகழ்] சோ.சிவபாதசுந்தரம் தமது 'ஒலிபரப்புக் கலை' நூலில் பதிவு செய்துள் ளார்.

* சானா தயாரிப்பாளராக நியமனமாகுமுன் பொரளை, கொட்டா ரோட்டில் இயங்கிய ரேடியோ சிலோனில் 1937 இல் இருந்து நாடக முட்பட சகல தமிழ் நிகழ்ச்சிகளுக்கும் பொறுப்பாக இருந்தவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் வாரிசான நவாலியூர் சோ.நடராசன் ஆவார். அவர் காலத்தில் ஒலிபரப்பான நாடகங்கள் பற்றிய தகவல்கள் ஏதும் இல்லையாயினும் வடமொழி நாடகக் காவியமான காளிதாச னின் 'சாகுந்தல'த்தை 1962 இலும் மற்றொரு வடமொழி நாடகாசிரி யரான சூத்திரகரின் 'மிருச்சகடிகம்' எனும் நாடகத்தை 'பொம்மை வண்டி' எனும் தலைப்பில் 1964 இலும் தமிழாக்கம் செய்து சாகித்ய மண்டலப் பரிசுகளை ஈட்டிய எழுத்தாளருமான அவர் தமது நிர்வாக காலத்தில் நாடகமெதுவும் எழுதி ஒலிபரப்பாமல் இருந்திருக்கமாட்டார் என ஊகிக்க இடமிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 'பஞ்ச தந்திரம்' உட்படச் சிறுவர்க்கான கதைகளையும் எழுதிய வரான சோ.நடராசனின் 'பொம்மை வண்டி' நூலில் தயாராகிவரும் அவரது நூல்களென 'போலி அதிகாரி', 'கல்யாணத் தரகர்' போன்ற நாடக நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை கூட வானொலியில் அவர் பணியாற்றிய காலத்தில் ஒலிபரப்பான நாடகங்களாக இருக்க இட முண்டு அல்லவா?

* 1861 இல் பிறந்தவரான ரவீந்திரநாத் தாகூரின் நூற்றாண்டை யொட்டி 1961 இல் நாடக எழுத்தாளர் வை.முத்துக்குமாரசாமியால் தமி ழாக்கம் செய்யப்பட்ட தாகூரின் 'சித்ரா' இலங்கை வானொலியில் ஒலி பரப்பானது. வங்காள மொழியில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடகங் களை மேடையேற்றியவரான தாகூர் தமது சில நாடகங்களைத் தாமே ஆங்கிலத்திலும் மொழி மாற்றம் செய்து மேடையேற்றியுள்ளார். தாகூர் தமது நாடகக் குழுவினருடன் 1933 இல் இலங்கை வந்து யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் பல பிரதான நகரங்களில் நாடகங்களை மேடை யேற்றியுள்ளார் எனும் தகவலை வை.முத்துக்குமாரசாமியின் 'வேந்த னும் அரசியும்'[1973] நூல் முகவுரையில் இருந்து அறிய முடிகிறது.

* 1956 இல் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையால் எழுதப்பட்ட 'துரோகிகள்' எனும் நாடகம் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் களால் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் தயாரிப்பில் மேடையேற் றப்பட்டது. அந்நாடகம் நூலுருவானதாகத் தெரியவில்லை. ஆனால் அந் நாடகம் பற்றிய கையேடு ஒன்று காணக்கிடைத்துள்ளது. அதிலுள்ள கதைச்சுருக்கத்தின் சாராம்சம் வருமாறு.

புலிக்கொடிதான் பறக்குது பார் குமுறி வானில்

புகன்று பெருமறத்தினோடு புலிபோல் வீரம்

ஒலித்ததனை உயிரீந்தும் காப்பமென்றே

ஒன்றி நின்று தலைதாழ்ந்து வணங்குவாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றொரு [காப்புப்] பாடல். அதற்கு கீழ் விரிகிறது கதைச் சுருக்கம்.

கதை நிகழிடம் - புலிநாடு. புலிநாட்டை மந்தை நாடு அடிமைப்படுத்த, உரிமைகள் பறிபோன அந்நாட்டு மக்கள் எதுவும் செய்யமுடியாது தவிக்கின்றனர். புதியதொரு விழிப்பை உண்டு பண்ண விரும்பும் சில இலட்சியவாதிகள், உண்மை விருப்பும் விடுதலைப் பற்றும் உடைய சில வயதிற் குறைந்த இளைஞர்கள் - உதவிப் பத்திராதிபன், மருத்துவ மாணவன், முற்போக்கு நோக்கம் கொண்ட அவனது தங்கை, அவளது தோழி, செல்வந்த இளைஞன், கார் மெக்கானிக்கான முன்னாள் போர்வீரன், கமக்காரன் எனப் பலதரப்பட்ட பிரிவினரும் ஆண் பெண் பேதமின்றி ஒரே குறிக்கோளால் ஒன்றிணைந்து போராடக் களமிறங்குகின்றனர். இவர்களில் சிலருக்கிடையே காதலும் மலர்கிறது. 'நாட்டுக்குத் தியாகம் எங்கள் இலட்சியம்' என வாழ்பவர்களுக்கு எத்தகைய இடர்கள் ஏற்படுகின்றன? விடுதலைப்போரின் கட்டங்கள் எவை? துரோகிகள் யார்? நாடகம் விடை கூறும். என்கிறது கதைச்சுருக்கம்.

புலிக்கொடி நாட்டப் புறப்பட்ட வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஒரு வயதுகூட நிரம்பாத காலத்தில் எழுதி அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகம். கற்பனையாகப் புனையப்பட்ட நாடகத்தின் 'கரு' சில ஆண்டுகளின் பின்னர் எவ்வளவு தூரம் நிஜமானதென அறியாதார் இலர். எழுத்தாளராது தீர்க்கதரிசனம் வியக்கவைப்பது. இந்நாடகத்தில் க.கைலாசபதி, S.M.A.ஜப்பார், ந.சுந்தரம்பிள்ளை, A.P.[வின்ஸ] கோமஸ் ஆகிய மாணவர்களும் நடிகர்கள் பட்டியலில் இடம்பிடித்திருப்பது மற்றொரு சுவையான சங்கதி.

* 'கோடை', 'புதியதொரு வீடு', 'முற்றிற்று' முதலான் பா நாடகங்களைப் படைத்தளித்த புகழ்பூத்த கவிஞர் 'மஹாகவி து.உருத்திரமூர்த்தியும் ஆரம்ப காலத்தில் -50களில் ஒருசில வானொலி நாடகங்களை எழுதியதாகத் தெரிகிறது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பிரபல சிறுகதை/நாவல் எழுத்தாளர் வ.அ.இராசரத்தினத்தின் 'கொழுகொம்பு' என்ற நாவல் ஒரு மணிநேர நாடகமாக மாற்றி எழுதப்பட்டு சானாவின் தயாரிப்பில் ஒலிபரப்பானது. கா.சிவத்தம்பி நடித்த 'ஆண் சிங்கம்' மற்றும் 'வானம்பாடியும் ரோசாப்பூவும்', 'தந்தை யின் காதலி' என்பன அவரெழுதிய வானொலி நாடகங்களுட் குறிப் பிடத்தக்கன.

* ராஜேஸ்வரி பிச்சாண்டி [சண்முகம்] முதன்முதலாக 1953 இல் நடித்த நாடகம் 'விடிவெள்ளி'. நாடகத்தை எழுதியவர் பிரபல எழுத் தாளர் N.S. ராமையா. 'ஒரு கூடைக் கொழுந்து' சிறுகதைத் தொகுதி ஒன்று மட்டுமே எழுத்தாளர் ராமையாவின் ஆற்றலைப் பறைசாற்றும் பதச்சோறாக இன்றுவரை இருந்துவருகிறது. காற்றோடு கலந்துவிட்ட எத்தனையோ நாடகங்களின் சிருஷ்டிகர்த்தா அவரென்பதும்கூடப் பல ரும் அறியாத சங்கதியாகக் காற்றோடு சங்கமிக்க விடலாமா?

* பிரபல சிறுகதை எழுத்தாளர் காவலூர் ராஜதுரை சிறுவர் மலர், மாதர் பகுதி போன்ற நிகழ்ச்சிகளுக்குக் குட்டி நாடகங்கள் எழுதி யுள்ளார். 70 களில் தமது 'வசீகரா விளம்பர நிறுவனம்' ஊடாக அவர் தயாரித்தளித்த வர்த்தக நிகழ்ச்சியில் தாமெழுதிய சில சிறுகதை களை நாடகங்களாக மாற்றி ஒலிபரப்பியுள்ளார். அவரது 'வீடு யாருக்கு?' நாவல் மேடை நாடகமாகவும் உருமாறியது. 'காலங்கள்' அவர் தயாரித்த தொலைக்காட்சி நாடகம்

* கவிஞர் சில்லையூர் செல்வராஜன் தாம் தயாரித்தளித்த வர்த்தக [சேவை] நிகழ்ச்சியில் 52 வாரங்கள் தொடராகத் துப்பறியும் குறு நாடகங்களை எழுதித் தயாரித்தார். அந்நாடகங்களில் துப்பறிவாளராக நடித்தவர் கே.சந்திரசேகர். 'பனையரசன்' நாடகத்தை 'நேற்று இன்று நாளை' எனும் தலைப்பில் சில்லையூர் செல்வராசன் நடித்து மேடை யேற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மோனி எலியாஸ் கல்விச்சேவைப் பணிப்பாளராகக் கடமை யாற்றிய ஆரம்ப காலத்தில் அவரின் வேண்டுகோளுக்கிணங்க சிறு வர்களுக்கான சில நாடகங்களை சில்லையூர் செல்வராஜன் எழுதி யிருக்கிறார். அந்நாடகங்களில் பிரதான பாத்திரமேற்ற சிறுவன் B.H.அப்துல் ஹமீட்!

* ஷேக்ஸ்பியரின் 420 ஆண்டுத் தொடர் நிறைவு விழாவுக்கான விசேட நிகழ்ச்சிக்காக அப்துல் ஹமீடின் வேண்டுகோளுக்கிணங்க சில்லையூர் செல்வராஜன் படைத்த கவிதை நாடகம்தான் [ஷேக்ஸ் பியரின்] 'ரோமியோ ஜூலியட்'. அதில் ரோமியோவாக சில்லையூராரும் ஜூலியட்டாகக் கமலினியும் காவியம் படைத்தார்கள். C.நடராஜசிவம், K.A.ஜவாஹர், டோசன் பெர்னாண்டோ, M.S.ரட்னம், T.ராஜேஸ்வரன், ராஜேஸ்வரி சண்முகம் போன்ற பண்பட்ட நடிகர்கள் தங்கள் நிறை வான நடிப்பால் அந்த ஒரு மணி நேர நாடகத்துக்கு உயிரூட்டினார்கள்.

* அஷ்ரப்கான் எழுதி B.H.அப்துல் ஹமீட் இயக்கி நடித்த தொடர் நாடகம் 'ஒரு வீடு கோயிலாகிறது'. நடிகர் திலகம் சிவாஜி கணேசனே அந்நாடகத்தையும் அதில் நடித்த அப்துல் ஹமீடின் நடிப்பையும் வியந்து பாராட்டியிருக்கிறார்.

* ஒரு மணி நேர நாடகங்களைத் தயாரிக்கும் சிறப்புத் தயாரிப் பாளராக **90** களின் ஆரம்பத்தில் B.H.அப்துல் ஹமீட் பணியாற்றிய காலத்தில் அவரால் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பான நாடகம்தான் கவிஞர் அம்பியின் 'யாழ்ப்பாடி'. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பவள விழாவின் போது அது இறுவெட்டாக வெளியிடப்பட்டது.

* B.H. அப்துல் ஹமீட் தெமட்டகொட அரசினர் பாடசாலையில் கல்வி பயின்ற காலத்தில் அவருக்கும் அவரது பள்ளித் தோழரான கே.சந்திரசேகருக்கும் தமிழாசிரியராக இருந்தவர் எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை. அவரெழுதிய 'ஜான்சிராணி' நாடகத்தில் ஜான்சி ராணியாகப் பெண்வேடம் புனைந்தவர் சாட்ஷாத் அப்துல் ஹமீடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். K.M. வாசகர், S. ராமதாஸின் மேடை நாடகங்களில் நடித்திருக்கும் அப்துல் ஹமீட் முதன்முதலாக 'ராஜத்துரோகி' எனும் நாடகத்தை எழுதி மேடையேற்றினார். அதில் அவருடன் கே.சந்திரசேகரனும் நடித்தார்.

* இலங்கை வானொலியில் சகல விதமான பாத்திரங்களையும் - அது நவரசத்தின் எப்பாற்பட்டதோ, சமூகமோ, சரித்திரமோ, யாழ் வழக்கோ, மலையகப் பாங்கோ - எத்தகையதாயினும் ஏற்று திறம்பட நடிக்கவல்லவர்களென ஒருசிலரையே குறிப்பிடலாம். அத்தகையவர்க ளுள் முதன்மையான ஒருவர்தான் C.நடராஜசிவம். மேடை, வானொலி, சினிமா, சின்னத்திரை எனச் சகல ஊடகங்களிலும் புகுந்து புறப்பட்டுத் தனித்துவமான தனது நடிப்பால் தன்னை நிலை நாட்டிக்கொண்டவர் அவர்.

முதன்முதலாக அவர் மேடையேறியது சென்.பெனடிக்ற் கல்லூரி மேடையாகத்தான் இருக்க வேண்டும். 1963 இல் G.P.வேதநாயகம் எழுதி இயக்கி நடித்த 'நெஞ்சில் நிறைந்தவள்' நாடகத்தில் கதாநாயகனாகத் தோன்றியவர்தான் நடா! [அதே நாடகத்தில் உபாலி S.செல்வசேகரனும் ஒரு சிறு வேடத்தில் தோன்றினார்.] இளங்கீரனின் 'மகாகவி பாரதி' நாட கம் அவரது சொந்தத் தயாரிப்பில் 1982 டிசெம்பரிலும் 1983 மார்ச்சிலும் கொழும்பில் மேடையேறியபோது, வானொலியில் [அது ஒலிபரப்பான போது] நடித்த நடராஜசிவமே மேடையிலும் பாரதியாக வாழ்ந்துகாட் டினார்

* யாழ்ப்பாணத் தமிழை அதன் கிராமிய மணம் கமழ நாடகங் களில் தந்தவர்களுள் ஜேசுரட்ணம் முன்னணியில் திகழ்பவர். அவரது நாடக எழுத்துக்கள் பற்றி அவருடன் சேர்ந்து நடித்தவரான **S**.எழில்வேந்தன் – *'நாடகத்தில் வரும் அனைத்துத் தகவல்களும் சரியாக இருக்க வேண்டுமென்பதில் ஜேசு மிகுந்த அக்கறையுடனிருப்பார். பரியாரியாரின் வாகடமும் பண்டிதரின் இலக்கணமும் சாத்திரியாரின் பஞ்சாங்கமும் இல்லாமல் அவர்களைப்பற்றி ஜேசு எழுதமாட்டார். மகன் கப்பலில் போனதாக எழுதும்போதெல்லாம் சரியான கடல்வழி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*களும், துறைமுகங்களும், நாணயங்களும் அவர் பிரதியில் அப்படியே இருக்கும்'* என விதந்து பாராட்டுகிறார்

* வசந்தா அப்பாத்துரை, சுப்புலக்ஷ்மி காசிநாதன் வரிசையில் யாழ்ப்பாணத் தமிழை அதன் சுவை குன்றாது மண் வாசனையுடன் தரக்கூடிய நடிகையென A.M.C.ஜெகசோதியைச் சொன்னால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது. 1980 களின் ஆரம்பத்தில் இலங்கை வானொலி நடிகையாக நாடக உலகில் கால் பதித்த A.M.C.ஜெகசோதி அதன்பின் கணேசபிள்ளையின் நாடக மன்ற ஆஸ்தான நடிகையாகி ஏறி இறங்காத மேடைகள் இல்லை!. இலங்கையின் பிரதான நகரங் களில் மட்டுமன்றி கனடிய, ஐரோப்பிய மேடைகளிலும் A.M.C.ஜெக சோதியின் யாழ்ப்பாணத் தமிழ் மணம் பரப்பியது. S.ராமதாஸின் 'கோமாளிகள்' நாடகத்திலும் S.ஜேசுரட்னத்தின் மேடை நாடகங்களி லும்கூட அவர் நடித்தார். வானொலி, மேடை, தொலைக்காட்சி எனப் பார்த்தால் அவருடைய **Score** இரண்டாயிரத்தை மிஞ்சிவிடும்.

90 களின் பிற்பாதியில் G.P.வேதநாயகம் எழுதி நடித்த அவரது நகைச் சுவை வானொலி நாடகங்களில் அவரது மனைவி 'நல்லம்மா'வாக அவர் கலகலப்பூட்டிய நாடகங்களும் எத்தனையோ. **21.02.2001** இல் சிவ ராத்திரி தினத்தன்று கொழும்பு, காக்கை தீவிலும், **16.03.2001** இல் அறிவிப்பாளரும் நடிகையுமான ராஜேஸ்வரி சண்முகத்தின் மணி விழா மேடையிலும் G.P.வேதநாயகம் எழுதி நெறிப்படுத்தி நடித்த 'வெளிநாடும் வெங்காயமும்' நகைச்சுவை நாடகத்திலும் [R. யோகராஜ னும் மணிமேகலை ராமநாதனும் உடன் பங்கேற்க] A.M.C.ஜெகசோதி யும் நடித்தார்.

* 1989 இல் நாடகத்துறையில் நுழைந்தவர் ரஞ்சினி ராஜ்மோகன். 25 க்கும் மேற்பட்ட தமிழ் மேடை நாடகங்களிலும் 50 க்கும் மேற்பட்ட தமிழ், சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்தவர் - என அவ ரைப்பற்றிய பதிவொன்றின் மூலம் அறியமுடிகிறது. மஹதி ஹசன் இப்ராஹிம் எழுதி ராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் சென்.ஜோன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிப் பழைய மாணவர்களால் **27/09/1997** இல் மேடையேற்றப்பட்ட 'இப்படியும் மனிதர்கள்' மேடை நாடகத்தில் **G.P**. வேதநாயகத்துடன் இணைந்து ரஞ்சினியும் நடித்தார்.

* 'தென்றலும் புயலும்' [1978] ஈழத்து திரைப்பட நடிகர் திருமலை சித்தி த. அமரசிங்கம். 'கோயிலும் சுனையும்' நாடகத் தொகுதி நூலும் 'கயல் விழி' கவிதை நாடக நூலும் அவரால் வெளியிடப்பட்ட அவரது ஏனைய நாடக நூல்கள். மேடை நாடகத் தயாரிப்பாளராக, நடிகராக மட்டுமின்றி ஒரு வில்லிசைக் கலைஞராகவும் விளங்கியவர் சித்தி அமரசிங்கம்.

* இலங்கை வானொலி நிலையத்தினரால் 1960 இல் யாழ்ப் பாணத்தில் நடத்தப்பட்ட கலைவிழாவில் 'காதல் கை நட்டம்' என்ற நகைச்சுவை நாடகத்தையும் 1962 இல் கொழும்பு றோயல் கல்லூரியில் நடத்தப்பட்ட கலைவிழாவில் 'வருஷம் பிறந்தது முன்னம் முன்னம்...' என்ற நாடகத்தையும் எழுதித் தயாரித்துத் தாம் மேடையேற்றிய தாகவும் அதில் தம்முடன் K.N.நவரத்தினம், வசந்தா அப்பாத்துரை போன்ற வானொலிக் கலைஞர்களும் கலையரசு கே.சொர்ணலிங்கம், நகைச்சுவை மன்னன் கே.செல்வரத்தினம் போன்ற புகழ் பெற்ற மேடை நடிகர்களும் சேர்ந்து நடித்ததாகவும் கலைப் பேரரரசு A.T.பொன்னுத்துரை தமது நாடக நூலில் குறிப்பிட்டுள்ளார்.

* பிரபல தொலைக்காட்சி நாடக எழுத்தாளரும் சிறுகதை எழுத் தாளருமான கே.கோவிந்தராஜ் சில வானொலி நாடகங்களையும் மேடை நாடகங்களையும் எழுதியுள்ளார். அவரது மேடை நாடகங்களுள் 'கவ்வாத்துக் கத்தி' [1998] தேசியத் தமிழ் நாடக விழாவில் முதற் பரிசையும், 'தோட்டத்து ராஜாக்கள்'[1996] 'வெளிச்சம் தெரிகிறது' [2002] என்பன மூன்றாவது பரிசுகளையும் வென்றன. மாத்தளையில் பிறந்த கே.கோவிந்தராஜின் படைப்புகள் மலையகத்தைப் பிரதிநிதித்து வப்படுத்தி அம்மக்களின் பிரச்சினைகளைப் பேசுவனவாக அமைந் திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 90 களின் பிற்பகுதியில் கிராம சஞ்சிகை'யில் தொடராக ஒலிபரப்பான 'மறதி மணியம்' நாடகப் பிரதியை எழுதியமைக்காகவும் அதில் சிறப்பாக நடித்தமைக்காகவும் சானாவின் வாரிசான சுமதி பாலஸ்ரீதரன் உண்டா விருதுகள் இரண்டைச் சுவீகரித்துக் கொண் டார். அவர் உத்துரு குருசட்டன்' எனும் சிங்களத் தொலைக்காட்சி நாடகத்திலும். 'யாளுவோ' எனும் சிங்களத் திரைப்படத்திலும் நடித்துள் ளார் என்பது உபரித் தகவல்.

* இலங்கை வானொலியில் மட்டக்களப்பின் குரலாக ஒலிக்கும் மங்களகௌரி விராகநாதன் ஒரு சிறந்த மேடை நடிகையாகவும் விளங் குகிறார். அவரது 'போடி பொன்னம்மா' மூலம் Stand-up Comedy தனி நடிப் பில் அசத்தும் பெண் நடிகையாக அவர் பிரபலமாகியிருக் கிறார்.

* பிரபல சிறுகதை, நாவல் எழுத்தாளர் கோகிலா மகேந்திரனின் 'கேள்விகளின் முழக்கம்' நாடகம் - வட இலங்கைச் சங்கீத சபையின் 'நாடகக் கலா வித்தகர்' எனும் பட்டத்தினை அவருக்கு ஈட்டித்தந்துள் ளது. 24 மேடை நாடகங்கள் மட்டில் கோகிலா மகேந்திரன் எழுதி இயக் கியுள்ளார்.

* **50** க்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ள நாடக எழுத்தாளர் செ.குணரத்தினம் 200 சிறுகதைகளும் 10 நாவல்களும் எழுதியுள்ளார். மட்டுநகர் மீனவர்களது வாழ்வைக் களமாகக் கொண்டு எழுதும் அவருடைய படைப்புகள் எதுவும் இதுவரை நூலுருவானதாகத் தெரியவில்லை!

* பிரபல நாவலாசிரியரும் சிறுகதை எழுத்தாளருமான S.அகஸ்தியர் 20 வானொலி நாடகங்கள் மட்டில் எழுதியுள்ளதாக அவரது மகளின் செய்திக்குறிப்பொன்றின் மூலம் அறியமுடிகிறது.

* நவாலியூர் நா.செல்லத்துரை கிறீஸ்தவ சமய நிகழ்ச்சிக்காக சில நாடகங்களை வானொலியில் எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எழுத்தாளர் லெ.முருகபூபதி, இலங்கை வானொலி செய்தி அறி விப்பாளரும் நாடக நடிகருமான V.N.மதியழகன் தொகுத்து வழங்கிய 'சங்கநாதம்' நிகழ்ச்சியில் நீர்கொழும்புப் பிரதேச வழக்கில் நாடகம் எழுதியுள்ளார்.

* ஜோர்ஜ் சந்திரசேகரன் தயாரிப்பாளராக இருந்த காலத்திலும் நகைச்சுவைக் குறுநாடகங்களின் தொகுப்பு நிகழ்ச்சியாக இருந்த 'கதம்பம்' அதன் மவுசு குன்றாமல் நேயர்களின் அபிமானம் பெற்ற நிகழ்ச்சியாகவே இருந்துவந்தது.

பிரதி ஞாயிறும் காலை வரை ஒலிபரப்பாகிவந்த 'கதம்பம்' நிகழ்ச் சித் தொகுப்பை இரு வாரங்கள் ஜோர்ஜ் தாமே தயாரித்தளித்தார். மற்றைய இரு வார நிகழ்ச்சிகளையும் C.சண்முகத்திடமும் ஜோக்கிம் பெர்னாண்டோவிடமும் பகிர்ந்தளித்தார்.

தாம் தயாரித்தளித்த நிகழ்ச்சிகளுக்கு C.சண்முகம் தாமே பிரதி களை எழுதினர். ஜோர்ஜின் நிகழ்ச்சியில் G.P.வேதநாயகம், S.ஜேசுரட்ணம், லிங்க வேலாயுதம், T.பாக்கியநாயகம் உட்பட மற்றும் சிலரும் அவ்வப்போது பிரதிகளை எழுதினார்கள். ஜோக்கிமின் நிகழ்ச்சியில் ராஜா கணேசன், ஸ்ரீதர் பிச்சையப்பா, குயின்ரஸ் ஜீவன், அனுஷா மொறாயஸ் போன்றோர் பிரதிகளை எழுதினார்கள்.

* கதம்பம்' நிகழ்ச்சிக்காக மட்டும் 123 குறுநாடகங்களை S.ஜேசுரட் னம் எழுதியுள்ளார். G.P.வேதநாயகம் கதம்பத்துக்காக எழுதிய நகைச் சுவைக் குறுநாடகங்கள் - 80.

* கே.செல்வராசாவின் 'உறவுகள்' நாடகம் மூலம் 1974 இல் தனது 11 ஆவது வயதில் கலையுலகில் அறிமுகமானவர் ஸ்ரீதர் பிச்சையப்பா.

* வானொலி நடிகர் பிராங் புஷ்பநாயகம் எழுதிய 'அறிவில் ஆதவன்' வானொலி நாடகம் பின்னர் தொலைக்காட்சி நாடகமாகவும் உருமாற்றம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*  இலங்கை வானொலி நாடக எழுத்தாளர் பாலாம்பிகை நடராஜா **Snow White** சிறுவர் புனைகதையை 'வெண்பனிகளும் ஏழு குள்ளர்களும்' எனும் தலைப்பில் நாடகமாக எழுதினார். அது கொழும்பு உட்பட்ப் பல இடங்களிலும் மேடையேறியது. அவரது 'மீராப் பிரபு' தொலைக்காட்சி நாடகம் 1984 இல் ஒளிபரப்பானது.

*  'பாவை பெற்ற பரிசு', 'மீனாட்சி கல்யாணம்' எனும் நாட்டிய நாடகங் களை C.V. ராஜசுந்தரம் வானொலிக்கெனத் தயாரித்தளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்தாளர்களின் வானொலி சம்பந்தமான பிற நூல்கள்

| | |
|---|---|
| ஒலிபரப்புக் கலை [1957] | சோ.சிவபாதசுந்தரம் |
| வானோசை - [The Art of Radio By Stewart Weval] *தமிழாக்கம்* | |
| | C.V.ராஜசுந்தரம் |
| ***Manual of development communication*** | C.V.ராஜசுந்தரம் |
| (With special reference to broadcasting)] | |
| **The News Read by S.Punniyamoorthi** | P.கிருஷ்ணமூர்த்தி |
| **The green Light** | ஞானம் இரத்தினம் |
| மன ஓசை | வீ.சுந்தரலிங்கம் |
| வானொலியும் நானும் | ஜோர்ஜ் சந்திரசேகரன் |
| ஒரு சருகுக்குள்ளே கசியும் ஈரம் | ஜோர்ஜ் சந்திரசேகரன் |
| வானொலிக் கலை [2007] | விமல் சொக்கநாதன் |
| காற்றின் சுவடுகள் | கா.சிவத்தம்பி |
| வானொலியின் வரிகள் | இளையதம்பி |
| | தயானந்தா |
| இலங்கை வானொலியின் இனிய ஒலிபரப்பாளர்கள் [2015] | |
| | தம்பியையா |
| | தேவதாஸ் |
| திரை மறைவுக் கலைஞர்கள் [2017] | S.நடராஜன் |
| ஒலி அலையில் என் நினைவலைகள்[2005] | |
| | விசாலாட்சி ஹமீட் |
| நினைவலைகளில் வானொலிக்குயில் | புஷ்பராணி |
| | சிவலிங்கம் |
| மனோலயம் [2007] | V.A.திருஞானசுந்தரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயரின் பார்வையில் உவைஸுல் ரஹ்மான்

V.N.மதியழகன் சொல்லும் செய்திகள் [2018]

V.N.மதியழகன்

மதியழகன் பேசுகிறேன் / என் மனப் பதிவுகள் [2008]

V.N.மதியழகன்

கலைக் குரல்கள் [1999] V.N.S. உதயசந்திரன்

சமூக வானொலி-மனித வலுவாக்கத்திற்கான ஊடகம்

M.C.ரஸ்மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்/பிரசுரங்கள்/சஞ்சிகைகள்


நூலகம் - வலைத்தளம்

'வாழ்ந்து பார்க்கலாம்' [வானொலி நாடகம்-1998]
பி.விக்னேஸ்வரன்

தணியாத தாகம் [திரைச் சுவடி – 1971] சில்லையூர் செல்வராஜன்

ஒலி அலையில் என் நினைவலைகள் [2005]
விசாலாட்சி ஹமீட்

இலங்கைத் தமிழ் சினிமாவின் கதை [200]
தம்பியையா தேவதாஸ்

இலங்கை வானொலியின் இனிய ஒலிபரப்பாளர்கள் [2015]-
தம்பியையா தேவதாஸ்

'யுகதர்மம்' - நாடகமும் பதிவுகளும் [2017]
க.பாலேந்திரா

வாசகர் நினைவு மலர் [1985] V.N. குகராஜா

ஈழத்தில் தமிழ் நாடகம் [1981] அன்ரனி ஜீவா

ஈழத்து தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி[1977]
க.சொக்கலிங்கம்

ஒலிபரப்புக் கலை[1957] சோ.சிவபாதசுந்தரம்

திரை மறைவுக் கலைஞர்கள் [2017] S. நடராஜன்

வானொலிக்கால நினைவுகள் [இருக்கிறம்]
K.S.பாலச்சந்திரன்

வேந்தனும் அரசியும் [1972] Y.முத்துக்குமாரசுவாமி

அரங்கக் கலைஞர் ஐவர் [1998] A.T. பொன்னுத்துரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வோரை வாழ்த்துவோம் - முஸ்லீம் கலாசார விழா மலர் - 1991

துரோகிகள் - நாடக விபரக் கையேடு – 1956

பூந்தான் யோசேப்பு: கலையுலக வாழ்க்கை வரலாறு [1981] S.அகஸ்தியர்

அன்றில்ப் பறவைகள் [1992 ] அகளங்கன்

நாடக அனுபவங்கள் [2010] கவிஞர் வி. கந்தவனம்





oundation.
am.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tion.

இந்நூலாசிரியரைப் பற்றி....




"மறைமுதல்வன்" எனும் புனை பெயரிலும் பல ஆக்கங்களைப் படைத்துள்ள பல்கலை வித்தகர் ஜீ.பி. வேதநாயகத்தின் ஆறாவது நூலிது.

சிறுகதை. கவிதை, நாடகம், திறனாய்வு என நவீன இலக்கியம் சார்ந்த பல்வேறு துறைகளிலும் கால் பதித்துப் பல பரிசுகளைச் சுவீகரித்துக் கொண்டவர் அவர். வானொலி, மேடை, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையம் எனச் சகல ஊடகங்களிலும் இவரது நாடகங்கள் நடை பயின்றுள்ளன.

வானொலி நாடகங்களில் சிறுவர் நாடகங்கள், சமகால யதார்த்த நாடகங்கள், நகைச்சுவை நையாண்டி நாடகங்கள், துப்பறியும் நாடகங்கள், மர்ம நாடகங்கள், இலக்கிய, புராண, வரலாற்று நாடகங்கள் என அதன் பல்வேறு பரிமாணங்களிலும் புகுந்து புறப்பட்டு ஈழத்தின் பல் வேறு பிரதேச மொழி வழக்குகளையும் வாலாயப்படுத்தி வெற்றி கண்டவர். இவரது ஆக்கத்தில் உருவான நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்கள் அதற்குச் சான்றாக விளங்குகின்றன.

1969 இல் இலங்கை வானொலியினரால் நடாத்தப்பட்ட முதலாவது நாடகப் போட்டியில் இவரது "நீதியின் நிழலில்" என்ற துப்பறியும் நாடகம் முதற் பரிசீட்டியது. 2001 இல் தினகரனின் "அமுது" சஞ்சிகையால் நடாத்தப்பட்ட படைப்பாற்றல் போட்டியிலும் "இது ஒரு வழிப் பாதை" எனும் சமகால நாடகம் முதற் பரிசைத் தட்டிக் கொண்டது.

ஒரு எழுத்தாளனாக, நாடக நடிகனாக, வானொலி அறிவிப்பாளனாக - பல்வேறு முகங்களைக் கொண்ட இவர் ஓர் ஓய்வு பெற்ற ஆசிரியர். "நாளைய நாயகன்" (சிறுவர் நாடக நூல்), "கழுதைக்கும் காலம் வரும்", "காதல் போயின் கல்யாணம்", (நகைச்சுவை நாடக நூல் கள்) "மறைமுதல்வனின் கிடப்பில் கிடந்த கவிதைகள்", "மறைமுதல்வன் சிறுகதைகள்" என்பன இதுவரை வெளிவந்த இவரது ஏனைய நூல்கள்.

50 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை வானொலி நாடகத்துறையுடன் பரிச்சயம் கொண்டு, நாடக எழுத்திலும் நடிப்பிலும் அனுபவ முதிர்ச்சி பெற்றவராக இருந்துவரும் இவர் ஒருவரே இத்தகைய ஆய்வு நூல் ஒன்றை எழுதச் சாலப் பொருத்தமானவர் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. இவரது பவள விழா ஆண்டுச் சிறப்பு நூல்களுள் ஒன்றாக இந்த "இலங்கை வானொலியின் தமிழ் நாடக வரலாறு"ம் வெளிவருகிறது.

Printed by
Sri Digital Press (0777 275 489) Colombo - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org